அர்ச்
ஸ்தானிஸ்லாஸ் கோஸ்கே
சரித்திரம்

Q6ω,
N09
119769

A. M. D. G.

THE REGISTRAR OF BOOKS
REGISTERED
15 OCT 1909
MADRAS

# அர்ச்.
# ஸ்தனிஸ்லாஸ் கோஸ்கா
# சரித்திரம்.

TRICHINOPOLY:
ST. JOSEPH'S COLLEGE PRESS.

1909.

Nihil obstat L. BESSE, S.J., cens. dep.

Imprimatur:

+ JOANNES-MARIA, S.J.,

*Ep. Trichinopolit.*

11/4/69

# முகவுரை.

—*—

வேதசாட்சிகளாயில்லாமல் திருச்சபையில் அர்ச்சியசிஷ்ட பட்டக் கிரீடம் பெற்றிருக்கிற புண்ணியசீலருக்குள் அர்ச். ஸ்தனிஸ்லாஸ்தான் சொற்ப வயதுள்ளவர். இளம்பிராயமானாலும் புண்ணியத்தில் முதிர்ந்தவர். வாலிபர்களுக்கு நன்னெறியைக் காட்டி கற்றுக்கொடுக்கும்படி போதிக்கும் நற்போதனைகளைவிட, இந்த வால அர்ச்சியசிஷ்டவரின் ஜீவிய சரித்திரத்தில் விளங்கும் மேல்வரிச்சட்டம் அதிஉந்நத வாய்ச்சாலகத்துடன் வாலர்களுடைய இருதயத்தில் பேசுகிறது.

மேலும் அர்ச். ஸ்தனிஸ்லாசின் பாதுகாவலில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சபைகள் நம் நாடுகளில் அநேகமாய் ஏற்பட்டு வாலிபர்களுக்கு வெகு நன்மை செய்து வருகின்றன. அப்பேர்ப்பட்ட சபைப்பிள்ளைகளின் ஞானப்பிரயோசனத்தையும் கருதி, சங்கைக்குரிய கோல்டி (F. Goldie) என்னும் சுவாமியாலியற்றப்பட்டிருக்கும் அர்ச். ஸ்தனிஸ்லாசின் ஜீவிய சரித்திரத்தைக் கைக்கொண்டு இப்புஸ்தகத்தை எழுதலானோம்.

தேவசித்தத்துக்கு சகலத்திலும் அமைந்து, தேவ ஏவுதலைப் பின்பற்றி நடப்பது எவ்வளவு உந்நதமும் பாக்கியமும் பெற்ற கடமையென்று அர்ச். ஸ்தனிஸ்லாசின் சீவியத்தில் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது. திவ்விய சற்பிரசாதத்தின்பேரிலும், தேவதாயின்மட்டிலும், கிறீஸ்துவர்கள் காட்டவேண்டிய மெய்யான பத்தி வணக்கத்தையும், அவர் நமக்கு வெகு நேர்த்தியாய்க் கற்றுக்கொடுக்கிறார். இப்புஸ்தகத்தை வாசிக்கும் பெற்றோர்களும் தங்கள் புத்திரர்களுக்கு தயாபரரான சர்வேசுரன் கருணையோடளிக்கும் தேவ அழைத்தலுக்குத் தடங்கல் செய்வதினாலுண்டாகும் ஆபத்தையும், முழு இருதயத்தோடும் பூரண சந்தோஷத்தோடும் தேவ அழைத்தலைப் பின்செல்ல விடுகிறதினால் அவர்களுக்கும் தங்களுக்குமுண்டாகும் மன ஆறுதலையும், மெய்யான கீர்த்தியையும், இந்த அர்ச். ஸ்தனிஸ்லாசின் சீவிய சரித்திரத்திலிருந்து கற்றுக்கொள்வார்களாக.

**தேவமாதா மோக்ஷத்துக்கு எழுந்தருளின திருநாள்.**
15—8—1909.

G. J. GOMEZ, S. J.



அர்ச். ஸ்தனிஸ்லாசே!
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

1909 MADRAS

A. M. D. G.

# அர்ச். ஸ்தனிஸ்லாஸ் கோஸ்கா சரித்திரம்.

## ஆரம்பம்.

பரிசுத்த திருச்சபையானது பரலோக இராஜாவின் சிங்காரத்தோப்பு. அதிலடங்கியிருக்கும் நானாவிதப் புஷ்பங்கள் பற்பல ரூப, நிற, வாசனையினாலே வேற்றுமைப்பட்டிருப்பதே அவைகளின் சௌந்திரியத்தை அதிகரிக்கின்றன. ஒரேவகைப் பூக்கள் முதலாய் ஒரே அழகுள்ளவைகளல்ல. ஒற்றுமையில் வேற்றுமை ஏற்பட்டிருக்கிறது. இப்புஷ்பங்களின் விநோத அலங்காரமானது சர்வேசுரனிடமுள்ள உத்தம அலங்காரத்தை அதி உந்தமாய் விளங்கச்செய்து, அக்கர்த்தருக்கு ஓயா ஸ்துதி செலுத்துகின்றன. இவ்விதமே திருச்சபையில் மாட்சிமை பெற்று விளங்கும் அர்ச்சியசிஷ்டவர்களின் புண்ணிய அழகில் ஒற்றுமையிருந்தாலும், வேற்றுமையும் ஏற்பட்டிருக்கிறது.

சேசுக்கிறீஸ்துநாதர்சுவாமி மனுஷாவதாரஞ் செய்து இவ்வுலகில் எழுந்தருளினபோது, பாலப்பருவமுதல் கல்லறையிலடக்கம் பண்ணப்படுமட்டும் சகலத்தையும் மனுஷனைப்போல் செய்து முடித்தார். அவருடைய நன்மாதிரிகை, மனுக்குலத்துக்கெல்லாம் மேல்வரிச்சட்டமும், நம்முடைய திடத்துக்கு ஊற்றுமாயிருப்பது சத்தியமானாலும், அவருடைய பாலப்பருவமும், வாலிபமும் நம்மிருதயத்தில் ஆழ்ந்த மனோகரத்தை எழுப்புகின்றன. பாலனாய்ப் பிறந்து மாட்டுக்கொட்டிலில் கிடத்தப்பட்டிருக்கிற திவ்விய கர்த்தரைத் தியானித்து அவரை நேசியாதவர்களுண்டா? வாலிபரான திவ்விய சேசு, நசரேத்து மனையில், தாய்தந்தையருக்குதவிபுரிந்து தச்சுத்தொழில் செய்கிறதைச் சிந்திக்கிற இருதயம் சேசுவின் சிநேகத்தாலிழுக்கப்பட்டு பூரிக்காமலிருக்குமோ?

சேசுவின் பாலியம் ஜொலித்த ஞானப்பிரகாசமானது திருச்சபையின் வாலர்களிடமும் பிரதம்பிக்கிறது. “பாலர்களை நம்மிடத்தில் வரவிடுங்கள், அவர்களைத் தடுக்காதேயுங்கள்; ஏனெனில் சர்வேசுரனுடைய இராச்சியம் இப்பேர்ப்பட்டவர்களுடையது” (மாற். 10-14.) என்று சேசுக்கிறீஸ்துநாதர் சுவாமிதானே திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். அப்பிரகாரமே



மோக்ஷ சம்பாவனையை அநுபவிக்கிற திருச்சபையின் பிள்ளைகளுக்குள் பாலியர்களின் தொகையே ஏராளமானது. மேலும் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவினால் ஏவப்பட்டு நடத்தப்படும் அவர் பத்தினியாகிய திருச்சபை, சிறுவயதுள்ளவர்களில் அநேகருக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் கொடுத்து அவர்களுடைய சுரூபங்களை நமது பீடங்களில் ஸ்தாபித்திருக்கிறது. “சிறுபிள்ளையைப்போல சர்வேசுரனுடைய இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளாத எவனும் அதில் பிரவேசியானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மாற். 10-15) என்ற தேவவாக்கியமும் குறையற நிறைவேறி வருகின்றன.

மாசில்லாக் குழந்தைகளே நமது கர்த்தருக்காக இரத்தத்தை சிந்தி உயிரைக்கொடுத்த முதல்வேதசாக்ஷிகள். திருச்சபையின் ஆரம்பத்தில் ஏற்பட்ட வேதகலகங்களிலும், வேதத்தை மறுதலிப்பதைவிட உயிரைவிட்டு, மனம் பொருந்தி வேதசாட்சிகளான சிறுவர்கள் எத்தனையோபேர்? வேதகலாபனைகளில் அணி அணியாக வேதத்துக்காக உயிர்விட்ட இப்பேர்ப்பட்ட வால வேதசாட்சிகளின் வரலாற்றை மனங்குளிர வாசிக்கலாம். சேசுக்கிறீஸ்துநாதர். வாலிபப் பிராயத்தில் பழகின புண்ணியங்களை விசுவாசிகள் கண்டுபாவிப்பது அவ

ருக்கு உத்தம்பிரியம் கொடுப்பதாக விளங்குகிறது. ஏனெனில் சொற்பவயசுள்ள பாலர்களுக்கும், வாலிபப்பிராயமுள்ள பிள்ளைகள் பெண்களுக்கும், சர்வேசுரன் விசேஷ தேவ ஆசீர்வாதத்தையும், அபூர்வ வரங்களையும் அளித்துவருகிறார். அவர்களிலநேகர் இவ்வரங்களின் சகாயத்தினால் புண்ணிய சாங்கோபாங்கத்தின் சிகரத்தை அடைந்திருக்கிறார்கள். திருச்சபையில் அநேகர் சொற்பவயசுள்ளவர்களானாலும், புண்ணியத்தின் மேன்மையினால் முதிர்ந்தவர்களாகி, மரணத்துக்குப்பின் ஏராளமான புதுமைகளையும் செய்யும் வரம்பெற்றிருக்கிறார்கள்.

திருச்சபையின் சரித்திரத்தை வாசித்திருக்கிறவர்களுக்கு இச்சத்தியத்தின் உண்மை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகும். சேசுநாதசுவாமி வாலிபப்பிராயத்தில் சீவித்த அந்தரங்க சீவிய ஒழுக்கத்தில் விதைத்த விதையின் பலனாகத்தான், எத்தனையோபேர் சொற்ப வயதிலும் சொற்பக்காலத்திலும் உயர்ந்த புண்ணிய சுரூபிகளாகும் மகா வரத்தை அடைந்தார்கள் என்று சொல்லவேணும்.

சொற்ப வயதில் சொல்லிலடங்காத புண்ணியங்களை இயற்றி கீர்த்திபெற்றவர் அர்ச். ஸ்தனிஸ்லாஸ். ஆகையால்தான், இளம்பிராயத்தில் முதிர்ந்த புண்ணிய சாங்கோபாங்கத்தை அவ



ருக்கு அளித்தது, சர்வேசுரன் செய்த புதுமைகளில் பெரிய புதுமையென்று, நமது தாயாகிய திருச்சபை, அர்ச். ஸ்தனிஸ்லாஸ் பூசை ஜெபத்தில் பாடுகிறது.

இப்புத்தகத்தில் எடுத்துரைக்கும், அர்ச். ஸ்தனிஸ்லாஸ் சரித்திரத்தில், இளம்பிராயமானது விளைந்து முதிர்ந்த புண்ணியக் கனிகளைக் கொடுப்பதைப் பார்ப்போம். அவருடைய பாலப் பருவத்தின் சுகிர்த வழிகளின் மனோகரத்தை உணர்ந்து பிரமிப்படைவோம். இவ்வளவு நுட்ப சரீரத்தில் இவ்வளவு முதிர்ந்த புண்ணிய முண்டாவென்று ஆச்சரியப்படவேண்டியதாயிருக்கும். உலக ஆசாபாசம் மேற்கொள்ளும் இப்பிராயத்தில், இவ்வளவு ஞானமும் மேலான கருத்துமுண்டாவென்று கேட்கவேண்டியதாயிருக்கும். சகலவித அதமசோதனை மோசங்களையெல்லாம் எவ்விதம் ஜெயித்தாரோ? சேசுவின் பாலியம் அவர் கண்ணுக்குமுன் எப்போதுமிருந்தபடியால் எல்லாம் கைகூடின.

அர்ச். இஞ்ஞாசியாரால் ஸ்தாபிக்கப்பட்ட சேசுசபை, அர்ச். ஸ்தனிஸ்லாஸ் காலத்தில், இளம்பருவத்திலிருந்தது. அவ்விளம் பருவத்திலேயே, சிறுபிராயமானாலும் பெரிய அர்ச்சியசிஷ்டவர்களான மகாத்துமாக்களை உடைத்தாயிருந்தது அச்சபையின் மகிமை.

வாலிபர்களுக்கு கல்விப்பயிற்சி கற்றுக்கொடுத்து, அவர்களை நல்லொழுக்கத்தில் திருப்பி சுகிர்தமார்க்கத்தில் நடக்கும் வழிகாட்டுவது சேசுசபையார் உலகத்துக்குப் புரிந்த நன்மைகளுக்குள் பெரியநன்மை. வாலிபர்களை நல்வழிக்குத் திருப்புவது எவ்வளவு கஷ்டம்நிறைந்த அலுவலென்று எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. மனுக்குலத்துக்கு ஒவ்வாத சத்துருவான பசாசானது, பற்பல தந்திரங்களினால் வாலிபர்களின் தூயமனதைக் கெட்டழித்து நாசமாக்க ஓயா முயற்சி செய்துவருகிறது. அப்பசாசின் தூதர்களும் ஆயிரக்கணக்காயிருக்கிறார்கள். இப்பூமியின் எத்திசையிலும், அவர்கள் ஆசார உபசார நாகரீக ரூபமெடுத்து நரக வலையை வீசிக்கொண்டிருக்கிறார்கள். அறிந்தும் அறியாமலும் இதிலகப்பட்டுச் சிக்கிக் கிடக்கிற வாலிபர்களுக்கு கணக்குண்டா? சொல்லிடங்கா பரிசுத்தமுள்ள இளம் ஆத்துமாக்கள் இவ்விதமாய்க் கெட்டழிந்து நரக நெருப்புக்குள்ளாகிறார்கள். இவர்களைக் கைதூக்கி அரவணைப்பதார்?

சேசுசபையானது இந்நிர்ப்பாக்கியத்தைக் கண்ணுற்றுப் பார்த்து, வாலிபர்களைச் சீர்ப்படுத்தினால், உலகமும் சீர்ப்படுமென்கிற தைரிய நம்பிக்கையோடு, ஊருக்கூர், தேசத்துக்குத் தேசம், கல்விப்பயிற்சியோடு ஞான ஒழுக்கத்



தையும் ஊட்டிவருகிறது. சீர்குலைந்தலைகிற அப்பிராணிகளான பிள்ளைகளுக்கு நன்மை செய்வதே சேசுசபையின் நோக்கம்.

திவ்வியமான இக்கடமையைச் செய்து முடிப்பதில், சேசுசபையை எதிர்த்து விரோதிக்கிற பகையாளிகளுமில்லாமலில்லை. காய்மகார வைராக்கியம் நிறைந்த இவர்கள் நன்மையைக் கோரி உழைக்கிறவர்களுக்கு இடைஞ்சல் மூட்டும் நோக்கத்தோடு அவதூறு பேசி கலகத்தை யெழுப்புகிறது ஆச்சரியமா? சிலுவையின்றி இரட்சணியம் கிடைக்குமா? ஆகையால் வாலிபத்தை நல்வழியில் காப்பாற்றும் தர்மசெயலில் தேவ ஒத்தாசை அகத்தியம் அவசரம்.

இப்பேர்ப்பட்ட தேவ ஒத்தாசையை அடைந்தருளும்படி சில புண்ணியாத்துமாக்கள் மோக்ஷத்திலிருந்து இரக்கமுள்ள சர்வேசுரனிடத்தில் பரிந்துபேசுகிறவர்களாயிருக்கவேண்டும். மாட்சிமைதங்கிய இக்கடமையை நிறைவேற்றும் அர்ச்சியசிஷ்ட வாலிபர்கள் மத்தியஸ்தர்களாயிருப்பதுமல்லாமல், இவ்வுலகவாசிகளுக்கு நன்மாதிரியான வரிச்சட்டமாயும் பாதுகாவலுமாயுமிருக்கிறார்கள்.

சேசுநாதர்சுவாமி அந்தரங்க சீவியத்தில் காண்பித்த நிகரற்ற புண்ணிய மார்க்கத்தின் கன்

ளுடியாயிருந்த இவ்வர்ச்சியசிஷ்டவர்கள், மோக்ஷகரையில் நின்று, இக்கணவாயில் வருந்துகிறவர்கள் தங்களைக் கண்டுபாவிக்கும்படி ஏவுகிறார்கள்.

நித்தியபிதா கொடுத்திருந்த அதிகாரத்தை நிறைவேற்றும்பொருட்டு, பெற்றோர் விடையின்றி முதலாய் திவ்வியசேசு ஜெருசலேம் நகர் தேவாலயத்தில் தங்கினாரல்லவா? இம்மாதிரியாய் திவ்விய இஸ்பிரீத்துசாந்து மனிதர் இருதயத்தில் பேசி பரம அந்தஸ்துக்கு அவர்களை அழைக்கிறார். அப்போது, பெற்றோரை முதலாய் வெறுத்து, அந்தேவ அழைத்தலுக்கு செவி கொடுக்கும் விதத்திலும் மேற்கூறிய அர்ச்சியசிஷ்டவர்கள் சகல வாலிபருக்கும் மேல் வரிச்சட்டமாயிருக்கிறார்கள்.

வாலிபர்களுக்குப் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவர்களுக்குள் அர்ச். ஸ்தனிஸ்லாஸ் முதற் ஜெயக்கொடி பிடித்து நிற்கிறார். அர்ச். ஞானப்பிரகாசியார், அர்ச். பெர்கமான்ஸ் அருளப்பர் இவர்கள் சரித்திரமும் சகலருக்கும் தெரிந்ததுதானே.

சேசுசபையை ஸ்தாபித்த அர்ச். இஞ்ஞாசியாருக்கு முந்தி முதலாய் அர்ச். ஸ்தனிஸ்லாசுக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் சூட்டி திருச்சபை மகிமைப்படுத்தினது.



பின்வரும் அதிகாரங்களில், புண்ணிய சீலரான இவ்வால அர்ச்சியசிஷ்டவரின் சரிதையை எடுத்துக்கூறியிருக்கிறது. அவருடைய சீவிய சரித்திரத்தின் ஆச்சரியங்களை வாசிக்கிறவர்கள் அவரைப்போல புண்ணிய சீலராகக் கூடாதே போனாலும், புண்ணிய வழியை நாடி நடப்பது சகலராலும் கூடிய காரியமென்று கண்டுபிடிக்க இவ்வர்ச்சியசிஷ்டவர் உதவி செய்வாராக.

# முதல் அதிகாரம்.

## பிறப்பும் வளர்ப்பும்.

கோஸ்கா வெங்கிற பேர்போன கோத்திரமானது போலண்டு தேசத்தில் பழைய காலம் தொடங்கி மேலான கிறீஸ்துவ வம்சமாக விளங்கி வந்தது. இந்தக் கோத்திரம், இராஜ வம்சத்தை ஒட்டினதாயும், அதின் முன்னோர்களில் அனேகர் இராச்சிய பரிபாலனர்களாயும், இராஜ ஸ்தானாதிபதிகளும், காரியஸ்தர்களுமாயும், நியாயாதிபதிகளாயும், தளகர்த்தர்களாயும், இன்னும் அநேக மாக்ஷிமை தங்கிய அலுவல்களில் பேர்பெற்றவர்களுமாயிருந்தார்களென்று போலண்டு தேச சரித்திரத்தில் கூறியிருக்கிறது. இந்தக் குடும்பத்தின் முன்னோர்களில் வேறு சிலர், மேற்றிராணிமார்களாகவும் திருச்சபையில் பேரோங்கி மேன்மையடைந்ததாக அத்தேச சரித்திரத்தில் தானே வாசிக்கிறோம். இப்பேர்ப்பட்ட இராஜ வம்சத்திலேயிருந்துதான் அர்ச். ஸ்தனிஸ்லாஸ் கோஸ்காவென்கிற வாலிபர்களுக்கு பாதுகாவலான



அர்ச்சியசிஷ்டவர் பிறக்கவேணுமென்று சர்வேசுரன் சித்தம் வைத்தார்.

அவருடைய குடும்பத்துக்கிருந்த மேலான இலௌகீக கீர்த்தியையெல்லாம் வெறுத்துவிட்டு, ஒருக்காலும் அழியாத கீர்த்தியைச் சம்பாதித்து வைத்த இந்த பரிசுத்த வாலிபனுடைய தகப்பனார் பேர் ஜான் கோஸ்கா. இராஜ ஆலோசனை சங்கத்தாரில் இவர் ஒருவராயிருந்ததுபோக, இராச்சிய பரிபாலன விஷயமாகவும் வெகு கீர்த்தியடைந்திருந்தார். அவருடைய தாயின் பேர் மார்க்கரீத் குருபினம்மாள். இவள் போலண்டு தேசத்திலுள்ள மசோவியா இராச்சிய பிரபுவின் சகோதரி. இவர்களிருவரும், மேன்குலத்தினால் மாத்திரமல்ல, சத்தியவேத நன்னெறியிலும் பேர்பெற்றவர்கள். இவர்களுக்கிருந்த ஐந்து பிள்ளைகளில், அர்ச். ஸ்தனிஸ்லாஸ் இரண்டாவது பிள்ளை. மூத்த பையனுடைய பேர் பவுல் கோஸ்கா. பின்வரும் சரித்திரத்தில் இவரைப்பற்றி அதிகமாக அறிந்துகொள்வோம்.

அர்ச். ஸ்தனிஸ்லாஸ் பிறக்கிறதற்கு முந்தியேதானே, பிற்காலத்தில் இந்தப் பாலன் அடையப்போகிற புண்ணிய சாங்கோபாங்கத்தையும், சேசுக்கிறீஸ்துநாதரின் பேரில் அவருக்குள்ள நேசத்தையும், முன்னோடியாக சர்

வேசுரன் காட்ட சித்தம் வைத்தார். இவர் பிறக்கிறதற்கு சில நாட்களுக்கு முந்தி இவருடைய தாயானவள் ஒரு கனவில் கண்ட காட்சியாவது: சேசுவென்கிற திருநாமம் இரத்தச் சிகப்பான எழுத்துக்களால் எழுதப்பட்டு, மகிமைப் பிரகாசம் நிறைந்த கதிர்களால் சூழப்பட்டு அவளுக்கு முன்பாக ஆகாயத்தில் அந்தரமாய்த் தொங்கினது.

இதைக் கண்டு சிலநாட்கள் கழிந்த பிறகு மறுபடியும் சேசுவென்கிற அதே நாமம் முந்தி தோன்றின பிரகாரம் பிரகாசக் கதிர்களால் சூழப்பட்டு, தாயினுடைய மார்பில்தானே தோன்றினது. இவ்விதமாய் இரண்டு தடவை தோன்றினதை மார்க்கரீத்தம்மாள் பார்த்து கொஞ்சம் திடுக்கிட்டாள்.

சேசுவென்கிற பேர் பாக்கியமும் ஆசீர்வாதமும் கொண்டு வராத இடமுண்டா? பிற்காலத்தில் சேசுசபையில் சேர்ந்து, திருச்சபைக்கெல்லாம் ஒளியாக வீசின அர்ச். ஸ்தனிஸ்லாஸ் தான் மார்க்கரீத்தம்மாள் மார்பில் தோன்றின சேசுவின் திரு நாமத்தின் ஆசீர்வாதமாயிருக்கவேண்டும். ஏனெனில், தாயானவள் தனக்குண்டான காட்சியை ஆத்தும குருவானவருக்குப் போய்ச் சொல்ல, பத்தியிலும் புத்தியிலும் பேர்போன அந்தக் குருவானவர்



அவளுக்கு கொடுத்த மறுமொழியாவது: "இந்தக் காட்சி புதுமையாகத்தானுண்டாயிருக்கவேணும். இது தெய்வச்செயல்போலத்தான் தோன்றுகிறது. உன்னிடம் பிறக்கப்போகிற குழந்தை பிற்காலத்திலடைய வேண்டிய அர்ச்சியசிஷ்டதனத்தைக் குறிக்கும் அடையாளமாக இது இருக்கலாம். ஆகையால் பயப்படுவதற்குப் பதிலாய், சர்வேசுரனுக்கு நன்றி செலுத்தி சந்தோஷமாயிரு."

தாயானவள், பிறக்கப்போகிற தன் குழந்தையை, பிறக்கிறதற்கு முன்னேதானே, சர்வேசுரன் தமக்காகத் தெரிந்துகொண்டாரென்றும், ஆகையால் அப்பேர்ப்பட்ட குழந்தையை வளர்த்தெடுப்பதில் எவ்வளவு ஜாக்கிரதையாயிருக்கவேணுமென்றும் தெளிவாய் அறிந்துகொண்டாள்.

இவ்விதமாய் தேவ ஆசீர்வாதம் நிறைந்தவராய், போலண்டு தேசத்திலிருக்கும் மசோவியா இராச்சியத்தில், அவர்களுடைய பிதிரார்ஜித சொத்தாகிய ரோஸ்கோ வென்கிற கிராமத்தில், பத்தியுள்ள தாய்தகப்பன்மார்களிடமிருந்து 1550-ம் வருஷம் ஒக்டோபர் மாதக்கடைசியில் அர்ச். ஸ்தனிஸ்லாஸ் பிறந்தார்.

குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறதற்காக பக்கத்துக் கோவிலுக்கு கொண்டுபோ

விருந்தார்கள். ஞானஸ்நான ஆடம்பரத்துக்காக அவர்களுடைய சொந்தக்காரர்களும் அக்கம் பக்கத்தாருமாக அநேகம் பேர் கோவிலுக்கு வந்திருந்தார்கள். ஞானஸ்நானச் சடங்கு முடிந்தவுடனே, குழந்தைக்கு ஞானத்தகப்பனாயிருந்த ராட்சஞேபஸ்கி என்னும் பிரபு, ஸ்தனிஸ்லாசைக் கையிலேந்திக்கொண்டு, திவ்வியநற்கருணையிருக்கும் பீடத்துக்குமுன் போய், அப்பீடத்தின் பாதத்தில் தேவகாணிக்கையாக குழந்தையைக் கிடத்தினார். ஸ்தனிஸ்லாஸ் அந்நாளிலிருந்து திவ்வியநற்கருணையில் வீற்றிருக்கும் நமதாண்டவரின் உகந்த பிள்ளையானார். பிற்காலத்தில் திவ்விய சற்பிரசாதத்தின்பேரில் இவர் வைத்திருந்த அணைகடந்த பத்தி பற்றுதலே இதற்கத்தாட்சியாம்.

இந்த பாலகனுடைய முகமானது, ஞானஸ்நானத்திலே பெற்றுக்கொண்ட தேவ இஷ்டப்பிரசாதத்தின் கண்ணாடியாயிருந்தது. அவருடைய முகம் வெகு அழகாயிருந்ததுமல்லாமல், மாசற்ற பரிசுத்ததனம் அதில் அச்சடித்திருந்தாற்போல் எப்போதும் விளங்கினது. தகப்பனார் பிள்ளையின் சௌந்திரியத்தை நோக்கி, இப்பிள்ளை வானலோகத்துக்கேயன்றி, இவ்வுலகத்துக்காக உண்டாக்கப்படவில்லையென்று அடிக்கடி சொல்வார்.



வளர வளர பையன் சர்வேசுரன் ஒருவனையே தன்னுடைய கதியாக ஏற்படுத்திக்கொண்டானென்று தெளிவாகத் துலங்கினது. இந்தச் சிறு பையன் சொற்ப வயசு நடக்கும்போதே ஆச்சரியத்துக்குரிய விதமாய் சகல புண்ணியங்களுக்கும் ஓர் வரிச்சட்டம்போலானார். தாம் செய்வதையெல்லாம் ஆலோசனையோடும், விமரிசையோடும், அடக்க ஒடுக்கத்தோடும் செய்து முடிப்பார். இச்சிறுபையனிடத்தில் இவ்வளவு மேலான நற்புத்தி விளங்கிவருவது, தெய்வச் செயலல்லவா? "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்றபடி, அவருடைய அடக்க ஒடுக்க மரியாதையைக் கண்ணுற்றவர்களெல்லாரும் கற்பென்கிற புண்ணியத்தை அதிகமதிகமாக நேசித்தார்கள்.

தேவ ஊழியக் காரியமென்றால், மனப்பூரிப்போடு அர்ச். ஸ்தனிஸ்லாஸ் செய்து முடிப்பார். சிறு பிராயத்திலேதானே அரமனையில் ஒரு மூலையைத்தேடி, அங்கே முழந்தாட்படியிட்டு, தன் சிறு கைகளைக் குவித்து, நேத்திரங்களை வானத்துக்கு நேரே உயர்த்திக்கொண்டு, தன் மழலைச் சொற்களால், சேசுவே, மரியாயே என்று பத்தி உருக்கத்தோடு வேண்டிக்கொள்வதைப் பார்த்தால், அவரை சம்மனசு

என்றுதான் சொல்லவேணும். இவர் இவ்விதமாக அடிக்கடி வேண்டிக்கொள்வதை இவருடைய தாய்தகப்பன்மார், பிரமிப்புடன் பார்த்து சந்தோஷக் கண்ணீர் விடுவார்கள். அக்கம்பக்கத்தாரெல்லாரும், இவரை சம்மனசென்றே அழைப்பார்கள். இவரிடத்தில் விளங்கின தேவ பத்தியும் பற்றுதலும், பிற்காலத்தில் இவரடையப்போகிற அர்ச்சியசிஷ்டதனத்துக்கு அத்தாட்சியாயிருந்தது.

ஸ்தனிஸ்லாஸ் சர்வேசுரனால் விசேஷ விதமாய் ஆசீர்வதிக்கப்பட்ட பிள்ளையென்பது மெய்தான். ஆனால் இவருடைய தாய்தகப்பன்மாரும், தங்கள் பிள்ளைகளை நல்வழியில் நடப்பிக்கிறதற்கான ஒழுங்குகளெல்லாம் செய்திருந்தார்கள். இந்த விஷயமாக, இவருடைய தமையனார் பவுல் கோஸ்கா எழுதிவைத்திருக்கிறதாவது: “நாங்கள் வேத சத்தியங்களையெல்லாம் தீர அறிந்து, ஞானக்காரியங்களில் தேர்ச்சியடைந்திருக்கும்படி எங்கள் பெற்றோர்கள் வேண்டிய ஒழுங்கு செய்திருந்தார்கள். எங்களிஷ்டப்பிரகாரம் எதுவும் செய்யாதபடியும், உலக இச்சையை நாடாமலிருக்கும்படியும், வெகு கண்டிப்பாய் நடத்தினார்கள். அவர்களும், இன்னும் அரமனையிலுள்ள ஊழியக்காரர்க



ளும் நாங்கள் மேரை மரியாதையும், முயற்சியெடுக்கிற பிள்ளைகளுமாயிருக்கும்படி தூண்டிக்கொண்டேயிருப்பார்கள். நாங்கள் குற்றம் கட்டிக்கொள்ளும்பொழுது, எங்களைக் கண்டிக்கும்படி, இந்த ஊழியக்காரர்களுக்கும் முழு உத்தரவிருந்தபடியால், இவர்களுக்கும் பயந்து நடந்தோம். எல்லாரையும் எங்கள் மேலதிகாரிகள்போல பாவித்து, எல்லாராலும் நேசிக்கப்பட்டு வந்தோம்.”

ஸ்தனிஸ்லாசுக்கு 4 வயது நடக்கும்போது, ஜான் பிலின்ஸ்கி, என்பவர் அவருக்கு உபாத்யாயராக நியமிக்கப்பட்டு, லத்தீன் பாஷையைக் கற்றுக்கொடுக்கத் துவக்கினார். உபாத்யாயர் சொன்னதையெல்லாம் வெகு கவனத்தோடு கேட்டு கீழ்ப்படிதலோடு எல்லாத்தையும் கற்றுக்கொள்வார். இலௌகீகப் படிப்பானது தெய்வீக ஞானத்தின்பேரில் அவருக்குள்ள ஆசையை அற்பமேனும் குறைக்கவேயில்லை.

கோஸ்கா குடும்பத்தில் அலுவல் பார்த்துக்கொண்டிருந்த ஒருவர், பிற்காலத்தில் பட்டம் பெற்று குருவாகி 90 வயது நடக்கும்போது, ஸ்தனிஸ்லாசுக்கு நாலு, ஐந்து வயது நடக்கையில் அவர் நடந்துகொண்ட விதத்தைப்பற்றி சொன்ன வரலாறாவது: “சிறு பிள்ளைகளிட

மிராத ஆழ்ந்த சிந்தனையும் பயபக்தியும் அவரிடம் விளங்குவதை, தாய் தகப்பன்மார் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். சிறுபிள்ளைத்தனமென்பதே அவரிடம் கிடையாது. சிறுவர்களுக்குரிய இனிய மாசற்றதனமிருந்தாலும், முதிர்ந்த வயதுள்ளவர்களைப்போல ஞானக்கிரியைகளைத் தேடிச் செய்வார். தேவகீர்த்தனையென்றால் அவர் மனம் பூரிக்கும்."

அர்ச். ஸ்தனிஸ்லாஸ் தானே உரோமாபுரியில் நவசந்நியாச காலத்தில் தம்முடைய சிநேகிதரொருவருக்கு "சர்வேசுரனுக்கு என்னை முழுதும் ஒப்புக்கொடுத்து எக்காலமும் அவருக்கு பிரமாணிக்கமாயிருப்பேனென்று வாக்கு செய்ததே, என் சீவியகாலத்தில் முதல் கிரியையாக நான் செய்ததாக எனக்கு ஞாபகமிருக்கிறது" என்று சொன்னார்.

ஜெபத்தியானத்தில் கொஞ்சநேரம் செலவழிக்க எப்போ சமயங்கிடைக்குமென்று காத்திருப்பார். ஆறு ஏழு வயதுள்ள இச்சிறு பாலன் படிக்கவேண்டியதைப் படித்துவிட்டு, ஜெபத்தியானம் செய்ய ஓர் மறைவிடம் பார்த்து சர்வேசுரனோடு சம்பாஷித்து பரவசமாகிறதைப் பார்க்கிறது அக்களிப்புக்குரிய காட்சியல்லவா? அடிக்கடி இவ்விதமாக தனியேயிருந்து சர்வேசுரனோடு சம்பாஷிப்பார்.



இப்பேர்ப்பட்ட தியானமுயற்சிகளில் தான் உலகவாழ்வின் ஈனத்தையும், பரலோகவாழ்வின் மேன்மையையும் முழுதும் கண்டுபிடித்தார். தியானயோகத்தை சரிவரக் கற்றறிய இடைவிடா முயற்சி செய்துவருவார். உலக கீர்த்தியை நிந்தித்து சர்வேசுரனுக்காக முழுதும் உழைக்கவும், புண்ணிய சாங்கோபாங்கத்தை எல்லாக் காரியத்திலும் தேட விரும்பினதும், இவருடைய தியானயோகத்தின் பலனும்.

"நான் அநித்திய நன்மைக்காகவல்ல, ஆனால் நித்திய நன்மைக்காக உண்டாக்கப்பட்டிருக்கிறேன். ஆனபடியால், நித்திய பாக்கியத்தை நாடி இலௌகிக ஆடம்பரத்தை வெறுக்கவேணுமென்று" அடிக்கடி சொல்லிக்கொள்ளுவார். இதுவே அவருடைய சித்தாந்தக் கோட்பாடு. பசாசு, உலகம், சரீரமென்கிற இம்மூன்று விரோதிகளோடும் சண்டைசெய்யும்போது, மேற்சொன்ன வார்த்தைகளையே தம்முடைய கேடயமாக உபயோகிப்பார்.

உலக இன்பம் தம்மை பிரபுவின் குமாரனைப்போல் சீவிக்கவேணுமென்றும், சரீர சுகத்தைத் தேடவேணுமென்றும் சோதனை செய்யும்பொழுதும், நான் அநித்திய நன்மைக்காக

வல்ல, நித்திய நன்மைக்காக உண்டாக்கப்பட்டிருக்கிறேனென்று, அதே வார்த்தைகளைச் சொல்லி ஜெயிப்பார்.

நாமும் இவ்வார்த்தைகளை அடிக்கடி சிந்திப்போமானால், உலக சிற்றின்பத்தை வெறுத்து, பசாசின் சோதனைகளையெல்லாம் ஜெயித்து, நம்முடைய இருதயத்தை பரிசுத்தத்திலும் புண்ணியத்திலும் நிலைநிறுத்தக்கூடியவர்களாவோம். ஜெபத்திலேதான் சர்வேசுரன் நமக்கு நற்புத்தி போதிக்கிறார். பிரமாணிக்கமாய் ஜெபம் செய்கிறவர்கள், புண்ணியத்திலும் பிரமாணிக்கமுள்ளவர்களாவார்கள்.

அர்ச். ஸ்தனிஸ்லாஸ் ஜெபத்தியானத்தில்தான் சகலவித புண்ணியங்களையும் கற்றுக்கொண்டார். கற்பென்கிற புண்ணியம், எல்லாத்தையும்விட அதிகமாக அவரிடம் பிரகாசித்தது. ஜெபத்தினாலும் தபத்தினாலும் இந்த மேன்மையான புண்ணியத்தை ஆதரித்துவந்தார். இந்தப் பரிசுத்த புண்ணியத்துக்கேற்காத சொற்ப வார்த்தையாவது சைக்கினையாவது அவராலே தாங்கமுடியாது. மரியாதையற்ற அசுசியான அற்ப வார்த்தை முதலாய் காதிலே விழுந்தால், லீலிபுஷ்பமானது சூரிய கதிர் பட்டவுடனே வாடுவதுபோல், அவர் முகம் வாடிப்போகும். கண்களை அப்போ



மூடிக்கொள்வார். காதை அடைத்துக்கொள்வார்.

இவருடைய தகப்பனார், பெரிய பிரபுவாயிருந்தபடியால், பலபேர் அவர் அரமனைக்கு வந்து போவது வழக்கமாயிருந்தது. அனேக விருந்தாடிகளும் குடும்பத்தாரோடு பந்தியில் உட்கார்ந்து சாப்பிடுவார்கள். இவர்களுக்குள் சிலர் அதிக மேன்மைதங்கிய நாகரீகமடையாத ஜனங்கள். இப்பேர்ப்பட்டவர்கள் பந்தியிலிருக்கும்பொழுதாவது, அல்லது வேறெங்கேயாவது, தப்பித்தவறி ஏதாவது அசுசியான வார்த்தை சொல்லிவிட்டால், அர்ச். ஸ்தனிஸ்லாஸ், கண்கள் வானத்தை அண்ணார்ந்து பார்க்கிற வண்ணமாய், மயங்கித் தவிப்பார். பக்கத்திலிருக்கிறவர்கள் அவரைப் பிடிக்காவிட்டால் மயக்கமாக கீழே விழுவார். அரமனையிலுள்ளவர்களுக்கு இது தெரிந்த விஷயமானபடியால், ஒருத்தரும், ஸ்தனிஸ்லாஸ் இருக்கும்பொழுது, சொற்ப மரியாதையற்ற வார்த்தைமுதலாய் உச்சரிக்கமாட்டார்கள். அவருடைய தகப்பனாரும் அப்பேர்ப்பட்ட வார்த்தை ஒன்றும் அரமனையில் உபயோகிக்கக்கூடாதென்று கண்டிப்பான உத்தரவளித்திருந்தார்.

கற்பென்கிற புண்ணியத்தை யாதொரு மாசின்றி காப்பாற்றும்படி இன்னொரு உபாயம்

எடுத்திருந்தார். அதாவது, மனுஷ ஜென்மத்திலெல்லாம் பரிசுத்தமும் பாக்கியமும் பெற்ற கன்னிகையாகிய ஜென்மப்பாவமில்லாமலுற்பவித்த மரியாயின்பேரில் உருக்கமான தாய்க்குரிய பத்தி வைத்திருந்தார். அந்தத் தாய்க்கு நாடோறும் க்ஷணத்துக்குக்ஷணம் இவர் காட்டிவந்த நேசப்பற்றுதலை எடுத்துரைப்பது கூடியதல்ல. சகல புண்ணியங்களுக்கும் இராக்கினியாக அவளை ஓயாமல் ஸ்துதித்து வாழ்த்துவார். தேவதாயும் இந்த மாசற்ற பையனை வெகுவாய் நேசித்தாளென்பதற்குச் சந்தேகமில்லை. "மரியாயே, என் தாயே" என்று அவர் அவளை அழைப்பார். அந்தத் தாயும் அவரைத் தன் விசேஷ பிள்ளையாக ஏற்றுக்கொண்டு, தன் பாரிசமாக அடைக்கலம் புகுந்திருந்த அவரைத் தனது அன்பான பாதுகாவலில் வைத்தரவணைத்து வந்தாள்.

அர்ச். ஸ்தனிஸ்லாசை இச்சிறு வயதிலறிய பாக்கியம் பெற்றவர்களெல்லாரும், தேவசிநேகத்தையும், மரியாயின்பேரில் பத்தியையும், தங்களிடம் மூட்டிக்கொள்ளும்படி, அவர் முகத்தைப் பார்க்கிறது போதுமாயிருந்தது.

---

## 2-ம் அதிகாரம்.

### வியன்னா பட்டணத்துக்கு கல்வி கற்றுக்கொள்ளப் போகிறார்.

அர்ச். ஸ்தனிஸ்லாசுக்கு இப்போ 14 வயது நடக்கிறது. ஒரு வித்தியாசாலைக்கு படிக்க அனுப்புவதற்கு தகுந்த பிராயமாச்சுது. ஆனால் காலமோ, மோசமான காலமாயிருந்தது. புதிதாய் உண்டாகிய பதித மதமானது ஐரோப்பா கண்டமெங்கும் பாவி, மனுஷர்களுடைய மனதைக் குளப்பிக் கெடுக்க ஏற்பட்டிருந்தது. பதித மதாசாரச் சீஷர்களெல்லாரும் அகடவிகடமாய்ப் பேசிப் பிரசங்கித்து, மெய்ஞானத்தைப் புறட்டி, வேதசத்தியங்களை மாற்றி, இளமனசுக்களை தங்கள் பித்தலாட்டமான மாய்கைக்குள்ளாக்கி, அநேகரை அந்தத் தப்பறையான மார்க்கத்திலுட்படுத்தத் தலைப்பட்டார்கள். ஆகையால் வேதமுறைமைகளையும், கல்வியையும், நல்வழிகளையும் கற்றுக்கொடுக்கிற வித்தியாசாலையைத் தெரிந்து, பிள்ளைகளை படிக்க அனுப்புவது கத்தோலிக்குத் தாய் தகப்பன்மாருடைய கவலையாயிருந்தது.

அக்காலத்தில்தான் புதிதாய் அர்ச். இஞ்ஞாசியாரால், ஏற்படுத்தப்பட்ட சேசுசபையானது பதித மதஸ்தருடைய தப்பறைகளை மறுத்து, திருச்சபையினுடைய பரிசுத்த கீர்த்திக்காக மிகவும் உழைத்துப் பேரெடுத்துவந்தது. இச்சேசுசபையார் பல தேசங்களிலும் பட்டணங்களிலும், கல்விசாலைகளை ஏற்படுத்தி, சிறுவர்களுக்கு நல்லொழுக்கம், ஞானவொழுக்கம், வேதவொழுக்கமென்கிற இவ்வித மெஞ்ஞானத்தையும் சரிவர ஊட்டி, சிறுவர்களின் ஆத்தும சரீர சுசீகர சீலர்களாக மேன்பாடடைந்து வந்தார்கள்.

இந்தச் சேசுசபையாருடைய கலாசாலைக்கே தம் மக்களைப் படிக்க அனுப்பவேணுமென்பது ஜான் கோஸ்காவின் அபிப்பிராயம். ஆனால் அவர் சுய நாடாகிய போலண்டு தேசத்தில் சேசுசபையாரின் வித்தியாசாலை ஒன்றும் ஏற்படுத்தப்படவில்லை. பக்கத்திலிருக்கும் ஆஸ்திரியா தேசத்து தலை நகராகிய வியன்னா பட்டணத்திலேயோவென்றால், சேசு சபையார் புதிதாய் ஓர் வித்தியாசாலை ஏற்படுத்தியிருந்தார்கள்.

இந்தக் கல்விசாலைக்குப் போதுமான இடம் கிடையாததினால், பெர்தினாந்து என்கிற சக்கர



வர்த்திதானே தன்னுடைய தயாள இரக்கத்தால் அவருக்குச் சொந்தமான மனைகளில் சிலதை கல்விசாலையில் படிக்கும் உட்பிள்ளைகளுக்காக உபயோகித்துக்கொள்ளும்படி சேசுசபையாருக்கு அளித்தார். சேசுசபையார் தங்கள் நற்படிப்பினையினாலும் போதனையினாலும் புதிதாய்க் கிளம்பிய பதித மதஸ்தருடைய துர்ப்போதனையை மடக்கவேணுமென்பதே, பெர்தினாந்து சக்கரவர்த்தியின் கருத்தும் பேராசையுமாயிருந்தது. சக்கரவர்த்தியின் ஆசைக்களவான பலனையும் கல்விசாலை ஈந்ததென்பதற்கு ஆக்ஷேபனை இல்லை. பதித மதத்தை நாடினவர்களுடைய மக்கள்முதலாய் இக்கல்விசாலையில் பயிற்சியடைந்து, விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு, தங்கள் நன்னெறியினாலும், தவபுண்ணியத்தினாலும், தங்களுடைய பதித பெற்றோர்களுக்கே புத்தி படிப்பித்தார்கள். வேறு சிலர் சேசுசபையாரிடம் கற்றுக்கொண்ட வேதமுறை அநுசாரத்துக்காக, பெற்றோரின் கஷ்டவாதனையை முதலாய் பொறுமையோடு அநுபவித்து, திருச்சபையில் திடனுள்ள விசுவாசிகளாயிருந்தார்கள். இதுவெல்லாம் வியன்னா நகரிலுள்ள வித்தியாசாலையில் அவர்கள் பெற்றுக்கொண்ட கல்விப் பயிற்சியின் மேன்மைக்கு அத்தாட்சியாம்.

ஜான் கோஸ்காவும், தம்முடைய மக்களும் வியன்னா பட்டணத்துக்குப்போய் அங்கே சேசுசபையாரிடம் கல்விப் பயிற்சி பெற்று வரும்படி அனுப்பிவைத்தார். 1564-ம் வருஷம் ஜூலை மாதம் 25-ம் தேதி பரிசுத்த வாலனாகிய ஸ்தனிஸ்லாசும், அவர் அண்ணன் பவுல் கோஸ்காவும், வியன்னா நகர் வந்து சேர்ந்தார்கள். இவர்களோடுகூட இவர்கள் உபாத்தியாயராயிருந்த பிலின்ஸ்கி என்பவரும், இன்னும் வேறு மூன்று தாசர்களும் வந்து சேர்ந்தார்கள். சேசுசபைச் சுவாமிமாரால் நடத்தப்பட்டு, புத்தியோடு பத்தியும் சேர்த்து ஊட்டப்படும் இக்கலாசாலைக்கு தான் படிக்கவந்ததையிட்டு, அர்ச். ஸ்தனிஸ்லாசுக்குண்டான ஆனந்தத்துக்கோ அளவில்லை.

இவரோடுகூடப் படித்த தோழர்களில் அநேகர் ஸ்தனிஸ்லாசினுடைய புண்ணிய மார்க்கத்தையும், பரிசுத்த மாதிரிகையையும்பற்றி பிற்காலத்தில் தவறாத அத்தாட்சி கொடுத்திருக்கிறார்கள். அவர்களில் ஒருத்தர் சொல்லியிருக்கிறதாவது: "ஸ்தனிஸ்லாஸ் வித்தியாசாலையில் கால் வைத்த நாள்முதல், நன்னடக்கையினால் பேர்பெற்று விளங்கினார். அவரை அறிந்தவர்களெல்லாரும் ஒரு அர்ச்சியசிஷ்டவராகவே



அவரைப் பாவித்தார்கள். தனியே ஜெபித்தாலும் சரி, கோவிலில் வேண்டிக்கொண்டாலும் சரி, அடக்கவொடுக்கமும், பத்தி உருக்கமும், தேவ ஐக்கியமும், அவரைப் பத்திசுவாலகரான சம்மனசு வடிவாக்கி, அவரை அச்சமயங்களில் உற்றுப் பார்க்கிறவர்களுடைய மனதில் தேவ சிநேகத்தை எழுப்பும். அவருடைய பேச்சு வார்த்தை சம்பாஷணைகளிலெல்லாம் ஆழ்ந்த புண்ணியம் விளங்கும். ஒரு வார்த்தையில் அவருடைய குணத்தை வருணிக்கவேணுமானால், அவரைச் சுற்றியிருக்கிறவர்களெல்லாருக்கும் புண்ணிய சாங்கோபாங்கக் கண்ணாடியாக அர்ச். ஸ்தனிஸ்லாஸ் விளங்கினார்."

இவருடன் கல்விசாலையிலிருந்த அந்தோனி என்கிற இன்னொருவர், எல்லாரும் ஸ்தனிஸ்லாசை அர்ச்சியசிஷ்டவரென்று சொல்லுவதைக் கேட்டு, அவர் ஜெபத்தியானம் செய்கிற நேரம் பார்த்து, ஓர் மறைவிடத்தில் ஒளிந்துகொண்டு, அவரை அடிக்கடி உற்றுப் பார்ப்பார். பூசை நேரத்திலாவது தேவ சங்கீதம் பாடும்போதாவது, ஸ்தனிஸ்லாஸ் தரைக்கு மேல் எழுப்பப்பட்டு யாதொரு தாக்கமில்லாமல் ஆகாசத்தில் பரவசமாக நிற்பதைக் காண்பார். தேவமாதாவினுடைய பீடத்துக்குமுன்

முழங்காலிலிருந்து, கைகுவித்த மேரையாயும், கண்ணை ஏறெடுத்துப் பாராதவண்ணமாயும், ஜெபமாலையையும் அத்தாயைக் குறித்த ஜெபங்களையும் ஜெபித்துக்கொண்டிருப்பார். கிருபை தயாபத்து மந்திரப் பாட்டு கோவிலில் பாடுகிறபோது, அவருடைய முகம் சந்தோஷத்தால் பூரித்து, தேவதாயின் நேசக்கதிர்களால் அவர் கண்கள் வீசும்.

இயற்கையாய் தயை தாழ்ச்சியுடையவரானாலும், வெளி மனுஷரோடு பேசப் பிரியப்படமாட்டார். தினம் மூன்று பூசை காண்பார். இவருடைய பத்தி உருக்கத்தையும், கண்டிப்பான மௌன அடக்க ஒடுக்கத்தையும் பார்த்து, கேலியாக சேசுசபைச் சந்நியாசியென்று இவருடைய தமையனும் தோழர்களும் இவருக்கு பேர் கொடுத்திருந்தார்கள். ஸ்தனிஸ்லாசும் சுவாமிமார்களை நன்றாய் அறிந்திருந்த சிநேகிதர்களில் ஒருவரிடம் போய், சேசுசபை நவசந்நியாசத்தில் சுவாமிமார்கள் தன்னைச் சேர்த்துக்கொள்ளும்படி சிபார்சு செய்ய, அவரைக் கெஞ்சி மன்றாடுவார். சேசுசபையாரின் வித்தியாசாலையில் உட்பிள்ளையாயிருந்த காலமெல்லாம் படிப்பைச் சரிவர கவனித்துப் படித்து, அவருடைய இனிய குணத்தினால் எல்லாரா



லும் பட்சத்தோடு நடத்தப்பட்டு, அவருடைய பத்தி உருக்கத்தினால் மனுஷ ரூபமெடுத்த சம்மனசென்று அழைக்கப்பட்டு வந்தார். ஆனால் சேசுசபையாரிடம் உட்பிள்ளையாயிருக்கும் பாக்கியம் அவருக்கு வெகுநாளைக்கு கொடுத்து வைக்கவில்லை.

பெர்தினந்து சக்கரவர்த்தி மரித்ததும், பதிதமார்க்கத்தை நாடிக்கொண்டிருந்த அவருடைய மகன் மாக்ஸிமிலியன், சக்கரவர்த்தியாக நியமிக்கப்பட்டு, சேசுசபையாருக்கு இவருடைய தகப்பனால் கலாசாலையின் உபயோகத்துக்காக அளிக்கப்பட்டிருந்த மனைகளை அவர்களிடமிருந்து பிடுங்கிக்கொண்டார். இந்த இடைஞ்சலினால், அக்கல்விசாலையில் உட்பிள்ளைகளாயிருந்தவர்களுக்கு தகுந்த இருப்பிடமில்லாமல் போனபடியால், அவ்வுட்பிள்ளைகள் பலவிதமாகச் சிதறிப்போக நேரிட்டது. சிலர் தங்கள் தங்கள் வீட்டுக்குத் திரும்பினார்கள். வேறநேகர் வியன்னா பட்டணத்தில்தானே இல்விடம் தேடிக்கொண்டு அங்கிருந்து வித்தியாசாலைக்குப் போய் வந்தார்கள். பவுல் கோஸ்காவும், தங்கள் உபாத்தியாராகிய பிலின்ஸ்கியுடைய அநுமதிப்படி, பதித மதஸ்தனாகிய கிம்பர்க்கென்று பேர்கொண்ட ஒரு துரையின்

வீட்டில் குடியிருந்து, வித்தியாசாலைக்குப் போய் படித்துவர தீர்மானம் செய்தார்.

பதித மதஸ்தனுடைய வீட்டில் போய்க் குடியிருக்க ஸ்தனிஸ்லாசுக்கு கிஞ்சித்தேனும் பிரியமில்லை. பவுல் கோஸ்கா இந்தப் பதித்னுடைய இருப்பிடத்தைத் தெரிந்துகொண்டதற்கும், அது சொகுசும் டம்பமுமான பொது வீதியில் இருந்ததே காரணமாம். ஸ்தனிஸ்லாஸ் பலவித ருசுக்களை எடுத்துக் காட்டி, எவ்வளவுதான் சொல்லியும், தன் தமையன் அவருக்கு இணங்கவில்லை. மேலும் அவர் தமையனுர் டம்பாச்சாரிபோலத் திரியவும், தம்பியை ஆங்கார அதிகாரத்தோடு நடத்தவும் தலைப்பட்டார். ஸ்தனிஸ்லாஸ் சொல்லவேண்டியதெல்லாம் சொல்லிப் பார்த்தும் தமையன் அசையாததைக் கண்டு துக்கித்தாலும், சேசு சபையார் கலாசாலைக்குப் போய் படிக்கவும், தான் சேர்ந்திருந்த அர்ச். பார்பராம்மாள் சபைக்கூட்டத்துக்குப் போய்வரவும் தடையிராதென்று, பொறுமையாய் அந்தப் பதித துரையின் வீட்டிலேயே தமையனோடு குடியிருந்தார்.

கிம்பர்க்கர் துரை வீட்டின் மேன்மெத்தையில்தான், அர்ச். ஸ்தனிஸ்லாஸ் குடியிருந்த அறை இருக்கிறது. அங்கிருந்து பார்த்தால்



சேசுசபைச் சுவாமிமார் கோவிலும், கல்விசாலையின் கீழ்ப்பக்கமும் வெட்ட வெளியாய்த் தோன்றும். அக்கோவில் சொற்பக் கட்டடமாறுபாடுகளைத்தவிர, மற்றதெல்லாம் அப்படியே பாதுகாக்கப்பட்டு, தற்காலம் அவ்வூரின் பங்குக் கோவிலாயிருக்கிறது. அர்ச். ஸ்தனிஸ்லாஸ் வசித்த அறையும் ஒரு சிறு கோவிலாக மாற்றப்பட்டு, நாளதுவரையில் அநேக திருயாத்திரைக்காரர் போய் சந்திக்கும் திருஸ்தலமாய் விளங்குகிறது.

சேசுசபை வித்தியாசாலையில் கல்விப்பயிற்சி பெற்றுக்கொண்டு வந்த வேறநேக வாலிபர்களும், கிம்பர்க்கர் துரை வீட்டில் குடியிருந்தார்கள். ஸ்தனிஸ்லாசுக்கு சொந்தக்காரனும் அதே நாமம் தரித்தவருமான இன்னொரு ஸ்தனிஸ்லாசும் அங்கு வசித்தார். நமதர்ச்சியசிஷ்டவரைத்தவிர மற்றவர்களெல்லாரும் உலக பிரீதியை நாடினவர்களாய்த் திரிந்தார்கள்.

ஸ்தனிஸ்லாசோவென்றால், வியன்னா பட்டணத்தில் படித்துக்கொண்டிருந்த மூன்றுவருஷகாலமும், கல்விப்பயிற்சியில் வெகு விர்த்தியடைந்தார். அவரெழுதிய வர்ணிப்புகளிலும் உபந்நியாசங்களிலும் சிலது உரோமாபுரியிலும், அவர் சுய தேசத்து சில நாடுகளிலும்

நாளதுவரையில் காப்பாற்றப்பட்டு வருகிறது. இவைகளே, அச்சிறு வயதிலேதானே அவ்வளவு மேன்மையாய் எழுதினது அவருடைய கெட்டிக்காரத்தனத்துக்கும் அவரொடுத்துக்கொண்ட பிரயாசைக்கும் அத்தாட்சியாம். காலத்தை வீணுய்ப் போக்காமல் நன்ருய்க் கவலையெடுத்து உழைப்பார். தமக்கிருந்த நேரத்தையெல்லாம் படிப்புக்கும், ஜெபத்துக்குமாக பிரித்து வைத்துக்கொண்டார். படிப்பில் விர்த்தியும் அநுகூலமுமடையத்தக்க மார்க்கமெல்லாமெடுத்துக் கொண்டார். ஜெபம் பண்ணுத நேரமெல்லாம் புஸ்தகமும் கையுமாயிருப்பார். ஞாபக சித்தி ஸ்திரப்படும்படி, பாராமல், பாடங்களில் சிலதுகளைப் படிப்பார். எழுதுவதில் நல்நடைபெறும்படி தமக்குத் தென்படுகிற நல் மொழிகளையும் வாக்கியங்களையும் சொந்தப் புஸ்தகத்தில் எழுதி வைத்துக்கொள்வார். நித்திரை செய்யப் போகும்பொழுது முதலாய் தூக்கம் வருமட்டும் வாசிக்கும்படி கையோடு புஸ்தகம் எடுத்துக்கொள்வார். இவ்விதமாகத் துவக்கத்தில் படிப்பு விஷயத்தில் மேன்பாடடையாமலிருந்தவர், வருஷக் கடைசியில் தம்மோடு சேர்ந்த மாணுக்கருக்கெல்லாம் மேலாகக் கெட்டிக்காரனென்று பேர் பெற்ருர்.



பிரபுவின் புத்திரனுனுலும், இவரைச் சேர்ந்த வாலர்கள் வெகு கெம்பீர ஆடம்பர உடை அணிந்துகொண்ட போதிலும், ஸ்தனிஸ்லாஸ் வெகு சாதாரண உடைதான் உடுத்துவார். டம்ப ஆடம்பரமென்பது ஒன்றும் அவரிடம் கிடையாது. வெகு தாழ்ச்சி நிறைந்தவர். தம்முடைய பத்திக்கிருத்தியங்களையும், சர்வேசுரன் அவர்மட்டில் தியானயோகத்தில் காட்டிய தயாள நிறைந்த வரங்களையும் ஒருவருமறியாதபடி மறைவிடம் பார்த்து ஜெபிக்கப் போவார். ஆனுலும் அவருக்களிக்கப்பட்ட விசேஷ வரங்களை முழுதும் இரகசியமாக வைப்பது கூடாத காரியமாச்சுது. இதுகளைக் கண்ணுலே பார்த்தவர்களே அவருடைய அர்ச்சியசிஷ்டதனத்துக்கு சாட்சி சொல்லக்கூடியவர்களானுர்கள்.

ஸ்தனிஸ்லாஸ் யாருமறியாமல் தப்பித்து சேசுசபையில் போய்ச் சேர்ந்துகொள்வானென்பது அவருடைய சகோதரனுகிய பவுல் கோஸ்காவினுடையவும் பிலின்ஸ்கி உபாத்தியாருடையவும் உத்தேசமும் அச்சமுமாயிருந்தது. இதற்காக ஸ்தனிஸ்லாஸ் வெளியே புறப்படும்போதெல்லாம், அவனெங்கே போகிருனென்றும் என்ன செய்கிருனென்றும் துப்பறியும்படி,

அவர்களுடைய ஊழியக்காரர்களுக்கு உத்தர
வளித்திருந்தார்கள். இதை அறிந்திருந்த ஸ்த
னிஸ்லாசோவென்றால், ஊழியர்கள் சாப்பிட்
டுக்கொண்டும், தமையனும் உபாத்தியாயரும்
சீட்டு விளையாட்டில் கவர்ந்திருக்கும் சமயம்
பார்த்தும், தப்பித்து கோவிலுக்கு விரைந்து
போய்விடுவார். அங்கே சிலுவை அடையாள
சாஷ்டாங்க தண்டமாய் விழுந்து, திவ்விய
நற்கருணையில் வீற்றிருக்கும் ஆண்டவருக்கு
ஆராதனை செலுத்திவிட்டு, ஒருமூலையைத்தேடி
அங்கே தியானிக்கும் காலத்தில், தரை தட்டா
மல் ஆகாசத்தில் பரவசமாக நிற்பதை அவ
ரைத் தேடிப்போன ஊழியக்காரர்கள் காண்
பார்கள். பரவசம் தெளிந்த பிறகு, ஊழியக்
காரர்கள் பிரமிப்புடன் தம்மை உற்றுப்பார்த்
துக்கொண்டிருப்பதை அறிந்து, தன்னையறியா
மலே சங்கோஷமாய், முகம் சிவக்க, வெட்கம்
பொறுக்கக்கூடாமல், புன்சிரிப்போடு: "இது
ஒன்றுமில்லை, பயப்படாதேயுங்கள்" என்று
சொல்லி அவர்களைத் தேற்றி அனுப்புவார்.

ஸ்தனிஸ்லாசுக்கு சர்வேசுரனளித்தருளிய
பேருபகாரங்களை மறைத்துவைக்க அவர் எவ்
வளவுதான் பிரயாசை யெடுத்தும், அவைகள்
எப்படியாவது வெளியாகி அவரடைந்திருந்த



உத்தம புண்ணியத்துக்கடையாளங் காட்டிக்
கொண்டிருந்தது. இவருக்கு உபாத்தியாயரான
பிலின்ஸ்கி யென்பவர், அர்ச்சியசிஷ்டவர் கிம்
பர்க்கர் துரை வீட்டில் குடியிருக்குங்காலத்தில்
அடைந்த புண்ணிய சாங்கோபாங்கத்துக்கு
மூன்று விசேஷ காரணங்களை எடுத்துரைத்
திருக்கிறார். அவைகளாவன: முதலாவது
கெட்ட தோழர்களை விலக்கி பரிசுத்தமுள்ள
நேசர்களைத் தெரிந்துக்கொண்டதும், இரண்டா
வது: சேசுவைக்கண்டு பாவித்து மேலான புண்
ணிய சாங்கோபாங்கத்தைக் கைக்கொள்ளும்
சந்நியாச அந்தஸ்தின்பேரில் அவருக்குள்ள
அணைகடந்த ஆசையும், மூன்றாவது: தவறாத
அடக்க ஒடுக்கத்தோடும் பத்தி பற்றுதலோ
டும் தியானயோகத்தை அண்டி, அதை விடா
முயற்சியாய் செய்து வந்ததுமேயாம். அவரு
டைய நேரமெல்லாம் படிப்புக்கும் ஜெபத்துக்
குமாகவே பிரித்து வைத்திருந்தார். யாதொரு
பராக்கின்றி ஜெபத்தியானம் செய்கிற புண்
ணிய சாங்கோபாங்க உச்சிக்கு அவர் வந்து
சேர்ந்திருந்ததாக அவருடைய தோழர்களி
லொருவர் எழுதிவைத்திருக்கிறார். தாம் வசி
த்தயிடத்தில் விசாலமான அறைகள் காலியா
யிருந்தபடியால், அதுகளில் ஓர் அறையைத்

தெரிந்துகொண்டு அங்கே அந்நியொந்நியமாய் சர்வேசுரனோடு நீடிய நேரம் சல்லாபிப்பார்.

கன்னிமரியாயின் பேரில் அவருக்குள்ள பத்தியானது, அவருடைய எழுத்தப்பியாசங்களில் முதலாய் விளங்கும். அந்தத் தாயின் மகிமைகளிலொன்றைத் தெரிந்தெடுத்து அதை வருணித்து வீட்டப்பியாசமாக எழுதுவார். ஆவர் படித்த புஸ்தகங்களின் ஓரத்தில், "மரியாயே! எனக்கு தஞ்சமாயிரும்" என்றெழுதியிருக்கும். படிக்கிற சமயங்களில் அவ்வார்த்தைகளின்பேரில் கண் பட்டவுடனே, தேவதாய்க்கு தம்மனதை எழுப்பி அவ்வார்த்தைகளை முத்தமிட்டுக்கொள்வார். கலாசாலையைப் போய்ச் சேர்ந்ததும், திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் சேசுநாதர்சுவாமியைச் சந்தித்து, அவருடைய திவ்விய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டுதான் படிக்கத் துவக்குவார். இதுபோலவே பள்ளிக்கூடத்தைவிட்டுத் திரும்பும்போதும் திவ்விய சந்நிதானத்துக்கு நன்றியறிந்த ஆராதனை செய்யாமல் திரும்பமாட்டார்.

இரவில் சொற்ப நாழிகைதான் நித்திரை செய்வார். நடுச்சாமத்தில் விழித்து தமது கரங்களை சிலுவை அடையாளமாக விரித்துக்கொண்டும், கரங்களைக் குவித்துக்கொண்டும், அள



வற்ற நேரம் தியானசிந்தனை செய்வார். அவருக்கு காவலாளிகள் போலிருந்த ஊழியக்காரர்களே இதைக் கண்ணாலே பார்த்திருக்கிறார்கள். தியானசிந்தனையை முடிக்கிறதற்கு குறித்த நேரம் கிடையாது. அவருடைய நேச அக்கினிக்குத் தகுந்த பிரகாரம் அதை நீட்டிக்கொள்வார். தியானச்செபத்தை முடித்ததும், தம்மைக் கசையால் நிஷ்டூரமாக, கேட்டவர்களுடைய அங்கம் பதற, தம்மைத்தானே அடித்துக்கொள்வார். அடியின் காயத்தால் அவருடைய வஸ்திரங்கள் கூட இரத்தம் தோய்ந்திருக்கும். இவரிப்படித் தம்மை வாதித்துத் கொள்வதை நிறுத்த பிலின்ஸ்கி உபாத்தியாயர் வெகு முயற்சியெடுத்தும், ஸ்தனிஸ்லாஸ் தமது சரீரத்துக்கு கொஞ்சமேனும் இளக்காரம் கொடுத்தவரல்ல, சரீரத்தை ஒரு விரோதியாக பாவித்துவந்தார். அதற்குப் பிரீதியானது ஒன்றும் கொடுக்கமாட்டார். பலவிதமான தபசுமுயற்சிகளினால் கீழாங்கிஷத்தை மேலாங்கிஷத்துக்கு கீழ்ப்படுத்திக்கொண்டு வந்தார். ஐம்புலன்களை அவைகள் நோக்கப்படி செல்லவிடாமல், தமது சித்தத்துக்கு கீழ்ப்படியும்படி அடக்கிவந்தார். மாசற்ற பரிசுத்த சீலனும் பத்திசுவாலகருமான ஸ்தனிஸ்லாஸ் என்ன பாவத்தின் தோஷத்துக்காக இவ்விதமாகத்

தம்மைத் தண்டித்துக் கொண்டுவந்தாரென்று கேட்பீர்களோ? அவருடைய சரீரமும் ஐம்புலன்களும் ஆத்தும சுசிகரத்துக்கு விரோதமாயெழும்பி இதுவரையில் போராடினதைப் பார்த்தோமா? பாவம் நிறைந்த மானிடர்களாகிய நாம், சரீர ஆசாபாசங்கள் மேலிட்டு வராதபடி அடக்கி வெறுத்து பாவத்துக்கிரையாகாதபடி செய்யவேண்டிய தபசுக்களை, ஆசாபாச சோதனை தம்மிடம் ஒருக்காலும் கிளம்பத் தலைப்படாதபடி அவர் கடின தவம் புரிந்தார். தபசு நிறைந்த ஜெபத்தினாலல்லவா அவரிருதயம் தேவசிநேகம் பற்றியெரிந்தது.

அக்காலத்தில் அடிக்கடி திவ்விய நற்கருணை வாங்குவது வழக்கமாயில்லாவிட்டாலும், ஸ்தனிஸ்லாஸ் அடிக்கடி வெகு பத்திபற்றுதலுள்ள ஆயத்தத்தோடும், இருதய அக்களிப்போடும் திவ்விய சேசுவைப் பெற்றுக்கொள்வார். திவ்வியசற்பிரசாதம் வாங்குகிறதற்கு முந்தின நாள் எப்போதும் ஒரு சந்தியாயிருப்பார். ஒருசந்தியாயிருப்பது தமது தமையனுக்குப் பிரியமிராதாகையால், ஒரு சாக்குபோக்குச் சொல்லி இராப்போசனத்துக்கு வாராமல் ஒளிந்துகொள்வார். இந்த பரிசுத்த இளைஞன் கடுந்தவத்தினாலும், அடக்கவொடுக்க ஒழுக்கத்தினாலும் சோர்ந்து வாடிப்போய் சந்தோஷ



மற்றவராயிருந்தாரென்று கனவிலும் கருத வேண்டாம். தேவ ஆனந்தத்தை எப்போதும் சுகித்தநுபவித்துக்கொண்டிருந்தார். இவ்வுலகத்திலிருந்தாலும், இவ்வுலகமறியாத உன்னத சந்தோஷம் அவராத்துமத்தில் குடிகொண்டிருந்தது. அதை அவரிடமிருந்து ஒருவரும் பறித்துக்கொள்ளக் கூடாதென்பதையும் நீர அறிந்திருந்தார். அவருடைய மலர்ந்த முகச் சாயல், எப்போதும் சிரித்த வண்ணமாயும், பரிசுத்தத்துக்கும் அருந்தவத்துக்கும் பிரியாத துணையாகிய தூயபாக்கியம் வீசுகின்ற மேனையாயும் ஜொலிக்கும். தியானயோகத்திலமிழ்ந்தி நித்திய சம்பாவனையை சுகித்தநுபவிக்கிறதுபோல, சர்வேசுரனோடு இராப்பகலாய் ஜெபத்தியானத்தின் மூலமாய் ஐக்கியமாகியிருந்தவருடைய மனதில் எப்போதும் மன அக்களிப்பு குடியிருந்தது ஆச்சரியமா? "நான் அநித்திய நன்மைக்கல்ல, ஆனால் நித்திய பாக்கியத்தை இவ்வுலகில் தேடியிருக்கிறேனென்ற" கோட்பாட்டைக்கொண்டவருக்கு இவ்வுலக கஷ்டங்களெல்லாம் ஒரு பொருட்டா? சகல காரியமும் அவரை சர்வேசுரனுக்கே எழுப்பினது.

## 3-ம் அதிகாரம்.

### தமையனுடைய உபத்திரவமும், அவருக்குண்டான கடுமே வியாதியும்.

யாதொரு ஜெந்துவுக்கும் ஒரு தீங்கும் செய்யாமல், தானுண்டு தன் கடமை உண்டென்றிருந்த இந்தப் பரிசுத்த இளைஞனை முதலாய் விரோதித்து அவரை எதிர்த்து விரோதிக்கத் தலைப்படுகிறவர்களுமுண்டாவென்று நினைக்கக் கூடும். அர்ச். ஸ்தனிஸ்லாசின் நன்னடக்கையையும் உன்னத மாதிரிகையையும் பழித்தவர்களுமுண்டா? மற்றவர்கள் நன்மார்க்கத்தைத் தேடி, இலௌகீக இன்ப ஆடம்பரங்களை வெறுத்துத் தள்ளி, புண்ணிய வழியை நாடி நடந்து கொள்ளும்பொழுது, உலகவாசிகள் தாங்களும் அவ்விதமாய்ப் பரிசுத்தத்தில் நடக்காததையிட்டு தம் தம் மனச்சாட்சிக் குத்துப்பொறுக்காமலோ, அல்லது வேறநேக காரணங்களையிட்டோ, மேற்சொன்ன புண்ணியவான்களைச் சகிக்கக்கூடாமல், பழித்து நகைப்பது காலா காலத்தில் நடக்கிற காரியந்தான். இவ்வாறு ஸ்தனிஸ்லாஸ் உலக இன்பானந்தத்தை வெறுத்து,



தேவ சிநேக மார்க்கத்தைப் பின்பற்றியது அவரோடிருந்த தோழர்களுக்கும் தமையனுக்கும் ஒரு தூண்டுகோல் போலானதினாலும், அவர்கள் அவருடைய நன்மாதிரிக்கிணங்கி நடக்கப் பிரியப்படாததினாலும், அப்பரிசுத்தவாலனைச் சகிக்கக்கூடாமல் விரோதிக்கத் தலைப்பட்டார்கள். பவுல் கோஸ்காவும் பெருமை ஆடம்பரமாகத் திரியத் தலைப்பட்டானென்றும் கேட்டோம். அதே மனையில் குடியிருந்த இவருடைய இனத்தாராகிய வேறு இரண்டு தோழர்களும் இவரோடு கூடிக்கொண்டார்கள். டம்பமாய் உடுத்தி தங்களை அலங்காரமாய்ச் சிங்காரித்துக்கொண்டு, ஊர்க்காடெல்லாம் சுத்தி, ஊரில் நடக்கும் கூத்து, ஆட்டம், விளையாட்டு, நாடகம் இவை முதலியவைகளைப் பார்ப்பதுதான் இவர்கள் வேலை. இதுகளில் அவர்கள் வீண்நேரமெல்லாம் போக்கிக்கொண்டு வந்தார்கள். கோவிலுக்கு போவது, பாவசங்கீர்த்தனம் செய்வது, திவ்விய சற்பிரசாதம் பெற்றுக்கொள்வது அரிது. ஒரு ஏழைக்குப் பிச்சைகொடுப்பது, எவருக்காவது ஒரு பிறர் சிநேக முயற்சி செய்வதென்றால், அவர்களுக்குக் கசப்பாயிருக்கும். இவ்விதமாய் இலௌகீக இன்பத்தை நாடித் திரிந்தவர்களுக்கு அர்ச். ஸ்தனிஸ்லாஸ் பக்கத்தி

விருந்து நன்னெறியின் கண்ணாடியாயிருந்தது அவர்களுக்கு சகிக்கக்கூடாத பொறாமையாயிருந்தது. நமதர்ச்சிஷ்டவர் சீவியமே அவர்களின் வீண் நடக்கைக்கு சிட்சை செய்தாப்போலாச்சுது. ஆகையால், தமையனும் மற்றிரண்டு தோழர்களுங்கூடி அவர் மட்டில் கோபங்கொண்டு வைராக்கியம் வைக்க ஆரம்பித்தார்கள். "சகலரையும்போலிராமல், ஏன் இவர் மாத்திரம் ஒதுக்காயிருந்துகொண்டு, நம்மோடு கலந்துகொள்ளாமல் பாசாங்கு பண்ணிக்கொண்டிருக்கவேணுமென்று" இவ்வித நிந்தைச் சொற்களை உச்சரித்து, பலவிதமாக நமதர்ச்சிஷ்டவரை வாதித்து உபத்திரவப்படுத்த ஏற்பட்டார்கள்.

ஸ்தனிஸ்லாஸ் அடிக்கடி தேவாலயத்தைச் சந்திக்கப் போகிறதும், ஜெபத்தியானம் செய்கிறதும், நடை உடை பாவனையில் சாமானியனாயிருப்பதும், அவர்கள் கூட்டாளிகளை திரட்டிக்கொண்டு வந்து பெரும் டம்பமான விருந்து செய்யும் வேளையில், அர்ச்சிஷ்டவர் ஆஜராயிராமல் ஒளிந்துகொள்வதும், இப்பேர்ப்பட்ட அநேக நற்செயல்களெல்லாம் அவர்களுடைய கோபத்தை அதிகதிகமாக மூட்டினது. பவுல் கோஸ்கா இதுவெல்லாம் பார்த்து தமது தம்பியை வெகு



நிஷ்டூரமாய் நடத்த ஆரம்பித்தார். அந்த குற்றமற்ற வாலனை அநியாயமாகத் திட்டுவார். தன் கூடப்பிறந்த சகோதரனாச்சுதேயென்று அவருக்கு ஒரு நல்லவார்த்தை சொல்லார். ஏதோ சகிக்கக்கூடாத வஸ்துவைக் கண்டு சீறிவிழுகிறாப்போல தம் சகோதரன் மட்டில் சீறிவிழுவார். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அவர்கள் உபாத்தியாயராகிய பிலின்ஸ்கி என்பவர் பவுல் கோஸ்காவைத் தண்டித்துத் திருத்தியிருக்கலாம். அவரைத் திருத்தி நடத்துவது உபாத்தியாயரின் கடமையாயுமிருந்தது. ஆனால் பவுல் கோஸ்காவைத் திருத்தும்படியான தைரியம் கோழையான அவரிடமில்லாமல்போச்சுது. இதுபோக, உபாத்தியாயரோ மற்றவர்களோடு சேர்ந்து அர்ச்சிஷ்டவரை ஈனமாகப்பேசத் தலைப்பட்டார். "இப்படியெல்லாம் ஏன் விகாரமாக நடந்துகொள்ளவேணும். புண்ணியத்தைச் செய்வதென்றால் ஒருவரோடும் கூடாமல் அகந்தையாய் நடந்து கொள்வதுதானா? உலக வாழ்க்கையில் கலந்து நடந்து இலௌகிக நடை பாவனையைக் கற்றறிந்துகொள்ளும்படியல்லவா உங்கள் தகப்பனார் இங்கு உங்களை அனுப்புவித்தார்" என்று சொல்லி பலவிதமாய்ப் போதிக்கலானார். அவருடைய பிதற்றலுக்கும் போத

னைக்கும் ஸ்தனிஸ்லாஸ் காது கொடுக்கவில்லை என்று பார்த்து, பலவிதமாய்த் திட்டி, "சேசு சபை சந்நியாசியாராய்ப் போய்விட்டாரப்பா" என்று கூறிக் கேலிபண்ணி, அவருடைய பத்தி முயற்சிகளைக் குறித்து நகைத்துப் பரிகாசம் செய்வார்.

பவுல் கோஸ்காவுக்கு தம்பியின் பேரிலுள்ள கோபத்துக்கோரளவில்லை. திட்டினது போதாமல் கை வைக்கவும் தலைப்பட்டார். நமது மாசற்ற அர்ச்சிஷ்டவரை நிந்தையாகக் கீழே தள்ளி தடியாலடித்து, காலினால் மிதித்துதைப்பார். ஐயோ அநியாயம்! என்ன பிசகு செய்ததினால் தமையனிப்படி நடத்துகிறார். இப்பேர்ப்பட்ட அநியாயக் கொடூரத்தைக் கண்ணுற்றுப் பார்த்துக்கொண்டிருந்த பிலின்ஸ்கி, பவுலை பல தடவை இழுத்து அறையை விட்டு வெளியே கொண்டுபோய், இப்படிச் செய்வது பிசகென்றுரைப்பதற்கு பவுல் பதிலுரைத்து புலம்புவதாவது: "இது யாருடைய தப்பிதம். ஸ்தனிஸ்லாஸ் ஏன் நான் சொன்னபடி செய்கிறதில்லை. அவனுடைய பிடிவாதத்தனந்தான் என்னை அவனுடைய விரோதியாக்குகிறது. எல்லாரையும்போல் வாழ்கிறதற்கு அவனுக்கு என்ன கேடு" என்பார்.



இவ்விதமாய் இரண்டு வருஷகாலமாக பவுல் கோஸ்கா, சகோதரன் மட்டில் இலவலேசமேனும் அன்பு காட்டாமல் அநியாயமாய் இம்சைப்படுத்தி வந்தார். பவுல் கோஸ்கா ஸ்தனிஸ்லாசுக்கு ஒரு வயதுக்கு மட்டும் மூப்பாயிருந்தாரென்பதையும் மறந்துவிடக் கூடாது. தமையன் தன்னை இவ்வளவு கஷ்டத்துக்குள்ளாக்கி வாதிக்கிறாரென்று அர்ச்சிஷ்டவர் தந்தைக்கு ஒரே ஒரு வார்த்தைமட்டும் எழுதியிருப்பாரேயாகில், அவருக்கிருந்த கஷ்ட இக்கட்டுகளெல்லாம் தூசிபோல பறந்துவிடும். அர்ச்சிஷ்டவரோவென்றால், சகலத்தையும் சர்வேசுரனுக்காக அநுபவிக்கப் பொறுமையுள்ளவராயிருந்தார். "நான் நித்திய நன்மைக்காகவேயொழிய அநித்திய பாக்கியத்துக்காகப் பிறக்கவில்லை. ஆகையால் நித்திய பாக்கியத்தை நாடி அநித்திய இன்பத்தை வெறுக்கவேணுமென்பதல்லவா அவர் கோட்பாடு."

ஸ்தனிஸ்லாசும் தமையனும், மற்றிரண்டு தோழர்களும் எல்லாரும் ஒரே அறையில்தான் நித்திரை செய்வது வழக்கம். இராக்காலத்தில் நடக்கும் சம்பவங்களிலொன்றை இத்தோழர்களிலொருவராகிய ரோஸ்ராசவஸ்கி (Rozrazewski) பிற்காலத்தில் கண்ணீர் சிந்தி எழுதி

வைத்திருக்கிறதாவது: "எல்லோரும் நித்திரைசெய்யும்பொழுது, ஸ்தனிஸ்லாஸ் எழும்பித் தரையில் சாஷ்டாங்கமாய் விழுந்து ஜெபத்தியானம் செய்கிற சமயத்தில், அவர் தமையன் ஒன்றும் அறியாதவராய்ப் பாசாங்கு பண்ணிக்கொண்டு அர்ச்சிஷ்டவரை உதைத்து அவர் பேரில் பொத்தென்று விழுவார். அர்ச்சிஷ்டவரோவென்றால் அசையாமல் ஒன்றும் உணராதவர்போல் துவக்கின ஜெபத்தை முடிப்பார்." ஒருநாள் இரவு மற்றவர்களெல்லாரும் தூங்க, ஸ்தனிஸ்லாஸ், மெழுகுதிரியைக் கொளுத்தி வைத்துக்கொண்டு ஞான புஸ்தகங்கள் வாசித்துக்கொண்டிருந்தார். தன் சௌக்கியத்தைக் கெடுத்துக்கொண்டு, மற்றவர்களின் நித்திரையையும் கெடுக்கிறானென்று கிட்டத்திலே படுத்திருந்த, அதே தோழன் ரோஸ்ராசவஸ்கி கண்டிப்பாய்ப் பேசினார். இதைக் கேட்டு, அர்ச்சிஷ்டவர் மெழுகுதிரியை அவிக்காமல் தலைப் பக்கம் வைத்து, படுத்துக்கொண்டு வாசிக்க முயன்றவர், சீக்கிரத்தில் அயர்ந்து தூங்கிவிட்டார். எரிகிற திரியை அவிப்பாரில்லையாதலால் கடைசிமட்டும் எரிந்து, கட்டிலில் விரித்திருந்த கம்பளத்தில் தீப்பற்றிவிட்டது. உடனே எல்லாம் நெருப்பாய் எரிய, சுவாலை



கள் மேற்கொள்ள, கட்டிலெல்லாம் நெருப்பாயிருந்தது. இச்சமயம் ரோஸ்ராசவஸ்கி, புகையினால் மூச்சுத்தட்டி எழும்பி கட்டிலெல்லாம் எரிகிறதைக் கண்டு, "ஸ்தனிஸ்லாசே" என்று ஓரே சத்தமாய்க் கூவ, அர்ச்சிஷ்டவரும் கட்டிலைவிட்டு ஓரே குதியாய் குதித்தகன்றார். கிட்ட நெருங்கி கட்டிலைச் சோதித்துப் பார்க்க, தலையணை, துப்பட்டி, கம்பளி எல்லாம் எரிந்து பஷ்பமாயினும், அர்ச்சிஷ்டவரை நெருப்புத் தொடவேயில்லை. அவருடைய அங்கத்தில் நெருப்புப்பட்ட அடையாளமொன்றுமே கிடையாது. புதுமையாய் நெருப்பிலிருந்து காப்பாற்றப்பட்டார்.

இப்பேர்ப்பட்ட அதிசயக் காட்சிகளைக் கண்டாகிலும், ஸ்தனிஸ்லாஸ்மட்டில் காட்டிய அகந்தை அவமரியாதையைக் குறைத்தார்களோ? பரிச்சேதமில்லை. ஆனாலும் தமையனுடையவும் தோழர்களுடையவும் தொந்தரவு உபத்திரவத்தினால், அவர் பத்தி முயற்சி குறைந்துபோகவில்லை. எவ்வளவுக்கதிகமாக அவரை இம்சைப்படுத்தினார்களோ, அவ்வளவுக்கதிகமாக அவர் ஜெபத்தையும், தபசையும் அதிகரித்தார். தமையனுக்கஞ்சி தேவ ஊழியத்தில் பின்வாங்கினவரல்ல. தமக்கிருந்த கஷ்ட சஞ்சலங்களையெல்

லாம் பொறுமையோடனுபவித்து, கிறீஸ்துநாதருக்காக அவருடைய சிலுவையைத் தானுங் கூட சுமக்கிறதைப்பற்றி ஆனந்தப்படுவார். எவ்வளவுதான் நிந்தைப்பட்டாலும் சேசுவின் வெற்றிக்கொடியை அடைவதுதான் அவர் முழுப் பிரதிக்கினை. தமையன் மற்றவர்களைப்போலிருக்கவேணுமென்றும், உலகத்தை முழுதும் பழிக்காமல் உலகவாசிகளோடு ஒத்து வாழவேணுமென்றும், இவ்விதமாகப் போதிக்கிறபோது, "நான் அநித்திய நன்மைக்கல்ல, நித்திய நன்மைக்காகப் பிறந்திருக்கிறபடியால், நித்தியபாக்கியத்தைத் தேடி, இலௌகிக இன்பத்தை வெறுக்கவேணும்" என்று தாழ்ச்சியாய் மறுமொழி கூறுவார்.

ஆனாலும் ஸ்தனிஸ்லாஸ் தமையனுக்குப் படிந்து நடக்காமல், கீழ்ப்படிதலற்றவரா யிருந்தாரென்று கனவிலும் எண்ணக்கூடாது. தமையனை உத்தமமாய் நேசித்து, அவருக்குப் பிரியப்படக்கூடியதுகளைச் செய்வார். அவருடைய சப்பாத்துகளைத் துடைக்கிறது, அவர் அறையைப் பெருக்குகிறது, இப்பேர்ப்பட்ட ஈன வேலைகளை முதலாய் தமையனை முன்னிட்டுச் செய்து முடிப்பார். ஞானக்கிருத்திய சம்பந்தமில்லாத விளையாட்டு ஆட்டங்கள் தமது ஆசைக்



கொத்ததாயில்லாவிட்டாலும், தமையன் வார்த்தைக்காகிலும் செய்து முடிப்பார். அர்ச்சியசிஷ்டவருக்கு ஒரு வயதுக்குத்தான் பவுல் கோஸ்கா மூப்பானாலும், தமையனுக்குப் பணிந்து நடக்கவேணுமென்பதே அவர் தீர்மானமும் ஆசையுமாயிருந்தது.

இப்படியெல்லாம் வருந்தி உழைத்து புண்ணியத்தில் மேன்பாடடைய முயன்றுகொண்டிருக்கும் காலத்தில், அர்ச்சியசிஷ்டவர் கடும் வியாதியாய் விழுந்தார். 1566-ம் வருஷம் டிசம்பர் மாதம் 18-ம் தேதி வியாதி வெகு கொரோமாயிற்று. இராப்பகலாய் விழித்திருந்து செய்த ஜெபத்தினாலும், அருந்தவத்தினாலும், தமையனுடைய நிஷ்டூர உபத்திரவத்தினாலுமே வியாதி உண்டாயிருக்கவேணும். நோய் துவக்கின ஆரம்பத்திலே கன்னங்கரேரென்று பயங்கரமும் பிரமாண்டமுமான நாயைப்போன்ற பூதமொன்று அவரை வந்து விழுங்கப்போகிறாப்போலே அவர் கட்டிலில் வந்து பாய்ந்தது. இது மனுக்குலத்து விரோதியாகிய பசாசாகவே இருக்கவேணுமென்று அறிந்து, அர்ச்சியசிஷ்டவர் வெகு அமரிக்கையாய் பரிசுத்த சிலுவை யடையாளத்தை வரைந்து அதைத் துரத்தினார். மூன்றுதடவை திரும்பியும் திரும்பியும் வெறி

கொண்ட பசாசுபோல இந்தப் பூதம் அவரைக் கவ்வி சாப்பிடப் போகிறாப்போலே கட்டிலில் பாய்ந்தது. மூன்றுதடவையும் அர்ச். சிலுவை அடையாளத்தினால் தோற்கடிக்கப்பட்டு, பூதம் காணாமல் பறந்தது. அர்ச்சியசிஷ்டவரும் தயையுள்ள சர்வேசுரன் தம்மைக் காப்பாற்றினதற்காக கண்ணீர்விட்டு நன்றி செலுத்தினார். இவருடைய பரிசுத்த புண்ணியத்தைக் கண்டு காய்மகாரத்தால் நரக பசாசானது அவரை வாதிக்க வந்தாலும், சர்வேசுரன் தமது உகந்த பிள்ளையைக் கைவிடுவாரா?

இச்சங்கதி நடந்த அன்றுமுதல் வியாதி மிஞ்சினது. ஆரோக்கியம் உண்டாகுமென்பதைப் பற்றி சந்தேகப்படவேண்டியதாயிற்று. சாவுக்கஞ்சாமல் எப்போ சர்வேசுரனோடு ஐக்கியமாவோமென்றுதான் அர்ச்சியசிஷ்டவர் ஆவலாய் மரணத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். ஒரு விஷயமட்டும் அவருடைய மனதுக்கு சொல்லிலடங்காத சஞ்சலத்தை உண்டுபண்ணினது. தான் குடியிருக்கிற பதிதனுடைய இல்லிடத்திற்கு ஒரு குருவானவர் வரவாவது, திவ்விய நன்மை கொடுக்கவாவது, இம்பர்க்கர் துரை உத்தரவில்லை. என்ன செய்கிறது. அந்தத் துரையிடம் பரிந்து பேசி, திவ்வியநன்மை கொண்டு



வர ஒழுங்கு செய்யும்படி, தமையனிடமும், உபாத்தியாயரிடமும், வேண்டியமட்டும் பஞ்சரித்துக் கேட்டுப் பார்த்தார். அவர்களோவென்றால் இதைக் கேட்கப்போனால் எங்கே அந்தப் பதிதன் வியாதியஸ்தரோடு மற்றவர்களையும் சேர்த்து மனையைவிட்டு துரத்திவிடுகிறானோவென்று பயந்து கேட்கத் துணியவில்லை. அதற்குப்பதிலாய் அர்ச்சியசிஷ்டவரைப் பார்த்து, மோசம் ஒன்றுமில்லையாதலால் மனதைத் தேற்றிக்கொண்டு சந்தோஷமாயிருந்தால் சவுக்கியமடைவீரென்று அவரைத் தேற்றி ஏமாற்ற உபாத்தியாயரும் தமையனும் முயன்றார்கள்.

ஆகையால் வியாதியின் அகோரத்தினால் அரை உயிராய் நித்திய சீவியந்தரும் அப்பத்துக்காக களைத்து தயங்கினார். தமக்கு இப்பேர்க்கொத்த மகா ஆறுதல் கிடைக்க தேவசித்தமில்லாமல் போச்சுதேயென்று கஸ்தியால் வாடினார். சர்வேசுரனும் அர்ச்சியசிஷ்டவரின் பேராவலை அன்பாய்க் கண்ணுற்று, தமக்குகந்த குமாரனைக் கைவிடவில்லை. அர்ச். பார்பராம்மாள்பேரில் ஸ்தனிஸ்லாசுக்கு விசேஷ பத்தி உண்டு. நோயாய் விழுகிறதற்கு சிறிதுகாலத்துக்குமுன்தான் அந்த அர்ச்சியசிஷ்டவளுடைய திருநாளை வெகு பத்தியாய்க் கொண்டாடி

னார். அர்ச். பார்பம்மாள்பேரில் பத்தி வைத்திருக்கிறவர்களுக்கு கடைசி தேவதிரவிய அநுமானங்களைப் பெற்று மரிக்கும் பேருபகாரத்தை அந்த அர்ச்சியசிஷ்டவள் அடைந்தருளுவதாக, அவள் சரித்திரத்தில் எழுதியிருக்கிறது. அதை நினைவுகூர்ந்து, தன்னையும் அவளுடைய பாதுகாவலில் ஏற்றுக்கொண்டு, தனக்கும் இப்பெரிய பாக்கியத்தை பெற்றருளவேணுமென்று மன்றாடியிருந்தார். கடும் வியாதியில் கிடக்கும் இச்சமயம் அதையெல்லாம் ஞாபகப்படுத்தி, அர்ச். பார்பம்மாளைப் பார்த்து, அவள் அடைக்கலம் புகுந்திருக்கும் இந்த நீச ஊழியனாகிய ஸ்தனிஸ்லாசுக்கு எப்படியாவது கடைசி தேவதிரவிய அநுமானங்களைப் பெற்று மரிக்கும் பரம வரத்தை அடைந்தருளவேணுமென்று வெகு உருக்கத்தோடு ஓயாமல் வேண்டிக்கொண்டார். அந்த அர்ச்சியசிஷ்டவளும் இவருடைய பரிசுத்த மனுவைக் கேட்டாள். அதற்கப்பால் நடந்த விசேஷத்தை பிலின்ஸ்கி என்பவருடைய வார்த்தைகளிலேதானே எடுத்துக் கூறுவோமாக.

“ எங்கே அவருக்கு திடீரென்று மோசம்வந்துவிடுகிறதோவென்று பயந்து, எழுநாள் இரவாக அவர் பக்கத்தில் விழித்திருந்தேன். ஒரு



நாளிரவு கட்டிலுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த என்னைப் பார்த்து, திடீரென முழங்காலிலேயிரும்! முழங்காலிலேயிரும்! இதோ பாரும்! இரண்டு சம்மனசுக்கள் எனக்கு திவ்வியநற்கருணை கொண்டுவருகிறார்கள்; அர்ச். பார்பம்மாளும் அவர்களோடு வருகிறாள்! இதைச் சொன்னதும், பெலவீனமாய்ப் படுத்துக்கொண்டிருந்த அர்ச்சியசிஷ்டவர் எழும்பி முழங்கால்படியிட்டு, ஆண்டவரே! நான் தகுதியுள்ளவனல்ல, என்னுடைய இருதயத்தின் கர்த்தனே! எனக்குள்ளே எழுந்தருள நான் பேறுபெற்றவனல்ல, என்கிற ஜெபத்தை மூன்றுதடவை சொல்லி, வாயைத் திறந்து பத்தியோடு நாவை நீட்டி, திவ்விய சற்பிரசாதத்தைப் பெற்றார். இதையெல்லாம் பார்த்த நான் வெகு பிரமிப்புற்று, மெய் மறந்தவனாய் நின்றேன்.”

பிற்காலம் சேசுசபை நவசந்நியாசத்திலிருக்கும்போது அர்ச். ஸ்தனிஸ்லாஸ்தானே தம்மோடு வெகு பழக்கமாயிருந்த ஸ்டேபன் அகுஸ்தி என்கிற துணைச் சகோதரரிடம், தாம் பார்பம்மாள் உதவியினால் சம்மனசுக்கள் கரங்களிலிருந்து திவ்வியநற்கருணை பெற்றுக்கொண்ட சங்கதியை இரகசியமாய் வெளிப்படுத்தினார். ஆனால் இரகசியமாய்ச் சொன்ன வரலாற்றை

யாருக்கும் தெரிவிக்கக்கூடாதென்று தடுத்துவிட்டபடியால், அர்ச்சியசிஷ்டவர் மரித்தபிறகுதான் அத்துணைச் சகோதரர் இச்செய்தியை பிரசுரப்படுத்தினார்.

நன்மரணத்துக்கு ஆயத்தமாகவும் ஞான ஆறுதலாகவுந்தான் சம்மனசுக்கள் தமக்கு திவ்விய விருந்தைக் கொண்டு வந்தார்களென்று ஸ்தனிஸ்லாசும் கருதினார். அதுபோலவே வியாதியும் மேற்கொண்டு வந்தது. மரணம் கிட்டிவிட்டதென்றே எல்லாரும் நினைத்தார்கள். ஆனாலும் அவர் இப்போ மரிக்கவேணுமென்பது தெய்வசித்தமல்ல. அர்ச்சியசிஷ்டவர் சேசுசபையில் உட்பட்டு, அவருடைய மாசற்ற சீவியமும், புண்ணிய சாங்கோபாங்கமும் உலகமெங்கும் ஒளியாக வீசி, ஆயிரக்கணக்கான வாலர்களுக்கு நன்மாதிரிகையாய் இருக்கவேணுமென்பது தெய்வசெயலாயிருந்தது. மேலும் தேவதாயின் பேரில் இவருக்குள்ள விசேஷ பக்தியின் பலனும் பகிரங்கமாக வேண்டியிருந்தது. இளம் பிராயந்துவக்கி தேவதாயை குழந்தையின் அன்புற்று சிநேகித்தவரை தேவமாதா கைவிடக்கூடுமோ! அந்த அமலோற்பவ நாயகியின் அடைக்கலம் புகுந்தவர்கள் அடையாத வரமென்ன? தமையனாலும், தோழர்களாலும்,



"நான் அநித்திய நன்மைக்காகவல்ல, ஆனால் நித்திய நன்மைக்காக உண்டாக்கப்பட்டிருக்கிறேன்."
(அர்ச். ஸ்தனிஸ்லாஸ்.)



திக்கை அவமானப்பட்டு, பரிதாபத்துக்குரிய நிலைமையில், பதிதன் வீட்டில் அவஸ்தையாய்க் கிடந்த தமது உகந்த பிள்ளையாகிய ஸ்தனிஸ்லாசை பரிசுத்த கன்னிகை இரக்கக் கண்ணோடு பார்த்தாள்.

நோயின் கொடூரத்தால் அசையமுடியாமல் படுகிடையாய்க்கிடக்கும்போது, திடீரென்று ஒருநாள் தேவதாய் கையில் திருக்குழந்தையை ஏந்தியவண்ணமாய் அர்ச்சியசிஷ்டவருக்கு காட்சி கொடுத்தாள். திவ்விய கன்னிகை மலர்ந்த முகத்தோடும், புன் சிரிப்போடும், வியாதியஸ்தருடைய படுக்கையண்டையில் நெருங்கி, திருக்குழந்தையை ஸ்தனிஸ்லாசின் சிறு கரங்களில் பூப்போல வைத்தாள். ஆராதனைக்குரிய திவ்விய பாலனுடைய திரு இருதயம், பரிசுத்த ஸ்தனிஸ்லாசின் இருதயத்தை நெருங்கித் தொட்டது. திருப்பாலனாகிய சேசுவும், அர்ச்சியசிஷ்டதனமுள்ள ஸ்தனிஸ்லாசும், ஒருவரொருவரை அரவணைத்து முத்தமிட்டுக்கொண்டார்கள். ஓ! பாக்கியமான நேரம். பாவமறியாத ஸ்தனிஸ்லாசின் இருதயம் திவ்விய பாலனைத் தொட்டவுடனே தேவசிநேகப் பொறியாய் எரிந்தது. அச்சமையம் அர்ச்சியசிஷ்டவரிடம் உண்டான ஞான அக்

களிப்பு இவ்வளவவ்வளவென்று சொல்லக் கூடுமோ? இதுபோக, தேவதாய் அவரைப் பார்த்து, சேசு சபையிலுட்பட வேணுமென்ற இன்பமான கட்டளை கொடுத்துவிட்டு, திவ்விய குழந்தையும், தாயும் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துபோனார்கள். காட்சி மறைந்தது, அர்ச்சியசிஷ்டவர் அங்கம் பதற, உள்ளம் துடிக்க, திரேகமெல்லாம் தேவநேசத்தால் பூரித்தது. திவ்விய பாலனையும் தாயையும் இதுமட்டும் சிநேகிக்காததுபோலும், இப்போதுதான் சிநேகிக்கத் தொடங்குகிறதாகவும் தோன்றினது. சேசு சபையைச் சேரவேணுமென்றிருந்த ஆவல் தேவ வாக்கினால் ஸ்திரப்பட்டதென்று ஆநந்தத்தோடும் முழு இருதயத்தோடும் நித்திய பிதாவுக்கு ஸ்துதி செலுத்தினார். தேவ அழைத்தலுக்குரிய சம்பவத்தை ஆத்தும குருவாகிய நிக்கோலாஸ் டோனி (Nicolas Doni) என்கிற சுவாமியாருக்கு அறிவிக்கவேண்டியிருந்தபடியால், அத்தோடு இக்காட்சியின் இரகசியமும் வெளியாச்சுது. மற்றப்படி இக்காட்சியின் வரத்தை, ஸ்தனிஸ்லாஸ் தாழ்ச்சியினால் ஒருக்காலும் வெளிப்படுத்தாமல் மறைத்து வைத்திருப்பார்.



தேவதாய் கொடுத்த காட்சியோடு, பூரண சௌக்கியத்தையும் அளித்துவிட்டுப்போனாள். இவ்வாரோக்கியத்தின் வரலாற்றைப்பற்றி அவர் உபாத்தியாயாகிய பிலின்ஸ்கி என்பவர் தானே எழுதிவைத்திருக்கிறதாவது:—"பல இரவுகளாக விழித்திருந்தபடியால் ஒருநாள் பணிவிடைக்காரனைக் கூப்பிட்டு அர்ச்சியசிஷ்டவர் பக்கத்திலிருக்க எச்சரித்துவிட்டு, நான் களைப்பினால் அயர்ந்து நித்திரைபோனேன். காலையில் விழித்தவுடன், ஸ்தனிஸ்லாசின் அறைக்குள் நுழைந்து பார்க்க அங்கு பணிவிடைக்காரர்கள் குறட்டைவிட்டுத் தூங்கினார்கள். எரிகிற வெளிச்சத்தினுதவியால் அர்ச்சியசிஷ்டவனைப் பார்த்தபோது, அவர் விழித்துக்கொண்டு, என்னைப் பக்கத்தில் வரும்படி கைக்கினை காட்டி, தான் பூரண சௌக்கியமாயிருக்கிறதாகச் சொன்னார். மயக்கத்தில் பேசுகிறாரோவென்று நினைத்தவன், அவரை உற்று முகக்களையைச் சோதிக்கையில், நல்ல சுகமாயிருக்கிறதாகக் கண்டு ஆச்சரியமடையலானேன். தனக்குக் கிடைத்த பூரண ஆரோக்கியத்துக்கு நன்றிசெலுத்த கோவிலுக்குப் போகும்படி உடுப்புகளைக் கொண்டுவரச் சொன்னதற்கு, வைத்தியர்கள் வருமட்டும் பொறுத்திருக்க ஏவினேன். வைத்தியர்களும் வந்து சோதித்து

அவருக்குண்டான விநோத ஆரோக்கியத்தின் புதுமையை ஒத்துக்கொண்டாலும், திரும்பியும் வியாதி மாறிக்கொள்ளாதபடி சொற்ப நாளைக்கு படுக்கையிலிருக்கும்படி எச்சரித்தார்கள். வைத்தியர்கள் போனபிறகு ஸ்தனிஸ்லாஸ் புன்னகையோடு, படுக்கையிலிருக்கத் தேவையில்லையென்றும், இனி வியாதி திரும்பிக்கொள்ளுமென்கிற மோசமில்லையென்றும், வற்புறுத்திச்சொல்ல, உடுப்புகளை மாட்டிக்கொள்ள நானும் உத்தரவு கொடுத்தேன். பழைய வியாதியினடையாளம் ஒன்றுமில்லாமல் நல்ல குணவாகிபோல்தான் நடமாடிக்கொள்ளவும் பேசவும் கூடியவரானார். இருவருமாகக் கோவிலுக்குப் போனோம். பழைய வியாதி கொஞ்சமேனும் இல்லாமல் பறந்துவிட்டது தேவதாயின் புதுமைதான்.

## 4-ம் அதிகாரம்.

## தப்பித்தோடுகிறார்.

சேசுசபையில் போய்ச் சேரவேணுமென்று அன்புகூர்ந்து தேவதாய் திருவாய் மலர்ந்தருளின கட்டளை, அர்ச். ஸ்தனிஸ்லாசின் அதி உந்நத கருத்தை ஸ்திரப்படுத்தினது. ஏனெனில்: தேவ கன்னிகை கூறுவதற்கு முந்தின 16-மாதங்களாக உள்ளரங்கமான அழைத்தலின் சத்தமொன்று தம் மனதில் ஓயாமல் ஒலிக்கொண்டிருக்கிறதைக் கேட்டு, சேசு சபையைச் சேரகவும் ஆவல்கொண்டவராயிருந்தார். ஆனாலும் தம் தந்தையின் சுபாவத்தை அறிந்து, அவருக்குப் பயந்துகொண்டோ, அல்லது தமக்குள்ள இயற்கையான சங்கோசத்தினாலோ இந்தத் தேவ அழைத்தலைப்பற்றி இதுவரைக்கும் ஒருவரிடமும் ஒரு வார்த்தையும் பேசாமலிருந்தார். தமது ஆத்தும குருவானவரிடம் எல்லாத்தையும் திறந்து சொல்லுகிற கபடற்ற சுபாவமுள்ளவரானாலும், இந்த விஷயமாக அவரிடமுதலாய் ஒன்றும் அறிவிக்காமல், தாமே அந்த தேவ அழைத்தலைப்பற்றி இதுவரையில் ஆலோசனை செய்துகொண்டிருந்தார்.

தமது ஆத்தும குருவானவரிடம் இச்சங்கதி
யைத் தெரியப்படுத்தாததற்கு பல காரணங்
களை உத்தேசிக்கலாம். இவருடைய தலைமையா
கிய பவுலும், உபாத்தியாயரும், இவர் சேசு
சபையில் சேர முயற்சி செய்கிறதாக சந்தேகப்
பட்டிருந்தார்களென்றும் அறிந்திருக்கிறோம்.
கேலியாக அவரை சேசுசபைச் சந்நியாசியென்
கிற பட்டப்பேர் முதலாய்க் கொடுத்தமைத்
தார்களென்றும் பார்த்திருக்கிறோம். இப்படியி
ருக்க, இந்த விஷயமாக தேவ அழைத்தலின்
ஏவுதலைப் பின்செல்ல, தம் தந்தை உத்தரவளிப்
பாரென்று நம்பிக் கேட்கிறது பெரிய மோசத்
துக்குரிய காரியமாகத் தோன்றினது. சேசு
சபையில் சேர விடைபெற, உத்தரவு கேட்ப
தே தகப்பனுடைய கோப மூர்க்கத்தை
எழுப்பி, சேசுசபை வித்தியாசாலையில் அநுப
விக்கும் ஞான இன்ப சுகங்களை எல்லாம் இழ
ந்து, வியன்னா பட்டணத்தை விட்டுவிட்டு,
போலண்டு தேசத்துக்குத் திரும்பும்படியான
கட்டளையை எங்கே மூட்டிவிடுமோவென்று
பயப்படுகிறதற்குக் காரணமிருந்தது. பிற்கா
லத்தில் அர்ச்சியசிஷ்டவர் தேவ அழைத்தலைப்
பின்சென்று நடப்பதில் தைரியமற்றவராயும்,
கோழையாகவும், இருந்ததாகத் தம்மைத்தா
னே கடிந்துகொண்டு இகழ்ச்சியாகப் பேசுவார்.



நாமோவென்றால் அவருக்கு இச்சமயத்தில்
அவ்விதமாய் நடந்துகொள்வதற்கான நியாயங்
கள் என்னவென்று அறிந்திருக்கிறோம். இந்
தத் தேவ அழைத்தலின் விஷயமாக உண்டா
ன மனக்கிலேசமும், அங்கலாய்ப்பும், அவருக்
குண்டான கடும் வியாதிக்கு ஓர் காரணமாயிரு
ந்திருக்கக்கூடும்.

தேவதாயினுடைய வாய்மொழியைக் கேட்
டவுடனேயோவென்றால், கொஞ்சமேனும் தா
மதிக்காமல், நேரே அவர் ஆத்தும குருவானவ
ராகிய நிக்கோலாஸ் டோனி (Nicolas Doni)
என்பவரிடம் போய், நடந்த சங்கதியெல்லாம்
தெளிவாய் விவரித்து, வெளிப்படுத்தினார்.
தாம் இதுவரையில் தேவ அழைத்தலைப்பற்றி
அறிவிக்கத் தாமதித்ததையிட்டு, தாரை தாரை
யாகக் கண்ணீர் சிந்தி அழுது, தமக்குண்டான
வியாதியில் தேவ இரக்கத்தால் நடந்த புதுமை
களையும், விசேஷக் காட்சிகளையுமெல்லாம் அறி
வித்தார். தேவதாய் கொடுத்த கட்டளையை
யும், தம்முடைய கருத்துக்கு அது எவ்வளவு
இணங்கியதும், இன்பமானதாயும் இருக்கிறதெ
ன்றும், எல்லாம் சொன்னார். பத்தி யூகமுள்ள
அந்தக் குருவானவர், ஸ்தனிஸ்லாஸ் அறிவித்த
பரம விசேஷமெல்லாத்தையும் வெகு கவன
மாய்க் காது கொடுத்துக் கேட்டார். எல்லாத்

தையுந் திறந்து பேசினதும், அர்ச்சியசிஷ்டவ
ருடைய மனது ஆனந்த சந்தோஷத்தினால்
பூரித்தது. வியாதிக்குமுந்தி உண்டான பயம்
கலக்கமெல்லாம் நீங்கி, மனரம்மியமும் ஆறுத
லும் உண்டானது. தேவ அழைத்தலின்மட்டில்
அஜாக்கிரதையாய்த் தான் இருந்தது தன்னு
டைய பெரிய பாவமென்று ஓயாமல் அதற்காக
மனஸ்தாபப்படுவது வழக்கம். நன்றிகெட்ட பா
வியென்றும், சந்நியாச அந்தஸ்தில் தமக்குண்
டாக இருந்த உன்னத பாக்கியத்தை இழக்கத்
திரிந்த கோழையென்றும், தம்மைத்தானே
கடிந்துகொள்ளுவார். சேசுசபை நவசந்நியாசி
யாயிருக்கும்போது, தாம் பெரிய பாவமென்று
நினைத்திருந்த இந்தக் குற்றத்துக்குப் பரிகார
மாக, சர்வேசுரனுக்கு விசேஷ ஆராதனை
செலுத்துவார்.

ஆத்தும குருவானவரிடம் தேவதாயின்
அழைத்தலை அறிவித்ததுபோதாமல், இராச்சிய
சிரேஷ்டராகிய லவுரேஞ்சு மாஹி (Lawrence
Maggi) என்பவரிடம் சென்று, தம்மை சேசு
சபையில் ஏற்றுக்கொள்ளும்படி பஞ்சரித்துக்
கேட்டார். சிரேஷ்டருக்கோவென்றால் ஸ்தனி
ஸ்லாசுவின் தந்தையின் விடையின்றி அவரை
சேசுசபையில் ஏற்றுக்கொள்ள உத்தரவில்லை.
மேலும் இவர் தந்தையாகிய ஜான் கோஸ்கா



வானவர், போலண்டு தேசத்தில் வெகு அபி
மானம் பெற்றவரும், முகாமையானவரும்,
விசேஷ அதிகாரங்கள் உள்ளவருமாயிருந்தபடி
யால், அவருடைய அநுமதியின்றி அவர் கரு
த்துக்கு விரோதமாய் ஸ்தனிஸ்லாசை சேசு
சபையில் ஏற்றுக்கொள்வதால் பல இக்கட்டு
களும் விக்கினங்களும் நேரிடக்கூடும். இச்சந்
தர்ப்பத்தில் சேசுசபையின் அநுகூலத்தையும்
கைவிட்டுவிடக்கூடாது. அர்ச்சியசிஷ்டவர்
அவருடைய தகப்பனார் விடையின்றி சேசு
சபையில் சேருவதானது பெருங் கலகத்தை
எழுப்பி, போலண்டு தேசத்தில் புதிதாக ஏற்
படுத்தப்பட்டிருக்கும் சேசுசபை மடங்களைத்
தகர்த்து அழிக்கிறதற்கு முதலாய் மூல கார
ணமாயிருக்கக் கூடுமாகையால், யூக விமரிசை
யோடு சகலத்தையும் நடத்தவேண்டியதாயிரு
ந்தது. இப்படியிருக்க, சிறிது காலத்துக்குமுன்
தான் வேறொரு மேன்குடும்பத்து வாலிபன்
இவ்விதமாகப் பெற்றோர்கள் விடையின்றி சே
சுசபையைச் சேர்ந்ததையிட்டு, ஏக குழப்பமு
ண்டாயிருந்தது. இதுவெல்லாம் ஆராய்ந்து
பார்க்கையில், ஸ்தனிஸ்லாசின் ஆசை நிறைவே
றுதல் கூடாத மலையாக விளங்கினது. ஏனெ
னில் தந்தையின் குறைகுணங்களையும், அர்ச்சி
யசிஷ்டவர்மட்டில் அவருக்குள்ள நேசப்பற்று

தலையும் அறிந்தவர்கள், அவர் ஒருக்காலும் தன் குமாரனுக்கு உத்தரவு அளிக்கமாட்டாரென்று தீர்மானித்தார்கள்.

அர்ச்சியசிஷ்டவர் என்ன செய்கிறதென்று மயங்கித் தத்தளித்துக்கொண்டிருக்கும்பொழுது, கர்தினல் பட்டம் பெற்ற கம்மேன்ரோனே (Cardinal Commendone) ஆண்டவர் பரிசுத்த பாப்பானவரின் ஸ்தானாதிபதியாக வந்திருந்தார். இவர் போலண்டு தேசத்துக்குப் போயிருந்தபொழுது கோஸ்கா குடும்பத்தை நன்றாய் அறிந்திருந்தார். அர்ச். ஸ்தனிஸ்லாசுக்கும் அவர் வேண்டியவராயிருந்தார். சமயம் வாய்த்ததென்று அக்களிப்போடு கர்தினலிடம் போய், தம்மை எப்படியாவது சேசுசபையில் உட்படுத்தும்படி இராச்சிய சிரேஷ்டரிடம் சிபார்சு செய்யவேணுமென்று கெஞ்சி மன்றாடினார். அவரும் ஸ்தனிஸ்லாசுவின் அர்ச்சியசிஷ்டதனத்தை அறிந்து, அவருக்கு வேண்டியதைச் செய்ய முயன்றார். ஆனால் இராச்சிய சிரேஷ்ட சுவாமியார் அர்ச்சியசிஷ்டவரை தமது சபையில் எப்போ ஏற்றுக்கொள்ளும் சமயம் வருமென்று தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாலும், தந்தையின் விடையின்றி இதைச் செய்வது சரியென்று, அவருக்குத் தென்படவில்லை. பரிசுத்த வாலரான ஸ்தனிஸ்லாசின் குண




ணங்களையும், புண்ணியத்தின் மேன்மையையும் அறிந்த அந்த சிரேஷ்டர் உடனேதானே சபையில் அவரை ஏற்றுக்கொள்ளக் கூடாததையிட்டு வெகுவாய்க் கலங்கினார்.

அர்ச்சியசிஷ்டவர் தந்தையின் அநுமதியோடுதான் சேசுசபையைச் சேர வேணுமென்பதும் சரி, அவர் சேசுசபையின் சந்நியாசியாக முடியாதென்பதும் சரி. ஏனெனில் அவர் தந்தை இந்த விஷயத்தில் அவருக்கு உத்தரவளிக்கமாட்டாரென்பது நிச்சயமான காரியமாயிருந்தது. அர்ச்சியசிஷ்டவருக்கு இது ஓர் பெரிய சிலுவையாக இருந்தது. ஐயோ பரிதாபம்! அவர்தான் என்ன செய்யக்கூடும்.

அவஸ்தையாய்க் கிடக்கிறபோது தேவதாய் தயைகூர்ந்து அருளிய உன்னத வார்த்தைகள் அவர் காதில் ஓயாமல் சப்தித்துக்கொண்டிருந்தது. தேவதாயின் வாய் மொழி வீணாய்ப் போய்விடுமா? சேசுசபையில் உட்படவேணுமென்று பரிசுத்த கன்னிகை சொன்னால், அது கைகூடக் கூடியதாக இருக்கவேணுமே. உலகமெல்லாம் தமக்கு விரோதமாய் எழும்பினாலும், தேவதாயின் வார்த்தை நிறைவேறுவது தவறாதென்று அர்ச்சியசிஷ்டவர் தம்மைத் தேற்றிக்கொண்டு, அத்தாயின்பேரில் நம்பிக்கைக்கு

மேல் நம்பிக்கை வைத்து வந்தார். இதுபோக சிறிதுகாலத்துக்குமுந்தி, "நான் சேசுசபையிலுட்படுவேன்" என்று தாம் கொடுத்திருந்த வார்த்தைப்பாட்டை தேவமாதாவின் உதவியோடு மறுபடியும் புதுப்பித்தார். பிச்சைக்காரன் வேஷம் பூண்டுகொண்டு, இரந்து குடித்துக்கொண்டாகிலும், சேசுசபை மடமெல்லாம் ஒன்றொன்றாய்த் தேடிப்போய் சந்தித்து; தாம் சேசு சபையில் ஏற்றுக்கொள்ளப்படுமட்டும் தன் சொந்த தேசத்துக்குத் திரும்பாமல் அலைந்து திரிந்து, தமது போராசையைத் தீர்ப்பதாகத் தீர்மானித்தார்.

இக்கருத்துக் கொண்டிருக்குங்கால், சர்தீனியா தீவில் போய் வேதம் போதித்தவரும், நவசந்நியாசிகளை அங்கு விசாரித்து, பக்தியில் பேர்பெற்றுவந்த பிரான்சீஸ்கு அந்தோனியோ (Francis Antonio) என்கிற குருவானவரை அர்ச்சியசிஷ்டவர் சந்தித்து, அவருடைய ஆழ்ந்த ஆலோசனையைக் கேட்கப் போயிருந்தார். குருவானவரிடம் எல்லாத்தையும் திறந்து சொன்னார். தம்முடைய கருத்து என்னவென்றும், அதற்குண்டான தடங்கல்கள் என்னவென்றும் எல்லாத்தையும் வெளிப்படுத்தி, சர்வேசுரன் சித்தத்தை நிறைவேற்ற என்ன செய்யவேண்டு



மானாலும் முஸ்திப்பாயிருக்கிறதாகவும், தகப்பன் கட்டளையை மீறி முதலாய்ச் சேசுசபையைச் சேருவது தம்முடைய தீர்மானமென்றும் உறுதியாகக் கூறினார். குருவானவர் சகலத்தையும் கேட்டு, துரிதத்தில் பதிலுரைக்க விருப்பமில்லாதவராய், ஜெபத்தில் ஆராய்ந்து பதில் ஆலோசனை கொடுப்பதாகச் சொல்லி, அனுப்பிவிட்டார். ஸ்தனிஸ்லாசும் ஜெபத்தில் தாம் செய்யவேண்டியது என்னவென்று சர்வேசுரன் ஞான வெளிச்சம் கொடுக்கும்படி பத்தியோடு வேண்டிக்கொண்டு, திரும்பி அந்தோனியோ சுவாமியாரிடம் போனபோது அர்ச்சியசிஷ்டவர் தீர்மானம் பண்ணியபடி செய்யலாமென்று அவர் அங்கீகரித்து சொன்னார். அர்ச்சியசிஷ்டவருடைய தீர்மானம் என்னவென்றால், ஜெர்மானிய தேசத்துக்குப் போய் அங்குள்ள சிரேஷ்டராகிய பேர்போன முத்திப்பேறுபெற்ற கனிசியுஸ் இராயப்பரிடம்(Bd. Peter Canisius) சேசுசபையைச் சேர உத்தரவு கேட்கிறதென்றும், அதுவும் தவறிவிட்டால், நேரே உரோமாபுரிக்கு கால் நடையாய்ச் சென்று அங்கே சேசுசபைக்கெல்லாம் அதிசிரேஷ்டராக வீற்றிருக்கும் அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியாவின் சனுவைக் கோருகிறதுமே. சுவாமியார் இவர்

கள் இருவருக்கும் சிபார்சு கடிதம் தருவதாகவும் வாய்மொழி அளித்தார்.

இப்போத்தான் சரியான காலம் வாய்த்துவிட்டதாகவும், இனி அவர் ஆசைக்களவாக தேவ ஊழியத்தில் அமைந்திருக்கலாமென்றும் தோன்றிற்று. ஆத்துமத்திலுள்ள திகில் சந்தேகமெல்லாம் அற்றுப்போனது. கால் நடையாய் உரோமாபுரிக்குப் போய்ச் சேர ஆயிரமயில் நடக்கவேண்டியதும், இரந்து குடித்துக்கொண்டு, பிச்சைக்காரன் வேஷம் பூண்டுகொள்ளுவதும், இன்னும் இத்தூர திருயாத்திரையில் அனுபவிக்கவேண்டிய வேறநேக சொல்லிலடங்காத கஷ்ட இக்கட்டுகளும், செல்வத்தில் வளர்ந்த இந்தப் பிரபு வம்சத்தாருக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. வழிப்பிரயாணத்தில் நேரிடக்கூடிய இடைஞ்சல்களுக்கு சற்றும் பின் வாங்கவில்லை.

இனி தாம் குடியிருந்த இல்லிடத்தைவிட்டு புறப்படுவதற்கு மட்டும் ஒரு சாக்குப்போக்கு வேண்டியதாயிருந்தது. தம்மைத் தேடினால் கோவிலிலிருக்கிறானென்று நினைத்துக்கொள்ளும்படி கோவிலிலே வெகுநேரம் செலவழிப்பார். அடுத்த தடவை தமையன் தன்னை இகழ்ந்து பேசி திட்டியபோது, அர்ச்சியசிஷ்டவர்



இந்நாள்வரை சகித்துக்கொண்டிருந்ததுபோலிராமல், தமையனைக் கடிந்துகொண்டு, இவ்விதமாக தம்மைக் கொடூரமாய் நடத்துகிறதாயிருந்தால், அவரோடு குடியிருக்கக் கூடாதென்றும், இனி பிரிந்துவிட நேரிடுமென்றும் கண்டிப்பாய்ப் பேசினார். பவுல் கோஸ்காவும் கோபமுறுக்காய் "என் முகத்திலே இனி விழிக்க வேண்டாம், எங்கே போகிறதானாலும் போ" என்று ஆங்காரமாய் மறுமொழி கூறினார். இதே நல்ல சமயம் வாய்த்தது. அர்ச்சியசிஷ்டவருடைய மனமும் பூரித்தது. வழிப்பிரயாணத்துக்குவேண்டிய கந்தை உடுப்புகளை முன்னாடியே சேகரித்து வைத்துக்கொண்டார். அன்று இராவெல்லாம் தியானயோகத்தில் அமிழ்ந்தியிருந்தார். கண்ணீர் ததும்ப தேவதாயின் அடைக்கலத்தில் தம்மை முழுதும் ஒப்படைத்தார்.

1567-ம் வருஷம் ஆகஸ்டு-௴ 17-௳ யாகிய ஞாயிற்றுக்கிழமைக் காலையில் சேசுசபையார் மடத்தில்போய் பூசை கண்டு, திவ்விய சற்பிரசாதம் பெற்றுக்கொண்டார். பின்பு அந்தோனியோ சுவாமியாரண்டை போய், அவர் வாக்குக் கொடுத்திருந்த கடிதங்களையும், அவருடைய தேவ ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டு, அர்ச். ஸ்தனிஸ்லாஸ் திருயாத்திரையாய்ப் புறப்பட்டார்.

பதினாறு வயது இன்னம் முடியாத இந்த அன்பான பூப்போன்ற வாலிபன், யாதொரு உலக ஆதரவின்றி அட்ட தரித்திரனாகவும் பரதேசியாகவும் மனத்திடனையும் தேவகன்னிகையின் உதவியையும் ஆதாரவாகக் கைக்கொண்டு, ஆயிரம் மயில் கால் நடையாக பிரயாணம் பண்ணப் போகிறதைப் பார்த்து ஆச்சரியப்படாதவர் யார்?

அர்ச்சியசிஷ்டவர்கள் கஷ்டப்படாமல் புண்ணிய சாங்கோபாங்கத்தையும் பரிசுத்தத்தையும் அடைந்தார்கள் என்று தப்பறையாக மதிக்கிறவர்கள், அர்ச். ஸ்தனிஸ்லாஸ் இப்பிரயாணத்தில் பட்ட கஷ்ட துன்பங்களை சற்றே தியானித்துப் பார்க்கட்டும்.

வியன்னாபட்டணத்து வெளித் தலைவாசலைச் சேர்ந்தவுடனே, சர்வேசுரனுக்கும் தேவதாய்க்கும், தாம் சேசுசபையில் உட்படுவதாகக் கொடுத்திருந்த வார்த்தைப்பாட்டை ஆனந்த சந்தோஷத்தோடு இன்னொருதடவை புதுப்பித்தார். தாம் மிகுந்த கஷ்டப்பட்டு செய்யும் திருயாத்திரைக்கெல்லாம் பேருபகாரமாக, சேசுசபை மடத்தில் ஒன்றில் போய் மரித்தால் இதுவே பெரும் வரமாயிருக்குமென்று தம் தாயினிடத்தில் கோரினார். இன்னும் கொஞ்சத்



தூரம் சென்ற பிறகு தாம் அணிந்திருந்த அழகான உடுப்பைக் கழற்றி ஒரு பிச்சைக்காரன் கையில் கொடுத்துவிட்டு, தம்மோடு கொண்டுவந்திருந்த கந்தை உடுப்பை மாட்டிக் கொண்டு, ஒரு கயிற்றை இடுப்பிலே இறுகக் கட்டி, ஜெபமாலையை அக்கயிற்றில் தொங்க விட்டுக் கையிலே ஒரு பரதேசியின் கோலைப் பிடித்துக்கொண்டு, பிச்சைக்காரன் கோலமாக செல்வத்தில் வளர்ந்த ஸ்தனிஸ்லாஸ் துரிதமாய்ச் செல்லுகிறார். தமையனைத் தப்பித்து ஓடுகிறார். காடு, மேடு, பள்ள மலைத்தாக்கு, குன்றுகள் நதிகள் எல்லாம் கடக்கவேண்டியதாயிருக்கிறது. எல்லாம் லகுவாகத் தோன்றுகிறது.

ஆனால் வீட்டில் அவரைத் தேடுகிறார்களா? கோஸ்காவினுடைய ஊழியக்காரர்களில் ஒருவராகிய பசிபிசி (Pacifici) என்பவர் சொல்வதைக் கேளுங்கள்: "தப்பித்து ஓடுகிற அன்று காலையில், அவர் தமையனும் உபாத்தியாயரும் தூங்குகிற சமயம் பார்த்து, என்னிடம் ஸ்தனிஸ்லாஸ் வந்து, மத்தியான சாப்பாட்டுக்கு என்னைத் தேடுகிற பக்ஷத்தில், யாரோ விருந்துக்கு அழைத்திருக்கிறதாகவும் அங்கே விருந்து சாப்பிடப் போயிருக்கிறதாகவும்

சொல்லிவிட வேணுமென்று கேட்டுக்கொண்டார். அப்பிரகாரம் நானும் சொல்லவே, அந்திவேளை வரையில் ஸ்தனிஸ்லாசைப்பற்றி கவலை கொள்ளாமல், அவரைத் தேடாமலிருந்துவிட்டார்கள். இரவில் நித்திரை செய்யவும் திரும்பாததைக் கவனித்து, தமையனும், உபாத்தியாயரும், அவர் சேசுசபை மடத்துக்குப் போயிருக்கலாமென்று சந்தேகப்பட்டு, அங்கே போய் விசாரிக்கப் புறப்பட்டார்கள். சுவாமிமார்கள் தங்கள் நாட்டு மடங்களில் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், உரோமாபுரிக்கு ஒருவேளை போயிருக்கக் கூடுமென்றும் தெரிவித்தார்கள். இதைக் கேட்டு கோபவெறியாய் வீட்டுக்குத் திரும்பி, என்னிடம் சொன்னதென்னவென்று தெளிவாய் விசாரித்துக்கொண்டு, வீட்டில் என்னை வைத்துவிட்டு குதிரை வண்டியில் மறுநாள் காலை அவரைத் தேடி ஆத்திரமாய்ப் புறப்பட்டார்கள். சிக்கிரத்தில் திரும்பி, வழியில் ஏதோ விநோத புதுமை நடந்தது போலேயும், ஸ்தனிஸ்லாசை சந்தித்தும் கண்டு பிடிக்காதவர்கள் போலேயும் அவர்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள். இதுகளையெல்லாம்பற்றி எனக்கு முழுதும் ஞாபகமில்லை" என்றார்.



ஸ்தனிஸ்லாசின் உபாத்தியாயராகிய பிலின்ஸ்கி என்பவர் தானே எழுதிவைத்திருக்கிறதாவது: "நாங்கள் வெகு துரிதமாக வண்டியை ஓட்டி, கொஞ்ச நேரத்துக்குள் 10 மைலில் போயும், அவரைப் பிடிக்கக்கூடவில்லை. புறப்படுகிறதற்குமுன் தாம் செய்யப்போகிறது எல்லாத்தையும் அவருடைய நேசர்களில் ஒருத்தருக்கு சொல்லியதுபோக, எங்களுக்காக ஒரு கடிதமும் அவரிடம் கொடுத்திருந்தார். இக்கடிதத்தில் அவருடைய கருத்தை எடுத்துக் காட்டியிருந்தார்.

இதுவிருக்க அர்ச்சியசிஷ்டவர் தானே, தம் திருயாத்திரையைப்பற்றி வருணித்து அவருடைய தோழர்களில் ஒருவராகிய எர்னேஸ்டு (Earnest) என்பவருக்கு எழுதிய கடிதத்தில் சொல்லியிருக்கிறதாவது:

எனதன்பான சிநேகிதரே,

உமக்கு வந்தனமுண்டாகக் கடவது—நான் பாதிவழி வந்து சேர்ந்ததையிட்டு, சர்வேசுரனுக்கும் அவருடைய திருத்தாயாரின் ஆதரவுக்கும் ஸ்துதி உண்டாகக்கடவது. சேசுவும் என் கன்னித்தாயும் வழியில் எனக்கு ஏராளமான சிலுவையை அனுப்பினார்கள். வியன்னாப் பட்டணத்துக்கருகாமையிலே, என்னு

டைய ஊழியக்காரர்களில் இரண்டுபேர் என்னைப் பின்பற்றினார்கள். அவர்களைக் கண்டதும் அடுத்த காட்டில் ஒளிவிடம் பார்த்து மறைந்து தப்பித்துக்கொண்டேன். பின்பு குன்றுகள் ஏறித் தாண்டி, காடுகள் கடந்தபிறகு, களைப்பினால் தயங்கியிருந்த சரீரத்துக்கு ஆகாரமாக கொஞ்சம் ரொட்டித்துண்டை ஒரு ஓடத்தின் கரையிலிருந்து சாப்பிடுகையில், குதிரை ஓட்டத்தின் சத்தம் கேட்டது. சவாரி செய்கிறது யாரென்று அண்ணாந்து பார்க்க, அது என் சகோதரனாகிய பவுலே யன்றி வேறே யாருமில்லை. குதிரை, ஓட்டவேகத்தினால் முகமெல்லாம் நெருப்பாயெரிந்து வாய் நுரையாய்க் கக்கினது. எனக்கந்த சமயத்திலுண்டான திகில் எவ்வளவென்று, நீரே, உத்தேசித்துக்கொள்ளலாம்.

குதிரை வந்த வேகத்துக்குத் தப்பித்தோடுகிறது கூடாதகாரியம். ஆகையால் அங்கேதானே அசையாமல் நின்றுகொண்டு தைரியமாய், பரதேசியைப்போல குதிரை சவாரிக்காரரிடம்போய் பிச்சை கேட்டேன். அவர், தன் தம்பியின் உறுப்பு உயரமிதுகளை வர்ணித்துக் காட்டி, என்னைப் போன்றவனொன்றும் சொல்லி, அப்பேர்ப்பட்ட வாலனைக் கண்ட



துண்டாவென்று வினவினார். அன்று காலையில் அப்பக்கமாகப் போனதாக மறுமொழி கூறினேன். ஒரு நொடி நிற்காமல் சரேலென குதிரையைக் குத்தி, எனக்கும் பணம் வீசிவிட்டு, ஓமோ ஓட்டமாய்ச் சவாரி சென்றார். நானோவென்றால் பரிசுத்த கன்னிகையாகிய தேவதாயாருக்கு நன்றி செலுத்திவிட்டு, என்னைத் தேடிப் பிடிக்காதபடி பக்கத்துக் குகையில் ஒளிந்திருந்து கொஞ்சநேரம் போனபிறகு திரும்பவும் புறப்பட்டேன்.

என் ஆண்டவராகிய சேசுநாதர்சுவாமி எனக்களித்த சிலுவைகளை நீர் அறிந்து என்னோடுகூட அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தும்படியாக, எனக்கு நேரிட்ட இடைஞ்சல் அசந்தர்ப்பத்தையும் எடுத்துரைக்கிறேன் :—என் தமையன் ஊருக்கு வெளியேயுள்ள சாவடி காவற்காரருக்கெல்லாம் படிகொடுத்து, என்னைப்பற்றிய விபரமெல்லாம் வர்ணித்திருந்தபடியினால், என்னிடத்தில் பல இடங்களிலே பல கேள்விகள் போட்டு சோதித்தார்கள். இது பெரிய உபத்திரவமாயிருந்தது. ஆனால் வழியில் சேசுசபைக் குருவானவரொருத்தர், அவர் சிரேஷ்டர் உத்திரவுப்படி வியன்னாவிலிருந்து டிலிங்கன் பட்டணத்துக்குப் போனதைச் சந்தித்து, அவர்

என்னை அறிந்திருந்தபடியால், என் யாத்திரையின் காரணத்தையும், என் தமையன் என்னைப் பிடிக்கத் திரிகிறதையும், காவற்காரர்களுடைய உபத்திரவத்தையுமெல்லாம் விவரித்தேன். அவரென்னை அடுத்த இரண்டு சீர்வடிக்காவற்காரரிடமிருந்து தப்பிக்கும்படி தம்முடைய வண்டியில் வைத்துக்கொண்டு போக, நான் கிறீஸ்துநாதருக்காக துன்பம் அநுபவிக்க வேணுமென்று வற்புறுத்தி அவரை மன்றாடாதேபோனால், டிவிங்கன் பட்டணம் வரையில் வண்டியிலேயே கூட்டிக்கொண்டு போயிருப்பார்.

இப்படியெல்லாம் வருந்தினபிறகு கடைசியாய் டிவிங்கன் நகர் போய்ச் சேர்ந்தேன். அங்கு சேசுசபைச் சுவாமிமார்கள் வெகு அன்பு காட்டி, இராச்சிய சிரேஷ்டரிடம் அழைத்துக்கொண்டுபோக அவருடைய தயையினால் இந்நாள் வரையில் நான் தேடிய பேருபகாரம் பெற்றேன். ஆ! என் சிநேகிதரே, என்னுடைய ஆநந்தத்துக்கு ஓர் அளவில்லை. சமையல் பாத்திரங்களுக்கும், பெருக்குமாறுகளுக்கும் நடுவில், நான் மோக்ஷ இன்பத்தை அநுபவிக்கிறேன். இந்தக் கடிதம் வந்து சேருகிறபொழுது, திவ்விய சேசு பற்பல சிலுவைகளினால்



அவர் நேசத்தை எனக்குக் காட்டவும், பாவம் நிறைந்த அற்ப ஊழியனாகிய என்னை, அவருடைய பரிசுத்தர்களிலொருவனாகக் காப்பாற்றும்படியும் வேண்டிக்கொள்ளும்படி மன்றாடுகிறேன். அப்போஸ்தலர்களின் கிரகத்திலிருக்கும் வேளையில் உம்மை மறக்கமாட்டேன். இன்னொரு சங்கதி. புறப்படுகிற ஆத்திரத்தில் அர்ச். பார்பரம்மாளிடம் விடை பெறும்படி அவளுடைய பீடத்தண்டையில் போய் ஜெபிக்கிற சமயத்தில் என் வீட்டிலிருந்து கொண்டு வந்திருந்த ஐந்துமணிக் கசையையும், மயிரொட்டியாணத்தையும் பீடத்தின் வலதுபக்கத்து ஒரு மூலையில் மறந்து வைத்துவிட்டேன். என் பிரிய சிநேகிதரே, என்னுடைய தேவ அழைத்தல் விஷயமான இரகசியங்களையெல்லாம் அறிந்திருக்கிற எங்களுடைய அந்தப் பணிவிடைக்காரனிடம் அருமையாகப்பேசி, அவனை பிரியமாக நடத்தும். அவனிடம் சொல்லி அந்தக் கசையையும் மயிரொட்டியாணத்தையும் தேடி எடுத்து, அதுகளை உபயோகிக்கவும், எனக்காக வேண்டிக்கொள்ளவும் ஏவும்.

(கையொப்பம்.)

உம்முடைய சிநேகிதனும் ஊழியனுமாகிய

ஸ்தனிஸ்லாஸ் கோஸ்கா.

அர்ச்சியசிஷ்டவர் செய்த திருயாத்திரையைப்பற்றி அவர் எழுதிய கடிதம்போக, அவரோடு உரோமாபுரியில் நவசந்நியாசியாயிருந்த, அகுஸ்தி (Augusti) என்பவரும் வாய்மொழியால் கொடுத்த வாக்குமூலமுமிருக்கிறது. ஒருநாள் இவர் அர்ச்சியசிஷ்டவரைப் பார்த்து, "எப்படி நீர் தப்பித்து ஓடி வந்தீரென்று கேட்க", ஸ்தனிஸ்லாஸ், சில கந்தை உடுப்பைச் சேகரித்துக்கொண்டு, விடியற்காலமே புறப்பட்டதாகவும், அவருடைய தோழர்கள் குதிரையேறி அவரைத் தேடிப்பிடிக்க பின்தொடர்ந்து வந்ததாகவும், அவரைப்பார்த்தும் கண்டுபிடியாமல் வேறே மார்க்கமாய் போயிருக்கவேணுமென்று எரிச்சலாய்த் திரும்பினதாகவும், தெய்வ பராமரிப்பினால் காப்பாற்றப்பட்டு யாத்திரையை முடிக்கக் கூடியவராயிருந்ததற்காகச் சர்வேசுரனுக்கு நன்றி செலுத்தினதாகவும் சொன்னார்.

ஸ்தனிஸ்லாஸ் தமையனும், தம்பியைத் தேடிப் போனபோது நடந்த விசேஷ புதுமைகளை ஒத்துக்கொண்டு, திரும்பியும் அவரைத் தேடியலையமாட்டேனென்று சாதித்தார். அர்ச்சியசிஷ்டவர் தப்பியோடின கொஞ்சநாளாக, வியன்னா நகரெல்லாம் அதே பேச்சா





யிருந்தது. ஜனங்கள் அர்ச்சியசிஷ்டவருடைய மனத் திடனையும் தைரியத்தையும்பற்றி வெகு ஆச்சரிய பிரமிப்புடன் சல்லாபிப்பதுபோக, வித்தியாசாலையிலுள்ள மாணாக்கர்களும் வெகு புகழ்ச்சியாய் இச்சங்கதியை யெடுத்துரைப்பார்கள். அங்குள்ள சிலர் இவ்விஷயத்தைக் குறித்து சல்லாபக் கவி முதலாய் எழுதியிருக்கிறார்கள்.

அர்ச்சியசிஷ்டவர் உரோமாபுரிக்கு புறப்பட்ட ஐந்து நாளைக்கப்புறம் வியன்னா நகர் வித்தியாசாலையிலுள்ள ஒரு சேசு சபைக் குருவானவர் எழுதின கடிதமொன்றை இங்கு எடுத்துரைப்போமாக. ஸ்தனிஸ்லாஸ் போய் ஆலோசனை கேட்ட அந்தோனியோ சுவாமியார் இச்சங்கதியை எவ்வளவு இரகசியமாய்க் காப்பாற்றினாரென்று காட்டுகிறதற்கு இக்கடிதம் உதவும்.

போலண்டு தேசத்திலிருக்கும் சேசுசபை மடங்களைச் சந்தித்து விசாரணை செய்யும் சங்கைக்குரிய பிரான்சீஸ்கு சூமியெர் (Francis Xumier) சுவாமியாரவர்களுக்கு :—

ஸ்தனிஸ்லாசுவின் சகோதரனாகிய பவுல் கோஸ்கா மூலமாய் இக்கடிதத்தை யனுப்புகிறோம். இரண்டு வருஷகாலமாக ஸ்தனிஸ்லாஸ்

சேசு சபையைச் சேர ஒரே தீர்மானமாயிருந்தார். நாங்களும் அவரை ஏற்றுக்கொள்ளமாட்டோமென்று சொல்லக்கூட்வில்லை. பெற்றோருடைய உத்தரவின்றி சேருவது கூடாதென்றுமாத்திரம் எச்சரித்தோம். பரிசுத்த பாப்பானவர் ஸ்தானாதிபதி இங்கு வந்தபோது, அவரிடமும் போய் நாங்களவரைச் சேர்த்துக்கொள்ளும்படி உத்தரவளிக்க கெஞ்சினார். அப்படியிருந்தும் நாங்கள் முந்தியைப்போலவே பதில் கூறினோம். எங்களிடத்தில் காரியம் பலிக்காதென்றறிந்துகொண்டு, வியன்னா நகரை விட்டகன்றுபோக எத்தனித்தார். நம்மிலநேகரும் அப்படிச் செய்வது சரியல்லவென்று தடுக்க முயன்றார்கள். ஆனாலும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒருவருக்கும் ஒன்றும் சொல்லாமல் புறப்பட்டுவிட்டார். அவருடைய தமையனும் உபாத்தியாயரும் மற்றவர்களும் அவரை எத்திசையிலும் தேடியும் காணக்கூடவில்லை. நாங்கள் ஸ்தனிஸ்லாசை வேறில்விடத்துக்கு அனுப்பியிருக்கிறதாக சந்தேகிக்கிறார்கள். யாராவது உங்களிடம் அதைப்பற்றி பேசுவார்களேயாகில், எங்களிலொருவரும் அவரப்படிப் புறப்படும்படி தூண்டவில்லையென்றும், அதற்கு விரோ



தமாய், அவரைத் தடுத்துவைக்க வேண்டியதை முயன்றார்களென்றும், உறுதியாகவும் பயிரங்கமாகவும் கூறலாம். நீங்கள் சகல சங்கதியையுமறிந்து சமயத்துக்கும் நிலைமைக்கும் ஒத்தாப்போல் பதிலளிக்கும்படி இதுவெல்லாம் எழுதுகிறோம். நாமுதலாய் அதைப்பற்றி ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அந்த வாலிபன் எங்கேயிருந்தாலும், அவருக்காக நாமும் கஸ்திப்படுகிறோம். அவர் போய்விட்டாரென்று எல்லாரும் சொல்லுகிறார்கள். வழியிலே சந்தேகமின்றி வெகு சஞ்சலத்தை அநுபவித்திருந்திருக்கவேண்டும். இதுநாள் வரையில் அவரெங்கே யிருக்கிறாரென்பது ஒருவரும் அறிபார். இதுகளெல்லாத்தையும் தங்களுக்கறிவிக்க விருப்பமானோம்.

(கையொப்பம்) எமரிக் பாஸ்டர். (Emerick Foster)

வியன்னா வித்தியாசாலை,

1567-ம௵ ஆகஸ்டு-மீ௴ 22-ம௳ வெள்ளிக்கிழமை.

வியன்னா நகரிலிருந்து சிலநாளைக்கப்புறம், உரோமாபுரியில் சேசுசபைக்கெல்லாம் பெரிய அதிசிரேஷ்டராயிருந்த அர்ச். பிராஞ்சீஸ்கு போர்ஜியாவுக்கு இதே விஷயத்தைப்பற்றி இன்னொரு குருவானவர் எழுதிய நிருபத்தையும் இங்கு எடுத்துக் காட்டுவோமாக. இதில்

அடங்கியிருக்கிற செய்திகள் நமக்குத் தெரியுமானாலும், அச்சமயத்தில் வியன்னா பட்டணத்திலிருக்கும் சுவாமிமார்களின் மனநோக்கங்களை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன:

மிகவும் சங்கைக்குரிய பிதாவே!

“பிரபுக் குடும்பத்தானும், புண்ணிய ஜீவியத்தினால் மேன்பாடடைந்தவருமான போலண்டு தேசத்து வாலிபனொருவர் இரண்டு வருஷகாலமாக, சேசுசபையில் தம்மை ஏற்றுக்கொள்ளும்படி பஞ்சரித்துக் கேட்டுக்கொண்டிருந்தார். பல காரணங்களையிட்டு அவரைச் சேர்க்காமலிருந்தோம். பெற்றோர் உத்தரவு கிடைக்கிறது கூடாதென்றறிந்த இவர், சிலநாட்களுக்குமுன் ஊரைவிட்டு வேறெங்கேயாவது உள்ள சேசுசபை மடத்தில் போய்ச் சேருகிற நோக்கத்தோடு புறப்பட்டுவிட்டார். மனத்திடனிலும் பத்தி உருக்கத்திலும் எல்லாருக்கும் நன்மாதிரிகையாயிருந்து, எல்லாராலும் நேசிக்கப்பட்டு ஒருவருக்கும் இடைஞ்சலாயிராமல், சகலத்திலும் விமரிசையோடு நடந்துகொள்ளுகிறவராயிருந்தார். அங்கத்தில் சிறுவனானாலும், பெரும் இருதயமுடையவர். தினம் மூன்று பூசை காண்பார். மற்ற மாணாக்கரைவிட அடிக்கடி பாவசங்கீர்த்தனத்துக்குப் போய், திவ்விய சற்



பிரசாதம் பெற்றுக்கொள்வார். ஜெபத்திலும் படிப்பிலும் தளராதவர். அவரைவிடப் படிப்பில் கெட்டிக்காரராய் இருந்தவர்களுக்குமேல் விர்த்தியடைந்து வந்தார். அல்லும் பகலும் சேசுவையும் சேசு சபையையும் பற்றியே அவர் நினைவெல்லாம். அடிக்கடி கண்ணீர் ததும்ப சிரேஷ்டர்கள் அவரை சபையில் ஏற்றுக்கொள்ளும்படி பஞ்சரித்துக் கேட்பதுபோக, பாப்பானவர் ஸ்தானாபதிக்கு எழுதி சிரேஷ்டர்கள் அவரைச் சேசுசபையில் சேர்க்கும்படி கட்டளை கொடுக்கும்படி கோரினார். இதுவெல்லாம் கைகூடாததைப் பார்த்து, பெற்றோர், சகோதரன், சிநேகிதர்கள் கட்டளையை மீறி, வேறிடத்தில் போய்ச் சேசுசபையில் சேரும்படி தப்பிக்கத் தீர்மானித்தார். மற்றிடங்களிலும் அநுகூலமாகாவிட்டால், தேவசிநேகத்தை நாடி, தம்முடைய சீவியகாலத்தை அட்டத்தாரித்திரத்திலும், ஏகாந்தத்திலும், பரதேசி போல செலவழிக்கக் கருத்தாயிருந்தார். அந்த வாலிபன் நம்மில் சிலரிடத்தில் அவருடைய நோக்கத்தைத் திறந்து ஆலோசனை கேட்டபோது, அப்படி செய்யலாகாதென்று தடுத்துவைக்க முயன்றார்கள். சுயதேசத்துக்கு திரும்பப்போகிற அவர் தமையனோடு போய் பெற்

றோர் உத்தரவு பெறவேணுமென்றும், இவருடைய பரிசுத்த பிடிவாதத்தைப் பார்த்து, பெற்றோர் விடைஅளிப்பார்களென்கிற நம்பிக்கை இருக்கிறதென்றும் சொன்னார்கள். அவரோவென்றால், பெற்றோர் சுபாவம் தமக்குத் தெரியுமென்றும், அவர் குடும்பத்தார் உத்தரவு அளிப்பார்களென்பது வீணென்றும், தம் நோக்கப்படி நடந்து கிறீஸ்துநாதருக்குக் கொடுத்திருந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதே தீர்மானமென்றும் உரைப்பார்.

இவ்விதமாய் அவருடைய உபாத்தியாயராவது, ஆத்தும குருவாவது அவருடைய நோக்கத்தை மாற்றக்கூடாமலிருக்கும்பொழுது, ஒரு நாள் காலை அவருடைய தோழருக்கும் சகோதரருக்கும் ஒரு வார்த்தையும் சொல்லாமல், திவ்விய சற்பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டபிறகு, சாதாரண உடுப்புகளைக் களைந்துவிட்டு, கந்தைத் துணிகளைப் போர்த்திக்கொண்டு, தெருவீதி பிச்சைக்காரனைப்போல, கையில் ஒரு தடி எடுத்துக்கொண்டு, தமக்கிருந்த ஆஸ்திசொத்தெல்லாம் பழித்து, வியன்னா பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுவிட்டார். அவருடைய வீட்டு எஜமானும், தமையனும், உபாத்தியாயரும் வித்தியாசாலைக்கு வந்து, அவர் எங்



கேயென்று விசாரித்ததற்கு, எங்களுக்கு ஒன்றும் தெரியாதென்றோம். உடனே குதிரை போட்டுக்கொண்டு, எத்திசையிலும் அவரைத் தேடிப் போனார்கள். ஒரு பில்லிசூனியக்காரியிடம் விசாரித்ததற்கு, அவள் அவர் போன தலைவாசலையும், எடுத்த மார்க்கத்தையும் குறித்ததாகச் சொல்லுகிறார்கள். அத்திசையில் குதிரைகளைப் பாய்ச்சலில் விட்டு விரைந்தோடி கிறீஸ்துவின் பிரிய சீஷன் தங்கிய இடம்வந்து சேர்ந்ததும், அவரைப் பிடிக்கமுடியாமல் போயிற்று. ஏனெனில் குதிரைகள் களைப்பு மிகுதியால் வதங்கி, ஒரு அடி முதலாய் முன் எடுத்து வைக்கமாட்டாமல் நிலையாய் நின்றன. குதிரைக்காரனும் இது வினோதமானதென்று ஆச்சரியப்பட்டு, இப்படி ஒருக்காலும் தனக்கு நேரிட்டதில்லையென்று உரைத்தான். பின் சென்றவர்களும் திகில்பட்டு திரும்பிவிட்டார்கள். பின்னும் என்ன நடக்குமோ சர்வேசுரனுக்குத்தான் தெரியும். சர்வேசுரன் சித்தப்படி அந்த வாலிபர் தப்பித்துக்கொண்டதாகத்தான் நாங்கள் நம்புகிறோம். அவரிடத்தில் விளங்கின பிடிவாதமானது தெய்வ ஏவுதலினால் மூட்டப்பட்ட தேவசிநேகக் கொதிப்பேயொழிய, சிறுபிள்ளைத்தன உற்சாகத்தினால் உண்டானதல்ல."

அவரை அறிந்து நேசித்த மாணுக்கர் மனதில் இச்சந்தர்ப்பம் பெரும் ஆச்சரியத்தைக் கிளப்பினதென்பதை வார்த்தையினுல் சொல்ல வேண்டியதில்லை. அந்த வாலிபனுடைய உலக வெறுப்பையும், மாசற்ற சீவியத்தையும் அறிந்த ஒருவரும் அவர் சந்நியாச அந்தஸ்தைத் தேடி நாடினதைப்பற்றி ஆச்சரியப்படமாட்டார்கள். அநித்திய நன்மைக்கல்ல, நித்திய நன்மைக்காக நான் பிறந்திருக்கிறேனென்று அடிக்கடி அவர் தமையனுக்கு சொல்லிக்கொண்டுவந்த வார்த்தைகளே இதற்கு அத்தாட்சியாகும். உயர்ந்த வம்சத்தில் பிறந்த 17 பிராயமுள்ள இவர் சேசுசபையை முன்னிட்டு, யாதொரு மோச இக்கட்டுகளுக்குப் பயப்படாமல் இரந்து குடித்துக்கொண்டு போவது எல்லாருக்கும் பெரிய ஆச்சரியமாயிற்று. அனேகருடைய மனதில் இவர் மாதிரிகையைப் பின்சென்று அவரைப்போல சர்வேசுரனுக்காக எல்லாத்தையும் இழந்துவிட்டு, உலகத்தையும் பழித்து சர்வேசுரனைத் தேட ஆவல் உண்டாயிருக்கவேண்டும்.

பவுல் கோஸ்காவுக்குத் தான் அவர் சகோதரன் இப்படித் தப்பித்து ஓடினது விசேஷ புத்தி படிப்பித்திருக்கவேணும். அவர் இருதயத்



தில் இச்சமயம் விதைத்த ஞான விதையின் பலனுகத்தான் பிற்காலத்தில் பவுல் கோஸ்கா மனந்திரும்பி, தம்பிக்குக் காட்டிய அகந்தை ஆங்காரத்துக்காக உத்தம மனஸ்தாபப்பட்டு, பரிசுத்த சீவியத்தைத் தேடி, பாக்கியமான மரணமடைந்தார். அர்ச்சியசிஷ்ட ஸ்தனிஸ்லாஸ் அடைந்த மகிமைக் கிரீடத்தின் நவரத்தினங்களுக்குள் தன் அண்ணன் மனந்திரும்பி, பிரமாணிக்கமான தேவதாசனுனதே வெகு அழகான பிரகாசம் ஜொலிக்கிற நவரத்தினமாயிருக்கிறது.

## ௰-ம் அதிகாரம்.

### அர்ச். ஸ்தனிஸ்லாசும், முத்திப்பேறுபெற்ற கனிசியுஸ் இராயப்பரும்.

பவுல் கோஸ்கா, சுவாமிமார்கள் கொடுத்த கடிதங்களோடு போலண்டு தேசத்துக்குத் திரும்பி, தந்தையின் வீடு போய்ச் சேர்ந்து, ஸ்தனிஸ்லாசைக் குறித்த சகல சங்கதிகளையும் அறிவித்துக் கடிதங்களையும் தந்தையிடம் ஒப்புவித்தார். ஆனால் தந்தையாகிய ஜான் கோஸ்கா, அர்ச்சியசிஷ்ட வாலன் செய்தது தேவ அழைத்தலின் ஏவலானதென்று கிஞ்சித்தேனும் நம்பவுமில்லை. அவரைச் சந்தித்தும் கண்டுபிடியாததும், குதிரைகள் பிடிவாதமாய் நின்றுவிட்டதும், மற்றும் சகலமும் தெய்வ செயலாகவும், புதுமையாகவும் ஆனதென்று ஒத்துக்கொள்ளவுமில்லை. கல்நெஞ்சப் பதிதனை கிம்பர்க்கர் துரை புதுமையென்று பிரசித்தப்படுத்தின விசேஷங்களை முதலாய் ஜான் கோஸ்கா தெய்வ செயலாலான காரியமென்று கண்டுபிடிக்கவில்லை. இப்பேர்ப்பட்ட அவிசுவாசம் நூதனமாகத் தோன்றினாலும், விபரீதமாகஎண்ணப்



படாது. ஜான்கோஸ்கா [illegible] கிறிஸ்துவனும், இகேகம் நிறைந்த [illegible]யிருந்தார். பிள்ளையின்மட்டில் அவருக்குள்ள பாச சிநேகந்தான் அவருடைய குருட்டாட்டத்துக்குக் காரணமாயிருந்தது. "பெற்ற மனம் பித்து" என்ற பழமொழிப்பிரகாரம், தம் பிள்ளை தம்மைவிட்டு அகன்ற ஏக்கத்தினால் ஒன்றும் நியாயமாகத் தோன்றவில்லை. ஸ்தனிஸ்லாஸ் செய்ததெல்லாம் பிசகு என்றுதான் சாதித்தார். தாய் வயிற்றில் பரிசுத்த ஸ்தனிஸ்லாஸ் பிறக்குமுன் நடந்த புதுமைக் காட்சிகளும், அவர் பாலனாயிருக்கும்பொழுது நேரிட்ட நானாவித பரம விசேஷங்களும், கண்ணால் பார்த்த நம்பிக்கைக்குரிய மற்றனேகர் கூறிய புதுமைகளின் தவறாத வாக்குமூலங்களும், தகப்பனுடைய மனதை மாற்றி, அவருடைய குருட்டாட்டத்தை நீக்கியிருக்கலாம். ஆனால் தந்தையின் சிநேகக் கொதிப்பு இதற்கெல்லாம் காது கொடுக்கவில்லை.

ஸ்தனிஸ்லாசின் பணிவிடைக்காரர்களில் சிலர் அவரைத் தேடி ஓடுகையில், சம்பவித்த சில புதுமை வரலாறுகளை எடுத்து சொல்லியிருக்கிறார்கள். இதுகளில் சிலதுகள் ஸ்தனிஸ்லாசின் அர்ச்சியசிஷ்டதனத்தைப்பற்றி சோதனை

செய்புங்காலத்தில் அதுகள் நடந்த 34 வருஷங்களுக்குப் பின்பு பசிபிசி என்னும் பணிவிடைக்காரனால் வாக்குமூலமாகக் கூறப்பட்டவைகளாயிருக்கின்றன.

ஒரு பணிவிடைக்காரனுக்கு நேரிட்டதென்னவென்றால், அவன் மற்றனேகரோடு அர்ச்சியசிஷ்டவரைத் தேடித் தூரத்திக்கொண்டு போகையில், அவர் ஒரு நதிக்கரை சேர்ந்து, ஆற்றுத் தண்ணீரின்மேல் கெட்டித் தரையில் நடந்தாப்போல, புதுமையாக நடந்து, அக்கரை போய்ச் சேர, தூரத்திக்கொண்டு போன இவர்களோவென்றால், பாலம் போய்ச் சேர, பெருஞ்சுற்று சுற்ற வேண்டியதாயிற்றும். மேலும் ஒரு அன்னபட்சி வந்து அர்ச்சியசிஷ்டவருக்குத் துணையும் வழிகாட்டியுமாய் இருந்ததாக, வியன்னு நகரில் அனேகர் பேசிக்கொண்டதாகவும் பசிபிசி என்பவர் தானே வாக்குமூலம் சொல்லியிருக்கிறார். இப்புதுமைகளையும் ஜான் கோஸ்கா விசுவசிக்கவில்லை.

பிள்ளை தன் உத்தரவின்றி தன்னைவிட்டு ஓடிப்போனது தகப்பனுடைய இருதயத்தில் ஆகாத கோப வெறியை மூட்டிவிட்டது. சந்நியாச வேஷம் போடுகிறதற்கு, தரித்திரனை கந்தைகளைக் கட்டிக்கொண்டு தெருவீதிகளில் பிச்சை



வாங்கித் தப்பித்து ஓடுவதினால் தன் இராத்தக் குமாரன், தனக்கும், தன் குடும்பத்துக்கும் சொல்லிலடங்காத அவமானத்தை வருவித்தானென்று புலம்பினார். பிரபுக் குடும்பத்துப் பிள்ளைக்கு இது சரியா என்று ஆபாசப்பட்டு, பழிக்குப் பழி வாங்குவதாகவும், தன் மகனையும் சேசுசபையையும் ஒரு கை பார்ப்பதாகவும், வெறிகொண்டவர்போல் சபதங் கூறினார். எர்மலாந்து சீர்மையின் மேற்றிராணியாராயிருந்த கர்தினாலாகிய ஸ்தனிஸ்லாஸ் ஓசியுஸ் (Stanislaus Hosius) ஆண்டவருக்கு ஏகமுறுக்காய் ஒரு கடிதம் அனுப்பினார். அதில் இரண்டு வருஷகாலத்துக்கு முன்தான் பக்கத்திலுள்ள புல்தோவா (Pultowa) நகரில் ஏற்படுத்தப்பட்ட சேசுசபைக் கல்விசாலையைக் கிளப்பி, அதிலுள்ளவர்களைச் சிதறடிக்க ஏற்படுவதாகவும், ஒருக்காலும் சேசுசபைச் சுவாமிமார் போலண்டு தேசத்தில் பிரவேசியாதபடி முயற்சி செய்வதாகவும் கூறினார். இதே நடையில் உரோமாபுரியில் இருக்கும் அர்ச். ஸ்தனிஸ்லாசுக்கும் ஒரு கடிதம் எழுதினதுபோக, அதிலே அவ்வரை விலங்கு மாட்டி, திரும்பி வீட்டுக்குக் கொண்டுவாராதேபோனால், தானும் மனுஷனல்லவென்றும் சம்பிராயம் போட்டார்.

இதற்குள் அர்ச்சியசிஷ்டவர் துரிதமாகத் திருயாத்திரையை முடிக்க பிரயத்தனப்பட்டார். இந்த ஆவலினால் தூண்டப்பட்டு நாளொன்றுக்கு முப்பது மையில் வழி நடந்ததாகச் சொல்லியிருக்கிறது. வறுமை வருத்தம் அறியாத பதினேழு பிராயமுள்ள மெல்லிய இந்த வாலன், நாளொன்றுக்கு இவ்வளவு தூரம் நடக்கக்கூடியது தெய்வ உதவியும், பரம செயலாகவும் இருக்கவேணும். இந்நீண்ட பிரயாணத்தைச் செய்ய ஏவின திவ்விய கன்னிகை, தாய்க்குரிய அன்போடு தம் தாசனை ஆதரித்து, அவர் பத்திக்கு ஒப்பாக சகலத்தையும் நிறைவேற்றும்படி விசேஷ உதவியும் ஆறுதலும் புரிந்திருக்காமல் இருந்திருப்பாளோ?

கடைசியாய் முந்நூறு மையில் கால் நடையாய்ச் சென்றபிறகு ஆக்ஸ்பர்க் (Augsburg) என்னும் ஊர் வந்து சேர்ந்து, அங்கு சேசுசபை சிரேஷ்டராயிருந்த முத்திப்பேறுபெற்ற கனிசியுஸ் இராயப்பரைத் தேடினார். அவரோவென்றால், அங்கிருந்து முப்பது மையில் தூரமுள்ள டிலிங்கன் (Dillingen) நகருக்கு அலுவலாய்ச் சென்றிருந்தார். ஆகையால் அங்கு சற்று இளைப்பாற ஒரு மணி நேரமுதலாய்த் தங்காமல், கிறீஸ்துநாதர் அநுசாரம் சொல்லு



கிற பிரகாரம், சிநேகம் இருந்தால் வேலை இல்லை, வேலை செய்தாலும் அன்போடு செய்யப்படுகிறதென்கிற பிரகாரம், சேசுசபையைச் சேருகிற ஆசை அன்போடு உடனேதானே டிலிங்கன் நகருக்குப் புறப்பட்டார்.

இச்சமயம் இவரோடு இன்னொரு குருவானவரும் புறப்பட்டதாக விளங்குகிறது. ஏனெனில் வழியில் இவருக்கு சர்வேசுரன் அளித்த ஒரு பெரிய புதுமைக்கு அவர் சாட்சியாயிருந்திருக்கிறார். ஆக்ஸ்பர்க் ஊரை விட்டு சில நாழிகை நடந்ததும், சில குடிசைகளைச் சந்தித்து, அங்குள்ள ஒரு கோவில் திறந்திருக்கிறதைப் பார்த்து, அதற்குள் சென்ற ஜனங்களோடு இவர்களும் உள்ளே சென்றார்கள். இங்கு திவ்விய பூசைப்பலி கண்டு திவ்விய நன்மை பெற்றுக்கொள்ளலாம் என்பது அர்ச். ஸ்தனிஸ்லாசின் கருத்து. உள்ளே நுழைந்து கோவிலைச் சுற்றி சோதித்ததும், இது பழைய கத்தோலிக்கு கோவிலாயினும், தற்காலம் லுத்தர் மதஸ்தர் கையிலிருக்கிறதாக பட்டப்பகல்போல் விளங்கிற்று. ஐயோ! பரிதாபம்! மெய்யான வேதக் கோவில் பதிதர் கையில் அகப்பட்டிருக்கிறதையும், தாம் திவ்விய சற்பிரசாதம் பெற்றுக்கொள்ளக்கூடாத நிலைமையிலிருக்கிறதையுங் கண்டு,

ஸ்தனிஸ்லாஸ், ததும்பின கண்ணீரை நிறுத்தக்கூடவில்லை. முழங்கால்படியிட்டு அழுது கொண்டிருந்தார். கொஞ்ச நேரத்துக்குள், வெகு ஆச்சரியத்துக்குரிய ஆறுதலினால் தேற்றப்பட்டார். அதாவது, அவர் அங்கு முழங்காலிலிருக்கவே, அவருக்கு முன் வெகு சோதிப்பிரகாசம் ஜொலிக்கும் சம்மனசுக்கள் ஒரு கூட்டமாக வானலோகத்திலிருந்து இறங்குகிறதைக் கண்டார். அவர்களெல்லாரும் அவரைச் சுற்றி முழங்கால்படியிட்டு ஆராதனையோடிருக்கவே, பரிசுத்த பரம திவ்வியநற்கருணையை பூச்சியமாய்க் கையில் ஏந்திக்கொண்டு வந்த ஒரு சம்மனசானவர் மட்டும், அவர் முன் வந்து, திவ்விய சற்பிரசாதத்தை அவர் நாக்கில் வைத்தார். அப்புறம் எல்லாச் சம்மனசுக்களுடைய தரிசனமும் உடனே மறைந்துபோனது. நமது அர்ச்சியசிஷ்டவரோவென்றால், சம்மனசுக்களின் கரங்களிலிருந்து தமதிருதயத்தில் பெற்றுக்கொண்ட ஆண்டவருக்கு எவ்வளவு ஸ்தோத்திரம் செலுத்தியிருப்பார் என்று உரூபீகரித்துக்கொள்ளலாம். இத்திவ்விய விருந்தினால் அடைந்த பல உற்சாகத்தினால், யாதொரு களைப்பின்றி உலகத்தின் கடைசி எல்லைமட்டும் நடக்க சக்தியுள்ளவர் போலானார்.



அர்ச். ஸ்தனிஸ்லாஸ் மட்டும் சம்மனசுக்களை எல்லாம் தரிசித்தாலும், பதிதக் கோவிலில் கேட்ட இவ்வர்த்தமானத்தை, அவருடைய தோழராகிய குருவானவருக்கு அவர் சொல்லியிருக்கவேணும். ஏனெனில் இப்பிரயாணத்தில் அர்ச்சியசிஷ்டவருடைய தோழராயிருந்த குருவானவரிடம் இருந்து இவ்வர்த்தமானத்தை தாம் கேட்டதாக ஆல்பெர்ட் தேயோபல்கு, (Father Albert Teobulk) என்கிற சுவாமியார், பிற்காலத்தில் அர்ச்சியசிஷ்டதனச் சோதிப்பில், வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். இதுவிருக்க, இப்புதுமையைப் பற்றி இன்னொரு குருவானவர் நிக்கோலாஸ் ஓபோர்ஸ்கி (Father Nicolas Oborski) என்பவரும் வாக்குமூலம் கொடுத்திருக்கிறதுபோக, அக்காலத்தில் இப்புதுமை வியன்னாப்பட்டணம் எங்கும் பரவியிருந்தது.

இப்புதுமையின் தேற்றரவினால் தைரியமடைந்த அர்ச்சியசிஷ்டவர், சொச்சப் பிரயாணத்தையும் முடித்துக் கடைசியாய் டிலிங்கன் நகர் சேர்ந்து சேசுசபை வித்தியாசாலைக்குட் புகுந்தார். அங்கு அப்போதிருந்த சிரேஷ்டராகிய முத். கனிசியுஸ் இராயப்பாண்டை அனுகி, அந்தோனியோ சுவாமியார் கொடுத்த சிபார்சுக்

கடிதத்தை தாழ்ச்சியாய் முழங்காலிலிருந்து கொண்டு நீட்டினார். சிரேஷ்டர் கடிதத்தை வாசித்து, அர்ச்சியசிஷ்டவருடைய தீரா ஆசைக்கருத்தையும் வாய்மொழியாய்க் கேட்டவுடனே, முழங்காலிலிருந்த வாலனை ஒரே கையாய்ப் பிடித்தெழுப்பி, பக்ஷத்தோடு அரவணைத்து மினவினார். வாலனும் தம்மிருதயத்திலுள்ளதெல்லாம் திறந்துசொன்னபிற்பாடு, சேசுசபையில் உடனே தம்மை உட்படுத்தும்படி கண்ணீர் சிந்திக் கெஞ்சினார். இப்பெரும் உபகாரத்தைப் பெறும்படி கஷ்டம் நிறைந்த இத்தூரப் பிரயாணத்தைக் கால்நடையாய்ச் செய்ததுபோல், இதற்காக இவ்வுலகத்தின் கடைசி எல்லைவரையில் பிரயாணம் செய்யவும் தயாராயிருக்கிறதாகச் சொன்னார். முத். கனிசியுஸ் இராயப்பரும் அர்ச்சியசிஷ்டவராயிருந்ததின் நிமித்தம் ஸ்தனிஸ்லாசின் உத்தம சீவியத்தை உடனே கண்டுபிடித்து, அவரைத் தம்முடைய இராச்சியத்து நவசந்நியாசத்தில் ஏற்றுக்கொள்ள விரும்பினார். ஆனால் ஸ்தனிஸ்லாசுவின் சுய தேசம் கிட்டத்திலிருந்தபடியால், பெற்றோர் வந்து சேசுசபையை விட்டு அவரை நீக்க வழி தேடுவார்களென்று அஞ்சவேண்டியதாயிருந்தது. இதுபோக, ஸ்தனிஸ்



லாசின் அதிர்ஷ்டம், இக்கல்விசாலையிலிருக்கும் இருவரை உரோமாபுரியில் போய் வேதசாஸ்திரம் படிக்கும்படி, மகா அதிசிரேஷ்டர் உத்திரவு வந்திருந்தபடியால், அவர்களோடு, இவரையும் அனுப்ப, முத். கனிசியுஸ் இராயப்பர் ஏற்பாடு பண்ணினார். தேவ பராமரிப்பினால் தான் இதுவெல்லாம் நேரிட்டதேயொழிய மற்றப்படியல்ல.

இது நேரிட்டதும், சிரேஷ்டர் ஸ்தனிஸ்லாசை நவசந்நியாசத்தில் சேர்த்தாச்சென்கிற அச்சார வார்த்தை சொன்னபிறகு, அவரை நவசந்நியாசிகள் செய்யவேண்டிய ஈனவேலைகளில் சோதிக்க விரும்பினார். சேசுசபை நவசந்நியாசிகள், தாழ்ச்சியில் ஸ்திரப்பட்டு புண்ணியத்தில் மேன்பாடடைகிற நோக்கத்தோடு வீடு பெருக்குகிறது, மண்வெட்டி யெடுத்துக் கொத்தி தோட்டவேலை பார்க்கிறது, சமையற்காரருக்கு உதவி புரிகிறது, இப்போர்ப்பட்ட தாழ்ந்த அலுவல்களைச் செய்வது வழக்கம். இவ்வேலைகளினுதவியால் வாலிப உற்சாகத்தினாலுண்டாகி, இலகுவில் கடந்துபோகும் பக்தி உருக்கத்துக்கும், மெய்யான தேவசிநேகப்பத்திக்குமுள்ள வேற்றுமையைச் சுளுவில் கண்டுகொள்ளலாம். நமது அர்ச்சியசிஷ்டவரையும் இவ்விதமாகச் சோதிக்கவேண்டியதாயிற்று.

அக்காலத்தில் டிலிங்கன் நகரில் அர்ச். எரோணிமுஸ் பாதுகாவலில் கட்டப்பட்ட பேர்போன வித்தியாசாலை ஒன்று சேசுசபையாரின் ஆளுகைக்குள்ளிருந்தது. இங்கு மேன் குடும்பத்துப் பிள்ளைகள் அநேகர் கல்விப் பயிற்சியடைந்து வந்தார்கள். இங்குதான் நமதர்ச்சியசிஷ்டவர் சென்று தமது மெய்யான புண்ணிய சாங்கோபாங்கத்துக்கு அத்தாட்சி கொடுத்தார். பந்திசாலையில் பணிவிடைக்காரனைப்போல் நின்று சாப்பாடு பரிமாறி, மற்ற விஷயங்களையெல்லாம் விசாரித்துக்கொள்வதுதான் அங்கே அவருக்குக் குறித்த அலுவல். இரு நோக்கத்தோடு, இராச்சிய சிரேஷ்டர் இவ்வேலையை அவருக்கு நியமித்தார். அதாவது: முதலாவது, தாழ்ச்சியிலும் சுய பரித்தியாகத்திலும் அர்ச்சியசிஷ்டவரை அப்பியாசப்படுத்தவும், இரண்டாவது, அக்கல்விசாலையிலுள்ள மாணக்கர்கள், இவ்வுந்நத மாதிரிகையைப் பின்பற்றி ஞானப் பலனடையவுந்தான். இவ்விரு நோக்கமும் நினைத்ததற்குமேல் நிறைவேறின. நமது அர்ச்சியசிஷ்டவருக்கு குறிக்கப்பட்ட புது அலுவலை ஆவலானந்தத்தோடும் ஆச்சரியத்துக்குரிய அடக்க வொடுக்க சுறுசுறுப்போடும் நிறைவேற்றினர். ஏதோ



தன் சீவியகாலமெல்லாம் அதுதான் தன் தொழில்போலப் பாவித்து ஊழியர்களுக்குள்ளே ஊழியனாகத் திரிந்தார். யாவரும் பந்தியிலிருக்கும் சமயத்தில், மேனை மரியாதையோடு இவர் ஊழியம் பண்ணுவதைப் பார்த்து சகலரும் சந்தோஷ பிரமிப்படைவார்கள். "குப்பையில் கிடந்தாலும் குண்டுமணி மங்குமா" என்றபடி, ஸ்தனிஸ்லாசின் மேன்குலப் பிறப்பும், மேலான கருத்தும், அவர் யாதொன்றும் சொல்லாவிடினும், வெளியாகத் துவக்கின. இவ்விநோத அடக்கவொடுக்க மேனை மரியாதையோடு ஊழியம் செய்கிறவர், பெரிய சீமானென்றும், மேற்கோத்திரப் புத்திரனென்றும், வித்தியாசாலையில் வாசிக்கும் எம்மாணக்கருக்கும் பயிற்சியிலும், பத்தியிலும் அவர் மேலான குல மகனென்றும், வெளியானதுமல்லாமல், தேவநேசத்தைநாடி சேசுசபையில் உட்படுத்துவதற்காகமட்டும் இவ்வீன தொழிலைச் செய்கிறாரென்றும் பேச்சுண்டானவுடனே, இப்பாரக்கிரமசாலியை எல்லாரும் கண்ணேணுக்கி ஆச்சரியப்படத் தலைப்பட்டார்கள். அநேகர் இவருடைய உதாரகுணத்தையும் நன்மாதிரிகையையும் பின்பற்றி உலகத்தை வெறுத்து சந்நியாசிகளாகத் தீர்மானித்தார்கள். அம்மாணக்கர்களி

லொருவராகிய ஜான் பெலேசியுஸ் (John
Peleycius) என்பவர், சில மாதங்களுக்கப்புறம்
உரோமாபுரிக்குப் போய் ஸ்தனிஸ்லாசோடு
நவசந்நியாசியானார். நீடியகாலம், தேவ ஊழி
யத்தில், பிரசங்கம், ஞான புஸ்தகங்கள் எழுது
கிற இப்பேர்ப்பட்ட நானாவித நல்வேலைகளைச்
செய்து, அவருக்கு 85-வயது நடக்கிறபோது
பரிசுத்தராகவும் பாக்கியமாகவும் மரித்தார்.
அவர் சீவியகாலத்தில், ஸ்தனிஸ்லாஸ் டிலிங்கன்
வித்தியாசாலையில் காட்டிய உதாரகுணத்தின்
நன்மாதிரிகையை எடுத்துச் சொல்வது வழக்
கம்.

இக்காலமெல்லாம், நமது அர்ச்சியசிஷ்டவர்
ஜெபத்தினால் தமதிருதயத்தின் தீராத ஆசை
யை திவ்விய கர்த்தருக்குக் காட்டி, எப்போ
தம்மை முழுதும் அவருக்கு ஒப்பித்து, சேசு
சபையில் ஊழியம்செய்யும் காலம் வருமென்று
வெகு ஆவலாய் எதிர்பார்த்துக்கொண்டிருந்
தார். தவமில்லா ஜெபம் என்னத்துக்காகுமென்
றாப்போலே, ஜெபத்தோடு ஓயாத் தவத்தையும்
ஒன்றித்தார். அவருடைய தவமும் கடுந்தவமா
யிருந்ததும்தவிர, ஓயா ஒருசந்தியாயிருந்த
தாக விளங்கினது. ஸ்தனிஸ்லாஸ் எப்போதும்
வேலை செய்துகொண்டிருந்தாலும், ஒருபோ



தும் அன்னபானம் சாப்பிடுகிறதில்லையென்று
மடத்திலுள்ளவர்கள் சொல்லுவார்கள். ஓயா
ஒருசந்தியாயிருப்பாரென்று இவரை நேரிலே
அறிந்திருந்த ஒரு சுவாமியார் பிற்காலத்தில்
வாக்குமூலம் கொடுத்ததுபோக, ஸ்தனிஸ்
லாசை டிலிங்கன் நகரில் அறிந்த மற்றநேக
வயதுசென்ற சுவாமிமார்களும் சொன்னதாகச்
சாட்சி சொல்லியிருக்கிறார்.

வேறென்னென்ன ஒறுத்தல் முயற்சிகளைச்
செய்தாரென்று நமக்குத் தெரியாவிட்டாலும்,
கொடுமையான ஒறுத்தல் செய்திருக்க வேணு
மென்று பலர்மூலமாயறிகிறோம். இவ்விஷய
மாய் வாக்குமூலம் கொடுத்திருக்கிற ஒருவர்
சொல்லுகிறதாவது: "மூத். கனிசியுஸ் இரா
யப்பர், ஸ்தனிஸ்லாசை டிலிங்கன் நகரில் பந்தி
சாலையில் பணிவிடையும், மற்றும் தாழ்ந்த
வேலைகளையும் செய்யும்படி நியமித்த காலத்
தில், ஸ்தனிஸ்லாஸ் வெகு கஷ்டத்தை அநுப
விக்கவேண்டியிருந்தது. அவரை அறிந்திருந்த
அநேக சேசுசபைக் குருக்கள் சொன்னது
போல, சர்வேசுரன் அவருடைய பேறுபலன்
களுக்கொத்த கிரீடத்தை மோக்ஷத்தில் கொடு
க்கும்படியாகத்தான், அந்த வித்தியாசாலையில்
அவ்வளவு கஷ்டப் பாடுகளை அநுபவிக்க சித்த

மானூர். மேலும் தேவ கிருபையின் உதவியில்லாமல் அவைகளைப் பொறுமையாய் அநுபவிக்கிறது கூடாது."

கஷ்ட துன்பமில்லாமலும், சிலுவைகளைத் தோளிலெடுத்து வைத்துக்கொண்டு சேசுவைக் கல்வாரிமலைக்குப்பின் செல்லாமலும், அர்ச்சியசிஷ்டவர்கள், அர்ச்சியசிஷ்டவர்களாகவில்லை. அர்ச்சியசிஷ்டவர்கள் பிறக்கும்போதே அர்ச்சியசிஷ்டதனத்தோடு பிறந்து, துன்பமின்றி வாழ்ந்து, சொகுசாக ஜீவித்து மோட்சமடைந்தார்களென்று தப்பறையாய் மதிக்கிறவர்கள், பரிசுத்த ஸ்தனிஸ்லாஸ் அநுபவித்த கஷ்டப்பாடுகளைப்பற்றி சற்றே ஆலோசித்துக் கற்றுக் கொள்ளட்டும். பலவிதமாக தம்முடைய சரீரத்தைத் தாம்தாமே வாதித்து அதை ஒறுத்து அடக்கி வைத்துக்கொண்டு வருவார்.

டில்லிங்கன் நகரத்து வித்தியாசாலையைவிட்டுப் புறப்பட்டதும், ஸ்தனிஸ்லாசின் அர்ச்சியசிஷ்டதனம் எங்கும் பகிரங்கமாகி, அவர் அங்கே குடியிருந்த அறையானது ஒரு சிறு கோவிலாக மாற்றப்பட்டது.

இதற்குள் இராச்சிய சிரேஷ்டர் அவ்விடத்தைவிட்டு, மற்ற இடங்களை விசாரணை செய்யப் போய்விட்டார். அர்ச்சியசிஷ்டவருடைய



ஸ்திரமான புண்ணியமும், ஆழ்ந்த தாழ்ச்சியும், அவர் கருத்தின் நிலைபாடும் சந்தேகமற வெளியாச்சுது. டில்லிங்கன் நகர் போலண்டு நாட்டுக்குத் தூரமாயில்லாதபடியாலும், அவர் தந்தையும் திடீரென்று புறப்பட்டுவந்து கலகம் செய்யக்கூடுமாகையால், சீக்கிரத்தில் ஸ்தனிஸ்லாசை உரோமாபுரிக்கு அனுப்புவது யூகமான விஷயம். ஆகையால் செப்டெம்பர் மாதம் 18-ம் தேதி சிரேஷ்டர் ஸ்தனிஸ்லாசைப்பற்றி உரோமாபுரி மகா அதிசிரேஷ்டருக்கு எழுதிய நிருபமாவது:

சங்கைக்குரிய பிதாவே !;

இக்கடிதம் கொண்டு வருகிறவர்கள் தேவ பராமரிப்பின் சகாயத்தினாலே நம்முடைய இராச்சியத்திலிருந்து வருகிறார்கள். முதலாவது கூறியவர் உங்களுக்குத் தெரிந்திருக்கும், ஜெனோவா பட்டணத்து ஜேம்ஸ் என்பவர். அவர் விரும்பியபடி உரோமாபுரிக்கு அனுப்பவேணுமென்று தாங்கள் உத்தரவு அளித்தபடி அனுப்புகிறோம். அவர் வசித்த இரண்டு மடங்களிலும் நற்குணத்தினாலும், கீழ்ப்படிதல் மேன்மையினாலும் பேர்பெற்றவர். இத்தாலியாகாட்டு சீதோஷ்ண ஸ்திதி அவர் தேகத்துக்கு நல்ல ஆரோக்கியத்தைக் கொடுக்குமெ

ன்று நம்பிக்கையாயிருக்கிறோம். அடுத்தவர், மூனிச் நகரில் இலக்கணம், சொல்லலங்காரம், தர்க்க சாஸ்திரம் முதலியவைகளை வெகு நிபுணன்போல் கற்றுக்கொடுத்துக் கீர்த்திபெற்ற றெய்னர் என்பவர். அவர் உரோமாபுரியில் தர்க்கசாஸ்திரமும், வேதசாஸ்திரமும் படிக்க வேணுமென்று குறித்தவர் இராச்சிய அதிசிரேஷ்டர்தான். இயற்கையாய் இனிய குணமுடையவரும், யாருக்கும் பிரியப்படக்கூடியவருமானவர். உரோமாபுரி சீதோஷ்ண ஸ்திதி அவருக்கு அவ்வளவாக ஒத்துப்போகாதென்றுமட்டும் பயப்படவேண்டியிருக்கிறது.

மூன்றாம் வாலிபன் போலண்டு நாட்டு ஒரு சீமான் புத்திரனாகிய ஸ்தனிஸ்லாஸ் என்பவர், புண்ணியத்தில் உதாரகுணமும் கருத்துமுள்ள பராக்கிரமசாலி. அவருடைய குடும்பத்தாருக்கு அஞ்சி, வியன்னா நகரில் நம் சுவாமிமார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. சிலகாலங்களுக்குமுன்னே சேசுசபையில் உட்படுவேனென்று வார்த்தைப்பாடு கொடுத்த இவர் தம் நீடிய பேராவல் நிறைவேறும்படி நம்மைத் தேடி வந்தார். ஆகையால் அவரைச் சோதிக்கும் நோக்கத்தோடு, உட்பிள்ளைகள் மடத்தில் பற்பல தாழ்ந்த வேலைகளைச் செய்ய நியமித்ததில்,



சகல கடமைகளையும் சுறுசுறுப்பாய் நிறைவேற்றி, தேவ அழைத்தலிலும் நிலைபரத்தைக் காட்டினார். தற்சமயம் அவர் பெற்றோருக்கருகாமையான இடத்தில் குடியிராதபடிக்கும், புண்ணிய அபிவிர்த்தியை நாடியும் உரோமாபுரிக்கு அனுப்பும்படி மன்றாடினார். இங்கு நம் நவசந்நியாசிகளோடு வசிக்காதேபோனாலும், உரோமையில் உடனே அவரைச் சேர்த்து சோதனையை முடிக்கும்படி முஸ்திப்பாயிருக்கிறார். இவர் சிறந்த புண்ணியங்களைச் செய்து உந்நத பேரடைவாரென்று முழு நம்பிக்கையாயிருக்கிறோம். தாங்கள் இவரை அங்கு அழைக்காவிட்டாலும், நல்ல சமயம் வாய்த்ததையிட்டும், இவ்வாலன் தானே அங்கு போகவேணுமென்று வெகு ஆவலோடு கேட்டதற்காகவும், நாமும் அவரை இன்னம் முழுதும் ஏற்றுக்கொள்ளாதபடியாலும், அங்கு அவரை அனுப்பத் தடையிராது என்று உத்தேசிக்கிறோம்.

(கையொப்பம்)

மூனிச் நகர்,
1567-ம் ௵ செப்டெம்பர்-மீ 25-உ } கனிசியுஸ் இராயப்பர், S. J.

ஸ்தனிஸ்லாசுக்கு தக்க சோதனை ஆனதென்றும், இப்போ நவசந்நியாசத்தில் போய்ச் சேர காலமாச்சுதென்றும், ஜேம்ஸ் என்னும் இன்னொரு சந்நியாசியாரோடு இவரும் மூனிச் நகருக்குப் புறப்பட்டார். அங்கு இவர்களோடு உரோமைக்குச் செல்லவேண்டிய ரெய்னர் என்பவரையும் தோழராகச் சேர்த்துக்கொண்டு பிரயாணம் செய்யவேண்டியிருந்தது. ரெய்னர் என்பவர் மற்றிருவருக்கும் மூப்பாயிருந்தபடியால், வழிப்பிரயாணத்தில் அவர்களுக்குச் சிரேஷ்டரைப்போல் உதவி, சகலத்திலும் ஒத்தாசை செய்து வந்தார். அங்கிருந்த முத். கனிசியுஸ் இராயப்பரையும் போய் சந்தித்தார்கள். அவர் ஸ்தனிஸ்லாஸ் வியன்னு நகரிலிருந்து யாத்திரை செய்த கந்தை வஸ்திரங்களை மாற்றக் கட்டளை கொடுத்தார். அவர்கள் பிரயாணம் செய்யவேண்டிய ஆல்ப்ஸ் மலையின் குளிர்காற்று பனிவாடையிலிருந்து காப்பாற்றக்கூடிய தகுந்த உடையும் கொடுத்தார். முத். கனிசியுஸ் இராயப்பர் அவர்களை வழியனுப்புமுன் அரவணைத்து மினவி, தமது ஆசீர்வாதத்தையும் அளித்து, முன் கூறிய சிபார்சு கடிதத்தையும் அவர்கள் கையில் கொடுத்து அனுப்பினார்.



இம்மூன்று பிரயாணிகளுக்குள் ஒருவராகிய, ரெய்னர் சுவாமியார், பிற்காலத்தில் அடிக்கடி இப்பிரயாணத்தைக் குறித்து சம்பாஷிக்கிறபோதெல்லாம், நமது அர்ச்சியசிஷ்டவரைப் புகழ்ந்து பேசுவார். ஸ்தனிஸ்லரசுக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் கொடுக்கிற காலம் வரையில் சீவித்து, அப்பெருநாளின் கொண்டாட்ட ஆடம்பரத்துக்கெல்லாம் பிரசந்நராயிருந்தார். அக்குருவானவர் மரிக்கும்போது அவருக்கு 97 வயது. மரியாயே, ஸ்தனிஸ்லாசே என்கிற நாமங்களை உச்சரித்துக்கொண்டு பரலோகப் பிராப்தியானார்.

மலைகளும் குன்றுகளும் அடர்ந்த நாடுகள் வழியாய் யாத்திரை செய்யும் நம்முடைய மூன்று பிரயாணிகளும், ஜெபித்துக்கொண்டும், மனத்தியான சிந்தனையில் கவர்ந்த வண்ணமாயும், ஒழிந்த நேரம் தேவகாரியங்களைப்பற்றி சம்பாஷித்துக்கொண்டும் நடக்கிறதைப் பார்க்கலாம். இத்தாலிய இராச்சியத்தின் ரஸ்தாக்களிலிருக்கும் தேவமாதாவின் சுரூபங்களையாவது படங்களையாவது கண்டவுடன், நமது அர்ச்சியசிஷ்டவர், தோழர்களை விட்டு, பரிசுத்த கன்னிகையை அண்டி மன்றாடின பிறகு, திரும்பியும் தங்களோடு வந்து கூடிக்கொள்வார் என்று, இத்தோழர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இவர்கள் திருக்குடும்பத்தின் இவ்விடமிருக்கும் "லொரெத்தோ" ஸ்தலத்தின் மார்க்கமாய்ப்போய், அப்பெனைன்ஸ் மலையைக் கடந்து மேற் கீழ் பக்கம் சென்று, உரோமைக்குப் போய்ச் சேர்ந்திருக்கவேண்டும்.

## 6-ம் அதிகாரம்.

### இரண்டு அர்ச்சியசிஷ்டவர்கள் சந்தித்தல்.

1567-ம் வருஷம் ஒக்டோபர் மாதம் 25-ம் தேதி மூன்று பிரயாணிகளும் பிளமினியன் தலைவாசல் வழியாக, திருச்சபைக்கெல்லாம் தலைநகரும், பரிசுத்த பாப்பானவர் வீற்றிருக்கும் நித்திய ஸ்தலமுமாகிய உரோமை நகருக்குள் புகுந்தார்கள். மூவரும் பெலவீனப்பட்டு, யாத்திரையின் கஷ்டத்தினால் வெகு களைப்பாய்த் தோன்றினார்கள். அவர்களுக்குள் இளையவரான அர்ச். ஸ்தனிஸ்லாஸ் தளர்ந்து ஆயாசமாய் நடக்கக்கூடாமல் களைத்துத் தவித்துச் சென்றார். ஆனாலும், அவருடைய அகத்தின் ஆனந்த சந்தோஷம் முகத்தில் சுரந்தோடினது. சாந்த மரியா (Sancta Maria) என்னும் மனையைத் தேடி மூவரும் பல தெருக்கள் வழியாகச் சுற்றித் திரிந்தபிற்பாடு, தேவமாதாவின் ஒரு கோவிலண்டை வந்து சேர்ந்தார்கள். இதற்கருகாமையில் வலதுபக்கத்தில்தான் இவர்கள் தேடின வீடு இருந்தது. இப்

மனையில்தான் சேசுசபையை ஸ்தாபித்த அர்ச்சியசிஷ்ட இஞ்ஞாசியார் வசித்து மரித்தது. வந்தவர்கள் உள்ளே நுழையாமல் வாசலில் நின்றுகொண்டு, மூத். கனிசியுஸ் இராயப்பர் கொடுத்த முன்கூறிய கடிதத்தைத் வாசற்காப்போன் வழியாயனுப்பி, வாசலடியில் வந்து நிற்பவர்கள் யாரென்று அறிவித்தார்கள். ஒரு அர்ச்சியசிஷ்டவர் இன்னொரு அர்ச்சியசிஷ்டவருக்கெழுதிய இந்நிருபத்தில் சகல விபரமும் கூறியிருந்தது. இதுபோக, மேல ஜெர்மானிய அதிசிரேஷ்டராகிய மூத். கனிசியுஸ் இராயப்பர் தபால் மூலமாக, உரோமை மகா அதிசிரேஷ்டராகிய அர்ச். பிராஞ்சிஸ்கு போர்ஜியாருக்கு இன்னொரு கடிதமும் எழுதியிருந்தார். அதாவது:—தேவரீரவர்கள் ஆகஸ்ட் மாதம் 23-ம் தேதி அனுப்பிய கடிதம் பெற்றுக்கொண்டு, அதில் கூறியிருக்கிறபடி, ஜெனேவா பட்டணத்து ஜேம்ஸ் என்பவரையும், அவரோடு ரெய்னர் என்கிற சகோதரரையும் அனுப்புகிறேன். அவர்களோடுகூட போலண்டு தேசத்து ஒரு சீமான் புத்திரனாகிய ஸ்தனிஸ்லாசும் வரக்கூடும். இவர் பெற்றோர் உத்தரவு பெறக்கூடாவிடினும், நம் சபையைச் சேர வெகு பேராவலுள்ளவராயிருக்கிறார்.



சேசுசபைச் சந்நியாசிகள் யாராவது, எந்தச் சேசுசபை மடங்களுக்குப் போனாலும், மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ளப்படுவதென்பது அர்ச். இஞ்ஞாசியார் தாமே ஏற்படுத்திய வழக்க சட்டமாயிருந்தது. தற்சமயம் மகா அதிசிரேஷ்டராயிருந்த அர்ச். பிராஞ்சீஸ்கு போர்ஜியாவுக்கு அப்பேர்ப்பட்ட சட்டம் தேவையில்லை. தூரதேசத்திலிருந்து கீழ்ப்படிதல் அநுமதியோடு வருகிற தம் பிள்ளைகளை, அர்ச். பிராஞ்சீஸ்கு போர்ஜியாவின் தயையுள்ள இருதயமானது, அன்பு பாசத்தோடு ஏற்றுக்கொள்ளும். அர்ச். இஞ்ஞாசியார் தமது சபைச் சட்டங்களை எழுதிய அறையில்தான், அர்ச். ஸ்தனிஸ்லாஸ், அர்ச். பிராஞ்சீஸ்கு போர்ஜியாவைச் சந்தித்தார். இரண்டு அர்ச்சியசிஷ்டவர்கள் தரிசித்தார்கள். ஸ்தனிஸ்லாசைப்பற்றிய விசேஷங்களை பிராஞ்சீஸ்கு போர்ஜியார் முன்னே தானே அறிந்திருந்தார். வியன்னா நகரிலிருந்து ஒரு குருவானவர் நமது அர்ச்சியசிஷ்டவர் சரித்திரத்தை எழுதின நிருபத்தை முன்னொரு அதிகாரத்தில் கூறியிருக்கிறோம். மேலும் "இவர் சிறந்த புண்ணியங்களைச் செய்து, உந்நத பேரடைவாரென்று முழு நம்பிக்கையாயிருக்கிறோம்" என்று, மூத். கனிசியுஸ்

இராயப்பர் எழுதிய வார்த்தைகளை, ஸ்தனிஸ்லாசின் புண்ணிய சாங்கோபாங்கத்துக்கும் பெரிய அத்தாட்சியாச்சுது.

இப்படியிருக்க. வெகு தூரதேசத்திலிருந்து தேவ ஒத்தாசை தவிர வேறு ஒத்தாசையின்றி, சகலவித இக்கட்டுத் துன்பங்களை அனுபவித்துக்கொண்டு வந்த இவ்வாலன் திவ்விய இஸ்பிரீத்து சாந்துவின் விசேஷ அழைத்தலைக் கைக்கொண்டுதான் இங்கு வந்திருக்கவேணுமென்று, அவனைப் பட்சத்தோடு ஏற்றுக்கொண்டார்.

இராஜ கோத்திரத்தாரும் காந்தியா நாட்டுப் பிரபுவுமாயிருந்து உலகமெல்லாம் பேரெடுத்திருந்தவர், இப்போது உலக ஆஸ்தி செல்வம் மகிமை கீர்த்தியெல்லாம் வெறுத்து, துறவரத்தைத் தேடி, கடுந் தவத்தால் மெலிந்த ரூபத்தை உடையவராய் தமக்கு முன் நின்ற அர்ச்சியசிஷ்ட பிராஞ்சீஸ்கு போர்ஜியாவை, வணக்க மரியாதையுடன் கண்குளிர ஸ்தனிஸ்லாஸ் பார்த்தார். தரித்திரமான சேசுவின் மாதிரிகையைப் பின்பற்றி, உலகத்தில் அவருக்கேற்பட்டிருந்த உன்னத ஸ்தானத்தைப் பழித்து, தரித்திரனான அவரைப் பார்த்தவுடன், ஸ்தனிஸ்லாஸ் மனம் நேசத்தால் பொங்கினது. அர்ச்.



பிராஞ்சிஸ்கு போர்ஜியார் உலகத்தைப் பூரணமாய் வெறுத்தகாரணம் சகலரும் அறிந்த விஷயமே. இஸ்பானிய தேசத்து இராக்கினியாகிய இசபெல்லாள் மரணமடைந்த பிறகு, அவள் சரீரத்தை அடக்கம்பண்ணும் சடங்குகளை மேல்பார்க்கும்படி பிராஞ்சிஸ்கு நியமிக்கப்பட்டிருந்தார். இசபெல்லாள் இராக்கினி வெகு அழகு சௌந்திரியமுள்ள ஸ்திரீயாக ஐரோப்பா கண்டமுழுதும் பேரடைந்தவள். இப்பேர்ப்பட்ட அழகு சௌந்திரியம் பெற்ற அந்த இராக்கினியின் சரீரம் கிடத்தப்பட்டிருந்த பெட்டியை, அவள் மரித்த மூன்றாம்நாள் திறந்தபோது, அப்பிணத்தின் அவலட்சணமும், துர்க்கந்த நாற்றமும் சகிக்கமாட்டாமல், சகலரும் அப்பாலே ஓடினார்கள். இக்காட்சியைக் கண்ட காந்தியா நாட்டுப் பிரபுவாகிய அர்ச். பிராஞ்சிஸ்கு போர்ஜியார், "இவ்வளவுதானா உலக மகிமை, மூன்றுநாளில் அழிந்து நாசமாய்ப்போன இம்மகிமைக்காக நான் உழைக்கமாட்டேன்" என்று சொல்லி, உலகத்தை வெறுத்து, துறவறத்தானாகத் தீர்மானித்தார். பிறகு சேசுசபை முத்திப்பேறுபெற்ற பாப்பு இராயப்பரிடத்தில் பண்ணின ஞானவொடுக்கத்தில் சேசுசபையைச் சேரப் பிரதிக்கினை செய்தார்.

ஸ்தனிஸ்லாசும் அவரைப்போல கனவான் குடும்பத்தில் பிறந்திருந்தும், உலகம் மதிக்கும் செல்வம், கீர்த்தி, பெருமையெல்லாம் வெறுத்துவிட்டு, துறவறத்தை நாடி சேசுசபையைச் சேரவந்திருந்தபடியால், பிராஞ்சீஸ்கு போர்ஜியாருக்கும், நமது அர்ச்சியசிஷ்டவருக்கும் ஒருவித ஒற்றுமையிருந்தது. இரு அர்ச்சியசிஷ்டவர்களும் சீமான்களாயிருந்தும், இலௌகீக செல்வாக்கு, ஐசுவரியம், உலோக பேர் இவைகளைத் தவிர்த்து, மோக்ஷலோக பாக்கியத்தை நாடியவர்கள். இருவரும் உரோமையில் ஒரே இல்லிடத்தில் குடியிருந்து, ஒரேவிதச் சட்ட ஏற்பாடுகளை அநுசரித்தவர்கள். இருவரும் கடுந்தபசிகள். இருவரும், ஒரே சபையின் அவயவங்களாய், அர்ச்சியசிஷ்டதனத்தை அடைந்து, திருச்சபைக்கு அலங்காரமாய் நமது பீடங்களில் உயர்த்தப்பட்ட அர்ச்சியசிஷ்டவர்களாயிருக்கிறார்கள். இவ்விரு அர்ச்சியசிஷ்டவர்களும் தரிசித்து, ஒருவர் இன்னொருத்தருக்குத் துணையானது தேவ செயலல்லவா? இவ்விரு அர்ச்சியசிஷ்டவர்களும் சந்தித்த காலமோ, அர்ச்சியசிஷ்டவர்கள் காலமென்று அழைக்கலாம். ஏனெனில், இக்காலத்தில் உரோமையில் புண்ணிய சாங்கோபாங்க



நெறியில் தளராத உலகமெங்கும் பேரெடுத்த அர்ச்சியசிஷ்ட பாப்பானவராகிய ஐந்தாம் பத்திநாதர், அர்ச். இராயப்பர் ஸ்தானத்தில் ஆளுகை செய்ய, அவரைச் சுற்றி அர்ச்சியசிஷ்ட பிலிப்புநெரியார், முத்திப்பேறுபெற்ற லெயகார்டி அருளப்பர், கப்புசின் சபையைச் சேர்ந்த கனதாலீஸ் நகரத்து அர்ச்சியசிஷ்ட பேலிக்ஸ், அர்ச்சியசிஷ்ட பிராஞ்சிஸ்கு போர்ஜியார், இவர்களெல்லாரும் அநித்திய உலக இன்ப பாக்கியங்களையும், சரீர சுகங்களையும் பரித்தியாகம் பண்ணி, பராக்கிரமசாலிகளாக உந்நத அர்ச்சியசிஷ்டதனத்தை அடைந்து உலகத்துக்கு நன்னெறியின் கண்ணாடியாக விளங்கினார்கள்.

ஸ்தனிஸ்லாஸ் செய்த நெடும் பிரயாணத்தின் சரீர களைப்பினால் வதங்கி, சுகயீனமாயில்லாவிட்டாலும் பெலயீனத்தினால் ஆபாசமாயிருந்தபடியால், நவசந்நியாசத்து ஒழுங்குகளைத் துவக்குமுன் இரண்டு மூன்று நாள் இளைப்பாறித் தேறவேண்டியிருந்தது. இதை முன்னிட்டு, ஸ்தனிஸ்லாசின் ஆசைப் பெருக்கத்தை அடக்கி, அமைதியாய் இளைப்பாறச் செய்தார்கள்.

கடைசியாய், அர்ச். சிமியோன் ததேயு என்கிற அப்போஸ்தலர்கள் திருநாளன்று, ஒக்டோ

பர் மாதம். 28-ம் தேதியாகிய செவ்வாய்க் கிழமை, சேசுசபைத் துறவறத்தானாக அர்ச். ஸ்தனிஸ்லாஸ் ஏற்றுக்கொள்ளப்பட்டார். இதே நாள் அவரை சேசுசபையில் சேர்த்த அதிசிரேஷ்டராகிய அர்ச். பிராஞ்சீஸ்கு போர்ஜியார் பிறந்த நாளாயுமிருந்தது. அர்ச்சியசிஷ்டவரைச் சேர்த்த இந்த நாள் குறிக்கப்பட்டு எழுதியிருக்கிற கையெழுத்துப் புஸ்தகமானது நாளதுவரையில் காப்பாற்றப்பட்டு வருகிறது. அதே புஸ்தகத்தில் தானே, நவசந்நியாசியாகச் சேருகிறவர்களுக்கு சேசுசபையார், மாமூல் பிரகாரம் போடும் கேள்விகளுக்கு நமது அர்ச்சியசிஷ்டவர் கொடுத்த விடைகளும் எழுதப்பட்டிருக்கின்றன.

அர்ச். ஸ்தனிஸ்லாசை ஏற்றுக்கொண்டு சபை அணியாகிய அங்கியை அவருக்குக் கொடுக்கும்போது, சிரேஷ்ட தலைவர் அவருக்கருளிய வார்த்தைகளாவன: "பிரிய மகனே, நாம் உம்மை மனப்பூர்த்தியாய் சேசுசபையில் சேர்க்கிறோம். இச்சபையில் நீர் சேரவேணுமென்பது சர்வேசுரன் சித்தமேயொழிய வேறல்ல. நீர் உம்மைத் தானே சர்வேசுரனுக்குத் தகனபலியாக ஒப்புக்கொடுக்கிற இந்நன்கொடையை, கர்த்தர் பிரியத்தோடு ஏற்றுக்கொள்ளச்



சித்தமானார். இக்காலம் வரையில். புண்ணிய சீலராக சீவித்தாப்போல், இனி திவ்விய கர்த்தருக்குப் பிரியப்படுவதிலும், புண்ணியம் நிறைந்த சேசுசபையானவதிலும் ஓபா முயற்சிசெய்யும்." இஸ்பிரீத்துசாந்துவினால் ஏவப்பட்டு, இவ்வார்த்தைகளை உச்சரித்து நவசந்நியாசத்துக்கு அவரை அனுப்பினார்.

இதோ திவ்விய கர்த்தர் அழைத்த ஏகாந்தத்துக்கு ஸ்தனிஸ்லாஸ் வந்து சேர்ந்தார். "உலக சந்தடியிலிருந்து நீக்கித் தூரமாய்க் கொண்டு போய் அவனோடு ஆசைநேசமாய்ச் சம்பாஷிப்பேனென்று" வேதாகமம் போதிக்கிறாப்போல, சொந்த வீட்டையும் பெற்றோரையும் தமையனையும் சிநேகிதர்களையும் ஆஸ்திபாஸ்தி பெருமை ஆடம்பரம் கீர்த்தியையெல்லாம் ஒழித்துவிட்டு, புண்ணிய சமாதானமும் தேவநேச ஆவலும் நிறைந்த இவ்விடம் குடியிருக்க வந்திருக்கிறார். கூடாத மலைபோன்ற இடைஞ்சல்களெல்லாம் கூடியவைகளாயிற்று. சேசுசபையைச் சேருவதற்கு அவருக்குள்ள தடைகளெல்லாம் சிதறிப் பறந்துபோயிற்று. ஆயிரம் மைமயில் நடந்த ஆயாசமெல்லாம் சந்தோஷ வெள்ளமாய் மாறிப்போயின. இதோ ஸ்தனிஸ்லாஸ், பெற்றோர் உத்திரவின்றியாயினும், தேவ

தாய் கொடுத்த கட்டளையை நிறைவேற்றிவிட்டார். அந்தப் பரமநாயகி சொல்லுக்கு மறு சொல்லுண்டா? அவள்பேரில் வைத்த நம்பிக்கை வீண்போகுமா? எவ்வித கஷ்ட துன்பங்களிலும் அத்தாய் தம் தாசரைக் கைவிடுவாளோ? ஓ! ஆனந்தம்! சொல்லிலடங்காப் பாக்கியம்பெற்ற அர்ச். ஸ்தனிஸ்லாஸ் நவசந்நியாசத்தில் சேர்ந்த நாளன்று எவ்வளவு சந்தோஷக் கண்ணீர் சிந்தியிருக்கவேண்டும். அவருடைய ஞான ஆறுதல் எவ்வளவோ? எவ்விதமாய் தமக்கு தரிசனை கொடுத்த திவ்விய பாலகனுக்கும், அவருடைய திருத் தாயாருக்கும் நன்றி செலுத்தினாரென்று யாராலே வருணிக்கக்கூடும். அன்றுமுதல் நானுமது நித்திய அடிமையாயிருப்பேனென்று, வாக்குக்கொடுத்து புண்ணிய சாங்கோபாங்க நெறியில் இடைவிடா விர்த்திசெய்தார்.

நமது அர்ச்சியசிஷ்டவரோடு நவசந்நியாசத்திலிருந்தவர்களில், ஆக்ரி என்னும் பிரபுவின் குமாரனாகிய கிளாடியுஸ் ஆக்வாவீவா என்பவர் ஒருவர். இவருடைய பத்தியுள்ள தாய், இளைஞனை இவருக்குக் கற்றுக்கொடுத்த புத்திமதிகளை ஒருக்காலும் மறக்கவில்லை. வீட்டிலும், கல்விசாலையிலும் இராஜ சபையிலும்,



பரிசுத்த கற்பென்கிற புண்ணியத்தைக் காப்பாற்றினார். இராச்சிய பரிபாலனத்திலும், திருச்சபையிலும் மேன்மை பொருந்திய உத்தியோகங்கள் அவருக்குத் தயாராயிருந்தன. இரண்டு பாப்புமார்களுக்குக் காரியதரிசிபோன்ற அலுவல் செய்தாலும், சேசுசபையிலுட்பட உத்தரவடைந்தார். இவர்தான் அர்ச். ஸ்தனிஸ்லாஸ் நவசந்நியாசத்தில் சேர்ந்தபொழுது ஞானவொடுக்கம் கொடுத்து தனக்குமேல் நமது அர்ச்சியசிஷ்டவர் ஞானக் காரியங்களில் தேர்ச்சியடைந்திருக்கிறதாக அறிந்துகொண்டார். இக் கிளாடியுஸ் ஆக்வாவீவா என்பவர், பிற்காலம், அர்ச். இஞ்ஞாசியார் ஸ்தானத்தில் சேசுசபைக்கெல்லாம் மகா அதிசிரேஷ்டராகப் பிரபல்லியம் பெற்றார்.

நமது இந்துதேசத்தில் சால்செத் என்னும் தீவில் வேதசாட்சியாய் மரணமடைந்த முத்திப்பேறுபெற்ற ரொடோல்பு ஆக்வாவீவா என்பவரும், அர்ச். ஸ்தனிஸ்லாசோடு நவசந்நியாசியாயிருந்தார். முன் கூறிய கிளாடியுஸ் ஆக்வாவீவாவின் குடும்பத்தைச் சேர்ந்தவர். நமது அர்ச்சியசிஷ்டவரைப்போல் முத். ரொடோல்பு ஆக்வாவீவாவும் பெற்றோரோடு வெகு போராடவேண்டியதாயிற்று. கடைசியாய் பெற்

றோர் விடையின்றித்தான் நவசந்நியாசியானார். அதெப்படியென்றால், சிரேஷ்டராகிய ஆர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியாரிடம் போய் அல்லும் பகலும் கெஞ்சுவார். அவரும் இவருடைய மன்றாட்டுக்கிரங்கி, பெரியோர் உத்தரவின்றி நவசந்நியாசியாக்கினார். தேவ ஊழியத்தில் அமைந்து ஆனந்தங் கொண்டாடும்போது, அவருடைய தந்தை இவர் தமையனை அனுப்பி, தமது அநுமதியின்றி சேசுசபையைச் சேர்ந்த ரொடோல்பை உடனே அழைத்துவரக் கட்டளையிட்டிருந்தார். சிரேஷ்டரும் கிளாடியுஸ் ஆக்வாவீவா இடம் சொல்லி ரொடோல்பை வீட்டுக்கு அனுப்பிவிடும்படி கட்டளை அளித்தார்.

ஆனால் ரொடோல்போவென்றால், மறைவிடம் பார்த்து ஒளிந்துகொண்டு வீட்டுக்குத் திரும்பமாட்டேனென்று சாதித்துவிட்டார். என்ன செய்கிறது! அவரை இழுத்து வெளியே கொண்டுபோக முயன்றார்கள். காரியம் பலிக்கவில்லை. போகமாட்டேனென்று ஒரே பிடிவாதமாய் நின்றார். கடைசியாய் ஆர்ச். ஐந்தாம் பத்திநாதரென்னும் பாப்பானவர் மத்தியஸ்தராகி தந்தையினிடம் பரிந்து பேசவேண்டியதாயிற்று. இம்மெய்யான தேவ அழைத்தலுக்குத்



தடையாயிராமல் உடனே விடைகொடுக்கும்படி, அவர் தந்தையாகிய ஆந்திரி பிரபுக்கு சொல்லியனுப்பினார். ரொடேல்போ உலகத்திலிருக்கும்போதே தேவ ஊழியத்தை நாடினதுமல்லாமல், பத்தியில் முத்தினவராய் ஒழிந்த நேரமெல்லாம் ஜெபத்தியானத்தில் செலவழிப்பார். ஏழைகளையும் வியாதிக்காரரையும் சந்திக்கப் போவார்.

சேசு சபையிலுட்பட்ட பத்து வருஷத்துக்குப்பிறகு அவர் வெகு காலமாய் விரும்பிய உபகாரத்தைப்பெற்று அஞ்ஞானிகளை மனந்திருப்ப இந்தியா தேசமாகிய நம் தேசத்துக்கு அனுப்பப்பட்டார். இவ்வரம் தமக்குக் கிடைக்கும்படி வெகுகாலமாக சர்வேசுரனிடத்தில் மன்றாடியிருந்தார். அஞ்ஞானிகளுடைய ஆத்தும இரட்சணியத்துக்காக உழைத்து, தமது உயிரைக் கொடுத்து வேதசாட்சியாவதே அவருடைய போராவலாம். சர்வேசுரனும் அவருடைய மன்றாட்டைக்கேட்டு, ஆக்பர் சக்கரவர்த்தி ஆளுங்காலத்தில், அவனால் ஏற்படுத்தப்பட்ட நகருக்கு வேறு அநேகரோடு வேதம்போதிக்க அனுப்பப்பட்டார். சால்செத் என்னும் தீவில் மேலான அதிகாரங்களுடைத்தாயிருந்து, ஐந்து வருஷ மட்டும் தேவசிநேக ஆவலோடு உழைத்து, இன்னம் நாலு பேரோடு வேதசாட்சி

யாய் மரணமடைந்தார். இவரும் அர்ச். ஸ்தனிஸ்லாசோடு நவசந்நியாசத்திலிருந்தவர்.

போலண்டு தேசத்திலிருந்தும் வேறு நாலு பேர் நமது அர்ச்சியசிஷ்டவரோடு நவசந்நியாசிகளாயிருந்தார்கள். அவர்களுக்குள் ஒருவர் அர்ச்சியசிஷ்டவருடைய சொந்தக்காரனாயிருந்ததுபோக, அதே பேருள்ளவர். ஸ்தனிஸ்லாஸ் வார்ஸ்விஸ்கி (Stanilas Warscewizki) என்ற இவர், ஸ்தனிஸ்லாசுக்கு ஒரு மாதத்துக்குப்பின் சேர்ந்தார். இவர் தான் நமது அர்ச்சியசிஷ்டவருடைய சரித்திரத்தை முதலாவது எழுதிப் பிரசுரப்படுத்தினவர்.

இவர்களும், இவர்களைப்போன்ற இன்னும் அநேகரும் அச்சமயத்தில் அர்ச் ஸ்தனிஸ்லாசோடு நவசந்நியாசிகளானார்கள். வாலிபர்களும், விருத்தாப்பியரும், பற்பல பாஷை பேசுகிறவர்களும், பற்பல ஸ்திதியிலிருந்தவர்களும், மேன்குலத்தாரும், நாட்டுப்புறத்தாரும், கனவான்களும், வெள்ளாண்மைக்காரரும், எல்லாரும் பிறர்சிநேக ஐக்கியத்தில் ஒன்றுகூடி, ஒரே சட்ட ஒழுங்குகளை அநுசரித்து, ஒரே கதியைத் தேடினார்கள். சகலருக்கும் சிறு வாலிபனான அர்ச். ஸ்தனிஸ்லாஸ் ஒரு முன்வரிச்சட்டமாக விளங்கினார்.

# 7-ம் அதிகாரம்.

---

## நவசந்நியாசம், ஜான்கோஸ்காவின் சினந்த கடிதம்.

—※—

சேசுசபையில் வார்த்தைப்பாடு கொடுக்கிறதற்குமுன் இரண்டு வருஷம் நவசந்நியாசியாயிருக்கவேணும். உலக கவலைகளையெல்லாம் அகற்றி, பத்திக்கிருத்தியங்களைச் செய்வதே இவ்விரண்டு வருஷத்தின் வேலை. மணிக்கு மணி குறித்திருக்கும் கடமைகளை நிறைவேற்றுவதே நவசந்நியாசியின் சீவியம். அநேக கடமைகள் நுட்பமானதாயும் வியர்த்தமானது போலும் தோன்றக்கூடும். என்ன கருத்தோடு அச்செயல்களை நிறைவேற்றுகிறார்களென்றறியாதவர்கள், அவைகள் பிரயோசனமற்றதுகள் என்று சொல்வார்களாக்கும். சுய சிநேகத்தையடக்கி, கீழ்ப்படிதலை முன்னிட்டு செய்யப்படும் ஒவ்வொரு கிரியையும், எவ்வளவு நுட்பமானதானாலும் சரி, பிற்கால சந்நியாச சீவியத்தில் பலனைப் பயக்கிறதுமல்லாமல் விசேஷ பேறுபலனும் உள்ளது.

அர்ச். ஸ்தனிஸ்லர்ஸ் காலத்தில் நவசந்நியாசத்தில் அநுசரிக்கப்பட்ட நாள் ஒழுங்கை நுணுக்கமாக எடுத்து வருணிப்பது கஷ்டந்தான். ஆனாலும் அதே ஒழுங்குகள் ஏறத்தாழ நாளது வரையில் சேசுசபை மடங்களில் காப்பாற்றி, அநுசரிக்கப்பட்டு வருகிறபடியால், இங்கு அதுகளை எடுத்துச் சொல்லலாம். சேசுசபையில் நமதர்ச்சியசிஷ்டவரை ஏற்றுக்கொண்ட மகா அதிசிரேஷ்டராகிய அர்ச். பிராஞ்சிஸ்கு போர்ஜியார் தான் அவ்வொழுங்குகளை ஆரம்பமாய் இயற்றியவர். அர்ச். ஸ்தனிஸ்லாஸ் இவ்வொழுங்குகளை தம் பிரயோசனத்துக்காக தம் கைப்பட எழுதி வைத்திருந்தார். நமது அர்ச்சியசிஷ்டவரின் இக்கையெழுத்துப் பிரதி கிரக்கோ (Cracow) நகரில், அர்ச். இராயப்பர் சின்னப்பர் என்னும் சேசுசபைக் கோவிலில், நாளது பரியந்தம் பரிசுத்த அர்ச்சியசிஷ்ட பண்டமாக காப்பாற்றப்பட்டு வருகிறது. அதின் நகல் எடுத்து, உரோமாபுரியில் வைத்திருக்கிறார்கள். அதிலிருந்துதான் பின்வரும் விஷயங்களை அறிகிறோம்:

காலையில் விழிக்கிற நேரம், பிரதியில் குறிக்கவில்லை. ஏழு மணி நேரம் நித்திரை செய்து அதிகாலையில் விழிக்கிறது வழக்கம். மணிச்



சத்தம் சகலரையும் குறித்த நேரத்தில் எழுப்பும். பின்வரும் அரைமணி நேரம் முகங்கழுவி, உடுப்பு மாட்டுகிறது, படுக்கைகளை ஒழுங்கு பண்ணி அறையைச் சரிப்படுத்துகிறது, இவை முதலிய சில்லறைக் காரியங்களுக்காக. இத்தோடு மனச்செபமும் நடக்கும். இதுகளை முடித்து ஒழிந்த நேரமிருக்குமாகில், செய்யப்போகிற மனத்தியானத்துக்கு ஆயத்தமாக, ஞானவாசகம் வாசிக்கவும், ஜெபிக்கவும் கூடும். ஆனால் அவர்கள் செய்கிற சகல விஷயத்திலும், நவசந்நியாசிகளை விசாரிக்கும் சிரேஷ்டர் அநுமதி பெற்றிருப்பதவசரம். தற்காலம், காலையில் விழித்தவுடன், திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் ஆண்டவரைப் போய்ச் சந்திக்கும் வழக்கம் சேசுசபையில் எங்கும் பொதுவானது. அர்ச். ஸ்தனிஸ்லாஸ் காலத்தில் அந்த அப்பியாசம் நவசந்நியாசிகளுக்கு ஏற்படவில்லை.

இதற்கப்புறம் ஒரு மணி நேரம் தியானமிருக்கும். அதில் அவரவர்கள் மனச்சார்பின்படி சிரேஷ்டர் அனுமதியோடு, மனத்தியானமாவது வாய்ச்செபமாவது செய்துகொள்ளலாம். அவரவர்கள் செய்யும் தியானத்தில் பயிற்சி பெற்று மனப்பலனடைந்துகொள்வதை விபர

மாய் அறிந்து அவரவர்களுக்குத் தகுந்த ஆலோசனை கொடுப்பது, நவசந்நியாச சிரேஷ்டரின் பேரில் சுமந்த கடமை. சந்நியாசிகளுக்குத் தியானம் வெகு அவசரமாயும், அந்தந்தச் சபை ஏற்பாட்டின் கதியை அடையப் பிரயோசனமாயுமிருக்கிறது. தியானத்தை சரிவர செய்து முடிப்பதற்கு பிறர் அநுபோகத்தின் உதவி வெகு அவசரமானதினால் தான் சிரேஷ்டர் ஜாக்கிரதையாய் அவர்களைத் தொடர்ந்தறிவது அவசரமாயிருக்கிறது. தியானத்துக்குப் பின்வரும் அரைமணி நேரம், தியானத்தில் அடைந்த ஞான வெளிச்சங்களைக் குறித்து வைக்கிறதற்காக. இதுபோக ஜெபம் அநுகூலமாய் முடிந்ததா அல்லது அசட்டை அசமந்தத்தினால் பலனற்றதாய்ப் போச்சுதாவென்று சோதித்து, அநுகூலம் பெற்றதற்காக சர்வேசுரனுக்கு ஸ்தோத்திரமும், பலனற்றதானதற்கு மனஸ்தாபப்பட்டு தியானக் குறைகளை நிவர்த்திசெய்ய நல்ல பிரதிக்கினையும் செய்துகொள்ளவும் வேணும். இது முடிந்ததும், திவ்விய பூசைப்பலிக்கு எல்லாரும் போவார்கள்.

ஒரு நாள் விட்டு ஒரு நாள், சிரேஷ்டர் ஞானப் போதகம் சொல்லுவார். இதுகள் சாதாரணமாய் சபை ஏற்பாட்டின் ஒழுங்குகளையும், தனி



ஆத்தும சோதனை முதலியவைகளைப்பற்றிய வியாக்கியானங்களும் அடங்கியது. இது முடிந்ததும் கேட்ட போதகத்தை விவரித்து மூன்று நான்கு பேர் கூட்டம் கூட்டமாய் சம்பாஷிப்பதுண்டு. சிரேஷ்டர்தானே அவரவர்களை அக்கூட்டங்களுக்கு குறிப்பதுபோக, தாமும் ஆஜராயிருக்கவேண்டியது. போதகமில்லாத நாட்களில், வால சந்நியாசிகள், முந்தின நாள் கேட்ட போதனையின் பிரகாரம் நடந்துகொள்ளுவதற்கான ஆலோசனைகளைச் செய்கிறது. எல்லாருங் கூடியிருக்கும்போது, போதனையைச் சார்ந்த எதிரிடையான கேள்விகள் உண்டானால், அதுகளைத் தாழ்ச்சியோடு கேட்கிறது. மற்றவர்கள் அதற்கு உத்தாரம் கொடுக்கப் பிரயாசைப்படுகிறது. இவ்வித அந்நியோந்நிய ஞானவிதமாய் சல்லாபித்தபிறகு கடைசியாய் சிரேஷ்டர் எல்லாத்தையும் திரட்டி புத்திமதி கூறி முடிப்பார்.

மத்தியானப் போசனம் அக்காலத்தில், கொஞ்சம் முந்தி சாப்பிடுகிற வழக்கமிருந்தபடியால், ஞானப்போதகத்துக்குப் பின்னும், போசனத்துக்கு முந்தியும் வெகு நேரமிராது. சாப்பாட்டுக்கு முன் எல்லாரும் கவனத்தோடு தனி ஆத்துமசோதனை செய்யவேண்டியது. இதுபோக, இருக்கிற நேரத்தில் அவரவர்க

ளுக்கு குறித்திருக்கும் கைவேலை செய்ய கால் மணி நேரமுண்டு. சிலர் கை திருந்தும்படி எழுதிப் பழகுவார்கள். ஞாபகசித்தி விர்த்திக்காக ஒழுங்குகள் மந்திரம் முதலியவைகளைப் பாராமல் படிப்பதுமுண்டு.* ஆனால் யாதொன்றிலும் சுய மனதைப் பின்செல்லாமல். சிரேஷ்டர் உத்தரவுப்படி நடப்பது சகலருடையவும் முதற்கடமை.

சாப்பாட்டில் முதல் பந்தி முடிந்தவுடன் இரண்டாம் பந்தி துவக்கும். ஒவ்வொரு பந்தியும் முடிந்து ஒரு மணி நேரத்துக்குப் பின் மணி யடிக்கப்படும். அதுவரைக்கும் பேசி இளைப்பாறும் ஓய்வு நேரம். அதற்கப்புறம், அக்கம்பக்கங்களில் எழுத வாசிக்க, கீர்த்தனைகள் பாட அல்லது மற்றெந்தத் தொழிலுக்காகவாவது நியமிக்கப்பட்டவர்களைத் தவிர, மற்ற நவசந்நியாசிகள் தங்கள் அறைக்கு போவார்கள். இதுதான் அவர்களுக்குண்டான முதல் ஒழிந்தநேரம். இந்நேரத்தில்மட்டும் தனியே அறைக்குட் புகுந்து அங்கு தங்கியிருக்கக் கூடும். ஒரு மணி நேரம் கடந்ததும், காலையில் பாராமல் படித்தவைகளை சிரேஷ்டரண்டை போய் மனப்பாடமாய் ஒப்புவிக்கவேண்டியது. அது முடிந்ததும், ஒருநாள் விட்டு ஒருநாள்,



அரைமணி நேரம பிரசங்க அப்பியாசமுண்டு. அதாவது ஒவ்வொரு வால சந்நியாசியும் சிறு உபந்நியாசமாவது, ஞானப்போதகமாவது, முஸ்திப்பு செய்து சகலருக்குமுன் வந்து பிரசங்கிக்கிறது.* இது இல்லாத நாட்களில், மந்திரம் வேத சத்தியங்கள் இவைகளின் வியாக்கியானம் கற்றுக்கொடுக்கிறது. வேத சத்தியங்களைப் போதிக்கிறதில் நற்பழக்கம் ஏற்படும்படி, ஒருவர் நானாவிதக் கேள்விகளைப் போட, மற்றவர் மறுமொழி சொல்லும் அப்பியாசமுண்டு. இதுகளைக் கற்றுக்கொடுக்கும் முறைமைகளை எடுத்து விவரிக்கும் போதகங்களுமிருக்கும்.

இவைகளானதும், அவரவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் கடமைகளையாவது, கைத்தொழில் செய்யவாவது பிரிந்துபோவார்கள். சாயுங்காலம் செய்யும் தியானம் அரைமணி நேரந்தான் நீடிக்கும். இதற்கப்பால் வரும் கொஞ்ச ஒழிந்த நேரத்துக்குப்பின் இராப்போசனம். சாப்பாட்டுக்குப்பின் மத்தியானத்தைப்போல் ஒரு மணிநேரம்பேசி, இளைப்பாறும் ஓய்வு நேரம். பின்வரும் கால்மணி நேரத்தில் தேவ கீர்த்தனை வாசிக்கலாம். பிரியப்படி ஜெபமாலையும் ஜெபிக்கலாம். இச்சமயத்

இலாவது, மற்ற ஒழுங்க நேரத்திலாவது, நவசந்நியாச பிரேஷ்டர் தனியே ஒவ்வொருத்தராக அழைத்துச் சல்லாபிக்கலாம். அவர்களின் ஆத்தும கணக்கும் கேட்பார். மன அந்தரங்கத்திலுள்ள எல்லாத்தையுந் திறந்து சொல்லி, கிலேச ஆயாசத்தினால் இருதய சமாதானமில்லாவிட்டால் அதையும் வெளிப்படுத்தவேணும். பிரேஷ்டரும் நவசந்நியாசிகளை வெகு அன்பு பாராட்டி நடத்துவார். சங்கோசமின்றி ஒன்றும் மறைக்காமல் மனதைத் திறந்து காட்டும்படி அவர்களைத் திடப்படுத்துவது அவர் கடமை. அவர்களின் ஞான அபிவிர்த்தியையும் வெகு எச்சரிக்கையோடு கவனிக்கவேணும்.

கடைசியாய் நித்திரை செய்வதற்குமுன் திரும்பவும் கால்மணிநேரம் தனி ஆத்துமசோதனை சகலரும் செய்வார்கள். சம்பாஷணை நேரத்தைத் தவிர மற்ற சமயங்களில் கண்டிப்பான மௌனம் விளங்கும். ஏதாவது அவசரமான பேச்சு பேசவேண்டியபோது, விசேஷ உத்தரவு பெற்றுத்தான் பேசலாம்.

அர்ச். ஸ்தனிஸ்லாஸ் வசித்த அர்ச். அந்திரேயாஸ் மடத்தில் மேற்சொன்ன நாள் ஒழுங்கைத்தான் அனுசரித்து, புண்ணியத்தில்



மேன்மை அடைந்தார். அவரோடு நவசந்நியாசிகளாயிருந்த அனேகரும் இதே ஒழுங்குகளைத்தான் அனுசரித்தார்கள். பலர் ஓரே காரியத்தை நிறைவேற்றினாலும், ஒரேவிதமாய்ச் செய்வது அரிதே. அந்தந்தக் கிரியையின் கருத்து உருக்கத்தின் மேன்மைக்களவாக கிரியையும் மேன்மைப்படும். அர்ச். ஸ்தனிஸ்லாஸ் செய்த சகலத்தையும் உசிதமாயும் உன்னத கருத்தோடும் நிறைவேற்றினார். ஆகையால் அவருடைய அற்பக் கிரியைகளும் சொல்லிலடங்காப் பலனுள்ளவைகளாயின.

நவசந்நியாசத்தில் சேர்ந்த சிறிதுகாலத்துக்கப்புறம், அவர் தந்தையாகிய ஜான்கோஸ்கா, ஸ்தனிஸ்லாசுக்கு ஒரு கோபமான கடிதம் எழுதியிருந்தார். நல்ல கிறீஸ்துவனானாலும், பிள்ளை தம்மைவிட்டு, தம் அனுமதியின்றி பிரிந்த கோபவெறியில், ஆகாத நடையில் இக்கடிதம் எழுதப்பட்டிருந்தது. தந்தையின் சிநேகம் இக்கடிதத்தில் விளங்கவேயில்லை. தாறுமாறாய் நமது அர்ச்சியசிஷ்டவனை அவமானமாய்ப் பேசி, பயமுறுத்தி எழுதியிருந்தது. "ஜான் கோஸ்காவின் மேன் கோத்திரத்துக்கு ஸ்தனிஸ்லாஸ் அவமானத்தையும் இகழ்ச்சியையும் வருவித்துவிட்டானென்றும், சீமான் புத்திர

வர், தந்தையின் பேரிலுள்ள பாசத்தால் பிரலாபித்தார். ஆனாலும் தெரியாத்தனத்தினாலே தகப்பன் இப்படியெல்லாம் திட்டி எழுதியிருக்கிறாரென்றும் இரக்கம் மேலிட்டது. தந்தைக்காக வேண்டிக்கொண்டார்.

இக்கடிதத்துக்கு பதில் எழுதும்படி சிரேஷ்டர் கட்டளை அளித்திருந்தபடியால், இனிய வார்த்தைகளால் பின் வருமாறு பதில் வரைந்தார்.

“இனிய தந்தையே! நான் சேசு சபையில் சேர்ந்ததையிட்டு, ஏன் நீங்கள் இவ்வளவு ஆயாசமடைகிறீர்கள்; அதற்கு பதிலாய் சர்வேசுரனுக்கு அநந்தமுறை நன்றி செலுத்தவல்லவா வேண்டும். செல்வாக்குள்ள பெரியோர்கள் கோத்திரத்தில் புத்திரர்கள் போய் கூடிக்கொள்வதல்லவா பெற்றோர்களுக்கு உகந்தகாரியம். உலக பெரியோர்களோவென்றால், எச்சமயத்திலும் மரித்து அப்புத்திரர்களை விட்டுப் பிரிந்து போகக்கூடிய ஆபத்திலிருக்கிறார்கள். நானோவென்றால் செத்தழிந்து போகக்கூடியவர்களின் பேரில் நம்பிக்கை வைக்காமல், நித்தியரும் ஒருக்காலும் தவறக்கூடாதவருமான சர்வேசுரனுடைய ஊழியத்தில் அடைக்கலம் புகுந்திருக்கிறேன். அவருக்காக



நான் செய்யக்கூடிய அற்பக் கிரியைக்கும் மறுசீவியத்தில் மாத்திரமல்ல, இச்சீவியத்திலும் சம்பாவனை அளிக்கிறவர் அவர். ஆகையால் நீங்களதைப்பற்றி எவ்வளவோ அக்களிப்படைவதற்குக் காரணமிருக்க, துக்கப்படுவானேன். நான் செய்திருக்கிற தீர்மானத்திலிருந்து புரண்டு நடப்பேனென்பது வீண் பேச்சு. அப்பேர்ப்பட்ட நம்பிக்கை வைக்க வேண்டாம். விரத்தத்துவம், தரித்திரம், கீழ்ப்படிதலென்கிற வார்த்தைப்பாட்டினாலே சர்வேசுரனுக்கு என்னை முழுதும் பலியாகக் கையளித்தாச்சுது. (அவர் கொடுத்த இவ் வார்த்தைப்பாடு சபை வார்த்தைப்பாடல்ல, ஆனால் தனி வார்த்தைப்பாடு.) நான் மனம் பொருந்தி தெரிந்துகொண்ட இவ்வந்தஸ்தைப் புறக்கணித்து விடுவதை விட, எத்துன்பத்துக்கும், எவ்வாதனை மரணத்துக்கும் உள்ளாக, இதோ தயாராயிருக்கிறேன். உங்களுக்கு என்பேரிலுள்ள மெய்யான அன்புக்கு அத்தாட்சியாக, நான் தெரிந்துகொண்ட தீர்மானத்தை சர்வேசுரன் ஆசீர்வதிக்கும்படி மன்றாடுங்கள். நான் துவக்கினதுபோல் மரணபரியந்தம் தேவ ஊழிய அந்தஸ்தில் நிலைபெற்றிருக்கும்படி சர்வேசுரன் வரம் கொடுக்

கும்படி கேளுங்கள். இப்படிச் செய்வீர்களேயாகில், சர்வேசுரன் சமுகத்தில் நீங்கள் பேறுபலனடைவதுபோக, நானும் நன்றியுள்ள இருதயத்தோடு உங்களோடு ஒன்றித்திருப்பேன்."

இப்படிக்குத் தங்கள் பிரிய குமாரன்,

ஸ்தனிஸ்லாஸ்.

இது நடந்து சிலநாள் கழிந்தபின், வேறே மார்க்கமாயும், இச்சமயம் தந்தைக்குள்ள மனக் குரோதத்தை ஸ்தனிஸ்லாஸ் அறியலானார். இவரோடு வியன்னா நகரில் மாணாக்கராயிருந்த, நிக்கொலாஸ் லாசோக்கி (Nicolas Lasocki) என்பவர், உரோமை ஜெர்மன் கலாசாலையிலுட்படும்படி வந்திருந்தார். வரும் வழியில், எயில்ஸ்பெர்க்கு (Heilsberg) நகரில் தங்கியிருந்தபோது, அங்கு, ஓசியுஸ் என்னும் கர்தினாலாண்டவருக்கு ஜான்கோஸ்கா, முன் கூறியபடி எழுதிய அடாத கோபம் நிறைந்த கடிதத்தைப் பார்த்திருந்தார். அது தாறுமாறுகத் திட்டி பயமுறுத்தி எழுதப்பட்டிருந்தது. இதுகளையெல்லாம் நமது அர்ச்சியசிஷ்டவருக்கு அவர் தெரிவித்தார். அர்ச்சியசிஷ்டவரோவென்றால்: "என், இருதயத்தைத் திறந்து அதில் பொங்குகிற ஆனந்தசந்தோஷத்தையும், கருணை



நிறைந்த சர்வேசுரன் சேசுசபைக்கு என்னை அழைத்ததினாலே எனக்களித்திருக்கிற பேருபகாரங்களையுமட்டும் என் தந்தை அறிவாரேயாகில், இப்படியெல்லாம் என் தந்தை அவதூறாய்ப் பேசி எழுதாமலிருப்பது போக, அதற்கு முழு விரோதமாக நினைப்பார்" என்று உரைத்தார். ஸ்தனிஸ்லாஸைத் தேடி உரோமாபுரிக்குப் புறப்பட இருந்த நோக்கத்தை ஜான் கோஸ்கா மாற்றியிருக்கவேணும். ஏனெனில் உரோமாபுரிக்குத் தந்தை தானே வராமல், மூத்த மகனாகிய பவுல் கோஸ்காவை அனுப்புவித்தார். இவரும் தாமதமாய்ப் புறப்பட்டிருக்கவேணும். ஏனெனில் உரோமை சேருமுன் நமது அர்ச்சியசிஷ்டவர் காலம்சென்றுவிட்டார்.

## 8-ம் அதிகாரம்.

### நவசந்நியாசம், சகலருக்கும் மேல்வரிச்சட்டம்.

அர்ச். ஸ்தனிஸ்லாவின் உந்நத பேராசை
நிறைவேறிற்று என்கிறதற்கு அத்தாட்சியர்க.
சேசுசபை மகா அதிசிரேஷ்டராகிய அர்ச். பிரா
ஞ்சிஸ்கு போர்ஜியார் அவரை அரவணைத்து
அன்போடு மினவி, துறவறத்தாராக அவரை
ஏற்றுக்கொண்ட காலமுதல், அர்ச்சியசிஷ்டவ
ரின் இருதயம் கரைகாணாத ஆனந்தக் கடலில்
அமிழ்ந்தினது. ஆயிரம் காதவழி நடந்த பிரயா
ணத்தின் சரீரக் களைப்பெல்லாம் காற்றுப்போல்
பறந்தோடினது. நாளுக்கு நாள் அவர் மன
தில் ஏற்பட்ட அக்களிப்புக்கோ ஓர் அளவில்லை.
தேவசிநேகத்தினால் எழும்பின இரம்மியம் விர்த்
தியாகிக்கொண்டே வந்ததுபோக, இச்சந்தோ
ஷத்தை அவரால் அடக்கிவைக்கக் கூடவில்லை.
அன்றியும் தமது பரிசுத்த அந்தஸ்தினால் ஏற்
படும் புதுக் கடமைகளின் பாரத்தையும் சொ
ற்பமாய் எண்ணினாரோ? அதற்கு முழு விரோ
தமாய், தம்மைச் சுற்றியிருக்கும் வால சந்நி



யாசிகளைப் புண்ணிய மாதிரிகைகளாகவும்,
மேல்வரிச்சட்டங்கள் போலவும் பாவித்து, ஒவ்
வொரு முயற்சியையும் உத்தமமாய்ச் செய்து
முடிப்பதற்கு அவர்களைக் கண்டுபாவிப்பார்.
சபைச் சட்டப்பிரமாணங்களையும், நல்ல வழக்
கங்களையும் அனுப்பிசகாமல் ஊக்கத்தோடு
அநுசரிப்பார்.

சபையில் உட்பட்ட சொற்பக் காலத்துக்
குள், பலர் அர்ச். ஸ்தனிஸ்லாசை மகாத்துமா
வாகவும் புண்ணிய தபோதனராகவும் போற்று
வார்கள். சிரேஷ்டர் முதலாய் புண்ணியத்தின்
கண்ணாடியாகவும் மேல்வரிச்சட்டமாகவும்
அவரை மற்ற வால சந்நியாசிகளுக்குக் காண்
பித்து. அவருடைய நன்மாதிரிகையைப் பின்
பற்று, ஏவுவார். சேசுசபை நவ சந்நியாசி
யென்றால் இவர்தானென்பார். அசாதாரண
மாய் நடந்துகொள்ளவில்லையானாலும் அர்ச்சிய
சிஷ்டவரின் புண்ணிய மேன்மை தன்னிலே
விளங்கினது.

கிளாடியுஸ் அக்வாவீவா என்பவர்தான் இவ
ருக்கு சோதனை ஒடுக்கம் கொடுத்தாரென்று
அறிந்திருக்கிறோம். இவர் தியான சிந்தனை
களையெடுத்து விவரித்துக் கூறினதும், அர்ச்சி
யசிஷ்டவர் மனதில் எழும்பின நல் நினைவுகளி
னால், அவர் முகம் வாட, மனம் துடிக்க, கண்

ணீர் வடிய விம்மி அழுவார். திவ்விய இஸ்பிரீத்துசாந்துவினாலே நடத்தப்பட்டு வந்த புண்ணிய சீலருக்கு, புத்திசொல்லப் போனதைப் பற்றி கிளாடியுஸ் ஆக்வாவீவா வெட்கப்பட்டு சொல்வார்.

அர்ச்சியசிஷ்டவர் கைப்பட எழுதின இத் தியானக் குறிப்பு பிரதியின் நகல் எடுத்து அச்சிட்டிருக்கிறார்கள். அதில் கண்டிருக்கிற நாள், 1667-ம் வருஷம் நவம்பர் மாதம் 7-ம் தேதி. அர்ச். இஞ்ஞாசியார் ஞான ஒடுக்கத்தில் தீர்மானித்திருக்கிறாப்போல் நாலுவாரத் தியானங்களையும் இச்சமயம் முடிக்கவில்லை. மரணம், தனித்தீர்வையைப்பற்றிய தியானக் குறிப்புகள் ஒருவித சந்தோஷ நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. அதாவது, நீதிமான்கள் சர்வேசுரனைக் குறித்து இயற்றிய நற்கிருத்தியங்களுக்காகவும், அவர்கள் அநுபவித்திருக்கக்கூடிய கஷ்ட இக்கட்டுகளுக்கும், சர்வேசுரன் கொடுக்கப்போகிற சம்பாவனைக்குத் தடையாயிருக்கும் மனுஷ சரீரம், மரண சமயத்தில் பிரிந்து போவது மேலான சந்தோஷமென்றும், பல விதமாய் வியாக்கியானித்து எழுதியிருக்கிறது. அர்ச். ஸ்தனிஸ்லாஸ் தாம் அநுபவித்த கஷ்டத்துக்கெல்லாம் முடிவாக சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசிக்கும் பாக்கியத்தை மனதில்



வைத்துக்கொண்டுதான் இவ்விதம் எழுதியிருக்கவேணும். சர்வேசுரனோடு ஒன்றித்து ஜீவிப்பது எவ்வளவு பேராவலென்று இதிலிருந்து கண்டுகொள்ளலாம்.

நமது அர்ச்சியசிஷ்டவரின் பேர்கொண்டவரும், உறமுறையானுமான ஸ்தனிஸ்லாஸ் வார்சவிஸ்கி என்பவர், அர்ச்சியசிஷ்டவருக்கு வயதில் மூப்பாயிருந்தாலும், ஞான விஷயங்களில் அவருடைய மாணாக்காராயிருந்து ஆத்தும சாஸ்திரத்தைக் கற்றுக்கொண்டதாக ஒப்புக்கொண்டார்.

ஸ்தனிஸ்லாஸ் மரணத்துக்குமுன் பத்து மாதந்தான் நவசந்நியாசியாயிருந்தார். இக்காலத்தில் கண்ணுக்குப் பகட்டான பராக்கிரமச் செயல்களைச் செய்யவில்லை என்பது மெய்தான். ஆனால் அவர் நிறைவேற்றிய அற்பக்கிருத்தியங்களிலும் மேலான அர்ச்சியசிஷ்டதனத்தின் சுகந்த வாசனை வீசினதே அவர் செய்த பராக்கிரமச் செயல். தேவ ஊழியத்தில் அற்பம், பெரிதென்பது கிடையாது. நுட்பமானாலும், பெரிதானாலும், சர்வேசுரனுக்குகந்த விதமாய்ச் செய்வதே மேலான புண்ணியம். ஸ்தனிஸ்லாஸ் தன் கடமையை நிறைவேற்றுவதில் இக்கருத்தை இடைவிடாமல் கண்ணுக்குமுன் வைத்து நடந்ததே அவருடைய தோழர்களுக்

குப் பெரும் வியப்பாயிற்று. இவரோடுகூடயிருந்த சந்நியாசிகளில் அனேகர் அர்ச்சியசிஷ்ட பட்டத்துக்காக ஏற்பட்ட பரிசோதனையில் அவர் நற்சீவியத்தைக் குறித்து சாட்சி சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்குள் பேர் பெற்றவர், நவசந்நியாசிகளின் சிரேஷ்டருமாய், நமது அர்ச்சியசிஷ்டவரின் ஆத்தும குருவுமாய், அவருடைய சகல உள்ளாந்தர இரகசியங்களை அறிந்தவருமான ஜூலியுஸ் பாசியோ (Julius Fazio) என்னும் குருவானவர். இவர் ஆத்தும ஞானத்தில் வெகு அனுபோகம் பெற்றவர். இவர் சபையை ஏற்படுத்தின அர்ச். இஞ்ஞாசியாராலேதானே சேசுசபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டார். அர்ச்சியசிஷ்டவரும் இவர்பேரில் வெகு நம்பிக்கைவைத்து அவரிடம் ஆத்துமத்தைத் திறந்து பேசுவார். இதுபோக இந்தக் குருவானவர் அர்ச். ஸ்தனிஸ்லாஸ் சரித்திரத்தை எழுதினார்.

இந்த ஜூலியுல் பாசியோ என்னும் குருவானவர் பலசமயங்களில் அர்ச்சியசிஷ்ட ஸ்தனிஸ்லாசை வெகுவாய் மெச்சிப் பேசுகிறதுபோக, அவர் வெகு வல்லமையுள்ளவரென்றும் சொல்லுவார். ஏனெனில் அர்ச்சியசிஷ்டவருக்கு எவ்வளவு கஷ்டமான கட்டளையிட்டாலும், தாமதமில்லாமலும் எதிர் ஞாயங்களுக்கு



இடங்கொடாமலும் உடனே கீழ்ப்படிவார். ஒருநாள் ஸ்தனிஸ்லாசும், கிளாடியுஸ் ஆக்வாவீவாவும், சமையற்காரருக்கு உதவிபுரியும்படி அனுப்பப்பட்டிருந்தார்கள். சமையற்காரர், இவர்கள் இருவரும் இத்தனை இத்தனையாக அங்கு கிடந்த விறகுக்கட்டைகளைக் கொண்டுபோய் வேறிடம் போடும்படி உத்தரவு பண்ணினார். கிளாடியுஸ் ஆக்வாவீவாவோவென்றால். கணக்கில்லாமல் தான் சுமக்கக்கூடிய கட்டைகளைத் தோளில் சுமந்துகொண்டு போனார். ஸ்தனிஸ்லாஸ் அவரைப் பார்த்து புன்னகைகொண்டு, கீழ்ப்படிதலின் உத்தமம் குறையாதபடி, சமையற்காரர் சொன்ன தொகைக்குமேல் ஒரு கட்டை முதலாய் அதிகமாக சுமக்கமாட்டேன் என்று சொன்னார். இச்சங்கதியின் வரலாற்றை பிற்காலம் சேசுசபைக்கெல்லாம் அதிசிரேஷ்டராயிருக்கும்போது, கிளாடியுஸ் ஆக்வாவீவா ஞானப்போதகங்களில் அனந்தமுறை எடுத்துரைப்பார்.

மேலும் சேசுசபைச் சுவாமியார் ஒருவரால் இயற்றப்பட்ட அர்ச்சியசிஷ்ட ஸ்தனிஸ்லாசின் ஒரு புதிய சரித்திரத்துக்கு அனுமதி கொடுக்கும்பொழுது ஆக்வாவீவா எழுதியதாவது: "நம்மோடு நவசந்நியாசத்திலிருந்த பரிசுத்த ஸ்தனிஸ்லாசின் பேரில் நமக்குள்ள வணக்கத்

துக்கு அத்தாக்ஷியாக, அவருடைய இச்சரித்திரத்தைப் பதிப்பிட முழு மனதோடு உத்தரவு அளிக்கிறோம். அவருடைய அற்புத மாசற்ற சீவியத்தை நாம் கண்ணாலே பார்த்தோம். கீழ்ப்படிதல், மனத்தியானம், தேவ ஐக்கியம், பிறசிநேகம், இவைகளிலும் மற்றனேக புண்ணியங்களிலும் அவர் சகலருக்கும் நன்மாதிரிக் கண்ணாடியாய் விளங்கினார். நம்மோடு அதிக அறிமுகமாய் சல்லாபித்ததினால் அவர் ஆத்துமத்தில் அடங்கியிருந்த மோக்ஷ திரவியங்களை அதிகமாய் அறியலானோம்."

அர்ச்சியசிஷ்டவரின் சரித்திர ஆசிரியரான பாசியோ குருவானவர், அர்ச்சியசிஷ்டவர் பலரோடு சம்பாஷிக்கும்பொழுது அவரிடம் தோன்றும் இனிய சாந்தகுணத்தை எடுத்துக் காட்டியிருக்கிறார். யாருக்கும் வருத்தத்தை உண்டுபண்ணக்கூடிய ஒரு வார்த்தையும் உச்சரிக்க மாட்டார். பேசுமுன் ஆலோசித்து ஆர அமரப் பேசுவார். ஸ்தனிஸ்லாஸை அந்நியோந்நியமாய் அறிந்த ஜான் பெலேசியுஸ் என்பவர், அவர் ஒருபோதும் சோம்பல் அஜாக்கிரதையான வார்த்தை உபயோகித்ததில்லை என்று வாக்குமூலம் கூறியிருக்கிறார். அவரிடம் விளங்கின தவறாத கௌரவ உபசாரம் ஆச்சரியத்துக்குரியது. அவர் முகச் சாயல் திறந்த மன



தையும் அமரிக்கையையும் குறிக்கும். அவர் பார்வை அடக்கவொடுக்கமும் சந்தோஷமுமுள்ளது. மாசற்ற பரிசுத்ததனம் அவர் முகத்தில் பிரகாசிக்கும். அவரைக் கண்ணுற்றாலே கற்பென்கிற புண்ணியத்தை நேசிக்க ஆசை உண்டாகும்.

அர்ச்சியசிஷ்டவருடைய தோழராயிருந்த மற்றொரு வால சந்நியாசியார் மனக்கிலேசத்தினால் வருந்திக்கொண்டிருக்கும் ஒரு சமயம், ஸ்தனிஸ்லாஸைச் சந்தித்து, தனக்காக சர்வேசுரனைப் பிரார்த்திக்கும்படி அவரை மன்றாடினார். ஸ்தனிஸ்லாஸ் அவரைத் தேற்றரவுபண்ணி, கோவிலுக்கு அழைத்துக்கொண்டு போனார். அங்கு திவ்விய சற்பிரசாதத்துக்குமுன் ஆராதனைசெய்து, அவருக்காக கொஞ்சம் வேண்டிக்கொண்டார். அச்சமயமே அவருக்குண்டான மனக்கிலேசமெல்லாம் அவரை விட்டகன்றது. அவர் இருதயமும் சமாதான சந்தோஷம் அனுபவித்தது. அர்ச்சியசிஷ்டவரின் ஜெபத்தின் பலன் இதுவே.

ஸ்தனிஸ்லாஸ் சம்பாஷிக்கும்போது தீர்க்க ஆலோசனையோடு பேசுவாரென்பது மற்ற சந்நியாசிகளுக்கெல்லாம் தெரிந்த விஷயம். தேவ காரியங்களைப்பற்றி மனதுக்கு இன்பத்தைத்

கொடுக்கக்கூடியவிதமாய்ச் சல்லாபிப்பாரென்று அறிந்து, சம்பாஷணை நேரத்தில் அவரோடு இருக்க விரும்புவார்கள். கேட்கிறவர்கள் ஆத்துமத்திலும் பத்தி உருக்கம் தன்னாலே கிளம்பும். இலௌகீக சார்புள்ள செய்திகளையும் சாதுரியமாய்த் திருப்பி, ஞானப் பேச்சாக மாற்றிவிடுவார். தேவமாதா, அர்ச்சியசிஷ்டவர்களின் சிறந்த செயல்களைப்பற்றி அடிக்கடி பேசுவார். முக்கியமாய்த் தேவ கன்னிகையைப்பற்றியும், தேவ அழைத்தலையும் குறித்துச் சல்லாபிப்பது அவருக்கு வெகு பிரியம். தேவதாய் செய்த புதுமைகளில் "ஒன்று இரண்டு அமலோற்பவ கன்னிகைக்குப் புகழ்ச்சியாக சனிக்கிழமைகளில் சொல்லாமல் இருப்பது அரிது.

புண்ணிய சாங்கோபாங்கத்தில் விர்த்தியடைவது அவருடைய ஏக கவலை. அதற்காக ஞானத் தேர்ச்சியடைந்த மகாத்துமாக்கள் சொல்லியருளிய ஞானப் போதகங்களையெல்லாம் கைப்பட எழுதிவைத்துக் கொள்வார். தியான யோகத்தில் சர்வேசுரன் அவருக்களித்த ஆத்தும வெளிச்சங்களையும் ஞான உபகாரங்களையும் எழுதிவைத்திருந்த பிரதி அவர் மரணத்துக்குப்பின் அகப்பட்டது. இது



போக கீழ்ப்படிதலைப்பற்றி சபையை ஸ்தாபித்த அர்ச். இஞ்ஞாசியார் இயற்றிய நிருபத்தின் நகலும் கைப்பட எழுதியிருந்தார். ருயிஸ் என்னும் குருவானவரால் தாழ்ச்சியின்பேரில் சொல்லப்பட்ட உபதேசத்தையும் எழுதிவைத்திருந்த கையெழுத்துப் பிரதி, வெகுகாலமாக கிரக்கோவென்னும் நகரத்திலுள்ள அர்ச். இராயப்பர் சின்னப்பர் கலாசாலையில் காப்பாற்றப்பட்டு வந்தது.

சுய பரித்தியாகம், ஒறுத்தல், தபசு முதலியவைகளிலும் தளராத விர்த்திசெய்து வந்தார். வேதசாட்சிகள் பட்டநுபவித்த கஷ்டதுன்பம் கொடூர மரணத்துக்கு முதலாய் உள்ளாகும் ஆவலுள்ளவர். இக்கருத்தோடு அயலாருக்குரிய துன்ப துரிதங்களைத் தாமே அநுபவிக்க விரும்புவார். தேவநேச ஏக்கத்தால் அர்ச்சியசிஷ்டவரின் சரீரம் இளைத்து வாடிக்கொண்டு வந்தமையால், அவர் செய்யும் சரீர தபசுகளை மட்டுப்படுத்த வேண்டியதாயிற்று. ஆகையால் சிரேஷ்டருடைய விடையின்றி யாதொரு சரீர ஒறுத்தலும் தபசும் செய்யக்கூடாதென்று அவருக்குக் கண்டிப்பான கட்டளையிடப்பட்டிருந்தது.

அர்ச். ஸ்தனிஸ்லாஸ் ஆத்தும ஞானத்தில்
மேன்பாடடைந்திருந்ததுபோல், புத்திக் கூர்
மையுள்ள அறிவாளியுமாயிருந்தார். பாலப்
பருவம் தொடங்கி திவ்விய இஸ்பிரீத்துசாந்
துவானவரே அவருடைய உபாத்தியாயரென்று
சொல்லலாம். ஜெர்மானிய பாஷை, லத்தீன்
பாஷை, இத்தாலிய பாஷை, இம்மூன்றும் இல
க்கண ஒழுக்கம் தவறாமல் தெளிவாய்ப் பேசக்
கூடியவர். இயற்கையாய் அவருக்குள்ள சாம
ர்த்தியமும், சுபாவத்துக்கு மேற்பட்ட பெருந்
தன்மையும், நவசங்கியாசத்தில் தெளிவாய்
விளங்கின. உசிதமாக அவர் பேசுவதைக் கேட்
பதே இன்பமாயிருக்கும். சகலத்தையும் குறி
த்து நற்கருத்தோடு சல்லாபிப்பதைக் கேட்
டவர்கள் அவருடைய பரிசுத்த வார்த்தைகளை
மறக்கமாட்டார்கள். சிறுபிள்ளைத்தனமான
ஆட்டஓட்டம் அவரிடம் தோன்றாது. ஊக்கம்
நிறைந்த கௌரவப் பராக்கிரமசாலி. துக்கம்
அண்டாத பூரண சந்தோஷம் அவர் முகத்தில்
எக்காலும் குடிகொண்டிருக்கும். ஒரு நாள்
சிரேஷ்டர் அவரை நோக்கி, உம்மை உடனே
இந்துதேசத்துக்குப் புறப்பட உத்தரவுபண்ணி
னால், நீர் என்ன செய்வீரென்று கேட்டதற்கு,
அவர் மறுமொழியாக: பொறுமை நிறைந்த



தொப்பியெடுத்து, பிறர் சிநேகம் கொண்ட
உடை அணிந்து, ஒறுத்தலாகிய சப்பாத்துக்
களும் மாட்டிக்கொண்டு உடனே புறப்படுவே
னென்று கூறினார்.

## 9-ம் அதிகாரம்.

### நவசந்நியாசம், பற்பல அதிசயங்கள்.

அர்ச். ஸ்தனிஸ்லாசை தூய வெண்மையான லீலி புஷ்பமென்றழைக்கலாம். பழுதற்ற பரிசுத்த இருதயத்தோடு சேசுசபையை அண்டினவர், அதே பழுதற்ற மாசற்ற இருதயத்தோடு மோக்ஷகளை அடைந்தாரென்று, அர்ச்சியசிஷ்டவருடைய உள்ளாந்தரங்களையெல்லாம் அறிந்திருந்த, பாசியோ, ருயிஸ் என்கிற ஆத்தும குருக்கள், வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள். ஆகையால்தான், சேசுசபையார் கல்லறைகளில் பூக்கள் தெளிக்கிற வழக்கமில்லாவிட்டாலும், ஸ்தனிஸ்லாசின் தூய இருதயத்தையும் அவராத்துமத்தின் பழுதற்ற பரிசுத்தத்தையும் பார்த்து, அவர் கல்லறையில் அவர் சகோதரர்கள் பூக்களை வாரிப் பறப்பினார்கள். உயிரோடிருக்கும் காலத்தில் *அவர் வடிவான முகத்தில் ஜொலித்த தூய பிரகாசம், அவர் மரித்த பின்னும் அவர் சாயலில் தோன்றினது. மோக சோதனைகளால் வாதிக்கப்பட்டவர்கள்



அவர் முகத்தைப் பார்த்தாலே. போதும். சோதனைகளெல்லாம் காற்றாகப் பறந்துவிடும்.

அக்காலத்தில் பிராஞ்சு நாட்டிலுள்ள மேற்றிராணியார் ஒருவர், அர்ச். ஸ்தனிஸ்லாசின் சிறந்த படம் ஒன்று தம் அரண்மனையில் வைத்திருந்தார். மோக ஆசாபாச சோதனை ஆகாத நினைவுகளினால் நிர்ப்பாக்கியர்களாயிருந்தவர்கள், சோதனை மேற்கொள்ளாதபடி நம்பிக்கையோடு அப்படத்தைப் போய்க் கண்குளிரப் பார்ப்பார்கள், என்று அர்ச்சியசிஷ்டவரின் சரித்திர நூலாசிரியர்கள் உரைத்திருக்கிறார்கள்.

அவரிடம் குடிகொண்டிருந்த தூய இருதயத்தின் சுடர் அவர் திரேகமெல்லாம் விளங்கின. அவர் முகச் செழிப்பும் நேத்திரங்களின் வசீகரமும் நடைபாவனையின் அடக்கவொடுக்கமும், அவருடைய பரிசுத்த ஆத்துமத்துக்கு அத்தாட்சியாயிருந்தன. நன்மை சுரக்கும் திவ்விய ஊற்றிலிருந்து இடைவிடாமல் ஜீவ இஷ்டப்பிரசாதத்தை உட்கொண்டிருந்தாரென்று சொல்லலாமேயொழிய மற்றப்படியல்ல. அர்ச். அந்திரேயாஸ் மடத்திலிருக்கும் காலத்தில், ஒரு குருவானவர் நமது அர்ச்சியசிஷ்டவரை உரோமாபுரித் தெருவீதியில் மற்றநேக வால சந்நியாசிகளோடு உலாவிக்கொண்டிருக்

கும்போது எதிர்கொண்டார். அக்குருவானவரோடிருந்தவர்கள் இவர்தான், ஸ்தனிஸ்லாஸ் என்று குறித்துக் காட்டினார்கள். இந்தக் குருவானவர் மரணபரியந்தம் நமது அர்ச்சியசிஷ்டவரின் முக மலர்ச்சியை மறக்கவில்லை. பிற்காலம் இங்கிலாந்து சீர்மையிலுண்டான வேதகலகத்தில் அகப்பட்டு நிந்தை அநுபவிக்கும்போதும், ஓயாமல் அர்ச். ஸ்தனிஸ்லாசின் முக வசீகரத்தைச் சிந்தித்து ஆறுதலடைவார். அர்ச்சியசிஷ்டவருடைய புண்ணிய வழியைப் பின்பற்றி புண்ணியசீலராக அக்குருவானவர் மரணமடைந்தார்.

ஸ்தனிஸ்லாஸ் ஜெபத்தியானத்தின்பேரில் கரைகாணாத நம்பிக்கையுள்ளவர். மூவித விசேஷ ஆச்சரிய இலட்சணங்கள் அவருடைய தியான யோகத்தில் விளங்கின. இம்மூன்று விசேஷங்களும் அவருக்கு ஜெபத்தின்பேரிலுள்ள உருக்கத்தையும், தயாபர சர்வேசுரன் நமது தாசனுக்களித்த அநுக்கிரகத்தையும் குறிக்கின்றன. அவைகளாவன: முதலாவது, அவர் யாதொரு பராக்கின்றி ஜெபத்தியானம் செய்வார். அவருடைய ஆத்தும குருவும், சொற்பக்காலம் சிரேஷ்டருமாயிருந்த ருயிஸ் என்னும் குருவானவர்தானே வாய்மொழிப்



பட இதைக் கூறியிருக்கிறார். ஒருநாள் ஸ்டீபன் அகுஸ்தி என்னும் நவசந்நியாசியார் வெகு கஸ்தியாய் அங்கலாய்த்துக்கொண்டிருந்தார். அர்ச்சியசிஷ்டவர் அவரைச் சந்தித்து அக்கஸ்திக்கு காரணமென்னவென்று விசாரித்தார். ஜெபத்தியானத்திலே எனக்கு உண்டான பராக்கினாலே, என் ஜெபம், ஜெபமாக எனக்கு தோன்றவில்லை. ஆகையால் கஸ்திப்படுகிறேன் என்றார். ஸ்தனிஸ்லாசோவென்றால், அவரைப் பார்த்து, பராக்கு என்றீரே, அது என்னவென்று எனக்கு விளங்கவில்லை. விவரித்துச் சொல்லும், என்று கேட்டார். அர்ச். ஸ்தனிஸ்லாஸ் பராக்கு அறியாத தர்மவாளன்.

சர்வேசுரனையும், தேவதாயையும் எவ்வளவாக நேசித்தாரென்றால், என்னவேலை செய்தாலும், அவர் சிந்தனை அவர்களை விட்டுப் பிரியாது. சர்வேசுரன், என்றும் அவர் கண்முன் இருந்தார். நித்திரை நேரம் தவிர மற்றக் காலமெல்லாம் தேவசிநேகம் நிறைந்த சிந்தனையாகவேயிருப்பாரென்று, வார்சேவிஸ்கி யென்னும் குருவானவர் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். அர்ச்சியசிஷ்டவர் சிரசை சற்றே சாய்த்து நேத்திரங்களைத் தாழ்த்தி நடப்பது வழக்கம். சமயத்துக்கு சமயம் நேத்திரங்களை வானத்

துக்கு உயர்த்தி பெருமூச்சுவிடுவார். மடத்தில் நடமாடும்போது வழிதவறித் தடுமாறுகிறவர்போல் செல்லுவார். ஏனெனில் தேவகாரியங்களைக் கிரகித்துக்கொண்டிருப்பதினால், வெளிப்புறத்துக் காரியங்கள் அவருக்கு தென்படமாட்டாது என்று, அவரை அறிந்த குருவானவர் எழுதியிருக்கிறார்.

அர்ச்சியசிஷ்டவர் ஓர்தரம் வியாதியாய் விழுந்தபோது, ஜெபத்தியான காலத்தைக் குறைக்க சிரேஷ்டர் கட்டளையிட்டார். ஐயோ! ஸ்தனிஸ்லாசுக்கு இதினாலுண்டான கஸ்தியை என்னென்று சொல்வோம். ஆனாலும் பெரியோர் உத்தரவுக்கு தாமதமின்றி முழுமனதோடு கீழ்ப்படிந்தார். ஜெபமாகிய பரம ஆகாரத்தின் இனிய மதுரத்தை உருசிபார்த்தவர்கள் மட்டும், அவருக்கு ஜெபக்குறைவினால் உண்டான கிலேசத்தை உணரக்கூடும்.

அவரோடு ஜெர்மானிய சீமையிலிருந்து பிரயாணம் செய்த தோழர்கள், வழிதங்கின சத்திரங்களிலெல்லாம், அர்ச்சியசிஷ்டவர்களின் படங்களை ஒரு பீடம்போல் அடுக்கி, அதற்குமுன் முழங்கால்படியிட்டு, ஸ்தனிஸ்லாஸ் ஜெபிப்பாரென்று சொல்லியிருக்கிறார்கள்.



திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் கர்த்தர்பேரில் அவருக்குள்ள விசேஷ பத்தியைப் பற்றி முன்பாகங்களிலிருந்து அறிந்திருக்கிறோம். பெரிய வியாழக்கிழமையில், இன்னொரு சுவாமியாரோடுகூட, உரோமை நகரிலுள்ள தேவாலயக் கல்லறைகளையெல்லாம் ஒவ்வொன்றாய் சந்தித்து ஆராதனை செய்யப்போவார்.

அர்ச். ஸ்தனிஸ்லாசின் ஜெபத்தியானத்தில் விளங்கின இரண்டாம் அதிசயம் திவ்விய ஆண்டவரோடு இடைவிடாமல் ஐக்கியமாயிருந்ததின் பலனும். அதாவது, ஜெபத்தில் கண்ணீர் சிந்தி அழுகிற வரமும், ஜெபத்தியானத்தில் அவர் முகத்தில் ஜொலிக்கும் ஓர்விதப் பிரகாச வெளிச்சமுமாம்.

சாங்தா மரியா தெல்லா ஸ்தராதா (Sancta Maria della Strada) என்னும் மடத்திலிருக்கும்பொழுது, ஒருநாள், நவசந்நியாசிகளெல்லாம் ஜெபம் செய்துகொண்டிருந்தார்கள். அப்போது மே-மாதமாகிய தேவமாதாவின் வணக்க மாதமாகையால், அர்ச்சியசிஷ்டவருடைய முகத்திலிருந்து ஒருவித பிரகாச வெளிச்சம் புறப்பட்டதை அநேகர் பார்த்தார்கள். ஜெபம் முடிந்ததும் எல்லாரும் எழுந்து கலைந்து போனார்கள். அர்ச்சியசிஷ்டவர் முகத்தைக்

கழுவினார். கழுவியும் அப்பிரகாசத்தின் கதிர்கள் மாறாமல் தோன்றின. இவ்விதமான புதுமை பலமுறை சம்பவித்தது.

இன்னொருதரம், ஸ்தனிஸ்லாஸ் ஜெபத்தை முடித்ததும், அவருக்கு குடிக்க ஏதோ பானம் கொண்டுபோகும்படி, அந்தோனியென்னும் வாலசந்நியாசியாருக்கு, வியாதிக்காரர்களை விசாரிக்கிறவர் உத்தரவு பண்ணியிருந்தார். அப்படியே அந்தோனியார் பானத்தோடு ஸ்தனிஸ்லாசிடம் சென்றார். அர்ச்சியசிஷ்டவருடைய முகம் ஓர்விதப் பிரகாச ஒளி வீசினதுமல்லாமல், ரோசாப்பூ நிறமுள்ள வரிகளும் முகத்தில் தோன்றின. இவ்வரிகள் தைலம் பூசின அடையாளம்போலிருந்தன. அர்ச்சியசிஷ்டவர் முகத்தை கழுவித்துடைத்தாலும் அவ்வொளி மங்கவில்லை.

கர்தினால் பெல்லார்மின் (Cardinal Bellarmine) என்னும் பேர்பெற்ற வேதசாஸ்திரி, அர்ச். ஸ்தனிஸ்லாஸ் ஜெபநேரத்தில் தாரை தாரையாய்க் கண்ணீர் விடுவாரென்று, ஞானப் புஸ்தகம் ஒன்றில் எழுதிவைத்திருக்கிறார். அர்ச்சியசிஷ்டவர் சொற்பம் பேசுவார். அதுவும் ஞானகாரியங்களைக் குறித்துத்தான் சம்பாஷிப்பார். மற்றெந்த அலுவல் செய்யும்பொழுதும், வாய்க்குள் ஜெபம் செய்கிற மேரையாய்



ஏதோ சொல்லிக்கொள்வார் என்று, கண்ணாலே பார்த்து அந்தோனி சுவாமியார் சொல்லியிருக்கிறார்.

அர்ச்சியசிஷ்டவரின் தியானயோகத்தில் விளங்கின மூன்றாம் விசேஷம் வெகு பிரமிப்புக்குரியது. தேவ சிநேகத்தைப்பற்றி இயற்றியிருக்கும் புஸ்தகத்தில் அர்ச். பிராஞ்சீஸ்கு சலேசியார் சொல்லுகிறதாவது: “அர்ச். ஸ்தனிஸ்லாஸ் நமது கர்த்தரின் தேவசிநேக அக்கினி பொறுக்கக்கூடாமல் பிரஞ்ஞை அற்று மயக்கமாய் விழுவார். தேவசிநேக அக்கினியின் உக்கிரமத்தைத் தணிக்கும்படி துணியைக் குளிர்ந்த ஜலத்தில் நனைத்து நெஞ்சில் ஒத்தணம்போடுவார்.”

ஒருநாள் இராக்காலத்தில், நவசந்நியாச மடத்தைச் சுற்றியிருந்த சிறு தோப்பில் அர்ச்சியசிஷ்டவர் தனியே உலாவிக்கொண்டிருந்தார். அப்போது குளிர்ந்த காற்று வீசினது. சிரேஷ்டர் அவரைக்கண்டு, அங்கு என்ன பண்ணுகிறீரென்று வினவினார். அதற்கு அர்ச்சியசிஷ்டவர், ஆ; எரிகிறேன், எரிகிறேன், என்று எதார்த்தமாய் கூக்குரலிட்டார். ஜெபத்தியான நேரம் ஒழிந்துபோனாலும், அவர் இருதயம் அதே சிநேக நெருப்பாய் எரிந்தது. இந்தக்

திவ்விய நெருப்பின் எரிச்சலைப் பொறுக்கக் கூடாமல்தான் காற்றோட்டமான வெளியில் உலாவப் போயிருந்தார்.

இப்படியிருக்க, அடிக்கடி தேவநேசப்பெருக்கத்தாலுண்டான நெஞ்செரிவைத் தணிக்க, ஜலம்விட்டுக் கழுவவேண்டியதாயிற்று. இவ்விதமாய் அர்ச்சியசிஷ்டவர் நெஞ்சைப் பல முறை கழுவும்படி, நவசந்நியாச சிரேஷ்டருக்குத் துணையாயிருந்த லெலியுஸ் சாங்குய்கினி (Lelius Sanguigni) என்னும் குருவானவர் போனதாக, ஸ்டீபன் அகுஸ்தி என்பவர் தானே வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். திவ்விய கர்த்தரை உக்கிரமமாக இடைவிடாமல் அவர் சிநேகித்தாரென்பது நிச்சயம். அவருடைய மெல்லிய அங்கம் அச்சிநேகத்தின் உருக்கத்தைத் தாங்காமல் பெலவீனமடைந்தது. தேவதாயின்பேரில் அவருக்குள்ள உருக்கப் பற்றுதலும் தேவ சிநேகத்துக்கொத்ததாயிற்று.

சிறு பருவத்திலேயே அர்ச். ஸ்தனிஸ்லாஸ் தம்மிருதயத்தை அன்புள்ள தேவதாய்க்கு ஒப்படைத்தாரென்று பார்த்தோம். கிருபாகடாட்சம் பொருந்திய அந்தத் தாயும், நானாவித பேருபகாரங்களை தம் பிரிய தாசனுக்கு அளித்



தருளினாள். சேசுசபைக்கு அர்ச்சியசிஷ்டவரை அழைத்ததும் அந்தத் தாய்தானே. அப்பாம நாயகியை என் தாயே என்று அழைத்த ஸ்தனிஸ்லாஸ் நாளாவட்டத்தில் தமது திவ்விய தாயின்பேரில் வைத்திருந்த பாச நேசத்தில் விர்த்தி செய்யாமலிருந்திருக்கக்கூடுமோ? தேவ கன்னிகையைக் குறித்த சிற்சில சரிதைகள், அவளுடைய தரிசனங்கள், புதுமைகள், அவள் அளித்த நன்கொடைகள் இதுகளையெல்லாம் பற்றிய வரலாறுகளைச் சேர்த்து வைத்திருப்பார். ஓய்வு நேரத்தில் அதுகளை தம் தோழர்களுக்கு இன்பமாயும் நல்நடையிலும் எடுத்துரைப்பார். முதிர்ந்த பத்தியுள்ள குருக்கள் முதலாய் தேவமாதாவைப் பற்றி அர்ச்சியசிஷ்டவர் சொல்லிய சரித்திர வருணிப்புகளைக் கேட்க விரும்புவார்கள். வேத சாஸ்திரப் புஸ்தகங்களைப் புரட்டி அதுகளில் தேவதாயின் மாட்சிமை மகத்துவத்தைக் குறிக்கும் சிறப்புப் பட்டங்கள் வாக்கியங்களைப் பொறுக்கியெடுத்து எழுதிவைத்துக் கொள்வார். ஜென்மப்பாவமில்லாத தாயின் சிறப்பை எடுத்து வருணிக்க வார்த்தைகளில்லையேயென்று கவலைப்படுவார்.

நாடோறும் அந்தத் தாயைக் குறித்து பத்தி வணக்கத்தோடு ஜெபமாலை ஜெபிக்கிறதோடு கூட அவளுடைய சங்கீதக் கீர்த்தனையும் வாசிப்பார். பிரியதத்த மந்திரத்தை உச்சரிக்கும்போதெல்லாம் அதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் சிந்தனையையும் தியானித்து ஓர் வித சுவையை அநுபவிப்பார்.

உரோமாபுரியில், சாங்தா மரியா மஜோரே **(Sancta Maria Maggiore)** என்னும் நேர்த்தியான கோவிலுண்டு. அக்கோவிலில் சுவிசேஷகரான அர்ச். லூக்காஸ் என்பவரால் வரையப்பட்ட தேவமாதாவின் படம் பூச்சியமாய்க் காப்பாற்றப்பட்டு வருகிறது. இந்தத் திருப்படத்தின்பேரில் அர்ச். ஸ்தனிஸ்லாஸ் விசேஷ பத்தி உள்ளவர். அவர் வசித்த மடமும், அந்தப் படமிருந்த திருஸ்தலத்துக்கு கிட்டத்திலிருந்தமையால், காலையில் விழித்தவுடனும், இரவில் நித்திரை செய்யுமுன்னும், அப்படமிருந்த ஸ்தலத்தின் பக்கமாய்த் திரும்பி, தேவதாயின் ஆசீர்வாதத்தை மன்றாடுவார். தாமும் இப்படிச் செய்ததுபோக, தம்முடனிருந்த நவசந்நியாசிகளுக்குள்ளும் இந்த நல்ல வழக்கத்தை ஏற்படுத்தினார்.



தேவதாயின் புண்ணியங்களைப் பின்பற்றி, அவளைப்போல தாழ்ச்சியென்கிற புண்ணியத்தை வெகுவாய் அநுசரித்து, அதில் மேன்பாடடைய ஓயா முயற்சி செய்து வந்தார். ஒருநாள் அர்ச்சியசிஷ்டவருக்கு அறிமுகமாயிருந்த கர்தினல் கம்மென்டோனே ஆண்டவர் அவரைப் பார்க்க மடத்துக்கு வந்தார். வியன்னா நகரில் ஸ்தனிஸ்லாஸ், இக்கர்தினல் மூலமாக, தேவ அழைத்தலின் விஷயங்களை ஒழுங்குபண்ண எத்தனித்தது முந்தின அதிகாரங்களில் அறிந்திருக்கிறோமே. அவர் அர்ச்சியசிஷ்டவரைக் கண்டுகொள்ள வந்த சமயம், ஸ்தனிஸ்லாஸ் பீத்தல் உடுப்புப் போட்டு சமையலறையில் ஏதோ தாழ்ந்த வேலை பார்த்துக்கொண்டிருந்ததினால், தாழ்ச்சியை முன்னிட்டு, அதே கந்தை உடுப்போடு கர்தினல் ஆண்டவரைப் பார்க்க ஓடினார். சிரேஷ்டர்கள் இச்சமயம் அவரைத் தடுத்து, சாதாரண நல்ல அங்கியை மாட்டிக்கொண்டு போகக் கட்டளையிடாவிட்டால், பீத்தல் உடுப்போடுதான், கர்தினலாண்டவரைச் சந்தித்திருப்பாரென்பது நிச்சயம். இவ்விதமாய் அவர் மனத்தாழ்ச்சியும் பட்டப்பகல்போல் விளங்கின. கோஸ்கா குடும்பம் இராஜகோத்திரத்தை ஒட்டினதென்று எல்லாருக்கும்

தெரியும். ஆனால் ஸ்தனிஸ்லாஸ் தம் குடும்பத்தைக் குறித்து ஒருநாளும் ஒரு வார்த்தை சொன்னதில்லை. சகல சந்நியாசிகளுக்கும் தாம் தாழ்வானவரென்று மற்றவர்கள் மதிப்பதே அவருக்கு சந்தோஷம். யாரொருத்தர் கோஸ்கா குடும்பத்தின் மேன்மையைப்பற்றியாவது, ஸ்தனிஸ்லாஸ் சீமான் புத்திரன் என்றாவது மெச்சிப் பேசுகிறதைக் கவனித்தால், அர்ச்சியசிஷ்டவர் வெகு சாதுரியமாய் சம்பாஷணையின் நடையை வேறு மார்க்கமாய்த் திருப்பி, வேறு காரியங்களைப்பற்றி சல்லாபிக்கத் துவக்குவார்.

தம் துறவற அந்தஸ்தையும், தாம் உட்பட்டிருக்கிற சபையையும், அளவற்ற விதமாய் நேசித்தார். தமக்கு சர்வேசுரன் அளித்த தேவ அழைத்தலைக் குறித்துப் பேசும்போதெல்லாம் அவர் முகம் சிவக்கப் பொங்கி கண்ணீர் ததும்பும். தாம் அடைந்த இப்பெரிய பதவிக்கு தகுதியற்றவனென்றும், நன்றிகெட்டவனாய் நடந்துகொண்டதாகவும் சொல்லித் தம்மை தாழ்த்திக்கொள்வார். சேசுசபை ஏற்பாட்டு சட்டங்களையெல்லாம் கைப்பட எழுதினாற்போல, பாராமல் முதலாய் அதுகளைப் படித்திருந்ததாக அவர் சரித்திர நூலாசிரியராகிய பார்தோலி என்பவர் எழுதியிருக்கிறார்.



அர்ச்சியசிஷ்டவருடைய இக்கையெழுத்துப் பிரதி வெகுகாலமாய் அழியாமல் காப்பாற்றப்பட்டுவந்தது. அப்பிரதியின் முதல் ஏடு தற்காலம் வரையில் உரோமையில் பூச்சியமாய் அர்ச். ஸ்தனிஸ்லாசின் அர்ச்சியசிஷ்ட பண்டமாகக் காப்பாற்றப்பட்டுவருகிறது.

# 10-ம் அதிகாரம்.

## மரண தீர்க்கதரிசனம்.

அர்ச். ஸ்தனிஸ்லாஸ் நவசந்நியாசத்தில் பத்து மாதம் மாத்திரமிருந்தாலும், அவரை அறிந்த சேசுசபைக் குருக்களெல்லாம் அவரை அர்ச்சிய சிஷ்ட்தனத்தின் திரவியமாகப் பாவித்தார்கள். பிற்காலம் ஆத்தும இரட்சணியத்துக்காக என்னென்ன உந்நத ஏற்பாடுகளை இவர் சொல்வாரோவென்று மற்ற குருக்கள் சொல்லிக்கொள்வது வழக்கம். ஆனாலும் ஸ்தனிஸ்லாஸ், தூர அந்நிய தேசங்களுக்குச் சென்று, அங்குள்ள பற்பல பொய் மதஸ்தரை சத்திய வேதத்துக்குத் திருப்பும் நோக்கமுள்ளவராகத் தோன்றவில்லை.

அக்காலத்தில்தான் அர்ச். சவேரியார் நம் இந்துதேசத்தில் பற்பல புதுமைகளையும் ஆச்சரியங்களையும் செய்து ஆயிரக்கணக்கானபேரை நன்னெறிக்குத் திருப்பினார். அர்ச். சவேரியாரின் நன்மாதிரிகையைப் பின்பற்றி, ஏராளமான குருக்களும் சந்நியாசிகளும் உலகத்தின்



எத்திசையிலும் போய் வேதத்தைப் போதித்து அப்போஸ்தலத் தொழிலை நிறைவேற்றி வேத சாட்சி மரணமும் அடைந்துவந்தார்கள்.

நமது அர்ச்சியசிஷ்டவரோடிருந்த வால சந்நியாசிகளுக்கும், அர்ச். சவேரியாரும் அவரைப் போல் தேவ ஆவல்கொண்ட மற்ற அநேகரும் அஞ்ஞான நாடுகளுக்குப்போய் மனந்திருப்புவதிலுண்டாகிற ஞான நன்மையைப் போதகங்களில் சிரேஷ்டர்கள் எடுத்துரைப்பது வழக்கம். அநேக நவசந்நியாசிகளும் அஞ்ஞான இருளடைந்த தேசங்களுக்குப்போய், அங்குள்ளவர்களுக்கு ஞான வெளிச்சத்தைக் கொடுக்க போராவலுள்ளவர்களானார்கள். மேலும் அர்ச். ஸ்தனிஸ்லாசின் தோழர்களில் அநேகர்; மெய்யாகவே இந்துதேசம், ஜப்பான்தீவு, அமெரிக்காக் கண்டம் முதலிய இராச்சியங்களில் மெய்யான வேதத்துக்காக உழைத்துப் பிற்காலப் வெகு கீர்த்திபெற்று வந்தார்கள்.

அர்ச். ஸ்தனிஸ்லாசோவென்றால் தூர தேசங்களையும், பொய் மதஸ்தருடைய குருட்டாட்டத்தையும்பற்றி அத்தனையாக நினைக்கவில்லை. அவருடைய சிந்தனையெல்லாம் மோக்ஷ இராச்சியத்தின்பேரில் கவர்ந்திருந்தது. ஓயாத பரலோக ஏக்கம் பெற்றவர். அவருடைய நீதிச்

சுலோகமெல்லாம் ஒரே வாக்கியத்தில் அடங்கியிருந்தது. அதாவது: "நான் நித்திய பேரின்பத்துக்காகப் பிறந்தேனேயொழிய, அநித்திய பாக்கியத்துக்காகவல்ல; ஆகையால் அநித்திய காரியங்களைப் பழித்து, நித்திய சர்வேசுரனை நாடவேணும்" மோக்ஷகரை சேர்ந்து கடவுளோடு ஒன்றித்து இருப்பதே அவருடைய பேராவல்.

இதுபோக, அவரிடத்தில் விளங்கின பரவசமான பத்தி உருக்கத்தையும், தேவநேச ஏக்கத்தையும், அவருடைய துட்ப சரீரம் தாங்கக் கூடவில்லை. இதனால் அவர் தேகம் வெகுவாய்ப் பெலவீனப்பட்டு வந்ததைப் பெரியோர்கள் கவனித்துப் பரிதாபப்பட்டார்கள். சேசுசபையிலுட்படுமுன் வைத்தியராயிருந்த அகுஸ்தீன் மாஸ்ஸியோ (Augustin Mazzio) என்னும் நவசந்நியாசியார், ஸ்தனிஸ்லாசின் சுகயீனத்தை ஜாக்கிரதையாய் விசாரிக்கும்படி நியமிக்கப்பட்டார். அர்ச்சியசிஷ்டவரின் உடம்பைத் தேற்றுகிறதற்காக ஆகாரமும் மருந்துகளையும் கொடுக்கிறதற்கு அவருக்குக் கட்டளை அளித்திருந்தது. அர்ச். ஸ்தனிஸ்லாஸ் மரிக்கிறதற்குமுந்தி உண்டான கோடைகாலத்தில், அவருக்கு சமயத்துக்குச்சமயம் வந்துகொண்



டிருந்த ஆயாச மயக்கம் அதிகரித்தமையால், அதிக கவலையோடு அர்ச்சியசிஷ்டவரை ஆதரிக்கவேண்டியதாயிற்று. ஆயினும் இச்சொற்ப சுகயீனத்தினால் அவரைச் சீக்கிரத்தில் இழந்துபோகக் கூடுமென்று ஒருவரும் கனவிலும் நினைக்கவில்லை. சொற்ப வியாதியாகத் தோன்றின சோகம் மோசத்தை வருவிக்கக் கூடுமென்று யார்தான் நம்பலாம்? ஜூலை மாதக் கடைசியிலுள்ள அகோர உஷ்ணம் அவருடைய வியாதியை அதிகரிக்குமென்று பயப்படவேண்டியிருந்தாலும், அவ்வுஷ்ணம் யாதொரு கெடுதியும் உண்டுபண்ணவில்லை. கூடிய அளவு நல்ல ஆரோக்கியமாயிருந்தார்.

இச்சமயம் முத்திப்பேறுபெற்ற கனிசியுஸ் இராய்ப்பர், பரிசுத்த பாப்பானவரைக் கண்டு பேசும்படி உரோமைக்கு வந்திருந்தார். இவர்தான் நமது அர்ச்சியசிஷ்டவரை சேசுசபையில் சேர்த்து உரோமாபுரிக்கு அனுப்பினவரென்று முந்தின அதிகாரத்தில் அறிந்திருக்கிறோம். ஆகையால் உரோமையிலிருக்கும்போது இவர் அர்ச். ஸ்தனிஸ்லாசைப் போய் சந்தித்திருக்கவேணும். மேலும் சுவாமிமார்கள் ஸ்தனிஸ்லாசின் புண்ணிய மேன்மையைப்பற்றி புகழ்ச்சியாகப் பேசினது அவருடைய இருதயத்துக்கு வெகு சந்தோஷத்தை வருவித்தது.

முத். கனிசியுஸ் இராயப்பர் உரோமையில் இராச்சிய சிரேஷ்டர்களின் சங்கத்துக்காக கொஞ்சக்காலம் தங்கவேண்டியதாயிற்று. நவசந்நியாசிகளை விசாரித்த சிரேஷ்டர், நல்ல சமயம் வாய்த்ததென்று, முத். கனிசியுஸ் இராயப்பரை நவசந்நியாசிகளுக்கு ஒரு பிரசங்கம் வைக்கும்படி கேட்டுக்கொண்டார். அவரும் அதற்கிணங்கி, ஆகஸ்டு மாதம் முதல் தேதி அர்ச். ஆந்திரேயாஸ் மடத்திலுள்ள நவசந்நியாசிகளுக்கு ஒரு பிரசங்கம் செய்தார். அர்ச். ஸ்தனிஸ்லாசும், மற்றநேக சந்நியாசிகளும், வெகு பிரியத்தோடு, மிக்க அநுபோகம்பெற்றிருந்த புண்ணிய சீலரின் பிரசங்கத்தைக் கேட்டார்கள்.

முத். கனிசியுஸ் இராயப்பர் செய்த பிரசங்கத்தில், அந்தந்த மாதத்தை ஒவ்வொருத்தரும் தங்கள் கடைசி மாதம்போல் பாவித்து, ஒவ்வொரு கிருத்தியத்தையும் சுத்த கருத்தோடும் உத்தமமாயும் செய்துமுடிக்க தங்களை தூண்டிக் கொள்ளவேணுமென்று ஏவினார். “பிரியமான சகோதரர்களே, ஆறிலேயும் சாவு, நூறிலேயும் சாவு. நாம் மரிக்கிற நாள் நமக்குத் தெரியாது. ஆகையால் நமக்கிருக்கிற வாழ்நாட்களைப் பிரயோசனப்படுத்திக்கொள்ளவேணும். நீங்கள்



துவக்குகிற இந்த மாதத்தில் மாத்திரமல்ல, எம்மாதத் துவக்கத்திலும் அதுதான் கடைசி மாசமென்று நினைத்து, சகல கிரியைகளையும் உத்தமமாய்ச் செய்துமுடிக்கப் பிரயாசப்படுங்கள்” என்று இவ்விதமாய் விவரித்துச்சொன்னார்.

பிரசங்கம் முடிந்ததும், ஒழுங்குப்பிரகாரம் நவசந்நியாசிகள் கூடி, கேட்ட பிரசங்கத்திலிருந்து அவரவர்களுக்குண்டான ஞான நன்மைப் பிரயோசனத்தைப்பற்றி சல்லாபித்தார்கள். அப்போ, அர்ச். ஸ்தனிஸ்லாஸ் “அர்ச்சியசிஷ்டவர் வாயிலிருந்து புறப்பட்ட பிரசங்கமானது எல்லாருக்கும் ஒரு எச்சரிப்பும் தூண்டுகோலுமாயிருக்கிறது. இம்மாதத்தை ஆயுளின் கடைசி மாதமாய் பாவிக்கவேணுமென்று அவர் பிரசங்கித்தது, எனக்கோவென்றால் மெய்யான தேவ அழைத்தலாயிருக்கிறது” என்று சொன்னார்.

அர்ச். ஸ்தனிஸ்லாஸ் பார்வைக்கு நல்ல ஆரோக்கியமாயிருந்தபடியால், அவர் சொன்னதை ஒரு விசேஷமாக மற்ற வாலசந்நியாசிகள் எண்ணவுமில்லை; தீர்க்கதரிசனமாய் இவ்விதம் பேசுகிறாரென்று ஒருவரும் நினைக்கவுமில்லை.

இது நடந்த சொற்ப நாளுக்குள், பனிமாதா திருநாள் (ஆகஸ்டு௴ 5-ம்தேதி) வந்தது.

அத்திருநாளை, சர்ந்தா மரியா மாஜோரே (Sancta Maria Maggiore) என்னும் தேவாலயத்தில் வெகு ஆடம்பர சிறப்புடன் கொண்டாடுவது வழக்கம். உரோமாபுரியிலுள்ள ஒரு சீமானும் அவர் மனைவியுமாக இக்கோவிலைக் கட்டுவித்தார்கள். இவ்விருவருக்கும் புத்திர சந்தானமில்லாமையால், தங்களுக்குப் பாத்தியமான திரண்ட ஆஸ்தியை மோக்ஷ இராக்கினிக்கு காணிக்கையாக ஒப்புக்கொடுத்து, எவ்விதமாய் அச்சொத்தைச் செலவழிப்பது அத்தாய்க்குப் பிரியமாயிருக்குமென்று, தேவமாதாவினிடத்தில் மன்றாடினார்கள். தேவதாயும் அவர்கள் பேரில் கிருபைகூர்ந்து தன் பேரால் ஒரு தேவாலயம் கட்டுவிக்கவேணுமென்று அறிவித்து அதற்கான இடமும் குறித்தாள். அதாவது, பனி ஒருபோதும் விழாத கோடை காலத்தில், உரோமை எஸ்குலின் (Esquiline) என்னும் பாகத்தில் பனி விழுந்திருக்கும் அதேயிடத்தில்தான் தேவாலயம் கட்டவேணுமென்று தேவதாய் தானே குறித்தாள். இந்தத் தேவாலயத்தில்தான் அர்ச். லூக்காஸ் வரைந்த தேவமாதாவின் படம் காப்பாற்றப்பட்டு வருகிறது. ஸ்தனிஸ்லாசுக்கு இப்படத்தின் பேரிலுள்ள பத்தியையும் அறிந்திருக்கிறோம்.



மேலும் இந்தப் பனிமாதாக் கோவிலில்தான் சேசுசபையை ஏற்படுத்தின அர்ச். இஞ்ஞாசியார் முதல் பூசை வைத்தார். இக்காரணங்களையிட்டு சேசுசபையாருக்கு இத்தேவாலயம் விசேஷப் பிரியமுள்ளது.

பனிமாதாத் திருநாளன்று, எம்மானுவேல் தெசா என்னும் குருவானவர் அர்ச்சியசிஷ்டவரோடு அத்தேவாலயத்தைச் சந்திக்கச் சென்றார். வழியில் தேவ கன்னிகையைப்பற்றி சல்லாபித்துக்கொண்டு போனார்கள். குருவானவர் அர்ச்சியசிஷ்டவரைப் பார்த்து: “இன்னம் பத்துநாளில் கொண்டாடப்போகிற தேவ இராக்கினி பரலோகத்துக்கு ஆத்தும சரீரத்தோடு ஆரோகணமான திருநாளைப்பற்றி என்ன சொல்லுகிறீர்” என்று கேட்டார்.

அதற்கு அர்ச்சியசிஷ்டவர்: “நான் அத்திருவிழாவைப்பற்றி என்ன சொல்லக்கூடும். சர்வேசுரன் தம் தாயாருக்காக புதிதான பரகதி ஒன்று ஏற்படுத்தியிருக்கவேணும். சர்வேசுரன் தாயார் அப்பாகதிக்கு இராக்கினியாக கிரீடம் சூட்டப்பட்டாள். அங்குள்ள அர்ச்சியசிஷ்டவர்களும் அந்த இராக்கினிக்கு ஆராதனை செலுத்துவது ஆச்சரியமா? அவர்களுக்குள் வெகு உத்தமர்கள் முதலாய், தேவதாயின்

கீழ்ப்படிகளை அண்டிவரமுடியாது. தாய் குழந்தைக்குப் பக்கத்திலிருப்பதுபோல் தேவமாதா சர்வேசுரன் பக்கமாயிருந்தாள். வருஷாந்திரம் மோக்ஷத்தில் கொண்டாடுகிற பரலோக மாதாத் திருநாளை இந்த வருஷமும் கொண்டாடுகிறபோது நான் அந்தக் கொண்டாட்டத்தை கண்ணால் பார்ப்பேனென்கிற நம்பிக்கை எனக்கு உண்டு" என்று மறுமொழி சொன்னார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சுவாமியார், ஸ்தனிஸ்லாஸ் தியானயோகத்தில் ஞானவிதமாயாவது, ரூபிகரத்திலாவது மோக்ஷ கொண்டாட்டத்தைத் தியானித்துப் பார்ப்பாராக்குமென்று ஒன்றும் சொல்லவில்லை. அவர் சொன்னது தீர்க்கதரிசனமாய் தம் மரணத்தைப்பற்றிப் பேசினதென்றும் நினைக்கவில்லை. அர்ச்சியசிஷ்டவரோவென்றால், தம் மரணத்தை முன்னறிந்தவராகத்தான் இவ்விதம் கூறினாரென்று பின் வருபவையிலிருந்து அறிவோம்.

## 11-ம் அதிகாரம்.

### மரணவியாதி—மோக்ஷ இராக்கினி பரலோகத்துக்கு அழைத்துக்கொண்டு போகிறாள்.

ஆகஸ்ட் மாதம் 10-ம் தேதி வேதசாட்சியான அர்ச். லவுரேஞ்சியார் திருநாள். இந்தத் திருநாளில் ஸ்தனிஸ்லாசின் மனதிலுள்ள அந்தரங்க இரகசியங்கள் வெளியாயின,

அர்ச்சியசிஷ்ட பிராஞ்சிஸ்கு போர்ஜியார், தாம் சம்சாரவாசியாயிருக்குங் காலத்தில் குடும்பத்தில் அநுசரித்துவந்த பக்திமுயற்சி ஒன்றை சேசுசபையிலும் ஏற்படுத்தினார். அதாவது, வருஷத் துவக்கத்தில் திருவுளச்சீட்டு மூலியமாய், ஒரு அர்ச்சியசிஷ்டவரை, பின்வரும் வருஷத்துக்குப் பாதுகாவலாகத் தெரிந்துகொள்ளுகிறது. இப்படித் தெரிந்துகொண்ட அர்ச்சியசிஷ்டவர்போலே பற்பல தர்மக் கிரியைகளும் புண்ணிய செயல்களும் இயற்றுவதுபோக, அவர் சரித்திரத்தை வாசித்து அவருடைய நன்மாதிரிகையைப் பின்பற்ற முயலுகிறது. மேலும் அவர் திருநாளுக்கு ஆயத்தமாக தபசு ஒறுத்தல் செய்து, திருநாளன்று

திவ்வியசற்பிரசாதம் பெற்றுக்கொள்ளும் வழக்கமுமுண்டு. சேசுசபையில் இந்த நல்ல வழக்கம் ஏற்பட்டபோது, வருஷாந்தரம் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவர்களைத் தெரிந்துகொள்வதற்குப் பதிலாய் மாதாந்தரம் தெரிந்துகொண்டார்கள்.

ஆகஸ்ட் மாதத் திருவுளச் சீட்டில், ஸ்தனிஸ்லாசுக்கு உலகமெங்கும் பிரபல்லியமான வேதசாட்சியான அர்ச். லவுரேஞ்சியார் பாதுகாவலானார். உடனே, பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவர்போலே, ஏராளமான தபக்கிரியைகளையும் புண்ணிய முயற்சிகளையும் செய்ய சிரேஷ்டரிடம் உத்தரவு கேட்டார். அர்ச்சியசிஷ்டவருடைய சரீர பெலயீனத்தை அறிந்து, குறித்த தபமுயற்சிகளில் அனேகத்தை குறைக்கும்படி சிரேஷ்டர் கட்டளையிட வேண்டியதாயிற்று. உத்தரவுபெற்ற புண்ணியக் கிருத்தியங்களை ஸ்தனிஸ்லாஸ் பிரமாணிக்கமாய்ச் செய்துவந்தார்.

அர்ச். லவுரேஞ்சியார் திருநாள் கிட்டினது. திருநாளுக்கு முந்தினநாள் பகிரங்கமாய் ஐந்து மணி கசையால் தம்மை அடித்துக்கொள்ளும்படி உத்தரவுபெற்று, அத்தபசைச் செய்துமுடித்தார். திருநாளன்று காலையில், தேவ இராக்



கினிக்கு ஒரு நிருபம் எழுதி மார்போடு அணைத்துக்கொண்டு, திவ்விய சற்பிரசாதம் பெற்றார்.

இருதயத்தோடு அணைத்திருந்த நிருபத்தில் "தேவ தாயே! பரலோகத்துக்கு ஆரோகணமான உங்கள் திருநாள் கிட்டிவருகிறது. நீங்கள் பரலோகத்துக்கு இராக்கினியாக ஆத்தும சரீரத்தோடு எழுந்தருளிப்போன ஞாபகத்தைக் கொண்டாடும் திருநாளின் ஆனந்த சிறப்புக் கொண்டாட்டத்தை நானும் இந்த வருஷம் அநுபவிக்கும்படி, உங்களடிமையாகிய என்னையும் பரலோகத்துக்கழைத்துக் கொள்ளுங்கள். எனது பாதுகாவலான அர்ச்சியசிஷ்ட லவுரேஞ்சியாரே, நீரும் எனக்காக, தேவதாயாரிடம் பரிந்துபேசி, என் தாழ்மையான மனுவை அடைந்தருளும்." என இவ்விதமாய் எழுதியிருந்தது. இந்தக் கடிதத்தை இருதயத்தோடு அணைத்துக்கொண்டுதான் திவ்விய சேசுவை தமதிருதயத்தில் பெற்றுக்கொண்டார்."

அன்று காலை சமையலறையிலுள்ள தாழ்ந்த அலுவல்களைச் செய்வதில் போக்கினார். அடுப்பின் நெருப்பைப் பார்த்து நரக நெருப்பைப் பற்றித் தியானித்தார். மேலும் அர்ச். லவுரேஞ்சியார் வேதசாட்சியாய் மரணமடைந்த

போது இவ்வித நெருப்பின் சுவாலையினால்தான் எரிக்கப்பட்டாரென்றும் அடிக்கடி சிந்தித்தாக, பாசியோ சுவாமியாரிடம் அர்ச்சியசிஷ்டவர் தானே சொன்னார்.

காலையில் மன்றாடியிருந்த சலுகையைப் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாக, அர்ச். லவுரேஞ்சியார் திருநாள் சாயரட்சைதானே வியாதியாக விழுந்தார். அவரைத் தூக்கி அறைக்கு கொண்டுபோன நவசந்நியாசியாரிடம் அர்ச். ஸ்தனிஸ்லாஸ் "நான் இன்னம் சில நாளைக்குள் மரித்துவிடுவேன்" என்று தெளிவாய்ச் சொன்னார். இதைக் கேட்டவர் திகிலடையவில்லை. ஏனெனில் நாடி சுருக்காய் அடித்தாலும் சுரத்தின் அடையாளம் தோன்றவில்லை. ஆனால் சுரம் வெளிக்கிடாமல் உள்ளே குடிகொண்டிருந்ததுதான் மோசம்.

கிளாடியுஸ் ஆக்வாவீவாவும், பாசியோ சுவாமியாரும் தனித்தனியாக வியாதிக்காரரை சந்திக்கப் போனார்கள். இருவரிடமும் ஸ்தனிஸ்லாஸ்: "நான் தேவமாதா மோக்ஷத்துக்கெழுந்தருளின திருநாளை மோக்ஷத்தில் கொண்டாட என்னை அழைத்துக்கொள்ளும்படி அர்ச். லவுரேஞ்சியார் மூலியமாக மன்றாடியிருந்தேன். அந்த வரம் எனக்கு அளிக்கப்பட்டதாக நான்



நம்புகிறேன்" என்று கூறினார். இதுகளெல்லாம் புதன்கிழமை சாயரட்சை நடந்த விசேஷங்கள்.

வியாழன் வெள்ளிக்கிழமைகளில் ஜுரம் மிஞ்சாமல் சொற்ப வியாதியாய்த்தான் இருந்தார். வெள்ளிக்கிழமை மத்தியானத்துக்குப் பின் ஜுரம் மேலிட்டது. ஆகையால் அவர் படுத்திருந்த அறையைவிட்டு நீக்கி, மேல் மெத்தையிலுள்ள விலாசமும் சௌரியமுமான ஒரு அறைக்கு பெலுசியுஸ் சுவாமியார் அர்ச்சியசிஷ்டவரைத் தூக்கிக்கொண்டு போனார். மற்றனேக வால சந்நியாசிகளும் சுவாமியாரோடு மேல் மெத்தை அறைக்குச் சென்றார்கள். ஸ்தனிஸ்லாஸ் கட்டிலில் படுக்குமுன், தரையில் முழந்தாளிட்டு சொற்பநேரம் ஜெபித்தார். அப்புறம் கட்டிலின்மேல் சிலுவை அடையாளம் வரைந்து: "இதுதான் என் கடைசி வியாதி; இப்படுக்கையைவிட்டு நான் எழும்பமாட்டேன்" என்று சொன்னதை சுற்றி நின்றவர்களெல்லாரும் கேட்டார்கள். கேட்ட தோழர்கள் ஆயாசப்பட்டு, திகிலடைவதை அர்ச்சியசிஷ்டவர் கவனித்து, "தேவ சித்தமானால் நான் சொல்லுகிறபடி ஆகும்" என்று சேர்த்துச் சொன்னார்.

வெள்ளிக்கிழமை சாயரட்சைமுதல் ஆகஸ்ட் மாதம் 14-ம் தேதியாகிய ஞாயிற்றுக்கிழமை மட்டும் யாதொரு மாற்றமின்றி அதே ஜுரம் அடித்தது. ஞாயிற்றுக்கிழமை தம்மை விசாரித்துக்கொண்டிருந்த துணைச் சகோதரரிடம் தாம் அன்று இரவு மரிப்பதாகச் சொன்னார். அதற்கு துணைச்சகோதரர் இந்த நுட்ப அசௌக்கியத்திலிருந்து ஆரோக்கியமடைவதற்கு வேண்டிய புதுமையைவிட, இதனால் சாகிறதற்கு அதிக பெரிய புதுமை அவசரமாச்சுதே. ஆனாலும் தேவமாதா பரலோகத்துக்கு எழுந்தருளின கொண்டாட்டத்திற்கு உம்மையும் பரகதிக்கு அழைத்துக்கொண்டுபோக விரும்புகிறாளோ, என்னமோ" என்று மறுமொழி கூறினார்.

ஞாயிற்றுக்கிழமை மத்தியானத்துக்குள் ஸ்தனிஸ்லாசுக்குண்டான வியாதியின் அகோரத்தினால் நவசந்நியாச மடத்திலுள்ளவர்களெல்லாரும் வெகு திகிலடைந்தார்கள். மரணம் கிட்டிவிட்டதாகத் தோன்றினது. மரணசோபங் கொண்டவராக்கிடந்தார். சரீரப் பெலயீனமும் மேலிட்டது. அர்ச்சியசிஷ்டவருக்கு அருகாமையிலிருந்த பாசியோ சுவாமியார், பற்பல மருந்துகளைக் கொடுத்து மயக்கம் தெளியும்படி



முயன்றார். "சொற்ப இருதயமுள்ளவரோ, இந்த வியாதிக்காக மன தைரியத்தை இழந்து போகலாமா" என்று சுவாமியார் நகைப்போடு பேசினார்.

"நான் சொற்ப இருதயமுள்ளவனென்பது மெய்தான். ஆனால் இந்த வியாதியினால் நான் சாகவேண்டியபடியால், வியாதி சொற்ப வியாதியல்ல" என்று சமாதான சந்தோஷத்தோடு ஸ்தனிஸ்லாஸ் பதில் சொன்னார்.

கொஞ்சநேரத்துக்குப்பின் ஓர்வித ஜன்னிபோடு மரண ஆபத்தைக் குறிக்கும் மற்ற அடையாளங்களும் தென்பட்டன. குளிர்ந்த வேர்வையும் வேர்த்தது. முடிவு நெருங்கிவிட்டது.

அன்று இரவுதானே பாவசங்கீர்த்தனம் கொடுத்து திவ்விய நன்மையும் அறைக்குக் கொண்டுவந்தார்கள். திவ்விய சற்பிரசாத ஆண்டவர் அறைக்குள் நுழைந்ததும், தளர்ந்து வாடிக்கிடந்த ஸ்தனிஸ்லாசின் அங்கம் பதறி ஆனந்தத்தால் துடித்தது; கண்கள் ஜொலித்தன. திவ்விய சேசுவுக்கு ஆராதனை நமஸ்காரம் செலுத்தினார். அர்ச்சியசிஷ்டவர் பக்கமாய்க் கூடியிருந்த சகோதரர்களெல்லாரும், அவர் பத்தி உருக்கத்தைக் கண்டு கண்ணீர் சிந்தினார்கள்.

அவர்கள் அருமைத் தோழனை இழக்கப்போகிறதை சிந்தித்து சிலர் புலம்பினார்கள். "ஆர்ச்சியசிஷ்டவரோவென்றால், தெளிவான குரலோடும், யாரும் கேட்கக்கூடிய சத்தத்தோடும், தாம் செய்திருக்கக்கூடிய தப்பறை குற்றங்களுக்கெல்லாம் எல்லாரிடமும் மன்னிப்புக் கேட்டார். சிரேஷ்டர்கள் தமக்குச் செய்த உபகாரங்களுக்கெல்லாம் நன்றி செலுத்தினார். அர்ச். பிராஞ்சீஸ்கு போர்ஜியார் தம்மைச் சேசுசபையில் சேர்த்த பேருபகாரத்துக்காக அவருக்குப் பூரண வந்தனம் கூறச்சொல்லி அனுப்பினார். பின் இருதயத்திலுள்ள இன்பத்தின் அடையாளமான முக மலர்ச்சியையும் அவரிடம் விளங்கின உருக்கமான பத்தியையும் கண்ணுற்றவர்களெல்லாரும் அதிகமதிகமாய்க் கண்ணீர் விட்டார்கள்.

அதற்கப்புறம் அவஸ்தைபூசுதல் பெற்றார். வெகு வணக்க ஆசாரத்துடன் அதின் சடங்குகளையும் ஜெபங்களையும் தாமும் ஒத்து செய்து முடித்தார். மரணசமயத்தில் அடையவேண்டிய பரிபூரணபலனை அடையும்படி திரும்பவும் பாவசங்கீர்த்தனம் செய்தார். இதுகளெல்லாம் ஆனதும், கொஞ்சநேரம் வெகு நேச அன்போ



டும், புன்னகைப்பான முக வசீகரத்தோடும், தம் தோழர்களாகிய சில சகோதரர்களோடு சல்லாபித்தார். அவர்கள் கேட்ட கேள்விகளுக்கும் பக்ஷ அமரிக்கையோடு மறுமொழி கூறினார். அவர்கள் அவர் கையில் கொடுத்த ஜெபமாலையை அர்ச்சியசிஷ்டவர் மரணமட்டும் கையிலேந்திக்கொண்டு, சேசு மரியே என்னும் பரிசுத்த நாமங்களை உச்சரித்துக்கொண்டிருந்தார்.

அவருடைய பழய சிரேஷ்டரான அல்போன்சோ ருயிஸ், என்னும் குருவானவர் இச்சமயம் அர்ச்சியசிஷ்டவரைச் சந்திக்க வந்திருந்தார். "கையில் பிடித்துக்கொண்டிருக்கிற ஜெபமாலையைக்கொண்டு என்ன பண்ணுகிறீர்" என்று அக்குருவானவர் வினாவினார். "இது என்னுடைய பரிசுத்த தாயாரின் சொத்து" என்று அர்ச்சியசிஷ்டவர் மறுமொழி கொடுத்தார். அதற்கு குருவானவர்: "தைரியமாயிரும்! சீக்கிரத்தில் உமது தாயாரோடு மோக்ஷத்தில் அபிமுகமாயிருந்து, அவளுடைய கரங்களை முத்தி செய்வீர்" என்றார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும், அர்ச்சியசிஷ்டவர் இருதயம் ஆனந்தத்தால் பூரித்தது. தேவதாயைத் தரிசித்தவண்ணமாய், தமது கரங்களையும், நேத்திரங்களையும் வானத்துக்கு நேரே உயர்த்தி நன்றி செலுத்தினார்.

குருவானவர் படுக்கையின் பக்கத்தில் முழங்காலிட்டு அர்ச்சியசிஷ்டவரைப் பார்த்தவண்ணமாயிருந்தார். அர்ச். ஸ்தனிஸ்லாசே, குருவானவருடைய ஜெபமாலையில் தொங்கின சுரூபத்தை அடிக்கடி முத்திசெய்தார். மேலும் கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த தேவதாயின் படத்தையும் திரும்பத் திரும்ப முத்தமிட்டார்.

மனதில் கலக்கத்தை வருவிக்கக் கூடியது ஏதாவது உண்டாவென்று கேட்டார்கள். "யாதொன்றும் கிடையாது" என்று விடை கொடுத்தார். அவர் நம்பிக்கையெல்லாம் தேவ கிருபையின்பேரில் வைத்து, சகலத்திலும் தேவசித்தத்துக்கமைந்திருந்தார். "என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது, ஆண்டவரே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது" என்ற தேவ சங்கீத வார்த்தைகளை அடிக்கடி வாய்க்குள் சொல்லிக்கொண்டேயிருந்தார்.

கொஞ்ச நேரத்துக்கப்பால், சிரேஷ்டர் சுவாமியார் திவ்வியநற்கருணை கொண்டுவந்திருந்தபடியால், திரும்பவும் பாவசங்கீர்த்தனம் செய்து, ஆத்துமத்தின் ஆதாரமாகிய திவ்விய சற்பிரசாதத்தைப் பெற்றார்.

மறுபடியும் மூன்றாம் தடவை பாவசங்கீர்த்தனம் செய்தபிறகு, வியாதிஸ்தனை விசாரித்த



துணைச் சகோதரரைப் பார்த்துத், தமது சகோதரராகிய நவசந்நியாசிகளெல்லாம் எங்கே, என்று விசாரித்தார். அவர்களெல்லாரும் நித்திரை செய்கிறார்களென்று அறிந்து, அவர்களைத் தாம் விசாரித்ததாகவும், தாம் காட்டியிருக்கும் துர்மாதிரிகைகளுக்கெல்லாம் மன்னிப்புக் கேட்டதாகவும் சொல்லும்படி கோரினார். கட்டிலருகாமையிலிருந்த பாசியோ சுவாமியாரை நோக்கி: "நேரம் கிட்டிவிட்டது. முஸ்திப்பாயிருப்போமாக" என்று ஸ்தனிஸ்லாஸ் சொன்னார்.

உடனே வேறொரு குருவானவர் சேசுநாதர் சுவாமியின் திருப்பாடுகளைக் குறிக்கும் "சிற்சில ஜெபங்களையும், மரிக்கிறவர்களுக்குரிய ஆராதனை ஜெபங்களையும் சொல்லத் தொடங்கினார். அர்ச். ஸ்தனிஸ்லாஸ், பாடுபட்ட சுரூபத்தைக் கையில் பிடித்துக்கொண்டு, மகா ஆசாரப் பத்தியோடு அச்செபங்களை பின்தொடர்ந்து சொன்னார்.

அச்செபங்களை உச்சரிப்பதினாலும் அதுகளின்பேரில் கவனமாயிருப்பதும், களைப்பை உண்டுபண்ணுகிறதில்லையாவென்று வினாவினார்கள். அர்ச்சியசிஷ்டவர் அது தமக்கு வெகு ஆறுதலைத் தருவதாக மொழிந்தார். ஆனாலும்

வியாதிஸ்தரை வெளிப்படுத்தாதபடி உரக்கச் சொன்ன ஜெபத்தை நிறுத்தினார்கள். அப்போ அர்ச்சியசிஷ்டவர் தானே சத்தமாய் ஜெபிக்க ஆரம்பித்தார். கர்த்துசிய சபையாராகிய தியோனிசியுஸ் இயற்றிய ஜெபங்களில் சிலதைப் பாராமல் சொன்னார். இதுபோக, சர்வேசுரன் அவருக்களித்த பேருபகாரங்களுக்காக லத்தீன் பாஷையிலேயே நன்றி செலுத்தினார். விசேஷமாய் தம்மைக் காப்பாற்றி தமக்குத் தேவ அழைத்தலின் சனுவைக் கொடுத்ததற்காக ஸ்துதி செலுத்தி, தம்முடைய குற்றங்களையெல்லாம் கழுவி, சமாதானத்தில் சர்வேசுரன் தமதாத்துமத்தை ஏற்றுக்கொள்ளும்படி மன்றாடினார். பாடுபட்ட சுரூபத்தின் கை கால் விலாக்காயங்களை முத்தமிட்டு, தமது தலையை திவ்விய சேசுவின் முண்முடியோடு அணைத்துக்கொண்டார்.

திவ்விய சந்நிதானத்தில் போய் நிற்க முஸ்திப்பாயிருக்கிறாயோவென்று கேட்டதற்கு; "என்னிருதயம் ஆயத்தமாயிருக்கிறது ஆண்டவரே! என்னிருதயம் ஆயத்தமாயிருக்கிறது" என்ற தேவ சங்கீத வாக்கியத்தையே சொன்னார். பின் தம் மாதாந்தரப் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவர்கள் நாமங்களை எழுதிவைத்



திருந்த கைப்பிரதியைக்கொண்டுவரச்சொல்லி, அந்த அர்ச்சியசிஷ்டவர்களைப் பார்த்து தமதாத்துமத்துக்காக வேண்டிக்கொள்ளும்படி, சுற்றி நின்றவர்களைக் கேட்டுக்கொண்டார்.

வியாதியின் துவக்கத்திலிருந்துதானே, தபசியாக மரிக்கும் அடையாளமாகத் தம்மை கட்டாந்தரையில் கிடத்தும்படியாக பஞ்சரித்துக் கேட்டிருந்தார். ஆனால் அதற்கு ஒருவரும் இணங்கவில்லை. இச்சமயம் திரும்பவும் மன்றாடினார். ஆகையால் அவருடைய ஆசையைத் தீர்க்கும்படி, கீழே ஒரு பலகையிலே அவரைக் கிடத்தினார்கள். நடுச்சாமம் கடந்து வெகு நேரத்துக்குப் பின்னும் கீழேதான் படுத்திருந்தார். தேவமாதா பரலோகத்துக்கு எழுந்தருளின திருநாளன்று, விடியுமுன் அர்ச். ஸ்தனிஸ்லாஸ் அந்த இடையாய்ப் படுத்திருக்கும்போது, அவருடைய சிரேஷ்டர்களாயிருந்த, பாசியோ, அல்போன்சுஸ் ருயிஸ், அர்ச்சியசிஷ்டவருடைய முதல் சரித்திர நூலாசிரியரான வார்செவிஸ்கி என்னும் குருக்களெல்லாரும் அவரைச் சுற்றி முழங்காலிலிருந்தார்கள். ஜெபிக்கிற சத்தமும், கண்ணீர் சிந்தி புலம்புகிற [illegible]தவிர வேறே ஒரு சத்தமும் கிடை

திடீரென்று வேறொரு மாற்றமுண்டானது. அர்ச்சியசிஷ்டவர் முகமலர்ச்சி ஓர்விதப் பிரகாசம் பெற்றதுபோல் தோன்றினது. ஸ்தனிஸ்லாஸ் தம்மைச் சுற்றி இங்குமங்கும் பார்த்தார். தாம் பார்த்த ஏதோ விசேஷ காட்சிக்கு அருகாமையிலிருந்தவர்களும் ஆசார வணக்கம் காட்டவேணுமென்று வருந்திக் கேட்டாற்போல் விளங்கினது.

குபிஸ் சுவாமியார் சடுதியென்று எழும்பி அர்ச்சியசிஷ்டவர் பக்கம் சென்றார். அந்த க்ஷணத்தில்தான், பரிசுத்த கீழ்ப்படிதலுள்ள வாலனை ஸ்தனிஸ்லாஸ், தேவமாதாவையும், அவளோடு துணையாக வந்திருந்த பரிசுத்த கன்னிகைகளையும் தெளிவாகப் பார்த்ததாக வெகு அக்களிப்போடும் இரகசியமாயும் குருவானவருக்குச் சொன்னார். மேலும் தாம் மரிக்குமட்டும், தேவ கன்னிகையைப் பரிஷ்காரமாய்ப் பார்த்ததாக, அர்ச்சியசிஷ்டவர் சொல்லிக்கொண்டிருந்ததாகவும், அவர் சரித்திராசிரியர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள்.

பரிசுத்த பரம நாயகி தமது தாசனைத் தம்முடைய திருநாளை மோக்ஷத்தில் கொண்டாட அழைத்துக்கொண்டு போகும்படி வந்திருக்



ஆர்ச். ஸ்தனிஸ்லாஸின் பாக்கியமான மரணம்.

சர்வேசுரனுடைய தாயார் என்னுடைய தாயார். (ஆர்ச். ஸ்தனிஸ்லாஸ்)



கிறாள். ஸ்தனிஸ்லாஸ் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னதெல்லாம் நிறைவேறின.

தேவலோகத்திலிருந்து இறங்கிவந்த இராக்கினியின் காட்சி மறைந்ததோடு, ஆர்ச். ஸ்தனிஸ்லாஸ் பரலோக பிராப்தியானார். தேவதாயாரைக்கண்ட ஆனந்த புன்னகை முகத்தில் குடிகொண்டிருக்கும்போதுதானே, கடைசி மூச்சு விட்டார். மரணத்துக்குப் பின்னும் அதே புன்சிரிப்பு அவர் முகத்தில் தங்கியிருந்தது.

அர்ச்சியசிஷ்டவர் மரித்ததும் மரிக்காததும் ஒருவரும் கண்டுபிடிக்கவில்லை. ஜெபமாலையும் பாடுபட்ட சுரூபமும் ஒரு கையில் ஏந்தி, இன்னொரு கையில் விசுவாசத்துக்கடையாளமான மந்திரித்த மெழுகுதிரியைப் பிடித்தவண்ணமாய் நித்திய நித்திரை செய்தார்.

மரித்துவிட்டாரோவென்று சுவாமிமார்கள் ஒருத்தரொருத்தரைக் கேட்டார்கள். ஒருவரும் நிச்சயமாய்ச் சொல்லக்கூடவில்லை, ஆகையால் தேவமாதாவின் படத்தை யெடுத்து முகத்துக்குமுன் காட்டினார்கள். தேவதாயின் படத்தைக் கண்டவுடன் அவர் முகம் மாறாமலிருந்ததே அவர் மரித்ததற்கு அடையாளமாச்சுது.

தேவமாதா பரலோகத்துக்கெழுந்தருளின திருநாளன்று காலை மூன்றேகால் மணிக்கு, அர்ச். ஸ்தனிஸ்லாசின் ஆத்துமம் பரகதி சென்று மோக்ஷ இராக்கினியின் திருநாள் கொண்டாடப் போச்சுது.

# 12-ம் அதிகாரம்.

## மரணத்துக்குப்பின் உண்டான மகிமை.

அர்ச். ஸ்தனிஸ்லாஸ் மரித்தபோது அவருக்குப் பதினெட்டு வயது இன்னமுடியவில்லை. உரோமாபுரியில் பத்துமாதந்தான் நவசந்நியாசத்தில் குடிகொண்டிருந்தார். உரோமை நகரில் அவரை அறிந்த ஜனங்கள் வெகு சொற்பப்பேர். நவசந்நியாசிகளுக்கு ஊராரோடு புழங்குவதற்கான சமயங்களும் கிடையாது. வெளியே ஊர்க்காடுகளில் நவசந்நியாசிகள் உலாவப்போகிற வழக்கமுண்டுதான். அச்சமயங்களில் அர்ச். ஸ்தனிஸ்லாசின் மேரை மரியாதை, அடக்கவொடுக்கம், ஞானப்பிரகாசம் ஜொலிக்கும் அவர் முகம், இதுகளைக்கண்டு ஆச்சரியப்பட்டு சிலர் அவர் யாரென்று விசாரிப்பதுண்டு. ஆனால் இவ்விதமாய் அவரை அறிந்திருந்தவர்கள் எவ்வளவு சொற்பப்பேர்.

அர்ச். ஸ்தனிஸ்லாசின் சுபாவ இலட்சணங்கள் வெகு உசிதமானதும், வெகு மனோகாத்தைத் தரக்கூடியதுமானது. நடுத்தர வளர்த்

தியுள்ளவர். அவருடைய முகம் சற்றே உருண்டைவடிவுள்ளதும் பார்வைக்கு வெகு சௌந்தரியமாயுமிருந்தது. தலைமுடி சிவந்த கருப்பானது. அவருடைய அங்கம் கருத்த திட்டமுள்ளதாயும் பார்வைக்கும் புஷ்டியானதுபோலும் தோன்றும். வெளுத்த நிறமுள்ளவரானாலும் அவர் கன்னங்கள் ரோசாச் சிவப்புடைத்தாயிருந்தன. அவர் கண்களிரண்டும் மணிகள்போல் ஜொலிக்கும். அவைகளினின்று பரலோக ஒளி வீசும். தேவநேசம் ஒளிர்ந்த அக்கண்மணிகளிலிருந்து சமயத்துக்குச் சமயம் கண்ணீர் ததும்பும். அவருடைய இருதயத்திலும், முகத்திலும், கிரியையிலும், ஸ்தனிஸ்லாஸ் சம்மனசுதானென்று கிளாடியுஸ் ஆக்வாவீவா சொல்வது வழக்கம்.

உரோமாபுரியில் ஸ்தனிஸ்லாஸை முகமுகமாய்த் தரிசித்தவர்களும், அவரை அறிந்தவர்களும் வெகு சொற்பப்பேர். ஜெர்மனி தேசத்திலிருந்து வந்திருந்த சில கர்தினால்மார்களும், குருக்களும், இவருடைய விநோத சரித்திரத்தைக் கேள்விப்பட்டு அர்ச்சியசிஷ்டவரை அறிந்திருக்கலாம். அவர் சிறியகாலத்தில் அர்ச். ஸ்தனிஸ்லாஸை அறிந்த மற்றவர்கள் வெகு சொற்பப்பேர்.



ஆனாலும், அவர் மரித்த உடனே அர்ச். ஸ்தனிஸ்லாஸின் பேர் எவ்விடமும் விளங்கினது. அவருடைய மரண அடக்கத்துக்கு வந்து கூடின ஜனங்களின் கூட்டம் கெம்பீரமான ஜெயத்தைக் குறித்தது. எவ்விதமாய்த்தான் உரோமாபுரி முழுதும் அவர் மரணத்தின் சங்கதி பரவினதோ? அர்ச்சியசிஷ்டவர் ஒருவர் பரலோகம் சென்றார் என்றுதான் எல்லாரும் சொல்லிக்கொண்டார்கள். மரித்தவருடைய கரங்களையும் கால்களையும் அன்பாய் முத்திசெய்ய கும்பல் கும்பலாய் ஜனங்கள் வந்து கூடினார்கள். அவர்களுக்குள் அநேகர் விருத்தாப்பியமான குருக்களும் சந்நியாசிகளுமாம். பிற்காலத்தில் கர்தினால் பட்டம் பெற்ற பிரான்சிஸ்கு தொலேதோ என்கிற சுவாமியாரும், ஸ்தனிஸ்லாசின் சரீரத்தைச் சந்திக்கவந்தவர்களில் ஒருவர். அவர் அச்சமயம் சொன்னதாவது: "எங்களைப்போல விருத்தாப்பியமான குருக்கள் சாகும்போது, அவர்களைத் தேடிவருவார் ஒருவருமில்லை. இதோ போலண்டு தேசத்து வாலன் ஒருவர் மரித்ததும், உலகமெல்லாம் வந்து அவருடைய சரீரத்துக்கு உபசாரம் செலுத்துகிறது."

சேசுசபையில் மரிக்கிறவர்களை வெகு சாதாரணமாய் அடக்கம் பண்ணுவது சேசுசபையில் ஏற்பட்ட வழக்கம். அப்படியிருந்தாலும், அர்ச். ஸ்தனிஸ்லாசின் மரண அடக்கம் வெகு கெம்பீரமாயிருந்தது. அர்ச். பிரான்சிஸ்கு போர்ஜியாவின் உத்தரவுப்படி, கோவிலில் பீடத்தில் நிருபம் வாசிக்கும் பக்கத்தில் அர்ச்சியசிஷ்டவரின் சரீரத்தை அடக்கம்பண்ணினார்கள். கல்லறையின்மேல், வழக்கத்துக்கு விரோதமாய் ஏராளமான பூக்களை அள்ளித் தெளித்திருந்தன.

நாளுக்குநாள் அர்ச். ஸ்தனிஸ்லாசின் ஆத்துமத்தில் நடந்தேறிய இரகசிய அதிசய புதுமைகளெல்லாம் வெளியாயின. மரண நேரத்தில் மோக்ஷ இராக்கினி காட்சி கொடுத்து, அவரை மோட்சத்துக்கு அழைத்துக்கொண்டு போனதும், வியன்னநகரில் கடும் வியாதி அவஸ்தையாயிருக்கும்பொழுது தேவ கன்னிகை அளித்த உபகாரமும், சேசுசபைக்கு அந்த நாயகியால் அழைக்கப்பட்டதும், அர்ச். பார்பராம்மாள் உதவியினால் புதுமையாகச் சம்மனசுக்கள் கரங்களிலிருந்து திவ்விய நற்கருணை பெற்றுக்கொண்டதுமெல்லாம் வெளியாயின. அநேக சுவாமிமார்கள் அவருடைய ஆச்சரியம் நிறைந்த சீவிய சரித்திரத்தை எழுதினார்கள்.



ஸ்தனிஸ்லாசோடிருந்த நவசந்நியாசிகளெல்லாரும் அவரை அர்ச்சியசிஷ்டவராகவே பாவித்து வணக்கம் செலுத்திவந்தார்கள். அர்ச்சியசிஷ்டவர் மரித்த இரண்டு வருஷத்துக்குப்பிறகு அவருடைய சிரசின் எலும்பை எடுத்து அர்ச்சியசிஷ்ட பண்டமாகத் தங்கள் சிறு கோவிலில் பத்திரம் பண்ணும்படி நவசந்நியாசிகள் கேட்டுக்கொண்டார்கள். அப்பிரகாரம் மெழுகுதிரிகள் பிடித்துக்கொண்டு, அர்ச். ஸ்தனிஸ்லாசின் கல்லறைக்குச் சென்றார்கள். துணைச் சகோதரர் ஒருவர் கல்லறைக்குள் நுழைந்து பார்த்தபோது, அர்ச். ஸ்தனிஸ்லாசின் சரீரம் அழியாமலும், மரித்தபோது இருந்த பிரகாரமே, காப்பாற்றப்பட்டிருந்ததைக் கண்டார். உடனே அவர் பிரமிப்பு சந்தோஷத்துடன், "ஸ்தனிஸ்லாஸ் அழியாமலிருக்கிறார், ஸ்தனிஸ்லாஸ் அழியாமலிருக்கிறார்" என்று கூவினார்.

அர்ச்சியசிஷ்டவரின் சரீரத்தை அழியாமல் காப்பாற்ற யாதொன்றும் செய்யாமலிருந்தும், அவர் சரீரம் இந்த இரண்டு வருஷகாலமும் அழியாமல், மரித்தபோது இருந்த நிலைமையில் காப்பாற்றப்பட்டது பெரிய புதுமைதான்.

ஆனால் சில வருஷங்கள் சென்றபின் 1601-ம் வருஷம் அவர் கல்லறையைத் திறந்தபோது,

அவர் சரீரம் அழிந்துபோயிருந்தது. அவருடைய எலும்புகளை எடுத்து பூச்சியமாய் ஒரு பெட்டியில் வைத்து கோவிலில் பகிரங்கமாய் ஸ்தாபித்தார்கள்.

இந்த சமயம் நடந்த புதுமையாவது. அர்ச்சியசிஷ்டவருடைய எலும்புகளை எடுக்கும் வேளையில், அருகாமையில் நின்ற, ஜேசுவென்னும் கோவில் சக்கிரிஸ்தன், பரிசுத்த ஸ்தனிஸ்லாசின்பேரில் அவருக்குள்ள அன்பினால் தூண்டப்பட்டு, முதுகெலும்பிலுள்ள ஒரு துண்டை யாருமறியாமல் திருடிக்கொண்டுபோய், ஜேசுவென்னும் கோவில் சக்கிரிஸ்தியில் வெகு பூச்சியமாய்ப் பட்டுத் துணிகளினால் பொதிந்து மறைவாய் வைத்தார்.

ஆனால் ஆச்சரியமே! அந்த எலும்புத் துண்டைக் கொண்டுவைத்த க்ஷணமுதல், சக்கிரிஸ்தியில் வெகு சுகந்த வாசனை வீசினதுமல்லாமல், கோவில் முழுதும் அதே வாசனை பரவினது. துவக்கத்தில் ஒருவரும் இந்த வாசனையின் காரணத்தைக் கண்டுபிடிக்கவில்லை. ஆனாலும் பரிசுத்த பண்டம் எந்த மூலையில் வைக்கப்பட்டிருந்ததோ அந்த ஸ்தலத்திலிருந்துதான் வாசனை கிளம்புகிறதாகத் தெளிவானது.



அக்காலம் சேசுசபைக்கு மகா அதிசிரேஷ்டராயிருந்த கிளாடியுஸ் ஆக்வாவீவா என்பவர் சக்கிரிஸ்தனிடம் மேற்படி சங்கதியை விசாரித்தார். அவரும் தான் இரகசியமாய்ச் செய்தது புதுமையாக வெளியாகிவிட்டதென்று அங்கலாய்த்து, எதார்த்தமாய் நடந்த விசேஷத்தை உள்ளதுபோல் வெளிப்படுத்தி, அந்தப் பரிசுத்த பண்டத்தை எடுத்துக்கொண்டு வைத்தது முதல் அந்தச் சுகந்த வாசனை வீசத்துவக்கினது என்று சொன்னார். இதுபோக, இந்தப் புதுமையின் வாஸ்தவத்துக்கு அந்தச் சக்கிரிஸ்தன்தானே, அர்ச்சியசிஷ்டதனத்தின் சோதனையில் அத்தாட்சி கொடுத்தார். மேலும் அந்த பரிசுத்த எலும்புத் துண்டைக் கொண்டுபோய் மற்ற எலும்புகளோடு நவசந்நியாசிகள் கோவிலில் வைத்தவுடனே அதுவரையில் இருந்த வாசம் நின்றது.

இதற்கொப்பான புதுமை நிக்கொலாஸ் ஓபோர்ஸ்கி என்னும் குருவானவருக்கும் நேரிட்டது. அதெப்படியென்றால், அர்ச்சியசிஷ்டவரின் கல்லறையில் அவர் அடிக்கடி வந்து ஜெபம் செய்வது வழக்கம். அர்ச். ஸ்தனிஸ்லாஸ் சேசுசபையைச் சேர்ந்த வருஷாந்திரநாளாகிய ஒக்டோபர் மாதம் 28-ம் தேதி,

வெகுநேரம் வேண்டிக்கொண்டபின், சாஷ்டாங்கமாக விழுந்து கல்லறையை முத்திசெய்தார். உடனே ஏதோ விசேஷ வாசனையை முகர்ந்ததாகத் தோன்றினதோடு, அவர் ஆத்துமமும் விசேஷ இன்ப ஆனந்தத்தை அநுபவித்தது. இருக்க இருக்க வாசனை வெகு தெளிவானதேயொழிய குறையவில்லை. திரும்பவும் திரும்பவும் கல்லறையை முத்திசெய்து பத்திக்கண்ணீர்விட்டார். அவருக்குத் தென்பட்ட மணமும் புதுமையாக அர்ச். ஸ்தனிஸ்லாசின் கல்லறையிலிருந்துதான் புறப்பட்டது. மற்ற அநேகரும் இவ்விதமான சுகந்த வாசனையை அவர் கல்லறையில் நுகர்ந்தார்களென்று அவர் சரித்திர ஆசிரியர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அர்ச். ஸ்தனிஸ்லாசின் சுய நாடாகிய போலண்டு தேசத்திலேயோவென்றால், அவருக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் கொடுக்குமுன் தானே அவரை வெகுவாக மகிமைப்படுத்தி வணக்கஞ் செலுத்திவந்தார்கள். போலண்டு தேசத்து அரசனாகிய மூன்றாம் சிஜிஸ்மண்டு (Sigismund III) என்பவர் பரிசுத்த பாப்பானவருக்கு. பெரிய மனுக்கொடுத்து, போலண்டு தேசத்துப் பாதுகாவலரான அர்ச்சியசிஷ்டவர்களுக்குள் அர்ச். ஸ்தனிஸ்லாசையும்



நியமிக்கும்படியாக மன்றாடினார். அந்த அரசனுக்குப்பின் ஆண்ட அநேக அரசர்களும் அதே சலுகையைக் கோரினார்கள். பத்தாம் சாந்தப்பர் என்னும் பாப்பானவரும் அவர்களுடைய ஆசைக்கிணங்கி, அர்ச். ஸ்தனிஸ்லாசை போலண்டு தேசத்துப் பாதுகாவலர்களுக்குள் ஒருவராகக் கூறினார். அர்ச்சியசிஷ்டவரும் தம் சுய நாட்டின் நன்மைக்காக அநேக புதுமைகளைச் செய்தார்.

மேலும் மூன்றாம் சிஜிஸ்மண்டு இராஜா உரோம்ம நவசந்நியாச மடத்தில் காப்பாற்றப்பட்டுவரும், அர்ச்சியசிஷ்ட பண்டமாகிய ஸ்தனிஸ்லாசின் சிரசை தமக்குக் கொடுக்கும்படியாக வெகு ஆசையாய்க் கேட்டு, அதை எடுத்துவரும்படி மேற்றிராணியார் ஒருவரையும் அனுப்பியிருந்தார். அர்ச்சியசிஷ்ட பண்டம் வந்துசேர்ந்ததும், அரசன் அதைவெகு ஆசாரத்தோடு பெற்று, வணக்கமாய் முத்திசெய்தபின், அங்கு ஆஜராயிருந்த சேசுசபைச் சுவாமிமார்களுக்கும் காண்பித்து, அதைப் பூச்சியமாய் வைக்கிறதற்காக அர்ச். ஸ்தனிஸ்லாசின் ஆளச் சுரூபம் ஒன்று சுத்தத் தங்கத்தினால் செய்யும்படி கட்டளையிட்டார். அச்சுரூபத்தின் தலையிலிருந்த கிரீடமானது வயிரக் கற்க

னாலும் நவரத்தினங்களினாலும் பதிப்பிக்கப்பட்டு, பளீர் பளீரென்று மின்னின. அச்சுரூபத்தின் தலையினுள்தான் அர்ச்சியசிஷ்ட பண்டம் வைக்கப்பட்டது.

1604-ம் வருஷம் அர்ச். ஸ்தனிஸ்லாசுக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் கொடுக்கப்பட்டு, 1726-ம் வருஷம் அர்ச். ஞானப்பிரகாசியாரோடு நமது அர்ச்சியசிஷ்டவருக்கும் பதின்மூன்றாம் ஆசீர்வாதப்பர் (Benedict XIII) என்னும் பாப்பானவர் அர்ச்சியசிஷ்ட பட்டத்தின் முடியைச் சூட்டினார்.

வேதசாட்சிகளையிராமல் திருச்சபையில் அர்ச்சியசிஷ்ட பட்டம் பெற்றிருக்கும் மகாத்துமாக்களுக்குள் அர்ச். ஸ்தனிஸ்லாஸ்தான் வெகு இளம்பிராயமுள்ள அர்ச்சியசிஷ்டவர்,

## 13-ம் அதிகாரம்.

### பவுல் கோஸ்கா.

பவுல் கோஸ்காவென்ற நாமத்தை பலமுறை இச்சரித்திரத்தில் வாசித்திருக்கிறோம். அர்ச்சியசிஷ்டவரின் மூத்த தமையனான இவர், நானாவிதமாக ஸ்தனிஸ்லாஸை உபாதித்து இம்சைப்படுத்தினதொன்றும் பார்த்தோம். பரிசுத்த தம்பி மரித்தபின் உலக டம்ப ஆடம்பரத்தை நாடிக்கொண்டிருந்த அண்ணன் எப்படியானானென்று சற்றே விசாரிப்பது நலமல்லவா?

அர்ச். ஸ்தனிஸ்லாஸ் அநேக புதுமைகளைச் செய்தார். அப்புதுமைகளில் சிலதை அடுத்த அதிகாரத்தில் எடுத்துரைப்போம். ஆனால் அவர் செய்த ஞானப் புதுமைகளுக்கெல்லாம் மிகப் பெரிய புதுமை தம் தமையனாகிய பவுல் கோஸ்காவை நன்னெறிக்குத் திருப்பி, தேவ அழைத்தலை அவருக்கு அடைந்ததேயாம். பரிசுத்த ஸ்தனிஸ்லாஸ் தமையன்மட்டில் காண்பித்த பராக்கிரம பொறுமையும், அவருக்காக ஒப்புக்கொடுத்த ஜெபதபங்களும் பலனற்றுப்போகுமா?

நமது அர்ச்சியசிஷ்டவர் வியன்னு நகரிலிருந்து தெரியாமல் தப்பி ஓடினதும், அவர் எழுதிவிட்டுப்போன கடிதத்தைப் பார்த்ததும், பவுல் கோஸ்காவின் கண் திறக்கப்பட்டது. தான் ஸ்தனிஸ்லாசை அநியாயமாய் நடத்தி, ஆகாத விதமாய் உபாதித்ததும், அப்போதான் பவுல் கோஸ்காவுக்குத் தெளிவாய் விளங்கின. மேலும் தன் சகோதரனை குரோதத்தோடு நடத்தின சங்கதி தகப்பனுக்கு எட்டினால், அவர் தன்னை சொல்வாரோ என்ற பயமும் உண்டானது. ஆனாலும் சகோதரனை அடாதவகையாய் நடத்தினதைவிட்டு வருத்தப்பட்டாரேயொழிய நல்ல கருத்து அவர் மனதில் இன்னம் கிளம்பவில்லை.

அர்ச்சியசிஷ்டவர் தந்தை உரோமைக்குச் சென்று, தம் புத்திரனை விலங்கு மாட்டி சுயதேசத்துக்குக் கொண்டுவருவதாக வைராக்கிய ஆங்காரம் நிறைந்த ஒரு கடிதம் அர்ச். ஸ்தனிஸ்லாசுக்கு எழுதியிருந்ததைப் பார்த்தோமே. ஆனால் பற்பல காரணங்களையிட்டுத் தந்தை உரோமைக்குப் போகக்கூடாமல் போனபடியால், பவுல் கோஸ்காவை அனுப்பி, அர்ச்சியசிஷ்டவரை இழுத்துக்கொண்டு வரும்படி கண்டிப்பான உத்தரவு அளித்திருந்தார்.



பவுல் கோஸ்காவும் எவ்விதமாயும் ஸ்தனிஸ்லாசை சுய நாடாகிய போலண்டு தேசத்துக்குக் கொண்டுவர வேணுமென்கிற வீரியத்தோடு தான் உரோமாபுரிக்குப் புறப்பட்டார். உடனே புறப்படாமல் என்ன காரணத்தையிட்டுத் தாமதித்தாரோ தெரியாது. அர்ச். ஸ்தனிஸ்லாஸ் பரலோக பிராப்தியடைந்து ஒரு மாதத்துக்குப்பின் தான் பவுல் கோஸ்கா உரோமை வந்து சேர்ந்து, தன் சகோதரனைத் தேடி விசாரித்தார். உலக துன்ப கஷ்ட இக்கட்டுகளை இனி அனுபவிக்காமல், இலௌகீக சுகசெல்வத்தை வெறுத்து, சம்மனசுவாயிருந்த ஸ்தனிஸ்லாஸ் மோட்சத்திற்குப் பறந்துபோய்விட்டார். ஊரெங்கும் தம் சகோதரனுடைய பரிசுத்த சீவியத்தையும், அவருடைய அர்ச்சியசிஷ்டதனத்தையும்பற்றியே பேச்சாயிருந்தது. பெரியோரும் சிறியோரும், அர்ச். ஆந்திரேயாஸ் நவசந்நியாச மடத்தில் மரித்த பராக்கிரமசாலியும், புண்ணியசீலருமான அர்ச். ஸ்தனிஸ்லாசைப்பற்றியே பேசினார்கள். அந்தப் பரிசுத்த வாலன், தேவ அழைத்தலின் வழுதலைப் பின்பற்றும் கருத்தோடு ஆயிரம் காதவழி பிச்சையெடுத்துப் பிரயாணம் பண்ணினதையும், அவர் மரிக்கும்போது சம்பவித்த ஆச்சரிய

புதுமைகளையும், மற்ற உன்னத காட்சிகளையும், சகல ஜனங்களும் போற்றிக் கொண்டாடினார்கள்.

குரோத வீரியத்தோடு உரோமை வந்திறங்கின பவுல் கோஸ்கா இதையெல்லாம் கேட்டு மனமிளகி, பூரணமாய் மனந்திரும்பினார். அர்ச்சியசிஷ்டவருடைய கல்லறைக்குச் சென்று அங்கு சாஷ்டாங்கமாய் விழுந்து, சிறு குழந்தையைப்போல் விம்மி விம்மிக் கண்ணீர் சிந்தி அழுதார். தம் அருமைச் சகோதரன் பேரிலுள்ள நேசமெல்லாம் இச்சமயம் அவர் இருதயத்தில் பொங்கி வழிந்தது. சுய நாட்டுக்குச் சென்று நடந்த ஆச்சரியங்களையெல்லாம் தாய் தந்தையருக்கும், உறவின் முறையாருக்கும் அறிவித்தார். உலகத்தில் இழந்துபோன புத்திரனுக்குப் பதில் மோக்ஷத்தில் ஓர் அர்ச்சிஷ்ட புத்திரனை அடைந்தார்கள். உலகம் மதித்துப் புகழும் கீர்த்திக்கு மேற்பட்ட பரலோக மகிமை ஒன்று உண்டென்று அப்போதுதான் அவர்களுக்குத் தெளிவானது.

இதற்குள் அர்ச். ஸ்தனிஸ்லாசின் பக்தி அவர் சுய நாடாகிய போலண்டு தேசத்தில் வெகுவாய்ப் பரம்பினது. அவருடைய நூதன சீவிய சரித்திரத்தின் ஆச்சரிய வரலாறுகளைப்



பற்பல ஆசிரியர்கள் எடுத்து எழுதினார்கள். அர்ச்சியசிஷ்டவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் கொடுத்தவுடனே அவருடைய படங்களையும், சுரூபங்களையும், கோவில்களிலும், ஜெபக்கூடங்களிலும் ஸ்தாபித்தார்கள். பொது ரஸ்தாக்களில் முதலாய், கோபுரங்கள் போன்ற ஸ்தம்பங்கள் கட்டி, அதற்குமேல் அர்ச். ஸ்தனிஸ்லாசின் சுரூபம் தெருவீதிகளில் நடக்கும் ஜனங்களின் பக்திக்காக ஸ்தாபிக்கப்பட்டிருந்தன.

அர்ச்சியசிஷ்டவர் மரித்த சொற்பக்காலத்துக்குப்பின், அவர் தந்தையாகிய ஜான் கோஸ்காவும் மரித்தார். குடும்பப் பேரைக் காப்பாற்ற பவுல் கோஸ்காவும், ஆல்பெர்ட் என்ற இன்னொரு மகனுமட்டுமிருந்தார்கள். ஆனால் இந்த ஆல்பெர்ட் என்பவர் திடீரென்று கடும் வியாதியாய் விழுந்து, தந்தை மரித்த சொற்ப நாளைக்குள் காலம் சென்றபடியால், தந்தைக்காகத் திறக்கப்பட்ட அதே கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார்.

ஆகையால் அக்குடும்பத்தில் பவுல் கோஸ்காவும், அவர் தாயாரும் மாத்திரமிருந்தார்கள். கோஸ்கா குடும்பம் நிலைக்கவேணுமானால், பவுல் கோஸ்கா கலியாணம் செய்து புத்திர

சந்தானம் பெறவேணும். மற்றப்படி பிதிர்வழி அழிந்துபோகும்.

பவுல் கோஸ்காவோவென்றால், தம் பரிசுத்த சகோதரனின் நன்மாதிரிகையைப் பின்பற்றி, உலகம் தம்மைப் பார்த்து நகைத்துப் புத்தி சொன்னதையெல்லாம் கவனிக்காமல், பிடிவாதமாய்க் கலியாணம் செய்யமாட்டேனென்று சாதித்துவிட்டார்.

ஸ்தனிஸ்லாஸ் பிறந்த இடமாகிய ரோஸ்கோ அரமனையில், பவுல் கோஸ்காவும், அவர் தாயாகிய மர்க்கரீத்தம்மாளும் சென்று, இருவரும் ஜெப தப தர்மக்கிரியைகளில் தங்கள் வாழ்நாட்களைப் போக்கினார்கள். மர்க்கரீத்தம்மாள் நாடோறும் வெகு நேரம் ஜெபத்தியானத்தில் செலவழிப்பாளென்று அவளுடைய ஆத்தும குருவாயிருந்த ஒரு சேசுசபைச் சுவாமியார் எழுதிவைத்திருக்கிறார். சாப்பாட்டில் கடின தபசி. ஏழைகளுக்குத் தாராளமாகத் தர்மம் செய்வாள். தன் மகனாகிய ஸ்தனிஸ்லாஸைச் அடிக்கடி நினைத்து சந்தோஷக் கண்ணீர் விடுவாள். தன் குமாரனுக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம் கொடுத்த பாக்கியத்தைக் கண்ணால் கண்டு, தன் பிள்ளைக்குத் தானே வணக்க ஆசாரம் செய்யும் வரத்தை அடைந்தாள். அவள்



மரிக்கும்போது அர்ச். ஸ்தனிஸ்லாஸ் அவளுக்குக் காட்சிகொடுத்து ஆறுதல் சொன்னதாக, அவர் சரித்திராசிரியர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள்.

தாயின் மரணத்துக்குப்பின், பவுல் கோஸ்கா தம்மை சர்வேசுரனுக்கு அதிகநிகமாக ஒப்படைக்கக் கருதி, தமக்கிருந்த ஆஸ்தி சொத்தையெல்லாம் நற்கிருத்தியங்களில் செலவழித்தார். இந்துகாயப் பிராஞ்சிஸ்கு சபையாருக்காக ஒரு மடமும் கோவிலும் கட்டுவித்தார். சேசுசபையார் கற்றுக்கொடுக்கும் ஓர் வித்தியாசாலையும் எழுப்பினார்.

ஏழைகளுக்காகத் தர்மசாலையும், தரித்திரரான மாணாக்கர்களுக்கு ஓர் சத்திரமும் கட்டுவித்தார். இந்த சத்திரத்தின் ஓர் மூலையில் அவருக்கு ஓர் அறையிருந்தது. தம்மைச் சந்திக்கவரும் கனவான்களை முன்னிட்டு, அந்த அறையை சுத்தமாய்க் காப்பாற்றி வந்தாலும், அவர் தபசியைப்போல் சீவித்தார். கட்டிலில் படுக்காமல், கட்டாந்தரையில் தான் நித்திரை செய்வார். அவருடைய நாள் ஒழுங்கிலிருந்து அவர் புண்ணிய சீவியம் விளங்கும்.

சொற்பநேரம் இளைப்பாறினதும், நடுச்சாமம் ஒரு மணிக்கு விழித்து, உதயகால சங்கீதம்

சொல்வார். அதற்குப்பின் ஐந்துமணிக் கசையினால் நெடுநேரம் நிஷ்டூரமாகத் தம்மை அடித்துக்கொள்வார். அதிலிருந்து விடியுமட்டும் சேசுநாதசுவாமியைப்பற்றியும் திருப்பாடுகளைக்குறித்தும் தியானயோகத்தில் அமிழ்ந்தியிருப்பார். காலையில் இரண்டு மூன்று பூசை காண்பார். பூசை முடிந்த பிறகும், அர்ச். ஸ்தனிஸ்லாசைப்போல கோவிலின் ஓர் மூலையைத் தேடி வெகுநேரம் ஜெபிப்பார்.

மீதியான நேரத்தில் தர்மசாலையிலிருக்கும் ஏழை வியாதிஸ்தர்களையும், சத்திரத்திலிருக்கும் தரித்திரர்களையும் விசாரித்து, அங்கு நானாவித ஈன வேலைகளைச் செய்வார். வேண்டியவர்களுக்குத் தாராளமாய்த் தர்மம் புரிவார்.

சாப்பாட்டில் வெகு ஒறுத்தலை அநுசரித்து, ஞானக்காரியங்களைப்பற்றி மட்டும் சல்லாபிப்பார். வெகு சாதாரண உடை உடுத்தி, கழுத்தில் ஜெபமாலை ஒன்று எப்போதும் போட்டிருப்பார். தெருவீதிகளில் பாடுபட்ட சுரூபத்தைக் கண்டால், சுரூபத்துக்குமுன் முழந்தாளிட்டு வெகு நேரம் ஜெபிப்பது வழக்கம். அவரிடத்தில் ஊழியம் செய்கிறவர்கள் முதலாய் பக்தியுள்ள விசுவாசிகளாயிருப்பது அவசரம். மற்றவர்களைச் சேர்த்துக்கொள்ளமாட்டார்.



அர்ச். சகோதரனான ஸ்தனிஸ்லாசைக் குறித்து சம்பாஷிக்கும்போதும் அவர் ஆத்துமம் துடிக்கும். ஸ்தனிஸ்லாசின் நாமத்தைக் கேட்டாலே போதும், உடனே கண்ணீர் அவரை அறியாமலே வடியும். அர்ச்சியசிஷ்டவரைப் பற்றிய பேச்சை வெகு நேரம் அவராலே கேட்கமுடியாது. தமதருமைத் தம்பிக்குக் காட்டிய அநியாய கொடூரமும், அவரை வைது அடித்து உபத்திரவப்படுத்தின கல் நெஞ்சத்தனமும், இப்போ அவருடைய இருதயத்தில் கரை காணாத வெட்கத்தையும், மனஸ்தாபத்தையும் எழுப்பினது. அதினால் அநேகமுறை சேசுசபைக் குருக்கள் ஸ்தனிஸ்லாசின் அர்ச்சியசிஷ்டதனத்துக்கு வாக்குமூலம் கொடுக்கும்படி பவுல் கோஸ்காவைக் கோரி அழைத்தபோது, அர்ச்சியசிஷ்டவரைப்பற்றிப் பேச அவர் நாவெழும்பவில்லை. அப்பேர்ப்பட்ட சமயங்களில் பெருமூச்சுவிட்டு தேம்பி அழுவதுதான் அவர் செய்யக்கூடியதெல்லாம். பற்பல சமயங்களில் இவ்விதம் நேரிட்டது. ஸ்தனிஸ்லாசை இம்சைப்படுத்தின ஞாபகமானது அவருக்கு ஓயா மனக்கவலையை வருவித்துக்கொண்டிருந்தபடியால், அடிக்கொருதரம் “பரிசுத்த ஆத்துமமே! எங்களுக்காக வேண்டிக்

கொள்ளவேணுமென்று" மோக்ஷத்தை அண்ணாந்து நோக்கி ஜெபிப்பது வழக்கம். ஸ்தனிஸ்லாசை உதைத்த உதைகளுக்கும், அடித்த அடிகளுக்கும் பரிகாரமாகத் தம் சரீரத்தை பவுல் கோஸ்கா நிஷ்டூரமாக கசையால் அடித்து வாதித்துக்கொள்வார்.

அவர் பிரயாணத்தில் ஒருநாள் சிநேகிதர் ஒருவருடைய அரமனையில் நித்திரைக்காகத் தங்கியிருந்தார். இவர் நித்திரை செய்யவேண்டிய அறையில் இன்னொருவர் தூங்கின சங்கதி இவருக்குத் தெரியாது. பவுல் கோஸ்கா தனியே இருக்கிறதாக யூகித்துக்கொண்டு, படுக்குமுன் நீடிய நேரம் ஜெபத்தியானத்தில் பரவசமாயிருந்தபின், சரீரத்தின் உடையைக் கழற்றி வைராக்கியங் கொண்டவராய் இரக்கமற்ற விதமாய்க் கசையினால் தம்மை அடிக்கத் துவக்கினார். அப்படித் தம்மை வாதித்துக் கொள்ளும்போது அவர் அழுது புலம்பினதாவது: "ஓ! என் பரிசுத்த சகோதரனே, பாவியாகிய எனக்காக வேண்டிக்கொள்ளும். மாசற்ற சகோதரனே! உம்மை அநியாயமாய் அடித்து உமக்குத் துரோகமாய் உண்டு பண்ணின உபத்திரவத்தையெல்லாம் கிருபை கூர்ந்து மன்னித்துக்கொள்ளும்."



அதே அறையில் படுத்திருந்தவர், சங்கதி என்னவென்று அறியாதவரானபடியால், பவுல் கோஸ்கா சகோதரனைக் கொலைசெய்துவிட்ட காரணத்தைப்பற்றித்தான் இவ்வித தபசு செய்துகொள்ளுகிறாரோ என்னமோவென்று நினைத்துக்கொண்டு, மறுநாள் உதயம் மற்றவர்களிடம் தாம் கண்டதுகளை வெளியாக்கி விபரம் கேட்டார்.

பவுல் கோஸ்காவோவென்றால், படுக்கை அறையில் இன்னொருவர் இருந்தாரென்று அறிந்து, தாழ்ச்சியினால் வெகு கூச்சம் அடைந்தார். மேலும் பவுல் கோஸ்கா அவருக்குக் கொஞ்சம் பணம் கொடுத்து, இரவில் கண்டதுகளை யாருக்கும் சொல்லாமல் இரகசியமாய்க் காப்பாற்றும்படி மன்றாடினார். அவரோவென்றால் இரகசியத்தை சகலருக்கும் நன்மாதிரியாக எடுத்துச் சொல்லாமலிருக்கக் கூடவில்லை.

நாற்பது வருஷகாலமாக இவ்வித கடுந்தபத்திலும் புண்ணிய சீவியத்திலும் நாட்களை செலவழித்தபின் அவருக்கு ஐம்பத்தெட்டு வயது நடக்கும்பொழுது, தபத்தினாலும் ஜெபத்தினாலும் சரீரம் வாடி, எண்பது வயது விருத்தாப்பியக் கிழவனைப்போல தோன்றினாராம்.

ஐம்பத்தெட்டு வயதில் அவர் சேசுசபையில் சேர்ந்து, தம் சகோதரனுக்கு துறவறத்

திலும் சகோதரனாகும்படி மன்றாடினார். சேசு சபையைப்பற்றி எப்போதும் வெகு புகழ்ச்சியாகப் பேசுவதுமல்லாமல், அதைப் பரிசுத்த சபை என்றும் அழைப்பார். வெகுகாலமாக சேசுசபையில் சேர கருத்துள்ளவரானாலும், அச்சபையில் சேரத் தான் தகுதியற்றவனென்று பின்வாங்கி நின்றார். கடைசியாய் அறுபது வயது கிட்டத்தட்ட ஆகும் காலத்தில் சேசு சபையில் சேரும்படி தீர்மானித்தார்.

இந்த நற்கருத்தை சேசுசபைக்குச் சிரேஷ்டராயிருந்த கிளாடியுஸ் ஆக்வாவீவாவுக்குத் தெரியப்பண்ணி, தாம் விருத்தாப்பியனாயிருந்தாலும், தமதுமட்டில் கருணை வைத்து ஏற்றுக் கொள்ளவேணுமென்று கெஞ்சி எழுதினார். கிளாடியுஸ் ஆக்வாவீவா நவசந்நியாசத்தில் அர்ச். ஸ்தனிஸ்லாசின் துணைவராயிருந்த சங்கதி நமக்குத் தெரிந்திருக்கிறதே. ஆகையால் பவுல் கோஸ்காவின் முதிர்ந்த வயது அவரை சேசுசபையில் ஏற்றுக்கொள்ளுவதற்கு ஓர் தடையாயிருந்தாலும், ஸ்தனிஸ்லாசின் உந்நத சீவியத்தை முன்னிட்டு, யாதொரு விக்கினமின்றி உடனே பவுல் கோஸ்காவை சேசுசபையில் ஏற்றுக்கொண்டார். அதற்காக உடனே போலண்டு நாட்டு இராச்சிய சிரேஷ்டருக்குக்



கடிதமெழுதி, பவுல் கோஸ்காவை உடனே சேசுசபையில் உட்படுத்தும்படி உத்தரவளித்தார். பவுல் கோஸ்காவுக்குள்ள பிதிரார்ச்சித சொத்துக்களையும் தாமதமின்றி ஒழுங்குபண்ணச் சொன்னார்.

பிதிரார்ச்சித சொத்து விஷயங்களையெல்லாம் நியாயஸ்தல மூலமாய் ஒழுங்கு பண்ணி முடிந்ததும், பவுல் கோஸ்கா திடீரென்று காய்ச்சலாய் விழுந்தார். வியாதி சொஸ்தப்படாமல் சொற்பநாளைக்குள் ஜேம்ஸ் சியெலெக்கி (James Cielecki) என்னும் குருவானவர் கரங்களில் பவுல் கோஸ்கா பாக்கியமான மரணமடைந்தார். அர்ச். ஸ்தனிஸ்லாசின் திருநாளைக் கொண்டாடின 1607-ம் வருஷம் நவம்பர் மாதம் 13-ம் தேதியன்று தான் பரலோகம் சென்றார். அர்ச். ஸ்தனிஸ்லாசை இம்சைப்படுத்தின ஞாபகத்தினால் கடைசிமட்டும் கண்ணீர் சிந்தி அழுதார்.

அவருடைய அடக்கம் வெகு பிரபலியமாய் நடந்தது. ஊரிலுள்ள சகல பிரபுக்களும், நியாயாதிபதிகளும், பெருந் திரளான ஜனக்கூட்டமும், அவருடைய சரீரத்துக்கு உபசாரம் செய்யச் சென்றார்கள். அவருடைய மரித்த முகத்தைச் சுற்றி ஒருவித பிரகாசம் காணப்பட்ட

தாகவும், அதில் அர்ச்சியசிஷ்டவர்களின் ஞான ஒளி தோன்றினதாகவும் சொல்லியிருக்கிறது.

அர்ச். ஸ்தனிஸ்லாசுக்கு உபாத்தியாயராயிருந்த பிலின்ஸ்கி என்பவரும், வியன்னா நகரிலிருக்கும்போது பவுல் கோஸ்காவோடு சேர்ந்து, அர்ச்சியசிஷ்டவரைப் பலவிதமாய்க் கேலிபண்ணித் தொந்தரவு பண்ணியிருந்தாரல்லவா? இந்தப் பிலின்ஸ்கி என்பவரும் அர்ச்சியசிஷ்டவருடைய ஜெபத்தின் பலனை அடைந்தார். போலண்டு நாட்டுக்குத் திரும்பினதும், புண்ணிய மார்க்கமாய் நடக்கத் துவக்கினார். ஸ்தனிஸ்லாசுக்கு அவர் காண்பித்த நிந்தை கொடூரத்துக்காக எப்போதும் மனஸ்தாபப்பட்டார்.

அர்ச். ஸ்தனிஸ்லாசுக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் கொடுப்பதற்காக திருச்சபைச் சட்டப்பிரகாரம் செய்யப்படும் பரிசோதனையில், பிலின்ஸ்கி என்பவர், அர்ச்சியசிஷ்டவர் அடைந்த ஆச்சரியக் காட்சிகளுக்கும், புண்ணிய மார்க்கத்துக்கும் வாக்குமூலம் கொடுத்தார். அவருடைய மாணாக்கனாயிருந்த ஸ்தனிஸ்லாசுக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் கொடுத்ததும், அவர்பேரில் விசேஷ பத்தியுள்ளவரானார். எப்போதும் அவர் மேசையில் கண்ணுக்குமுன் ஸ்தனிஸ்லாஸ் படம் ஒன்று வைத்திருப்பார்.



பலதரம் ஸ்தனிஸ்லாஸ் பிறந்த ஸ்தலமாகிய ரோஸ்கோவுக்குச் சென்று, பவுல் கோஸ்காவோடு சல்லாபித்து, இருவரும் அர்ச்சியசிஷ்டவர்மட்டில் காட்டிய அநியாய நடத்தைக்குப் பரிகாரம் செய்வார்கள். பிலின்ஸ்கி மரணப்படுக்கையில் இருக்கும்பொழுது பரிசுத்த ஸ்தனிஸ்லாஸ் அவருக்குக் காட்சி கொடுத்து ஆறுதல் சொன்னதுந்தவிர, அர்ச்சியசிஷ்டவரின் படத்தைப் பார்த்தவண்ணமாய், பிலின்ஸ்கி சமாதான பாக்கியத்தில் காலம் சென்றார்.

## 14-ம் அதிகாரம்.

---

### அர்ச். ஸ்தனிஸ்லாஸ் செய்த புதுமைகள்.

அர்ச். ஸ்தனிஸ்லாஸ் சர்வேசுரனுக்கு உகந்த தாசனாயிருந்தாரென்பது அவர் செய்த ஏராளமான அதிசயத்துக்குரிய புதுமைகளிலிருந்து தெற்றென விளங்குகிறது. அவர் செய்த புதுமைகள் எல்லாத்தையும் இங்கு எடுத்துரைப்பது கூடியதல்ல. அதுகளில் சிலதுகளை மட்டும் பொறுக்கி யெடுத்து இங்கு கூறுவோமாக.

1630-ம் வருஷம் அர்ச். ஸ்தனிஸ்லாஸ், கிணற்றில் விழுந்து மரித்த ஒரு பிள்ளைக்கு உயிர் கொடுத்தார். அதெப்படியென்றால், லூப்லின் என்னும் நகருக்கருகாமையில் செங்கலறுக்கும் குயவவேலை செய்துகொண்டிருந்த ஒரு ஸ்திரீ ஒரு சிறு குடிசையில் குடியிருந்தாள். அவளுக்கு ஸ்தனிஸ்லாஸ் என்ற பேர் கொண்ட ஒரு பையனிருந்தான். இந்தப் பையனுக்கு ஏழு வயது நடக்கும்போது, அவன் தினம் சமீபத்திலிருந்த கிணற்றில்போய் தாய்க்காகத்



தண்ணீர் இறைத்துக்கொண்டு வருவது வழக்கம். ஒருநாள், வழக்கப்படி தண்ணீர் இறைக்கும் சமயத்தில் கால் நழுவி பையன் கிணற்றுக்குள் தலைகீழாக விழுந்து மூர்ச்சையாக மரித்தான். தாய், பிள்ளை திரும்பி வராததைக் கவனித்து, அக்கம்பக்கமெல்லாம் அலைந்து தேடின பிறகு, கிணற்றில் சில சமயம் விழுந்திருக்கக் கூடுமோவென்கிற சந்தேகத்தோடு கிணற்றண்டை சென்று உள்ளே உற்றுப்பார்த்தாள்.

ஐயோ பரிதாபம்! அவள் அருமைப்பிள்ளை செத்துக் கிணற்றுத் தண்ணீரில் மிதக்கிறதைக் கண்டு கூக்குரலிட்டு ஒப்பாரி வைத்தாள். பெற்ற மனம் பித்து என்றபடி, துக்க மிகுதியினால், வந்து விசாரித்தவர்களுக்கு சங்கதியைச் சொல்ல முதலாய்க் கூடாமல் அலறிக் கதறினாள்.

தண்ணீரில் கிடந்த பிள்ளையைத் தூக்கிப் பார்த்தபோது வயிறு தண்ணீர் நிரம்பி ஊதிப் போயிருந்தது. கண்கள் இரண்டும் திறந்த வண்ணமாயிருந்தது. சரீரமெல்லாம் சாம்பல் பூத்திருந்தது. அங்கு வந்து கூடின சகலரும், பிள்ளையைத் தலைகீழாகக் கட்டித்தூக்கி, அங்கத்தை பலவிதமாய் அசைத்து ஆட்டி, உயிர் திரும்பவருமாவென்று பிரயாசப்பட்டுப் பார்த்

தார்கள். சரீரத்தை உஷ்ணிப்படுத்தும்படியும இரத்தவோட்டத்தை மூட்டும்படியும் வேண்டியதைச் செய்தார்கள். எல்லாம் வீணாய்ப் போயின: பிள்ளை இறந்துபோன பிணமாய்த்தான் கிடந்தது. பிள்ளையைப் பறிகொடுத்த தாய்க்கு ஆறுதல் சொல்வது யார்?

அச்சமயம் அப்பக்கமாய்ச் சென்ற அகுஸ்தீன் என்ற மாணாக்கனொருத்தன், தாயின் பிரலாபிப்புக்குக் காது கொடுத்து அவளைப் பார்த்து, "உன் பிள்ளையை என் அர்ச். ஸ்தனிஸ்லாசுக்கு ஒப்புக்கொடுத்து, அந்த அர்ச்சிய சிஷ்டவரின் உதவியை மன்றாடுகிறதில்லை? அர்ச். ஸ்தனிஸ்லாஸ் மோக்ஷத்தில் வெகு வல்லமை பெற்றவராகையால், நம்பிக்கையோடு அவர் அடைக்கலத்தை நாடுபவர்கள் வீணாய்ப் போகமாட்டார்கள்" என்று சொன்னான்.

பள்ளிப்பிள்ளை போதித்த உறுதிச்சொல்லைக் கேட்ட, அங்கு நின்றவர்கள் நகைத்தார்கள். தாயோவென்றால், மாணாக்கன் போதித்த புத்தியை நம்பி, உடனே முழங்காலிலிருந்து கொண்டு உறுதியான விசுவாசத்துடன்: "பரிசுத்த அர்ச். ஸ்தனிஸ்லாசே, நிர்ப்பாக்கியமான இந்தத் தாயின்பேரில் கருணைவைத்து உதவிபுரியும்" என்று கண்ணீர் சிந்தி வேண்டிக்



கொண்டாள். வேண்டுதல் முடிந்ததும், அவள் பிள்ளையாகிய ஸ்தனிஸ்லாஸ் அசையத்துவக்கினது. அவனுடைய கண்கள் சுபாவஸ்திதியடைய, பிள்ளை சரேலென்று எழுந்து நின்று பேசத்தொடங்கினது. அர்ச். ஸ்தனிஸ்லாசின் உதவியினால், மரித்த ஸ்தனிஸ்லாஸ் உயிர்த்தான். தாய்க்கு அப்போ உண்டான சந்தோஷத்துக்கோ அளவுண்டா?

இந்த ஆச்சரியத்தை 28 பேர் பரிசோதனை செய்து பெரிய புதுமை என்று அத்தாட்சி கொடுத்தார்கள். பள்ளிக்கூட மாணாக்கர்கள் நல்ல வார்த்தைகளினால் எவ்வளவு நன்மை சில சமயங்களில் செய்யக்கூடுமென்றும், இப்புதுமையிலிருந்து கண்டுகொள்ளுகிறோம்.

அர்ச். ஸ்தனிஸ்லாசின் சுய நாடாகிய போலண்டு தேசத்தில், அர்ச்சியசிஷ்டவர் புதுமையாக வியாதிஸ்தருக்கு அளித்த ஆரோக்கியத்துக்கு அடையாளமாகக் கட்டப்பட்ட பீடங்களும், சிறு கோவில்களும் நாளதுவரையில் பார்க்கலாம்.

பத்தொன்பது வயதுள்ள ஆல்பெர்ட் என்னும் வாலிபன் 1621-ம் வருஷம் சாந்தோமீர் சேசுசபை வித்தியாசாலையில் கல்விப்பயிற்சி கற்றுக்கொண்டிருக்கும்பொழுது வியாதியாக

விழுந்தார். வைத்தியர்களின் மருந்துகளினால் குணமடையாமல் சீக்கிரத்தில் மரண அவஸ்தையான ஆபத்தில் கிடந்தார். அவஸ்தைப்பூசுதலும் அவருக்குக் கொடுத்தாகிவிட்டது. மரணம் கிட்டிவிட்டதென்பதற்கு யாதொரு சந்தேகம் கிடையாது. அவருடைய தோழர்களெல்லாரும் அவருடைய மரண படுக்கையைச் சுற்றி முழங்காலிலிருந்து, மரிக்கிற ஆத்துமாக்களுக்காகச் சொல்லும் சங்கீதங்களை ஜெபித்துக் கொண்டிருக்கும்போது, "விட்லின்ஸ்கி" என்னும் சுவாமியார் இருதயத்தில் ஒரு நல்ல ஏவல் கிளம்பினது.

அங்கு முழங்காலிலிருந்த பிள்ளைகளெல்லாரையும் நோக்கி: "பிள்ளைகளே! அவஸ்தையாய்க் கிடக்கிற ஆல்பெர்ட்டை அர்ச். ஸ்தனிஸ்லாஸ் கையில் ஒப்படைத்து, அர்ச்சியசிஷ்டவர் ஆல்பெர்ட்டுக்கு நல்ல ஆரோக்கியத்தைக் கொடுக்கும்படி மன்றாடுவோமாக" என்று குருவானவர் சொல்ல, எல்லாருமாக வெகு உருக்கநேச விசுவாசத்துடன் அர்ச். ஸ்தனிஸ்லாஸைப் பார்த்து மரிக்கிறவருக்காக மன்றாடினார்கள். குருவானவரும் தம்மிடமிருந்த அர்ச். ஸ்தனிஸ்லாஸின் அர்ச்சியசிஷ்ட பண்டத்தை எடுத்து அவஸ்தையாயிருக்கிறவர் நெஞ்சில் வைத்தார்.



அர்ச்சியசிஷ்ட பண்டத்தை வைத்த அதே க்ஷணமே, பிரக்ஞையற்று அவஸ்தையாய்க் கிடந்தவர், நித்திரையிலிருந்து எழும்புகிறவரைப்போல திடீரென்று எழும்பினார். அர்ச். ஸ்தனிஸ்லாஸ் மரிக்கப்போனவருக்குப் பூரண ஆரோக்கியம் கொடுத்துவிட்டார். ஆரோக்கியமடைந்தவரும் சர்வேசுரனுக்கு நன்றிசெலுத்தும்படியாக, தே தேயும் என்னும் பாட்டை உடனே பாடினார்.

இந்த ஆல்பெர்ட் என்பவர் பிற்காலம் சேசுசபையில் சேர்ந்து, அர்ச். ஸ்தனிஸ்லாஸ் தமக்கடைந்தருளிய ஜீவியத்தை தேவ ஊழியத்தில் போக்கினார்.

அர்ச். ஆசீர்வாதப்பர் சபையில் மடாதிபதியாயிருந்த ஆந்திரேயாஸ் என்னும் குருவானவர் பிறந்த ஊர் அர்ச். ஸ்தனிஸ்லாஸ் பிறந்த ரோஸ்கோவென்னும் கிராமத்துக்கு சொற்பதூரத்திலிருந்தது. இவர் அர்ச். ஸ்தனிஸ்லாஸின் பேரில் விசேஷ பக்தியுள்ளவர்.

1640-ம் வருஷம் ஜூலை மாதம் ஆந்திரேயாஸ் என்னும் இந்த குருவானவர் வியாதியாய் விழுந்து, நாற்பது நாளுக்குமேல் வியாதி சௌக்கியப்படாமல், கடைசியாய் அவஸ்தையாய்க் கிடந்தார். அவருடைய சரீரத்திலுண்

டான பெலயீனத்தினால் கை காலை அசைத்து உயர்த்த முதலாய் சக்தியற்றவராயிருந்ததும் தவிர, வைத்தியர்களும் வியாதி சொஸ்தப்படாதென்று சொல்லிவிட்டார்கள்.

நன்மரணத்துக்காக சுவாமியார் "ஆயத்தம்" செய்து, சாவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அவர் கேட்டுக்கொண்டபிரகாரம் தபசின் அடையாளமாக அவர் தரையிலே கிடத்தப்பட்டு, கடைசித் தேவதிரவிய அநுமானங்களையும் பெற்றார். அன்றிரவுதானே மரிக்கிறவர்களுக்குச் செய்யப்படும் ஜெபங்களையும் சந்நியாசிகளெல்லாரும் கூடி ஒப்புக்கொடுத்தார்கள்.

ஏறக்குறைய நடுச்சாமத்தில் அவஸ்தையாயிருந்த மடாதிபதி, லாம்பர் ரோவிக்ஸ் என்னும் ஒரு சுவாமியாரை அழைத்து, அவரிடம் "நான் நாளை உதயகாலம் வரையில் உயிரோடிருக்க சர்வேசுரன் சித்தமிருக்குமேயானால், நீர் காலிஸ் கிராமத்து சேசுசபைக் கோவிலுக்கு விடியற்காலமே சென்று, முத்திப்பேறுபெற்ற ஸ்தனிஸ்லாசின் பீடத்தில் எனக்காகப் பூசை செய்யும்" என்று சொல்லி, அவரோடு பூசைக்கு இன்னொரு பட்டம் பெறாத சுவாமியாரையும் கூட்டிக்கொண்டு போகும்படி ஏவினார்.



நடுச்சாமத்துக்குப்பிறகு, தரையிலே படுத்திருந்த வியாதிஸ்தருக்கு நடுக்கம் கொண்டபடியால், திரும்பவும் கட்டிலில் தூக்கி அவரைக் கிடத்தினார்கள். காலை ஐந்து மணிக்குள்ளாக, குறிக்கப்பட்ட சுவாமியாரும் துணைவருமாக, பரிசுத்த ஸ்தனிஸ்லாஸ் பீடத்தில் அவஸ்தையாயிருந்த மடாதிபதிக்காகப் பூசை ஒப்புக்கொடுக்கப் போய்விட்டார்கள்.

அந்நிலையில் கை கால் அசைக்கக்கூடாமல் படுக்கையில் ஓரே கிடையாய்க் கிடந்த வியாதிஸ்தர், தம் கிட்ட யாரோ நிற்கிறதாக ரூபிகரித்து மறுபக்கம் புரண்டு படுத்தார். அப்படிப் புரளுகிறபோது அசைவற்ற தம் கையை உயர்த்தக்கூடியவரானார். வலி யாதொன்றுமின்றி கையை உயர்த்தினேமே என்று ஆலோசித்து, மறு கையையும் உயர்த்த முயன்றார். மறு கையும் யாதொரு வலியின்றி இருந்ததை வியப்புடன் கவனித்து, எழுந்து உட்கார்ந்து, தமக்கு முழு சௌக்கியம் கிடைத்ததாகச் சொன்னார். மேலும் அங்கு நின்றவர்களைக் கூப்பிட்டு, தம் உடுப்புகளைக் கொண்டுவரும்படி கேட்டார்.

வியாதியின் கொடூரத்தினாலுண்டான புத்திமயக்கத்தினால்தான் இவ்விதம் புலம்புகிறாரென்று கேட்டவர்கள் உத்தேசித்துக்கொண்டு,

மடத்திலுள்ள மற்றக் குருக்களைக் கூப்பிட ஓடினார்கள். அவர்களும் துரிதமாய் வந்து, வியாதிஸ்தருக்குண்டான பெலன் போன்றது அவஸ்தைக்கு அடையாளமானதால், மெய்யான பெலனல்லவென்று பலவாறாகப் போதிக்க ஆரம்பித்தார்கள். வியாதிஸ்தரோவென்றால், சர்வேசுரனும், முத். ஸ்தனிஸ்லாசும் தமக்கு முழு ஆரோக்கியம் அளித்ததாக வற்புறுத்திச் சொன்னார். தமக்காக அப்போதான் பரிசுத்த ஸ்தனிஸ்லாஸ் பீடத்தில், குறித்த சுவாமியார் பூசைப்பலி ஒப்புக்கொடுப்பதாகவும் ஸ்திரமாய் உரைத்தார்.

மேலும் அங்கியை மாட்டிக்கொண்டு கால் மைல் தூரமுள்ள சேசுசபைக் கோவிலுக்குப் பரிசுத்த ஸ்தனிஸ்லாசுக்கு ஸ்துதி செலுத்த நடந்து சென்றார். வழியில் அவரை விசாரித்த வைத்தியர்கள் இரண்டுபேரும், முந்தின இரவு மரண அவஸ்தையாயிருந்தவர் தைரியமாய்க் கல்லறைக்குப் பக்கத்தில் நடக்கிறதைச் சந்தித்துத் திகிலுடன் சிலுவை அடையாளம் வரைந்துகொண்டு, வியாதிஸ்தரை நோக்கி: "நீர்தானா?" என்று வினவினார்கள். அதற்குக் குருவானவர்: "நான் தான். இப்போ பூரண சௌக்கியமாயிருக்கிறேன். இந்த ஆரோக்கி



யம் உங்கள் உதவியினாலல்ல, ஆனால் சர்வேசுரனுடையவும், முத். ஸ்தனிஸ்லாசினுடையவும் செயலினாலானது" என்று மறுமொழி கூறினார்.

மடத்துக்குத் திரும்பினதும், வழக்கமாய் சாப்பிடுகிறதுபோலே பசியாறப் புசித்தார். மூன்றுநாட்கழித்து வெள்ளித்தட்டு ஒன்று செய்து, தமக்கடைந்தருளிய ஆரோக்கியத்துக்கு நன்றியறிதலாக முத். ஸ்தனிஸ்லாஸ் பீடத்தில் கட்டித் தூக்கினார். இப்புதுமை ஸ்தனிஸ்லாசின் அர்ச்சியசிஷ்டபட்டத்தின் பரிசோதனையில் எண்பிக்கப்பட்டதுகளில் ஒன்று.

1651-ம் வருஷம் கிரக்கோ என்னும் நகரிலுள்ள சீமோன் என்ற பெயர்கொண்ட உரொட்டித் தொழில் செய்கிறவன், உயரமான ஒரு இடத்திலிருந்து தவறிக் கீழே விழுந்தான். கீழே கிடந்த கூர்மையான கல் அவன் விழுந்த சமயத்தில் அவன் கண்ணின்மேல் குத்தி கண் விழியைக் கிழித்து அதில் குழி உண்டுபண்ணிற்று. இதனால் சிமோனின் கண் பார்வை கெட்டுப்போக, கண்ணிலுண்டான இரணத்தினால் வெகு உபாதனை அனுபவித்தான். இரண வைத்தியர்கள் தங்களாலானப் பிரயாசைப்பட்டுப் பார்த்தும், கண் பார்வையைச் சரிப்படுத்தக்கூடவில்லை. வலியைக் குறைத்து அமர்த்தக்

கூடிய அவுழ்தம் மாத்திரம் கொடுக்கக்கூடியவர்களானார்கள். கண் பார்வை கொடுக்க ஒருக்காலும் ஒருவராலும் சரிப்படாது என்றும் சொல்லிவிட்டார்கள்.

சிமோனின் நிற்பாக்கிய வருத்தத்தை அறிந்த ஒரு குருவானவர் அவனைப் பார்த்து: "சிமோனே, முத். ஸ்தனிஸ்லாசை அண்டி அவரைப் பார்த்துவேண்டிக்கொள். அவரிடம் கெட்டுப்போன உன் கண்ணையும், உன்னையும் முழுதும் ஒப்படைத்துவிடு; அவர் பேரில் நம்பிக்கை வைப்பாயானால் அழிந்துபோன கண்ணுக்குப் பதிலாய் நல்ல கண் தருவார்" என்றார்.

அதற்கு உரொட்டிக்காரன், "ஆனால் சுவாமி, பரிசுத்த ஸ்தனிஸ்லாஸ் யார்? அந்த அர்ச்சியசிஷ்டவரைப்பற்றி நான் ஒன்றும் அறியேனே. நான் பெரிய முட்டாள், அந்த அர்ச்சியசிஷ்டவருடைய சரித்திரத்தைப்பற்றி ஒன்றும் கேட்டதில்லையே" என்று மொழிந்தான். அதற்கு சுவாமி, அப்படியானால் நாம் உனக்கு அர்ச். ஸ்தனிஸ்லாசின் ஆச்சரிய சீவியத்தைப்பற்றி சில வரலாறுகளைச் சொல்லித் தருவோம். "அவர் வெகு பேர்போன அர்ச்சியசிஷ்டவர்" என்று சொல்லி, அர்ச். ஸ்தனிஸ்லாசின் சரித்திரத்



தைச் சுருக்கமாய் விளக்கிக் காட்டினார். மேலும் கிராக்கோ நகர் சேசுசபையாரிடமிருந்த, அர்ச். ஸ்தனிஸ்லாசின் விலா எலும்பாகிய அர்ச்சியசிஷ்ட பண்டத்தைத் தொட்ட சில பூக்களையும், சிமோன் கையில் குருவானவர் கொடுத்தார். அர்ச். ஸ்தனிஸ்லாசின் இரக்கத்தால் நடந்த புதுமைகளையெல்லாம் கேட்ட சிமோன் வெகு விசுவாச நம்பிக்கையுடன் அர்ச்சியசிஷ்டவருடைய விலாவெலும்பைத் தொட்ட பூக்களின் இதழ்களில் சிலதை எடுத்து குழி விழுந்திருந்த கண் மணியில் வைத்து, துணியினால் கண்ணைச் சுற்றிக் கட்டினான். இது நடந்தது அர்ச். ஸ்தனிஸ்லாசின் வருஷாந்திரத் திருநாளாகிய ஞாயிற்றுக்கிழமைக்கு முந்தின நாளாகிய சனிக்கிழமை.

மறுநாள் காலையில் புதுமையாக சிமோன் கண் பார்வை அடைந்ததுந்தவிர, கண்ணிலுண்டான இரணமும் முழுதும் சொஸ்தமானது. கண்ணைச்சுற்றி சொற்ப சிகப்பு நின்றதேயொழிய பழைய காயத்தின் அடையாளமுதலாய்த் தோன்றவில்லை. அர்ச். ஸ்தனிஸ்லாஸ் தன் கண்ணை முழுதும் புதுமையாகக் குணப்படுத்தினாரென்று சுவாமியாரிடம் போய் புதுக் கண்ணைக் காட்டினான்.

தொத்து நோய் பிடித்தவர்களில் அநேகர் அர்ச். ஸ்தனிஸ்லாசைப் பார்த்துப் பக்தியோடு வேண்டிக்கொண்டதினால் ஆரோக்கியமடைந்தார்கள்.

1625-ம் வருஷம் புலோரினு அன்னம்மாள் என்னும் பேர்கொண்ட கண் தெரியாத ஒரு ஸ்திரீ தொத்து வியாதியினால் வருந்தினாள். அவள் குடியிருந்த லூப்லின் என்னும் நகரில் இந்தத் தொத்து நோய் ஏராளமாய்ப் பரவி, அநேகரை மடியச் செய்துகொண்டிருந்தது. அவளுடைய குமாரனாகிய இஞ்ஞாசிக்கும் இதே வியாதி பிடித்து மரண அவஸ்தையாய்க் கிடந்தான்.

தொத்து நோய் தொத்திக்கொள்ளுமென்கிற திகிலினால் இந்த ஸ்திரீக்கும் அவள் மகனுக்கும் வந்து உதவி புரிவார் ஒருவருமில்லை. தொத்து நோய் பிடித்தவர்களை அண்டுவதற்கு முதலாய் அஞ்சினார்கள்.

ஆதரவற்ற கண் தெரியாத இந்த ஸ்திரீ தன்னாலே என்ன செய்யக்கூடும்? அர்ச். ஸ்தனிஸ்லாசை நினைத்து, அவருடைய ஒத்தாசையைத் தேடினாள். ஆதரவற்றுக் கிடக்கிற தாயையும் பிள்ளையையும் கருணை கூர்ந்து பார்க்கும்படி உருக்க நம்பிக்கையோடு அர்ச். ஸ்தனிஸ்



லாசைப் பார்த்து மன்றாடினாள். இரக்கமுள்ள அர்ச்சியசிஷ்டவர் தாய்க்கும், பிள்ளைக்கும் நல்ல ஆரோக்கியத்தைக் கொடுத்ததுந்தவிர, கண் தெரியாத தாய்க்குப் பார்வையையும் அளித்தார்.

அர்ச். ஸ்தனிஸ்லாசின் உதவியைத் தேடுகிறவர்கள் வீணாய்ப் போகமாட்டார்களென்பது நிச்சயம். ஒருத்தர் இருவர் மாத்திரமல்ல. ஆயிரக் கணக்கான ஜனங்கள் அவர் உதவியினால் தொத்து நோயிலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். இருபத்தொன்பதுபேர் அர்ச். ஸ்தனிஸ்லாசை நோக்கி வேண்டிக்கொண்டதினால் மாத்திரம் தொத்து நோயிலிருந்து சௌக்கியம் பெற்றதாக பியாஸ்கி என்னும் பட்டணத்தில் வாக்குமூலம் கொடுத்தார்கள்.

1629-ம் வருஷம் லூப்லின் நகருக்கு அருகாமையிலிருந்த பியாஸ்கி பட்டணத்தில் கொடூரமான தொத்து நோய் அகோரமாய்ப் பரம்பி அநேகாநேகம்பேர் மரணத்துக்குக் காரணமாயிருந்தது. ஆயிரக் கணக்கான ஜனங்கள் மடிந்தார்கள். தொத்துநோய் பிடித்து சாக மாட்டோமென்று பயமின்றி திடமாயிருந்தவர்கள் ஒருவரும் கிடையாது.

அந்த ஊரிலுள்ள ஜனங்களில் அநேகம் பேர் ஆரிய பதித மதஸ்தர். ஆனாலும் அர்ச். ஸ்தனிஸ்லாசின் மூலமாக நடக்கும் வினோத புதுமைகளை வியப்புடன் கேட்டு, பதித மதஸ்தரும் கிறீஸ்துவர்களோடு சேர்ந்து அர்ச்சியசிஷ்டவரின் அடைக்கலம் புகுந்தார்கள். பக்கத்திலிருக்கும் ஞாப்லின் நகரில், சேசுசபையாரின் மடத்தில் அக்காலம் புதுமையான அர்ச். ஸ்தனிஸ்லாஸ் சுரூபம் ஒன்று இருந்தது. அந்தச் சுரூபத்தை தங்கள் ஊருக்குக் கொண்டுவந்து சுற்றுப்பிரகாரம் செய்தால், தொத்துநோய் அடியோடு நின்றுபோம் என்கிற நம்பிக்கைக் கொண்டார்கள். ஆகையால் கத்தோலிக்கரும் பதிதரும் ஒன்றுகூடி, சேசுசபையார் அந்தப் புதுமையான சுரூபத்தை நாலைந்து நாளைக்கு தங்கள் ஊருக்கு இரவலாய்க் கொடுக்கும்படி மனு கொடுத்தார்கள். கத்தோலிக்கர் கோவிலில் சுரூபத்தை ஸ்தாபித்து, அங்கு பதிதர்களும் போய் ஆராதனை செய்வதாகவும் வாக்குக் கொடுத்திருந்தார்கள்.

அவர்கள் ஆசைக்கிணங்கி அர்ச்சியசிஷ்டவரின் சுரூபம் அவர்கள் பட்டணத்துக்கு அனுப்பப்பட்டது. பதிதர்களும், கத்தோலிக்கருமாக ஆறாயிரம் ஜனங்கள் அர்ச்சியசிஷ்ட ஸ்தனிஸ்



லாசின் சுரூபத்தை ஏற்றுக்கொள்ள எதிர்கொண்டு சென்றார்கள். மேளதாளங்கள் கின்னாரம், தம்புரு, முரசு, பேரிகை முதலிய சகல கீதவாத்தியங்களும் ஒன்றாய்ச் சேர்ந்து, இன்பமாய் முழங்க, தேவகீர்த்தனைகளை இனிய சுரலோடு பாடி சுரூபத்தை எதிர்கொண்டார்கள். அங்கு கூடின சகலரும் அர்ச்சியசிஷ்டவரை நோக்கி வேண்டிக்கொண்ட செபங்களானது கடலைப்போல இரைந்தன. அவர்களுடைய விசுவாசத்துக்கு யாதொரு குறையில்லை. மங்களம், மங்களம், எங்கள் அர்ச்சியசிஷ்ட ஸ்தனிஸ்லாசுக்கு மங்களம், சர்வேசுரனுக்கு ஸ்துதி என ஆர்ப்பரித்து கரகோஷ்டம் செய்து பாடிக்கொண்டு அர்ச். ஸ்தனிஸ்லாசின் சுரூபத்தோடு பியாஸ்கி பட்டணம் நுழைந்தார்கள். அந்த க்ஷணமேதானே, மோக்ஷ பாக்கியத்திலிருந்து இந்த ஜனங்களின் உயிருள்ள பக்தியைக் கண்ணுற்ற அர்ச். ஸ்தனிஸ்லாஸ், உடனே தொத்துநோயை நிறுத்தினார். அநேகம் பதிதரும் அவர்கள் தப்பறையை விட்டு மனந்திரும்பி மெய்யான வேதத்தைச் சேர்ந்தார்கள்.

இதுபோன்ற மற்றநேக ஊர்களிலும் இவ்வித புதுமை அர்ச். ஸ்தனிஸ்லாசின் ஒத்தாசையினால் நடந்தேறின. போலண்டு தேசத்தில்

பேர்பெற்ற நகர்களாகிய போசன், லூப்லின், வார்சா என்கிற பட்டணங்களும், மற்றனேக சிறுகிராமங்களும், அர்ச்சியசிஷ்டவரால் அடைந்த ஆச்சரிய புதுமைகளுக்குப் பகிரங்கமான அத்தாட்சி கொடுத்திருக்கின்றன.

அர்ச். ஸ்தனிஸ்லாஸ் புதுமை செய்ததோடு கூட சமயா சமயங்களில் காட்சியும் கொடுத்திருக்கிறார். 1623-ம் வருஷம் போலண்டு தேசத்தில் லியோப்பால் என்னும் நகரில் சில வீடுகள் தீப்பற்றி எரிந்தன. போலண்டு தேசத்தில் வெகுவாய் மரத்தினால் வீடுகள் கட்டுவது வழக்கம். ஆகையினால்தான் வெகு சுளுவாய் நெருப்புப் பிடிக்கக்கூடியதானதுகள். அந்த மனைகள் தீப்பற்றி எரியும்போது பெரும் புசல் காற்று அடித்ததினால், எரிந்த நெருப்பை இலகுவில் அவிக்கக்கூடவில்லை. மேலும் இராக்காலமானபடியால், தக்க உதவி சமயத்தில் அகப்படுவது கஷ்டமாயிருந்தது. காற்றின் அகோரத்தினால் நெருப்பின் சுவாலைகள் மேற்கொண்டு பக்கத்து வீடுகளும் தீப்பற்றினதுந்தவிர, வீதிக்கு வீதி நெருப்பு தாவினது. மேலும் வீசின காற்றானது எரிந்த நெருப்புக்கு எண்ணெய் விட்டாப்போல் நெருப்புக் கங்குகள் வீட்டுக்கு வீடு பறந்தது. சொற்ப நேரத்துக்குள் ஊரெல்



லாம் ஒரே நெருப்பும், ஒரே சுவாலையுமாகத் தோன்றினது. இன்னம் கொஞ்ச நேரத்துக்குள் ஊர் முழுதும் அழிந்து சாம்பலாய்ப்போயிருக்கும்.

இந்தப் பரிதாபத்துக்குரிய நிலைமையில் பெரியோரும், சிறியோரும், ஆணும், பெண்ணும், குழந்தைகளும், வீடுகளைவிட்டு வெளியே ஓடி, அர்ச். ஸ்தனிஸ்லாசை மன்றாடத் துவக்கினார்கள்.

“ஓ! பரிசுத்த ஸ்தனிஸ்லாசே! எங்களுக்கு இச்சமயம் உதவியாயிரும். உம்மைவிட்டு நாங்கள் யாரண்டை போகக்கூடும். மாசற்ற அர்ச்சியசிஷ்டவரே, வாலர்களின் பாதுகாவலரே, எங்கள் பிள்ளைகளின்பேரில் இரக்கமாயிரும். இந்த ஆபத்தினின்று எங்களை இரட்சியும். மனுஷர் உதவியினால் இப்போ ஒன்றும் செய்யலாகாது. உம்முடைய கரத்தை நீட்டி, பரலோக புதுமையினால் இந்த நெருப்பை அவியும்” என்று ஒரே கூக்குரலாய் எல்லாரும் பஞ்சரித்துக் கெஞ்சினார்கள். அவர்களின் மன்றாட்டும் வீணாய்ப்போகவில்லை.

அவர்களுடைய பரிதாப நிலைமையைக் கண்ணுற்று, அவர்களுடைய விசுவாச நம்பிக்கை நிறைந்த ஜெபத்தையும் கேட்ட அர்ச். ஸ்தனிஸ்

லாஸ், அவர்களுக்கு ஒத்தாசை செய்யப் பரலோகத்திலிருந்து பூலோகத்துக்கு இறங்கினார். நகரின் மதில்களின் பற்பல இடங்களிலும், கோட்டைச் சுவர்களிலும் சோதிடப் பிரகாசம் ஜொலிக்கும் கதிர்களுக்கு நடுவில், அர்ச். ஸ்தனிஸ்லாஸ் தோன்றினார். அனேக ஜனங்கள் அர்ச்சியசிஷ்டவர் ஆகாசத்தில் ஞானப்பிரகாசக் கதிர்களுக்கு நடுவே அந்தாயமாய் நிற்கிறதைக் கண்ணினால் தரிசித்தார்கள்.

ஊருக்குள்ளேயும் பல இடங்களில் அர்ச்சியசிஷ்டவர் காட்சி கொடுத்தார். அங்கு அவரைக் கண்டவர்களுக்கு, அவர் தாம் அணிந்திருந்த அங்கியின் வஸ்திரத்தினால், ஆடிக்கொண்டிருந்த அலைகள் போன்ற சுவாலைகள் தூரமாகப் பரவாதபடி தடுத்துக்கொண்டிருந்ததாகத் தோன்றினார். மேலும் நெருப்பின் சுவாலைகள் அவியுமட்டும் அவருடைய வஸ்திரத்தினால் அவைகளை இங்குமங்குமாக ஆட்டித் தணிக்கப் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்ததாகவும் தென்பட்டது. இவ்விதமாக அவருடைய விசேஷ ஒத்தாசையினால் ஊர் முழுதும் அழியாமல் காப்பாற்றப்பட்டது.

ஆயிரக் கணக்கான பிரஜைகள் இந்த ஆச்சரியப் புதுமை தரிசனத்துக்கு அத்தாட்சி



கொடுத்திருக்கிறார்கள். எல்லாரும் ஒருமிக்க, அவர்களுக்கு நேரிட்ட ஆபத்தில் அர்ச். ஸ்தனிஸ்லாசின் அடைக்கலம் புகுந்ததைப்பற்றியும் விபரீதமாய் எண்ணக்கூடாது. ஏனெனில் அர்ச். ஸ்தனிஸ்லாசின் பத்தி போலண்டு தேச முழுதும் வெகுவாய்ப் பரவி, அவர் உதவியினால் நடந்த அனேக புதுமைகளினால் எல்லாரும் அவர்பேரில் விசேஷ பத்தியுள்ளவர்களாயிருந்தார்கள்.

போலண்டு தேசத்தாராகிய ஸ்தனிஸ்லாஸ் திரப்ப சென்ஸ்கி என்பவருக்கு, அர்ச்சியசிஷ்டவர் செய்த புதுமையைப்பற்றி எழுதிவைத்திருக்கிறதாவது: ‘‘ஐந்து வருஷங்களுக்குமுன் ஜுலை மாதக் கடைசியில் நான் வியாதியாக விழுந்தேன். வியாதியின் கொடூரத்தினால் நாளாவட்டத்தில் வெகு பெலவீனப்பட்டு மரண அவஸ்தையாய் வருந்தினபடியால் அவஸ்தைபூசுதலும் பெற்றேன்.

இவ்விதம் குற்றுயிராய்க் கிடக்கும்போது, ஒருநாள் திடீரான ஒரு பூதம் நான் படுத்திருந்த கட்டிலுக்கெதிரே வருகிறதைக் கண்டேன். பார்வைக்கு அந்தப் பூதம் வெகு அவலட்சணமாயிருந்தது. என் பக்கமாய் அது நெருங்கினதும், என் கட்டில் அதிர்ந்து இங்குமங்குமாக

ஆடினது. என்னைப் பார்த்து அந்தப் பூதம், "நீ சாவாய், செத்தவுடன் உன்னை என்னோடு நரகத்துக்கு இழுத்துக்கொண்டு போவேன், பார்" என்று பயங்கரமான வார்த்தைகளை உச்சரித்தது.

இதைக் கேட்டதும், அந்த அவலட்சண ஜெந்துவைப் பார்த்ததும், என் இரத்தம் தண்ணீராக ஓடி, மயிரெல்லாம் சிலுத்து நின்றது. உடனே சிலுவை அடையாளத்தை வரைந்து கொண்டு, எனது பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவர்களையும், தேவமாதாவையும், பரிசுத்த ஸ்தனிஸ்லாசையும் பார்த்து மன்றாடி, அவர்களின் சனுவைக் கோரினேன்.

இதோ, எவ்வளவு ஆச்சரியம்! அக்ஷணமே சேசுசபை உடையை அணிந்த முத். ஸ்தனிஸ்லாஸ் என் கட்டிலின் வலது பக்கத்தில் நிற்கிறதைக் கண்டேன். அவரைக் கண்டபோது, நான் நித்திரையாய் இருந்தேனென்று உத்தேசிக்கலாகாது. முழுதும் விழித்திருந்து, அவர் அச்சமயம் எனக்குச் சொன்ன ஆறுதலான வார்த்தைகளைத் தெளிவாய்க் காது கொடுத்துக் கேட்டேன். அதாவது: "அஞ்சவேண்டாம் தம்பி, நீ நல்ல சௌக்கியமடைவாய். பரம திரித்துவமும், தேவதாயும் உனக்கு உதவி புரி



யும்படி அவர்களை நோக்கி வேண்டிக்கொள்" என்று வார்த்தைகளை மொழிந்ததும், அர்ச்சியசிஷ்டவர் மறைந்துபோனார்.

நான் நடந்த புதுமையின் விசேஷத்தை என் பங்கு சுவாமியாருக்கும், என் மனைவிக்கும், மற்றனேகருக்கும் அறிவித்தேன். மேலும் அர்ச். ஸ்தனிஸ்லாஸ் தரிசனை கொடுத்த ஒரு மணி நேரத்துக்குப்பின் நல்ல ஆரோக்கியம் பெற்றேன்.

1821-ம் வருஷம் வார்டா என்னும் நதியின் மேற்புறம் கொடிய குளிரினாலே உறைந்து பனிக்கட்டியாயிருந்தது. சீமையில் இவ்விதமாக நதிகள் உறைந்துபோகிறது சாதாரண காரியம். உறைந்த அந்த நதியின்மேல் அனேகம் சிறுபிள்ளைகள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் ஸ்தனிஸ்லாஸ் என்று பேர்கொண்ட பத்து வயதுள்ள லுத்தேர் பதிதமதஸ்தனான ஒரு பாலனும் விளையாடிக்கொண்டிருந்தான். அவர்கள் விளையாடிக்கொண்டிருந்த இடத்துக்கருகாமையில் மேலே உறைந்திருந்த பனிக்கட்டி உடைந்து ஒரு குழி உண்டாயிருந்தது. அந்தக் குழிக்குக் கீழே ஆற்றுத்தண்ணீர் ஓடினது.

பிள்ளைகள் விளையாட்டு மும்முரத்தில், கோபத்தினாலேயோ, தற்செயலாகவோ ஸ்தனிஸ்லாஸ் என்ற பாலனைப் பிடித்து அப்பாலே தள்ளினதால், அப்பாலன் அக்குழியில் உருண்டு கீழே ஓடின ஆற்றுத் தண்ணீரில் விழுந்தான். விழுந்ததும் பையனைத் திரும்பிக் காணக்கூடவில்லை. ஆற்றின் மேற்பரப்பு மாத்திரம் உறைந்து பனிக்கட்டியாயிருந்தபடியால், கீழே இருந்த தண்ணீர் ஓட்டம், பிள்ளையை அடித்துக் கொண்டு போய்விட்டது.

மற்றப் பிள்ளைகளெல்லாரும் கதறிக் கூக்குரலிட்டதைக் கேட்டு ஜனங்கள் கூடி நதியில் விழுந்த பிள்ளையைத் தேடினார்கள். அநேக மணி நேரம் தேடியும் பையன் தென்படவில்லை. அச்சமயம் அப்பக்கமாய் உலாவிக் கொண்டிருந்த சேசுசபைச் சுவாமிமார் சங்கதியென்னவென்றறிந்து வெகு கிலேசப்பட்டார்கள். அவர்களுக்குள்ளொருவர் தேவ ஏவுதலால் தூண்டப்பட்டு முழங்காலிலிருந்து, மற்றவர்களையும் முழங்காலிலிருக்க ஏவி, அர்ச். ஸ்தனிஸ்லாஸைப்பார்த்து பிள்ளையைக் காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டார்கள். ஜெபம் முடிந்ததும், புதுமையாக ஆற்றிலே கிடந்த மரக் கொம்பினால் தடுக்கப்பட்டுக்கிடந்த பையன்,



கண்ணாடிபோன்ற இலேசான பனிக்கட்டி மூலியமாய் தென்பட்டான்.

பிள்ளையைத் தூக்கிக் கரையில் கிடத்தினதும், செத்த பிணம்போலத்தான் தோன்றினது. வைத்தியனைக் கூப்பிட்டு சோதிக்கச் செய்தார்கள். பிள்ளையைப் புதைக்கக் குருவானவர் அவசரமேயொழிய, வைத்தியன் அவசரமில்லையென்று, வந்த வைத்தியர் கூறினார்.

பையனைக் கண்டுபிடிக்க அர்ச். ஸ்தனிஸ்லாஸை மன்றாடின குருவானவர், பிள்ளைக்கு உயிர் கொடுக்கும்படியும் மன்றாடினார். அங்கிருந்தவர்களில் அநேகரும் அவரோடு முழங்காலிலிருந்து விசுவாச நம்பிக்கையோடு வேண்டிக்கொண்டார்கள். அர்ச். ஸ்தனிஸ்லாஸின் அடைக்கலத்தை நாடினவர்கள் கைவிடப்படமாட்டார்கள்.

ஜெபம் முடிந்ததும் செத்தவன்போல் கிடந்த பையன் அசையத்துடங்கினான். கொஞ்ச நேரத்தில் அவன் மயக்கமெல்லாம் தெளிந்து, சிலமணி நேரத்துக்குள்ளாக உல்லாசமாக விளையாடினான்.

ஆனால் இந்த ஸ்தனிஸ்லாஸ் என்ற பையன் யூதர் மதக் குடும்பத்தில் பிறந்தவனானாலும், அர்ச். ஸ்தனிஸ்லாஸ் செய்த புதுமையானது

அவனை மனந்திருப்பினது. தகப்பனிடம் சத்திய திருச்சபையில் சேரும்படி உத்தரவு கேட்டான். பிள்ளைக்கு நேரிட்ட ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டது தெய்வ செயலென்று தகப்பனுக்குப் பட்டப்பகல்போல் விளங்கினபடியால், தகப்பன் பிள்ளை கேட்ட உத்தரவுக்கு யாதொரு தடைசெய்யவில்லை. பாலனான ஸ்தனிஸ்லாசோடு அவனுடைய இரண்டு சகோதரிகளும் மனந்திரும்பினார்கள். தகப்பன் மனந்திரும்பாததற்குக் காரணம், அவனுடைய முகத்தாக்ஷணியமே. ஆனால் தன் பிள்ளைக்கு அர்ச். ஸ்தனிஸ்லாஸ் வழியாக நடந்த பெரிய புதுமையை என்றும் நன்றியறிந்தமனதோடு ஒப்புக்கொள்வான். அர்ச். ஸ்தனிஸ்லாஸ் செய்த புதுமையில், தன் பிள்ளைக்குச் சரீர உயிரைக் கொடுத்ததைவிட, ஆத்தும உயிரைக் கொடுத்தது பெரிய புதுமையும் வாழுமென்று தகப்பன் கண்டுபிடிக்கவில்லை.

இந்த அதிகாரத்தை முடிக்குமுன், அர்ச். ஸ்தனிஸ்லாசின் புதுமையான படங்களைக் குறித்து ஒருவார்த்தையாகிலும் சொல்லவேணும்.

போலண்டு தேசத்தில் லூப்லின் என்னும் பட்டணத்திலுள்ள சேசுசபைக் கோவிலில்



அர்ச். ஸ்தனிஸ்லாசின் புதுமையான படம் ஒன்று பூச்சியமாகக் காப்பாற்றப்பட்டு வந்தது. அந்தப்படம் ஆதியில் "ஜான்குஸ்கார்ஸ்" என்னும் ஒரு தையற்காரனுடைய சிறு குடிசையில் தொங்கினது. 1632-ம் வருஷம் ஜூலை மாதம் 31-ம் தேதி, தையற்காரனும், அவன் மனைவியும், அவனுடைய ஒரு பெண் குழந்தையுமாக சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுது, அந்தப் பெண் குழந்தை முதல் விசையாக, சுவற்றில் தொங்கின அர்ச். ஸ்தனிஸ்லாசின் படம் கண்ணீர் விடுகிறதைக் கண்டது. தாயும் தகப்பனும் மற்ற சமயங்களிலும் அதே படம் கண்ணீர் விடுகிறதைக் கண்டு, இப்புதுமையை அவ்ஊரிலுள்ள சேசுசபைச்சுவாமிமார்களுக்கு அறிவித்தார்கள். சுவாமிமார்கள் வெகு நுணுநுணுக்கமாய் சோதனைசெய்து, படம் மெய்யாகவே கண்ணீர் விடுகிறதை தாங்களும் பார்வையிட்டு பலவிதமாய் எண்பித்த பிறகு, அப்புதுமையான படத்தைப் பூச்சியமாக கோவிலில் கொண்டுபோய் வைத்தார்கள். ஜனங்களில் அனேகம் பேரும் அந்தப் படம் கண்ணீர் விடுகிறதை பலதரம் பார்த்தார்கள்.

இதைப்போன்ற இன்னொரு அர்ச். ஸ்தனிஸ்லாஸ் படமும் புதுமையாகக் கண்ணீர்விட்டது.

இந்தப் படம் கிரக்கோ நகரில் சேசுசபையார் மடத்தில் காப்பாற்றப்பட்டுவந்தது.

அர்ச். ஸ்தனிஸ்லாஸ் மரித்துவிட்டாலும், அவர் செய்த சொல்லிலடங்காத புதுமைகளினாலே உலகத்தில் இன்னம் அவர் சீவித்ததாக விளங்கினது. அர்ச். ஸ்தனிஸ்லாஸ் மரித்த வருஷத்திலேயே அர்ச். ஞானப்பிரகாசியார் பிறந்தார்.

முற்றிற்று.



## அர்ச். ஸ்தனிஸ்லாஸை நோக்கி வேண்டிக்கொள்ளும் ஜெபம்.

மகா நேசத்துக்குரிய ஸ்தனிஸ்லாசே! உமது அன்பும் மாசற்றதனமும் பத்திசுவாலகருக்குச் சரியொத்த தாமே. உமது உதவியை இரந்து கேட்க உமது ஊழியருஞ் சகோதரருமாகிய நாங்கள் உமது சந்நிதானத்தில் கூடியிருப்பதை நோக்கியருளும். சிறு குழந்தை ரூபமாய் வந்த சேசுக்கிறீஸ்துநாதரை உமது கரங்களிலேந்தி அவரை அனுபவித்தபோதும், சம்மனசானவர் உமக்குத் தந்த தேவநற்கருணையில் அவரை உட்கொண்டபோதும், அவருக்குநீர் காண்பித்த அன்பினாலும் பின்னும் அநேகம் விசை உமக்குக் காட்சி தரச் சித்தமான பரிசுத்த தேவமாதாவின்பேரிலே நீர் வைத்த பக்ஷத்தினாலும், பாவத்தின் எவ்விதக் கறையினின்று எங்களைத் தற்காத்தருள உம்மை மன்றாடுகிறோம். பாவத்தின் பேரை மாத்திரங் கேட்டதால் உம்மை நடுங்கச் செய்த பயத்தை எங்களுக்குத் தந்தருளும். நித்திய பாக்கியத்தின்பேரில் உயர்ந்த எண்ணத்தை எங்கள் இருதயத்தில் பதிப்பித்தருளும். இலௌகீக செல்வத்துக்காகவல்ல, நித்திய பாக்கியத்துக்காகமாத்திரம் நாங்கள் பிறந்ததென்றும், அதற்காகவே சீவிக்க வேண்டியதென்றும் உம்மிடத்தில் ஊன்றியிருந்த இந்தப் பரம போதகத்தை எங்கள் இருதயங்களில் ஊன்றச் செய்யும். விசேஷமாய்ச் சேசுக்கிறீஸ்துநாதருடைய மகா நேசத்துக்குரிய மூன்று பரம இரகசியங்களாகிய அவருடைய சிறுபத்தின் பரம இரகசியத்திலும்,

தேவநற்கருணையின் பரம இரகசியத்திலும், அவருடைய பாடுகளின் பரம இரகசியத்திலும், அவரை உருக்கமாய் நேசிக்க நாங்கள் வரம் பெறச்செய்தருளும். உம்மைக் கண்டுபாவித்து நாங்கள் செய்கிற எவ்வித சொற்பக் கிரியைகளிலும் அவரை மன்றாடி, அவருடைய ஆசீர்வாதத்தைக் கேட்டு நடக்கும்படிக்கு அவரை மன்றாடும். பரிசுத்த அந்தஸ்திலே நாங்கள் நீடித்திருக்கச் செய்தருளும். எங்களுக்கு மிகவும் பிரிய நேசருமாய்ப் பாதுகாவலருமாயிருக்கிற அர்ச். ஸ்தனிஸ்லாசே! நாங்கள் இந்தப் பரதேசத்திலிருக்குமளவும் எங்களைக் காப்பாற்றி ஆண்டு நடத்தவுஞ் சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு இருதயத்திலுந் தேவமாதாவினுடைய இரு கரங்களிலும் உம்மைப்போலே பாக்கியமான மரணத்தையடைய நாங்கள் பேறுபெறவுஞ் செய்தருளவேணுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம், ஆமென்சேசு.

---

## அர்ச். ஸ்தனிஸ்லாசுக்குச் சிறுபிள்ளைகள் தங்களை ஒப்புக்கொடுக்கும் ஜெபம்.

அர்ச். ஸ்தனிஸ்லாசே! சம்மனசுவைப்போல பரிசுத்தமுள்ள அர்ச்சியசிஷ்டவரே! அடியேன் (இன்னான்) உம்மை என்னுடைய விசேஷ பாதுகாவலாகவும், என் அடைக்கலமாகவும், இன்று தெரிந்துகொள்ளுகிறேன்.

253 –



உம்மைப்போல நானும் ஆத்துமத்திலும், சரீரத்திலும், பரிசுத்தமுள்ளவனாயிருக்கும்படி, சர்வேசுரனிடத்தில் எனக்காக மன்றாடும். எந்தப் பாவத்தாலும் நான் என்னை அசுத்தப்படுத்தாதபடி என்னைக் காப்பாற்றும். எனக்கு வரும் எந்தப் பாவ சோதனையிலும் நான் விழாதபடி, தேவ உதவி எனக்கு உண்டாகத்தக்கதாக, கிருபை செய்யும்.

தேவமாதாவை உம்மைப்போல, நான் தாயாராய்ச் சிநேகித்து, அந்தத் தாயாருக்குப் பிரியமுள்ளவனாய் எப்போதும் நடக்கும்படி எனக்கு உதவிசெய்யும்.

சம்மனசுக்களின் போசனமாகிய தேவநற்கருணையை உம்மைப்போல நானும் பத்தி விசுவாசத்தோடு அடிக்கடி வாங்கும்படியாக, நான் சுத்தமான இருதயமுள்ளவனாகச் செய்தருளும்.

கடைசியாய், உம்மைப்போல நானும் தேவமாதாவின் திருக்கரத்தில் பாக்கியமாய் மரித்து மோக்ஷத்துக்கு வரும்படியாய் எனக்காக தேவமாதாவிடத்திலும், சேசுநாதரிடத்திலும் மன்றாடும்படி உம்மை நான் கெஞ்சி மன்றாடுகிறேன், ஆமென்சேசு.

---

## அர்ச். ஸ்தனிஸ்லாஸ் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலேயிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரா,—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

அர்ச். தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,—எங்களைத்தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

அர்ச். ஸ்தனிஸ்லாசுக்கு மாதாவும் பரிபாலியுமான அர்ச். மரியாயே,

அர்ச். ஸ்தனிஸ்லாசே,

கன்னித்தாயாருக்கு மகா சுறுசுறுப்புடனே ஊழியஞ் செய்துவந்த அர்ச். ஸ்தனிஸ்லாசே,

தேவமாதாவினாலே சேசுசபைக்கு அழைக்கப்பட்டவரான அர்ச். ஸ்தனிஸ்லாசே,

சர்வேசுரனுடைய அழைப்புக்கும் இஷ்டப் பிரசாதத்துக்கும் பிரமாணிக்கமுள்ளவரான அர்ச். ஸ்தனிஸ்லாசே,

அர்ச். இஞ்ஞாசியாருக்கு மிகவும் பிரியமுள்ள ஞானப்புத்திரனான அர்ச். ஸ்தனிஸ்லாசே,

சேசுசபைக்கு மிகவும் அலங்காரமான அர்ச். ஸ்தனிஸ்லாசே,

உலகத்தையும் ஐசுவரியத்தையும் நிந்தித்த அர்ச். ஸ்தனிஸ்லாசே,

[எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.]



சகல அபேட்சைகளையும் அடக்கின அர்ச். ஸ்தனிஸ்லாசே,

சந்நியாசத்தின் ஒழுங்குகளை நுணுநுணுக்கமாய் அநுசரித்துவந்த அர்ச். ஸ்தனிஸ்லாசே,

பீடத்திலே மறைந்திருக்கிற பலியின்பேரிலே மகா பத்தியுடைத்தான அர்ச். ஸ்தனிஸ்லாசே.

பரலோக வரப்பிரசாதத்தின் பொக்கிஷமான அர்ச். ஸ்தனிஸ்லாசே,

கீழ்ப்படிதலுக்கும் தாழ்ச்சிக்கும் மாதிரிகையான அர்ச். ஸ்தனிஸ்லாசே,

சுவிசேஷ தரித்திரத்தைப் பின் சென்ற அர்ச். ஸ்தனிஸ்லாசே,

சுத்தத்திலும் பத்தியிலும் அடக்கவொடுக்கத்திலும் கண்ணாடியான அர்ச். ஸ்தனிஸ்லாசே,

நடக்கையிலும் ஒழுக்கத்திலும் சம்மனசான அர்ச். ஸ்தனிஸ்லாசே,

விசுவாசத்தினாலும் ஆசையினாலும் வேதசாட்சியான அர்ச். ஸ்தனிஸ்லாசே,

பத்தி நிலைமையிலே ஸ்துதியரான அர்ச். ஸ்தனிஸ்லாசே,

புத்தியிலும் சரீரத்திலும் பரிசுத்தரான அர்ச். ஸ்தனிஸ்லாசே,

சகல புண்ணியங்களிலும் கொஞ்சத்துக்குள்ளே தேறின அர்ச். ஸ்தனிஸ்லாசே,

பூர்வீக மேன்மையும் அலங்காரமும் மகிமையுமான அர்ச். ஸ்தனிஸ்லாசே,

உம்மைப் பிரார்த்திக்கிறவர்களுக்குத் தஞ்சமும் இரட்சணியமுமாகிய அர்ச். ஸ்தனிஸ்லாசே,

[எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.]

நோயாளிகளுக்கு அடைக்கலமும் அவுஷதமுமான அர்ச். ஸ்தனிஸ்லாசே,

வாலிபர்களுக்கு மாதிரிகையான அர்ச். ஸ்தனிஸ்லாசே,

சீவியத்திலும் மரணத்தின் பின்பும் புதுமையிற் பிரபலியமான அர்ச். ஸ்தனிஸ்லாசே,

பரம வீட்டில் மட்டில்லாப் பாக்கியம் பெற்று வாழும் அர்ச். ஸ்தனிஸ்லாசே,

ஒ. பி. இ. [illegible]

உலகத்தின் பாவங்களை..........மற்றதும்.

மு.—நாங்கள் சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்குப் பாத்திரவான்களாகத்தக்கதாக,

து.—அர்ச். ஸ்தனிஸ்லாசே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரா சுவாமீ! உமது ஞானத்தின் மற்ற அற்புதங்களுக்குள்ளே இளம்பிராயத்திலே முதிர்ந்த அர்ச்சியசிஷ்டதனத்தின் வரப்பிரசாதத்தை அர்ச். ஸ்தனிஸ்லாசுக்குத் தந்தருளினீரே, நாங்கள் அவருடைய மாதிரிகையின்படியே அதிக சுறுசுறுப்பாய்ப் பிரயாசைப்பட்டுக் காலத்தைக் கடந்து நித்திய இளைப்பாற்றியிற் சேர நாங்கள் தீவிரிக்கக் கிருபை செய்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவின் திருமுகத்தைப்பார்த்து எங்களுக்குத் தந்தருளுஞ் சுவாமீ, ஆமென்சேசு.



## அர்ச். ஸ்தனிஸ்லாஸின் ஸ்துதி.

இராகம்-பியாகு-ரூபகதாளம்.

**பல்லவி.**

ஸ்துதியே உன் பதமே நிதமே.

**அநுபல்லவி.**

மதுமலர் நிகர் உலகின் மாய்கையில்
மாசிலாதொளிர் ஸ்தனுசிலாசுவே.

**சரணங்கள்.**

1. கிளையா சொல்லா முறையாய்—உளையா
வினைசெய்யும் பவம் பொல்லாத் தீதென
விலக்கி நீக்கிய ஸ்தனுசிலாசுவே. (ஸ்துதி.)

2. பவமே கொடிய விஷமே—அவமே
அவமாய் மானிடர் நரகில் வீழ்ந்திட
அடுத்ததென்றதை விடுத்த தூயோனே. (ஸ்துதி.)

3. அணையாய் என்றும் துணையாய்—பிணையாய்
கணமேனும் பேயின் வினையில் சிக்கிடாக்
காத்திடாய் என்னை ஸ்தனுசிலாசுவே. (ஸ்துதி.)

4. அளிப்பாய் அருளைத் தெளிப்பாய்—களிப்பாய்
பழித்த பேய்தலை மிதித்த மாமரி
பாலகன் கையில் வாங்கப்பெற்றவா. (ஸ்துதி.)

(தேவ ஸ்தோத்திரக் கீர்த்தனைகள்.)

2596
117169
2/124

# பொருள் அட்டவணை.


| அதிகாரம். | பொருள். | பக்கம். |
|---|---|---|
| | ஆரம்பம் ... ... ... | 1 |
| 1 | பிறப்பும், வளர்ப்பும் ... ... | 10 |
| 2 | வியன்னா பட்டணத்துக்கு கல்வி கற்றுக் கொள்ளப்போகிறார் ... ... | 23 |
| 3 | தமையனுடைய உபத்திரவமும், அவருக்குண்டான கடும் வியாதியும் ... | 40 |
| 4 | தப்பித்தோடுகிறார் ... ... | 59 |
| 5 | அர்ச். ஸ்தனிஸ்லாசும், முத்திப்பேறு பெற்ற கனிசியுஸ் இராயப்பரும் ... | 88 |
| 6 | இரண்டு அர்ச்சியசிஷ்டவர்கள் சந்தித்தல் ... ... ... | 109 |
| 7 | நவசந்நியாசம், ஜான்கோஸ்காவின் சினந்த கடிதம் ... ... ... | 123 |
| 8 | நவசந்நியாசம், சகலருக்கும் மேல்வரிச் சட்டம் ... ... ... | 138 |
| 9 | நவசந்நியாசம், பற்பல அதிசயங்கள் ... | 150 |
| 10 | மரண தீர்க்கதரிசனம் ... ... | 164 |
| 11 | மரண வியாதி—மோக்ஷ இராக்கினி பரலோகத்துக்கு அழைத்துக்கொண்டு போகிறாள் ... ... ... | 173 |
| 12 | மரணத்துக்குப்பின் உண்டான மகிமை.. | 189 |
| 13 | பவுல் கோஸ்கா ... .. ... | 199 |
| 14 | அர்ச். ஸ்தனிஸ்லாஸ் செய்த புதுமைகள் | 214 |
| | அர்ச். ஸ்தனிஸ்லாசை நோக்கி வேண்டிக் கொள்ளும் ஜெபம் ... ... | 241 |
| | அர்ச். ஸ்தனிஸ்லாசுக்குச் சிறுபிள்ளைகள் தங்களை ஒப்புக்கொடுக்கும் ஜெபம் ... | 242 |
| | அர்ச். ஸ்தனிஸ்லாஸ் பிரார்த்தனை ... | 243 |
| | அர்ச். ஸ்தனிஸ்லாஸின் ஸ்துதி ... | 247 |